சரபேந்திர வைத்திய முறைகள்

# சந்நிரோக சிகிச்சை



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டு எண். 94

# சரபேந்திர
# வைத்ய முறைகள்

## (சந்நி ரோக சிகிச்சை)

பதிப்பாசிரியர்:

Dr. V.G. சந்திரன்

Dr. நளினி சந்திரன்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

2006 ) ( விலை ரூ. 120-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சரபேந்திர வைத்திய முறைகள் |
| | : | சந்நிரோக சிகிச்சை |
| பதிப்பாசிரியர் | : | Dr. V.G. சந்திரன்<br>Dr. நளினி சந்திரன |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 94 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | நான்காம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2006 |
| தாள் | : | TNPL 18.6 கி.கி. |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 308 |
| படிகள் | : | 250 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு<br>சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : | ராப்பர் கட்டு |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 120-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

அரிய பழைய ஓலைச் சுவடிகளையும், காகிதச்சுவடிகளையும், நூல்களையும் தன்னகத்தே கொண்டு தனிப்பெரும் புகழுடன் விளங்குவது சரசுவதி மகால் நூலகம். இரண்டாம் சரபோஜி தஞ்சையில் தன்வந்திரி மகால் என்ற மருத்துவ நிறுவனத்தையும் நடத்தி வந்தார். இங்கே அவர் தலைசிறந்த மருத்துவர்களை ஒன்று சேர்த்து ஆயுர்வேதம், யுனானி, அலோபதி, சித்த மருத்துவம் மற்றும் மருந்துகள் பற்றி முனைப்பாக ஆய்ந்த பின் கண்டுபிடிப்புகளை 18 புத்தகங்களாக உருவெடுக்க ஆவன அனைத்தும் செய்தார். மூலிகைத் தாவரங்களைப் பற்றிய விவரங்களை அவற்றின் இயற்கை வண்ணங்களுடன் வரைந்து பிரதி ஒன்றைத் தயாரித்து அதன் மூலம் மூலிகைத் தாவரங்களைப் பற்றி அனைவரும் அறியச் சரசுவதி மகாலில் வைத்தார்.

சரபேந்திரர் வைத்திய முறைகள் வரிசையில் இந்நூல் பதிமூன்றாம் தொகுப்பாக வெளியிடப்பட்டது. தற்போது நான்காம் பதிப்பாக மலர்கிறது.

திருவள்ளுவர் நோயைத்தீர்க்கும் மருந்து அதிகாரத்தில்

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்கிறார். அதாவது நோய் இன்னதென்று அறிந்து, அந்நோய்க்குக் காரணம் இன்னதென்று அறிந்து, அதனைத் தீர்க்கும் வழியை அறிந்து பிழையறச் செய்க என்பது பொருள். இந்நூல் இத்திருக்குறளுக்கும், பொருந்துமாப்போல் நோய்களின் குணங்களைக் கூறி அவை தணிக்கும் மருந்துகள் பற்றியும் எடுத்துரைக்கிறது.

ஆயுர்வேதத்தை இயற்றிய மகரிஷிகளும், சித்த வைத்தியத்தை இயற்றிய சித்தர்களும் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றியிருந்தாலும் அவை இன்றும் பயன்படக்கூடியன, பலன் தருவன. மனித உடலமைப்பும், உறுப்புகளும், வாத, பித்த, கப தோஷங்களும் அன்று முதல் இன்று வரை அவ்வாறே இருந்து வருகின்றன. நம் சித்தர்களும் முனிவர்களும் வாத, பித்த, கப தோஷங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு மருத்துவம் அளிக்க வேண்டிய முறைகளையும், மருத்துவ குறிப்புகளையும் தந்துள்ளனர்.

பதிப்பாசிரியர்களான மருத்துவர் வி. ஜி. சந்திரன், மற்றும் நளினி சந்திரன் ஆகியோர் சந்நிரோக சிகிச்சை பற்றிக் கூறும் இந்நூலில் வாத, பித்த, கப சுரங்களின் தன்மைகளையும் அவற்றிற்கான சிகிச்சை முறைகளையும் கூறியுள்ளனர். இந்நூல் மருத்துவ உலகில் பெரும் வரவேற்பைப் பெற்ற அரிய நூல்.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை கணினி அச்சில் வெளிவரத் துணை நின்ற ஏனையோருக்கும் எனது இனிய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சா. விஜயராஜ்குமார், இ. ஆ. ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
15 - 8 2006

# PREFACE

We have already published 12 volumes in the Sarabhandra Vaidya Muraigal Series, each containing collection of tested prescriptions for particular ailments such as stomach disorders, Eye Diseases, Maternity and Children Treatment. The present work is yet another publication in the series, containing tested prescriptions for Janni Roga.

The word Janni is often translated as Delirium but actualy delirium is just a symptom of the disease Janni Roga or Sannipatam as it is called in Sanskrit which is by itself a disease caused by vitation of all the three Dhoshas namely Vata, Pitha and Kapha.

the original recipes like the collections in the other publications in this series, are all in Tamil verses. We have already had occasion to refer to the fact that Maharaja Serfoji, who reigned in Thanjavur from 1798 to 1832, devoted considerable time to valuable researches in Medicine and that the invaluable collections of Prescriptions arranged in 18 velumes, were the achievements of a team of physicians

belonging to Allopathic, Ayurvedic, Unani and Siddha systems, who labourned under his auspices to produce cures for all ailments inclucing fell diseases like Tuberculosisk Diabetes and Cancer Maharaja Sarfoji, following our ancient iradiations, had all the prescriptions turned to easy Tamil verses , so that students of medicine could easily memorise them.

The Editors Dr.V. G. Chandran and Dr. Mrs. Nalini Chandran have done a thorough and excellent job of theif work. The recipes are set out in prose order. The drugs mentioned in the recipes, the names of many of which are not easily identifiable in modern Materia Mecine, are identifided by them with great care. They have also described the methods of purifying minerals mentioned in the prescriptions in simple language. Above all, the introduction, which they have contributed, reveals careful and scholarly study of Tamil, Sanskrit and English woris on the subject, and presents valuable information about the particular disease dealt with in this work, its symptoms and etiology.

We aregreateful to the learned Editors for the very useful work they have procuced. We have no doubt that their achievenent will be found useful by physicians as well as the lay public.

We express our deep gratitude to the Union Government and to the Government of Madras for their timely grants that have helped us to publish this and other precious manuscripts in our library.

S. GOPALAN
Honorary Secretary
T.M.S.S.M. Library.

Thanjavur
19-5-62

# சரபேந்திர வைத்திய முறை
# சந்நிரோக சிகித்ஸை

***விநாயகர் வணக்கம்***

ஆதியெனும் பராபரமே சின்மயமே போற்றி
அண்டரண்டம் நிறைந்த நிற்குணமே போற்றி
ஜோதிமயமாய் நிறைந்த சுடரொளியே போற்றி
சூட்ச சடாதார பீடத்துருவே போற்றி
வேதியெனும் சுழிமுனையின் பொருளே போற்றி
வேதாந்த மாயிரத்தின் விதிநூல்
போற்றிநீதியெனு மாதிசர் வாணியம்மாள்
நிரஞ்சமசனமாய் நின்ற கணபதியே போற்றி

நூன்முகம்

ஆராய்ந்து பலபலநூல் தேடித்தேடி
அனுபோக மாகவே தேர்ந்தோர் தன்னை
ஏராளமாகவே யடுத்தடுத்து வாங்கி
யவை யனைத்து மோரிடத்தே சேர்த்துவைத்து
நேராகும் சரபேந்திர வைத்ய முறையை
நெடுநாளா யாராய்ந்து மனதுங் கூர்ந்து
சீராகப் புவியிலது விளங்க வேண்டிச்
சரபோஜி தஞ்சைக்கோன் வெளியிட்டாரே
வெளியிட்ட யிந்நூலை மாந்தரேற்று நம்பவேண்டும்
விளக்கங்கள் திரைகடல் சூழுலகமேவி
தெளிவாக மூலிவகை யரியக் கண்டும்
தான்புகலும் முறைபோல மருந்தை யுண்டும்
ஒளியாம லுருதியென்றே கொள்ளவேண்டும்
ஓட்டமென பிணிகளெலாம் ஒழியவேண்டும்
அளவாகுந் தாவர வர்க்கங்க ளென்றும்
அனுபோக சரபோஜி வைத்யம் பாரே.

பார்க்கவே சித்தர்கை யாண்டமூலி
பல்லோர்க்கும் பதார்த்தவகை யாச்சுதப்பா
ஏற்கவே யதையரியா துலகிலேதான்
ஏங்கியே அலைந்தலைந்து வீணாகாமல்
தீர்க்கவே தன்வீட்டி லிருக்குங்கீரை
தனையறிந்து வுண்பதற்குச் சூக்ஷமாக
சேர்க்கவே சரபோஜி வைத்யந் தன்னை
சிறப்புடனே வோதிவைத்த வுண்மைகாணே

உண்மையிது வாராய்ச்சி ஈந்ததாலே
உலகத்தோர் மனத்தெளிவு கொள்ளவேணும்
எண்ணமது யிந்நூல்மேல் வைக்கவேண்டும்
எத்தொழிலைச் செய்தாலும் பக்திவேண்டும்
நன்மைமிகு புத்திதனை வளர்க்கவேண்டும்
நண்புகழைத் தான்புகழா திருக்கவேண்டும்
திண்மைமிகு முனோர்கள் வாக்கையேற்றுச்
சொன்னபடி நம்பிமனம் மகிழுவீரே.

நாதர்கள் சொன்னமொழி பொய்யாகாது
நம்பாத வம்பருக்கோ மெய்யாகாது
ஜோதிமய மானவவர் சொன்னவாக்கு
ஜேகமீது ஒருக்காலும் வீணாகாது
நீதிய் மிதைவிடவே ரினங்கிட்டாது
நிறைவுமிகு சரபோஜி வைத்யந்தன்னை
ஓதியபின் மனந்தெளிந்து வொழுவோர்தான்
உலகிலுறு முப்பிணிகளற்று வாழ்வாரே.

## கலைமகள் துதி

முல்லை மலர்போலே முத்து நிறம்போலே
வெள்ளை நிறம்பூண்டு வீற்றிருக்கும்-செல்வியே
வண்ணக் கலைமகளே வா வா வளர்ந்தோங்கும்
எண்ணும் எழுத் துந்தா எமக்கு.

பூமா திருந்தென்ன பொன்மா திருந்தென்ன
நாமா திருந்தால்தான் நல்லபுகழ்-ஆமாம்
அறிவைப் பெருக்குமொரு அன்னையே உன்றன்
உறவைப் பெருக்கிஇருள் ஓட்டு.

பாசத்தைத் தாய்தருவாள் பக்கம் இருந்தென்றும்
நேசத்தைத் தான்தருவாள் நேர்மனைவி-வாசத்துத்
தாமரைப் பூதாங்குந் தாயே நீ எம்நெஞ்சில்
வா மதியைத் தந்தருள் வாய்.

# பொருளடக்கம்


| | பக்கம் எண் |
|---|---|
| முகவுரை | |
| சந்நி முதலானதற்கு கெருடாஞ்சனம் | 1 |
| சந்நிக்கு நஸ்ய வகைகற் | 2 |
| சந்நிக்கு மஞ்சள் திரி | 2 |
| அமுக்கிராக் கற்பம் | 3 |
| அமுக்கிராச் சூரணம் | 4 |
| வங்க தாளகச் சிந்தூரம் | 5 |
| சந்நிக்கு சித்திர மூலாதிக் கஷாயம் | 6 |
| சீதாங்க சந்நிகளுக்கு திப்பிலி மூலாதி கஷாயம் | 8 |
| சந்நிக்குப் பாதிரிக் கடாயம் | 8 |
| சந்நிகளுக்கு காக்கணம்வேர் நசியம் | 10 |
| சந்நிகளுக்கு பூபதிரஸக்கிரமம் | 10 |
| கண்ணுக்கு இரதாதிக்ககுளிகை | 11 |
| சந்நிக்குக் காரீயச் செந்தூரம் (பதங்கம்) | 14 |
| சாந்த சந்நிக்குறிகள் | 17 |
| சாந்த சந்நிக்கு கஷாயம் | 17 |
| சந்நிக்கு விஷமுஷ்டி தைலம் | 18 |
| சந்நிக்கு வெங்கார மாத்திரை | 20 |
| சந்நிக்கு எண்ணெய் ஒற்றிட | 21 |
| சந்நிக்கு முடக்கொத்தான் வேது | 22 |

| | |
|---|---|
| சந்நி பதிமூன்றுக்கும் | 22 |
| தோடத்திற்கு கஸ்தூரி மாத்திரை | 24 |
| தோஷங்களுக்கு ஸுவர்ணாதி குளிகை | 25 |
| சந்நி முதலானதற்கு உள்ளி நஸ்யம் | 26 |
| தோஷத்திற்கு மருந்து பாஷாணாதி பற்பம் | 27 |
| சந்நிக்கு எவச்சார மருந்து | 28 |
| ஸகல சந்நிக்கும் சந்நிரத கோசாங்குரம் | 31 |
| ஸகல சந்நிக்கும் அர்கேச்வர ரஸம் | 33 |
| சந்நி பதினைந்திற்கும் பஞ்சவக்த்ர ரஸம் | 33 |
| சந்நிக்கு ரகத சந்தனாதி உருண்டை | 34 |
| சகலவித சந்நிக்கும் ஆமணக்கு விதை அஞ்சனம் | 36 |
| திரிகடுகாதி அஞ்சனம் | 36 |
| சந்நிக்கு நாபி நஸ்யம் | 37 |
| சந்நிகளுக்கு நாபிநஸ்யம் வேறு | 38 |
| சந்நிக்கு கண்டாவுடதம் | 39 |
| சந்நிக்கு செந்தூரம் | 40 |
| இரஸபூபதி (ஆனந்தவயிரவம்) | 41 |
| அக்னி குமாரன் | 42 |
| சகல சந்நிகளுக்கும் நிம்பத்தைலம் | 43 |
| அரிதார பற்பம் | 45 |
| நசியம் | 46 |
| நஸ்யம் வேறு | 47 |
| சந்நி முதலானதற்கு தூதுவளை கஷாயம் | 48 |
| திரிதோஷத்திற்கு பார்ங்கியாதி கஷாயம் | 49 |

| | |
|---|---|
| தோஷத்திற்கு பதரி கஷாயம் | 50 |
| சந்நிக்குப் பொட்டணம் | 50 |
| சந்நி முதலானதற்கு இருமருந்துகள் | 53 |
| சுக சந்நிக்கு இருமருந்துகள் | 54 |
| சந்நி முதலானதற்கு இலுப்பைப்பூ மாத்திரை | 55 |
| இதுவுமது சுகசந்நிக்கு | 55 |
| சந்நிகளுக்கு நிம்பத்தைலம் | 56 |
| சந்நி முதலானதற்கு நாயுருவி உருண்டை | 58 |
| குளிர் தோஷத்திற்கு | 59 |
| சந்நிக்கு சாதிலிங்கக் குளிகை | 60 |
| விடதோடத்திற்கு நாபிக்குளிகை | 61 |
| சந்நிக்கு பச்சிலை எண்ணெய் | 62 |
| சந்நிகளுக்கு சிறுகுறட்டை எண்ணெய் | 63 |
| சந்நிக்கு திரிகடுகு அஞ்சனம் | 64 |
| சந்நிக்கு அரிதாரக் குளிகை | 65 |
| சந்நிக்கு கொம்புத் தைலம் | 66 |
| வாதராட்சஸன் | 68 |
| சந்நிக்கு துத்தாதிக் குளிகை சூசிகாபரணரஸம் | 69 |
| சந்நிக்கு சந்நிபாதபைரவம் | 70 |
| சந்நிகளுக்கு ப்ராணேச்வரரஸம் | 72 |
| சீதஜ்வரம் முதலானதற்கு சீதபஞ்ஜனரஸம் | 74 |
| தாளகச்சிந்தூரம் | 75 |
| சந்நிவாதத்திற்கு நொச்சித்தைலம் | 76 |
| தோஷம் சந்நிபாதங்களுக்கு பஞ்சமூலக்கடாயம் | 77 |

| | |
|---|---|
| சகல சந்நிவாதத்திற்கும் கண்டங்கத்திரி கஷாயம் | 78 |
| சந்நிக்கு இலாமிச்சம் எண்ணெய் | 79 |
| அதிமதுரக்குளிகை | 80 |
| ஆமணக்கிலைவேது | 81 |
| சந்நி முதலானதற்கு | 82 |
| சந்நிபாத சுரத்திற்கு சூரணம் | 84 |
| முஸ்தாதிகடாயம் | 85 |
| சந்நி முதலானதற்கு சுரத விஷமுஷ்டித் தைலம் | 88 |
| சந்நிவாத ஜ்வரத்திற்கு ஸைந்தவாதி அஞ்சனம் | 93 |
| சந்நிபாத ஜ்வரத்திற்கு இந்திராணி தைலம் | 94 |
| சந்நிபாத பைரவம் | 96 |
| 18 சந்நிக்கும் தைலம் | 97 |
| சந்நிக்கு அஞ்சனம் | 101 |
| சாதிலிங்கக் குளிகை | 102 |
| சந்நி 13க்கும் குளிகை சூசிகாமுகரஸம் | 103 |
| சுரத்திற்கும் சந்நி 13க்கும் சாரணை எண்ணெய் | 104 |
| சந்திரிக சன்னிக்கு | 107 |
| சந்திரிக சந்நியின் குறிகள் | 107 |
| வேறு சீந்தில் கஷாயமும் புகையும் | 108 |
| தாந்திரிக சந்நி லக்ஷணங்கள் | 109 |
| கண்டக சந்நிக் குறிகள் | 109 |
| தாந்திரிக சந்நிக்கு பாதிரிவேர்க்கடாயம் | 110 |
| தாந்திரீக சந்நிக்கு | 111 |
| அந்தக சந்நிக்கு பிரதாப லங்கேச்வரம் | 112 |

| | |
|---|---|
| அந்தக சந்நிக்கு சந்தனாதி கஷாயம் | 113 |
| அந்தக சந்நிக் குறிகுணங்கள் | 113 |
| அந்தக சந்நிக்கு சித்திரமூலக் கடாயம் | 114 |
| சித்தவிப்ரம சந்நிக்கு பிரசண்ட மார்த்தாண்ட ரஸம் | 115 |
| சித்தவிப்ரம சந்நிக்கு திராக்ஷாதி கஷாயம் | 116 |
| சித்தவிப்ரம சந்நிக் குறிகளாவன | 116 |
| சித்த விப்ரம சந்நி லக்ஷணம் | 117 |
| சீதாங்க சந்நிக்குறிகள் | 118 |
| கர்ணீக சந்நிக்கு காலபைரவம் | 119 |
| கர்ணீக வாதசந்நி லக்ஷணம் | 120 |
| கர்ணீக சந்நி வீக்கத்திற்கு மருந்துகள் | 121 |
| இரத்த சந்நியின் லக்ஷணங்கள் | 122 |
| இரத்த சந்நிக்கு ம்ருத்யுஞ்சயரஸம் | 123 |
| இரத்த சந்நிக்கு தாமரை வளையக் கஷாயம் | 124 |
| பிரலாப சந்நிவாத லக்ஷணம் | 125 |
| சீவக சந்நிக் குறிகள் (ஜிஹ்வாசந்நி) | 126 |
| இதற்கு மருந்து | 126 |
| சீவுகசந்நிக்குப் பூச்சு மருந்து | 128 |
| சிம்மகசந்நி சிங்குவை சந்நி முதல்வைகளின் குறிகள் | 128 |
| சிம்மகசந்நிக்கு சங்கம் வேர் கஷாயம் | 129 |
| அபின்யாச சந்நிபாதம் | 130 |
| அபின்யாஸ சந்நிக்கு சந்நிச்செந்தூரம் | 131 |
| ருக்குதாக சந்நிக்கு | 131 |
| சீதாங்க சந்நிக்கு | [illegible] |

| | |
|---|---|
| சீதாங்க சந்நிவாதத்திற்கு இரத்த சந்தனாதி உருண்டை | 135 |
| சீதாங்க சந்நிக்கு திப்பிலி மூலகஷாயம் | 137 |
| சந்நிக சந்நிக்கு பிரசண்டபைரவம் | 137 |
| கண்டகுச்ச சந்நிக்கு ம்ருத்யுப்ரத்யர்த்தி ரஸம் | 141 |
| கண்டதி சந்நி லக்ஷணம், குடிநீர், நஸ்யம் எண்ணெய் | 142 |
| கண்டதி சந்நிக்கு வேறு | 143 |
| பிரலாப சந்நி லக்ஷணமும் குடிநீரும் | 145 |
| பிரலாப சந்நிக்கு உசீராதி கஷாயம் | 146 |
| பிரலாப சந்நிக்கு ஐந்தெண்ணைத் தைலம் | 147 |
| பிரலாப சந்நிக்கு உள்ளித்தைலம் | 148 |
| அயின்யாஸ சந்நிக்கு மாத்திரை பிரும்மாஸ்திர ரஸம் | 150 |
| மேற்படி மருந்தின் பத்தியம் | 151 |
| சுகசந்நிக்கு கற்கம் | 151 |
| வெடிசந்நிக்கு கடுக்காய் பிஞ்சுக்கடாயம் | 152 |
| வெடிசந்நிக்கு நன்னாரி எண்ணெய் | 153 |
| புக்குநேத்திர சந்நியின் குணமும் திரிபலாதி கஷாயமும் | 154 |
| புக்குநேத்திர சந்நிக்கு நிலவேம்பு கடாயமும் கலிக்கமும் | 155 |
| நயன சந்நிக்கு நஸ்யம் | 156 |
| புக்கு நேத்திர சந்நிக்கு நாபி மாத்திரை | 156 |
| கொட்டை சந்நிக் குறிகள் | 157 |
| கொட்டை சந்நிக்கு மருந்து | 158 |
| முடுகு சந்நி லக்ஷணமும் பிரப்பங்கிழங்கு கடாயமும். | 159 |

| | |
|---|---|
| முடுகு சந்நி லக்ஷணம் | 161 |
| கண்டங்கத்திரி கஷாயம் | 162 |
| நேத்திர சந்நி | 162 |
| பூதசந்நிக்குறிகள் | 164 |
| புக்கு நேத்திரக் குறிகள் | 165 |
| செவிட்டு சந்நியின் குணமும் மருந்தும் | 166 |
| ருத்திரசந்நிக் குடிநீர் எண்ணெய் புகை நஸ்யம் | 168 |
| சந்நிக்கு இலாமிச் ஈசம் வேர்க் கடாயம் | 169 |
| உருத்திர சந்நிகளும் முஸ்தாதி கஷாயம் சந்தனாதி தூபம் | 170 |
| விஷபாக சந்நிக்கு | 171 |
| சந்நி விஷம், பேய் உன்மத்தம்தீர கலிக்கம் | 173 |
| சந்நியின் மேற்கண்ட தலைவலிக்கு | 175 |
| விஷத்திற்கு கந்தகாதி அஞ்சனம் | 176 |
| சுரசந்நி 18க்கும், தலைகுத்து, பிடரி வலிக சுரம், தலைவலி சந்நிக்கும் வேப்பெண்ணைத்தைலம் | 177 |
| அரிசுர சந்நிக்குறிகளஅ | 180 |
| காய்ச்சலோடு கூடிய சந்நியின் குணமும் மருத்துவமும் | 181 |
| காய்ச்சலுக்கும் சந்நிக்கும் ஆனந்தபைரவன் | 183 |
| சந்நி ஜ்வரம் முதலானவைக்கு அவுத சஞ்சீவி | 184 |
| சந்நிக்குக் கலிக்கம் திரிபுரவயிரவன் உருண்டை | 185 |
| நடைசந்நிக் குறிகள் | 186 |
| பொராமச்சந்நிக்கு எண்ணெய் | 187 |
| ரஸபூபதி | 189 |

| | |
|---|---|
| சந்நி வாயுவின் குணமும் மருந்தும் | 190 |
| சந்நிகள் சிலேத்துமங்களுக்கு அக்னி குமாரன் | 191 |
| சிலேத்தும சந்நி, மேல் வறளை, கோழை இருமலுக்கு லேகியம் | 193 |
| வேப்பெண்ணெய் | 196 |
| பித்த சந்நியின் குணமும் மருந்தும் | 197 |
| பயித்திய சந்நிக்கு | 198 |
| சந்நி பயித்தியத்திற்கு அஞ்சனம் | 199 |
| கபால சந்நியின் குணமும் மருந்தும் | 201 |
| கர்பத்தின் மேல் வந்த சந்நிக்கு | 202 |
| வாதம், சந்நி, சைத்தியம் முதலியவைக்கு | 204 |
| வாதசந்நி, பிரவீச்சு, உட்குத்து முதலானவைகளுக்கு பச்சைப்பாம்பு எண்ணெய் | 206 |
| சந்நி பிரவீச்சுக்கு | 207 |
| வாதசந்நிக்கு | 207 |
| வாதத்திற்கும் சந்நிக்கும் இந்திராணி தைலம் | 209 |
| கண்டகுச்ச சந்நிக்கு குடிநீர் | 212 |
| இரத்தச்சீவிசந்நியின் குணம் | 213 |
| இரத்த சீவிக சந்நிக்கு சந்நிபாதபைரவம் | 214 |
| இரத்த சீவிக சந்நிக்கு குடிநீர் | 215 |
| தாந்திரிக சந்நிக்குறிகள் | 216 |
| புக்குநேத்திரசந்நிக்கு விதாரணபைரவரஸம் | 217 |
| ,, ,, குடிநீர் | 218 |
| அபின்யாஸ சந்நியின் குணம் | 219 |

| | |
|---|---|
| அபின்யாஸ சந்நிக்கு பைரவரஸம் | 219 |
| ,, ,, குடிநீர் | 221 |
| சிங்குவாக சந்நியின் குணம் | 222 |
| சிங்குவாக சந்நிக்கு வைபவரஸம் | 223 |
| ,, ,, சிற்றாமுட்டி குடிநீர் | 223 |
| சிங்குவாக சந்நியின் குணமும் மருநதும் | 224 |
| ஆனந்த வயிர ரஸம் | 225 |
| சீதாங்க சந்நிகள் தீர குடிநீர் | 226 |
| சித்தவிப்ரம சந்நியின் குணம் | 227 |
| மதன விப்ரம ரஸம் | 227 |
| சித்தவிப்ரம சந்நிக்கு கஷாயம் | 228 |
| சந்திரிக சந்நியின் குறிகள் | 229 |
| சந்திக சந்நிக்கு கஷாயம் | 230 |
| பிரலாப சந்நிக் குறிகள் | 231 |
| பிரலாப சந்நிக்கு காருணய பைரவம் | 231 |
| பிரலாப சந்நிக்கு குடிநீர் | 232 |
| அந்தகச் சந்நியின் குணம் | 233 |
| விஜய பைரவ ரஸம் | 234 |
| பித்த சந்நிக் குறிகள் | 235 |
| வாத சந்நியின் குணம் | 235 |
| சேத்தும சந்நிக் குறிகள் | 236 |
| சேத்தும வாத சந்நிக் குறிகள் | 237 |
| சங்கம தோட சந்நிக் குறிகள் | 237 |
| அபத்திய சந்நிக் குறிகள் | 238 |

| | |
|---|---|
| வாத சந்நியின் குணம் | 238 |
| தோடச் சந்நியின் குணம் | 239 |
| அசாத்திய சந்நிக் குறிகள் | 240 |
| கன்திரிகசந்நி முதலானவைகளின் லக்ஷணம் | 240 |
| கன்றிக சந்நியில அசாத்தியக குறிகள் | 242 |
| குத்துப்புர வீச்சிற்கு | 242 |
| முலைக்குத்துக்கு | 243 |
| 13சந்நிக்கும் குடிநீர் | 244 |
| புறவீச்சிற்கு மருந்து | 245 |
| சுத்திக்கிரமம் | 246 |
| மூலிகை அகராதி | 252 |

### சரபேந்திர வைத்திய முறைகள்

# ஸந்நி பாத ஜ்வர சிகித்ஸை

## முகவுரை

சாதாரணமாக ஜ்வரம் என்பது எல்லாப் பிராணிகளுக்கும் வரக்கூடிய ஒரு வியாதியாகும். சிலருக்கு அடிக்கடியும் வரலாம். பல வியாதிகளுக்கு முன்னால் வருவதும் ஜ்வரத்தின் ஓரியல்பு. எந்த வியாதி சரீரத்தைப் பீடிக்க முற்படினுஞ்சரி, அந்த வியாதி, அதன் காரணம் ஆகியவற்றுடன் எதிர்த்துப் போராடிட முயலும் இயல்பு இச்சரீரத்திற்கு உண்டு. இதை ஒரு வகை பலம் என்று சாஸ்திரம் குறிப்பிடுகிறது. இப்போராட்டத்தின் வெளித்தோற்றத்தைத்தான் ஜ்வரமாகக் காண்கிறோம். அவ்விதமேற்படும் ஜ்வரம் தனிப்பட்ட ரோகமாகாதல்லவா வேறொரு வியாதியின் முன்னோடி (பூர்வரூபம்)தானே. ஆகவே இவ்வித சுரத்திற்குத் தனிக்காரணத்தை நிச்சயிப்பதோ, அதற்கான சிகித்சையை நிறுவுவதோ இயலாது. எந்த வியாதிக்கு இந்த சுரம் முன்னால் வந்துள்ளதோ, அந்த வியாதியின் முழுத்தோற்றம் ஏற்பட்ட பிறகோ, அல்லது அந்த வியாதி சமனமான பிறகோ, இந்த சுரம் குணமாகி விடும் வைசூரிக்கு முன்னோடியாக வரும் ஜ்வரத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். வெட்டுக் காயம் போன்றவை ஏற்படுங்கால் அவ்வித சுகவீனம் ஏற்பட்ட பிறகு ஜ்வரம் வரும். இதற்கும் தனிப்பட்ட வகையில் சிகித்சை செய்ய வேண்டியதில்லை. இவ்வாறு ஜ்வரமானது வேறு ரோகத்திற்கு முன்னாகவோ, பின்தொடர்ந்தோ ஏற்படுமாயின் அதை வேறொரு

ரோகத்தையொட்டி வருகின்றதென்ற காரணத்தால் பரதந்திர ரோகம் என்பர். அவ்வாறின்றி ஜ்வரம் தனிப்பட்டதாக ஸ்வதந்திர ரோக மாகவருவதுமுண்டு. அவ்வாறு வரும் ஜ்வரத்தைதான் இனம் திரித்து சிகித்சித்தல் அவசியம். ஸந்நிபத ஜ்வரம் என்பது இவ்வ விதத்தைச் சேர்ந்ததாகும்.

ஜ்வரத்தை இனந்திரித்துத் தெளிவதில் ஒரு விஷயத்தை நினைவிலிருத்துவது அவசியம். ஜ்வரம் என்ற வியாதியைச் சிலர் காய்ச்சல் என்றும் அழைப்பர். அதாவது சரீரத்தைத் தொட்டால் சுடும் என்ற குறியுள்ளது. சுரம் நெருப்பாய்க் காய்கிறதே என்று பாமரரும் சொல்லக் கேட்கிறோம். இந்தக் காய்ச்சல் அல்லது சூடு இல்லாமல் சுரம் இருக்காது. சூடு அல்லது காய்ச்சல் இல்லாவிடில் அதை சுரம் என்று அழைக்கவே மாட்டோம். ஆகவே சூடில்லாமல் ஜ்வரமில்லை. சூடோ நெருப்பின் லக்ஷணம். அதாவது நெருப்பில்லாமல் சூடிருக்காது. நமது சரீரத்திலுள்ள பித்த தோஷத்தை (தப்-தபன குணமுடையது) கனலின் இயல்பு பெற்றது என்று தெளிந்து, அக்கினியல்லாது வேறொன்றல்ல என்று சாஸ்திரம் சொல்வதால் ஸகலவித ஜ்வரத்திலும் தொட்டால் தெரியும்படியான சூடு சரீரத்தில் இருப்பதால், பித்தத்தைச் சாறாத ஜ்வரமே இல்லை என்பது எளிதில் ஊகிக்கக் கூடிய விஷயமாகும். ஆயினும் ஐந்து பூதங்களும் சேராமல் ஒரே பூதத்தாலான திரவியம் இல்லை என்னும் உண்மையைப் போலவும், ஆறு ரஸங்களும் இல்லாது ஒரே ரஸமுள்ள பொருளே இருக்க முடியாது என்னும் உண்மையைப் போலவும், ஒரே தோஷத்தின் சீர்கேட்டால் உண்டாகும் ரோகமும் இருக்கமுடியாது என்பதை, கொள்கையளவிலாது ஏற்கத்தான் வேண்டும். மறுக்கவும் முடியாது ஆகவே பொதுவாக பித்தத்தின் சீர்கேடில்லாமல் ஜ்வரமில்லை என்ற காரணத்தால் வாத கபங்கள் ஜ்வரத்தில் நன்நிலையில் இருக்கின்றன என்று எண்ணக் கூடாது.

ஜ்வரத்தில் பித்தம் சீர்கெட்டிருக்குங்கால் வாத கபங்களும் சுயநிலை அதாவது நன்நிலை கெட்டுத்தானிருக்க வேண்டும் என்பது அறியக்கிடக்கிறது. இச்சீர் கேட்டின் ஏற்றத்தாழ்வை அனுசரித்துதான் ஜ்வரத்தின் குறிகள் ஏற்படுகின்றன. மூன்று தோஷங்களின் சீர்கெட்ட நிலையின் குணங்கள் ஏககாலத்தில் ஒரு ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளியிடம் காணப்படுமானால், அது ஸந்நிபாத ஜ்வரம் என்பது முற்றும் பொருந்துமல்லவா.

ஆயுர்வேதத்தை இயற்றிய மகரிஷிகளும் சித்தவைத்தியத்தை இயற்றிய சித்தர்களும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குமுன் அவைகளை இயற்றியதால் அவை தற்காலத்திற்கு உபயோகப்படாது என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால் இவ்வளவு வருஷங்களாகியும் மனித சரீரமும், அதிலுள்ள உறுப்புக்களும், வாத, பித்த, கபதோஷங்களும் உலகம் சிருஷ்டிக்கப்பட்ட பொழுது எவ்வாறு இருந்தனவோ அவ்வாறாகவேதான் இன்றும் இருந்து வருகின்றன. இக்காரணத்தைக்கொண்டே நமது சித்தர்களும், முனிவர்களும் வாதபித்த கப தோஷங்களை (சரீர தத்துவத்தை) அடிப்படையாக வைத்துக்கொண்டு, அவை எப்பொழுது எவ்வாறு தூஷிக்கப்படுகின்றன. அதனால் தூஷ்யங்களில் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்றவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதன்படி அதற்குள்ள தக்க வைத்யத்தை நிர்ணயித்திருக்கிறார்கள்.

ஆங்கில வைத்திய முறையைப்போல் நாம் வெளிப்படையாகத் தோன்றும் குறிகளை மட்டும் ஏற்று, அதற்கான காரணங்களைத்தேடி, வியாதியை மட்டும் குறிக்கோளாக்கி, அதற்கான சிகித்சையை நிர்ணயிப்பதில்லை.

உதாரணமாக ஒருவனுக்குத் தலைவலி இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதன் காரணத்தைத் தெளிய அவனுடைய கண், காது, செவி, நாசி எல்லாவற்றையும் பரிசோதித்து, அதற்கு மேல் மூளையையும் எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்க்கும் வகையில்

மிக நுட்பமான விஞ்ஞானம் வகுத்த உபாயங்களையெல்லாம் கையாளுகின்றனர். காலம் வீணாவதேயன்றி அவன் தலைவலிக்கு நிவாரணம் தெளியப்படுவதில்லை. இப்படியாக வியாதியை இன்னதென்று தெளிந்திட வேணுமென்ற அல்லது குறிப்பாக இன்ன காரணத்தால் ஏற்பட்டுள்ளது. (தலைவலி) என்று தெளிந்திட வேணுமென்ற வியாஜ்யத்தில் நோயாளி ஒரு நிபுணரை விட்டு மற்றொரு நிபுணரை நாடி நடக்கும் முறையில் சில வாரங்களோ சில மாதங்களோ கழியும். நோயாளிக்கோ தொடர்ந்து நின்ற தலைவலியும், நிபுணர்களுக்கும் அவர்கள் செய்த பரிசோதனைகளுக்குமாகச் செலவழித்த பணம் கைவிட்டுப் போனதுதான் முடிவு.

ஒருவன் ரேகை சாஸ்திர நிபுணரிடம் கையை காண்பித்தான். அந்த மகான் உனக்கு ஆறுமாதங்கள் போதாத காலம் என்று சொன்னார். அதன் பிறகு முடிவு என்ன என்று அவன் கேட்குங்கால் போதாத காலம் ஸகஜமாகப் போய்விடும் கவலைப்பட வேண்டாம் என்றார்.

மேலே சொன்ன தலைவலிக்காரன் மேற்சொன்ன அனுபவங்களுக்கெல்லாம் ஆளான பிறகு கண்ட முடிவு என்ன. ரேகை சாஸ்திர நிபுணர் சொன்ன முடிவுதான். ஆனால் இவ்வளவையும் செய்த, விஞ்ஞானத்திலேயே பிறந்து விஞ்ஞானத்திலேயே வளர்ந்து விஞ்ஞானம்-விஞ்ஞானம் என்ற பஞ்சாக்ஷரத்தையே செபித்துக்கொண்டு வாழ்பவர்களோ இது ஒரு அலர்ஜிக் தலைவலி என்று பெயரைச் சொல்லி நோயாளியை அனுப்பி வைப்பார்கள் போதுமா.

இவர்கள் சொல்லும் இந்த அலர்ஜி ஒன்பதுதான் என்ன இந்தத் தலைவலி அல்லது ஏதோ ஒரு வியாதிக்குக் குறிப்பாக இதுதான் காரணமென்று நிச்சயமாகத் தெளிந்திட இயலவில்லை. ஆகவே அதற்கு இது தான் சிகித்ஸை என்று நிச்சயிக்கவும் முடியாதல்லவா.

இந்த அவல நிலையான தனது அஞ்ஞானத்தை இது இன்னதென்று எனக்கு புரியவில்லை என்று நேர்மையுடன் திறந்து சொல்ல இந்த விஞ்ஞானத்தின் வாரிசு என்று சுயநியமனம் பெற்றவரின் தன் மதிப்புத்தன்மை இடம் கொடுப்பதில்லை ஆகவே சிதம்பர ரகசியம் என்பது போல இது அலர்ஜி என்று சொல்லிவிட்டுத் தான் ஏதோ பகீரதன் சாதித்தது போன்ற செயற்கரிய தொன்றைச் சாதித்து விட்டதுபோல் பெருமூச்சு விட்டுப் பெருமைப் படுகிறார்கள

மஹாமேரு போன்ற விஞ்ஞான உலகத்தின் போக்கில் இது ஒரு கடுகளவு

இதற்கு மாறாக அதே தலைவலியுடன் கூடியவன் நாட்டு வைத்தியனிடம் சென்றால், அவ்வைத்தியன் அவன் நாடியைக் கொண்டும், வேறு குறிகளைக் கொண்டும், எந்த தோஷம் தூஷித்திருக்கிறது என்று கண்டு கொண்டு அதன் சமனம் அல்லது சோதனத்திற்கான மருந்துகளைக் கொடுக்கிறான். அத்தோஷம் தன ஸ்வய நிலையை அடைந்தவுடன் தலைவலியும் ஸ்வஸ்தமாகி விடுகிறது.

ஜ்வரமானது பொதுப்பட்ட ரோகமனைத்திலும் ப்ரதானமாயிருப்பதால், அதனை முதலில் கவனிக்க வேண்டியது. ஒவ்வொரு வைத்தியனுடைய கடமையாகும். தோஷங்கள் ஆமாசயத்தைப்பற்றி முதலில் ஜ்வரத்தை உண்டு பண்ணுகின்றன. ஜ்வரம் ஆரம்பத்தில் தோஷங்கள் ஆமதோஷம் உள்ளவைகளாகவும் பிறகு கிரமமாக அந்த ஜ்வரம் தணிவடையும் காலத்தில் அத் தோஷங்கள் பக்குவாவஸ்த்தையை அடைகின்றன. ஏகதோஷப் பிரதானமான மற்ற ஜ்வரங்களில் தோஷங்கள் சீக்கிரம் பக்குவமாகிறது. ஆனால் ஸந்நிபாத ஜ்வரம் என்பது மூன்று தோஷங்களின் கடுமையான ப்ரகோபத்தினால் ஏற்படும் வியாதியாகையால் இதில் தோஷங்கள் எளிதில் பக்குவமாகாமல் வியாதியை நீடிக்கச் செய்வதோடு, ரோகிக்கும் பல வித உபத்திரவங்களைத் தோற்றுவித்துப் ப்ராணாபத்தையும் உண்டுபண்ணக் கூடியதாகலாம். மேலும் ஸந்நிபாத ஜ்வரத்தில்

உண்டாகும் விகாரங்கள் பலவாறாகத் தோன்றும் இயல்புடையவை. அதாவது ஸந்நிபாத ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டிருப்பவனுக்கு உஷ்ணமாவது, சீதமாவது அதிகமாயிராது, ஞாபகசக்தி குறையும் பார்வை மங்கும், நாக்கு சுறசுறப்பாயிருக்கும்., தொண்டை வறளும், தேககாந்தி மழுங்கும், வியர்வையும் மலஜலங்களும் அடைபடும், கண்களில் நீர்த்ததும்பும், அன்னத்துவேஷம், குரல் கம்மல், பெருமூச்சு, கீழே விழுதல், வாய்பிதற்றல் முதலிய உபத்திரவங்கள் தொடரும்.

மேலும் சிகித்சை விஷயத்தில் சில கஷ்டங்களுமுண்டு. ஸந்நிபாதத்தில், மூன்று தோஷங்களும் பிரகோபித்துள்ள நிலையிலிருக்கின்றன. அதில் வாதமும் கபமும் ஒன்றுக்கொன்று எதிர்மறையான குணங்களுள்ளவையாகையால், ஒன்றை குறைக்கச் செய்யும் சிகித்சை மற்றொன்றை மேலும் அதிகரிக்கச் செய்யும். சமனபரமான சிகித்சையில் இவ்வாறொரு வசதிக் குறைவுண்டு. மேலும் லங்கனமான சிகித்சை செய்தால் காயபலமும், ரோகத்தை தடுத்து வென்றிடப் போரிடும் ஸஹனசக்தி என்ற பலமும் (Resistance) மிகவும் குறைந்து விடும். ஆகவே சரீரம் நிலைப்பதே ஆபத்தாகிவிடும். சோதனை சிகித்சையோ செய்ய முடியாது. ஏனெனில் முதலில் தோஷங்கள் பாகமாக வேண்டுமே ஓரளவு பாகமான பிறகு சமனமாக மருந்து கொடுப்பதானாலும் முன்சொன்னது போல் ஒன்றுக்கு ஹிதமானது மற்றொன்றுக்கு அஹிதமாய்த்தீரும். நிமிஷத்திற்கு நிமிஷம் தோஷங்களின் மிக ஸூக்ஷ்மமான மாற்றங்களையும் விழிப்புடன் கவனித்துத் திறமையுடன் சிகித்சித்தல் அவசியம். இதற்கு அளவற்ற திறமையும் அனுபவமும் வேண்டும்.

மூன்று தோஷங்களும் ஏக காலத்தில் பிரகோபமடைவதால், ஒன்றையொன்று தழுவி மூர்ச்சிக்கச் செய்வதால் சில விஷநீர்கள்

தாமாகவே கசிந்து தாதுக்களில் கலந்திடவும் அதனால் மனதிற்கும், இந்திரியங்களுக்கும் உள்ள ஸம்யோகத்தையே கெடுக்கவும் நேரிடும். இவ்வாறு பலவித சிரமங்கள் உண்டு. ஆகையால்தான் ஸந்நிபாத ஜ்வரத்தைச்சிலர் கஷ்டஸாத்யமென்றும் சிலர் அஸாத்யமென்றுகூடச் சொல்லலாமெனக் கருதுகிறார்கள். ஸந்நிபாத சம்பந்தமான கோளாறுகளால், வாதாதி தோஷங்கள், ஒன்றோடொன்று நீரும் நெருப்பும் போல் நேர் விரோதமான தன்மைகளை உடையவை அவையெல்லாம் எவ்வாறு ஒருமிக்க விருத்தி அடைந்து வியாதியை உண்டாக்க முடியுமென்று கேட்கலாம். இந்தக்கேள்வி கேட்போரைப்பார்த்து சிரித்தால் சீற்றமுறுவர் சிரிக்காமலும் இருக்கமுடியாது. ஆயினும் இதற்கு விளக்கமும் சாஸ்திரங்களில் இல்லாமலில்லை.

பொருந்திய தீபம், இதில் எண்ணெய், திரி, தீ, மூன்றும் இருக்கின்றன. தீயோ எண்ணெய் திரி இரண்டையும் நாசமாக்கும் இயல்பு பெற்றது. ஆனால் எண்ணெயில்லாமல் தீபம் எரியாது. எண்ணெயும் திரியில்லாமல் தீபம் ஒளித்திட உதவ முடியாது. இம்மூன்றையும் ஒரு சமநிலையில் வைத்துத் தீபத்தை எறியவிட்டு, மூன்றுமே நன்னிலையில் இருந்து, நன்முறையில் இயங்கித் தம்மையும் காணும்படிச் செய்து, பிற பொருள்களையும் கண்ணுக்குப் புலனாகும்படிச் செய்வதில்லையா?. ஒரு வகையில் இத்தோஷங்களும் அவ்வாறேதான். இவை சமநிலையில் உள்ளபோது சரீரம் நன்னிலையில் நிலைத்திருக்கக் காரணமாகின்றன. அந்நிலையில் இவற்றை திரிதாதுக்கள் என்று சாஸ்திரங்கள் கூறும். நன்நிலை கெட்டு விஸம நிலையை அடையுமானால் வியாதியை உண்டாக்கிட முனைகின்றன. இந்நிலையில் இவற்றைத் திரிதோஷங்கள் என்று சாஸ்திரங்கள் விளிக்கின்றன.

ஆகவே வாதபித்த கபங்கள் குணங்களில் ஒன்றுக்கொன்று விரோத ஸ்வபாவமுடையவைகளாக இருந்த போதிலும், தேகத்தை தோற்றுவிப்பதற்கும், அதை நன்நிலையில் நிலைத்திருக்கச் செய்வதற்கும் தேகம் நலிவதற்கும் காரணமாயிருக்கின்றன. ஜ்வரங்கள் பொதுவாக எட்டு விதமாகும்.

## வாதஜ்வரத்தின் பொது லக்ஷணம்

நடுக்கத்துடன் கூடி திடீரென்று ஜ்வரம் உச்சநிலையை அடைதல், கொட்டாவி விடுதல், தும்மல் உண்டாகாமை, தொண்டை உதடு வறண்டு போதல், அவயவங்களில் சகிக்க முடியாத வேதனை, அரோசகம் மலம் வெளியாகாமல் இருத்தல், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி முதலியவைகளாகும்.

## பித்த ஜ்வரத்தின் பொது லக்ஷணம்

கடுமையான ஜ்வரமடித்துக் கொண்டிருக்கும். நித்திரை கெட்டு விடும். தொண்டை வாய், நாசி முதலியவைகளில் அழற்சி கண்டு வாந்தியும் வரும். அதிக வியர்வை, பிதற்றல் வாய்க்கசப்பு நாவறட்சி, மலம், மூத்திரம், கண்கள் முதலியவை மஞ்சள் நிறம் கொள்ளுதல், தலைசுற்றல் முதலியன பித்த ஜ்வரத்தின் பொது லக்ஷணங்களாகும்.

## கபஜ்வரத்தின் பொது லக்ஷணம்

ஜ்வரம் கடுமையாக இராது. சோம்பல், வாயில் இனிப்புச் சுவை காணுதல், மலம் மூத்திரம் வெளுமையாக இருத்தல், வயிறு நிரம்பி இருப்பது போல் உள்ள உணர்ச்சி, வாந்தி, அஜீர்ணம், தேகம் பாரமாயிருத்தல், குளிர், வாயில் நீரூரல், அதிக நித்திரை, காஸம் முதலியன கப ஜ்வரத்தின் பொது லக்ஷணங்களாகும்.

## வாதபித்த ஜ்வர லக்ஷணம்

தலைவலி, தொண்டையும் வாயும் உலர்ந்து போதல், தலைசுற்றல், நித்திரையின்மை, வாந்தி, அரோசகம், வாயில் கசப்பு, கணுக்கள் தோறும் வலி, கொட்டாவி, தேஹம் மிகவும் பலஹீனப் பட்டுப் போதல் முதலியவையாகும்.

## வாதகப ஜ்வர லக்ஷணம்

சரீரம் அசைவற்று கணுக்களில் வலிகண்டு உடல் கனத்து வியர்வை உண்டாகாமல் அதிக நித்திரையுடன் கூடியவனவாகவும், ஜ்வரம் மத்திம வேகத்தை உடையவனாகவும் இருப்பான்.

## பித்த கபஜ்வர லக்ஷணம்

நாக்கு கபத்தினால் பூசப்பட்டு கைப்பாகவும் இருக்கும். சோம்பல், மூர்ச்சை, இருமல், அடிக்கடி தேகம் அதிக சூடாகவும் மறுபடி குளிர்ந்தும் காணும்.

## ஸந்நிபாத ஜ்வர லக்ஷணம்

க்ஷணநேரத்தில் உஷ்ணம் அதிகரிக்கும். மருக்ஷணம் சீதம் மேலிட்டும் காணும். மூட்டுகளிலும் தலையிலும், வலியுண்டாகும். கண்கள் சிவக்கும். செவிகளில் ஓசையும் குத்தலும் எடுக்கும். சோம்பல், மூர்ச்சை, வாய் பிதற்றல், காஸம், சுவாஸம், அரோசகம், தலை சுற்றல், நாவறட்சி, நாக்கில் சுறுசுறுப்பு, அவயவங்கள் சோர்ந்து காணும். எச்சில் துப்பும்பொழுது பித்தமும் ரத்தமும் வெளிவரும். அவற்றுடன் கபம் கலந்தும் வருவதுண்டு. படுக்கையில் புரண்டு கொண்டேயிருப்பான். ஹிருதயத்தில் வேதனையுண்டாகி அவஸ்த்தைப்படுவான். வியாதியின்

கடுமைக்குத் தகுந்தவாறு இளைத்தல் இருக்காது. மலஜலம் எப்பொழுதாவது சொற்பமாக வெளிவரும். சரீரத்தில் கருப்பாகவோ சிகப்பாகவோ தழும்புகளும், படைகளும் தோன்றும். பேச்சு மந்தப்படும். நவத்வாரங்களும் அழன்று போகும். வயிற்றுப் பொருமல் உண்டாகி வாதாதி தோஷங்கள் மிக்க மெதுவாக பக்குவ நிலைமைக்கு வரும்.

## ஸந்நிபாத ஜ்வரத்தில் அஸாத்திய கஷ்டஸாத்திய லக்ஷணம்

மலம் கட்டுப்பட்டதாயும், ஜாடராக்கினி முற்றிலும் அவிந்துபோயும், வாதபித்த கபம் மூன்று தோஷங்களுக்கும் உரிய பிரகோப லக்ஷணங்கள் எல்லாம் பரிபூரணமாயிருந்தால் அது அஸாத்தியமென்றும், அதற்கு மாறாக ஏதோ சில குறிகள் மட்டும் கண்டு மலஜலப் பிரவிருத்திகள் சரியாக இருந்துகொண்டிருந்தால் அது கஷ்ட ஸாத்திய மென்றும் கண்டுகொள்ளலாம்.

## ஸந்நிபாத ஜ்வரத்தின் காலங்கள்

பொதுவாக ஜந்நிபாத ஜ்வரம் 7, 10, 12வது தினங்களிலோ அல்லது அதற்கு இரட்டிப்பான 14, 20, 2வது தினங்களிலோ தணிவடையலாம். வாதம் மேலிட்ட ஸந்நிபாதம் 14 நாட்களில் சமனமாகும். பித்தம் மேலிட்ட ஸந்நிபாதம் 18 நாட்களில் சமனமாகும். கபம் மேலிட்ட ஸந்நிபாதம் 22 நாட்களில் சமனமாகும். என்று வகுத்து இருக்கின்றனர்.

ஸந்நிபாத ஜ்வரத்தின் இறுதியில் காதுக்குக் கீழ் குரூரமான வீக்கம் சிலருக்கு உண்டாவதுண்டு. இந்த உபத்திரவம் ஏற்பட்டால் ஒரு சிலர்தான் தப்பிப் பிழைப்பர்.

## அபின்யாஸ ஸந்நிபாதம்

முத்தோஷங்களும் பிரகோபமடைந்து மார்பிலுள்ள குழல்களுக்குள் சென்று, ஆமதோஷமும் அதிகரித்து, புத்தியை

விகல்பித்து விடும் கடுமையான ஜ்வரமாகும். இது சீக்கிரத்தில் குணமாகாது. இதில் பஞ்ச ஞானேந்திரியங்களும் தமது சக்தியை இழந்து விடுவது இயல்பு. இதிலிருந்து ரோகி தேருவது மிகக்கடினமாகும்.

## ஆகந்துக ஜ்வரம்

இந்த ஜ்வரம் வெளிப்படையான காரணங்களால் உண்டாவதாகும். அதாவது விஷ ஸம்பந்தம், மூலிகை ஸம்பந்தம், காமக்குரோதம், பயம், ஏவல், சாபம், பூதம் முதலியவைகளால் உண்டாகின்றன. காமத்தினாலும் குரோதத்தினாலும் பித்தம் அதிகரிக்கிறது.பூதங்களால் முத்தோஷங்களும் ப்ரகோபிக்கின்றன. மேற் சொல்லிய ஜ்வரங்கள் காரண பூதமாகயிருந்து வேறு ஜ்வரங்களும் திடீரென்று உண்டாகி ஸப்ததாதுக்களில் ஏதாவது ஒன்றைக் கெடுத்து விஷம ஜ்வரத்தை உண்டுபண்ண நேரிடும்.

விஷம ஜ்வரம் ஸந்தகம், ஸதகம், அன்யேத்யுஷ்கம், திருதீயகம், சதுர்தகம், என்று ஐந்து வகைப்படும். விஷம ஜ்வரங்களுக்குக் காரணமான தோஷம் முதலில் ரஸதாதுவைப்பற்றிக் கொண்டு ஸந்தக ஜ்வரத்தையும், பிறகு அதுவே மாம்ஸ தாதுவைப்பற்றி அன்யேத்யுஷ்கம் என்ற ஜ்வரத்தையும், மேதோ தாதுவிற் சேர்த்து த்ருதியக ஜ்வரத்தையும், ஆஸ்த்தியிலும் மஜ்ஜையிலும் பற்றி சதுர்த்தகத்தையும் உண்டு பண்ணுகின்றன. இவற்றுள் சதுர்தக ஜ்வரம் வேறு அநேக ரோகங்களால் சூழப்பட்டதாகவும் மிகக் கொடிய ம்ருத்யுவைத் தகுந்ததாகவும் இருக்கும். இவற்றுள் ஸந்தகம் 7, 10, 12 நாட்கள் தொடர்ந்து ஒரே நிலையிலுள்ள ஜ்வரமாகும். ஸததம் ஒரே நாளில் இருமுறை தணிந்து மேலெழும். அன்யேத்யுஷ்கம் ஒரு நாளில் ஒரு சதுர்தகம் நான்காவது நாள் காணும். சதுர்தக விபரீதம் என்று மற்றொரு வகை விஷம ஜ்வரமுமுண்டு.

## ஜ்வர நிவாரண குறிகள்

வியர்வை, தாகம், தலையில் தினவு, தும்மல், பசி, ருசி அல்லது உணவில் விருப்பம் முதலியவைகள் ஜ்வரத்திலிருந்து விடுபவனுக்கு ஏற்படும் லக்ஷணங்களாகும்.

நாட்டு வைத்திய முறைப்படி சந்நிவாதசுரம் பதின்மூன்று வகைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன.

அவையாவன:-

மிக்க சந்திரிகன் தாந்திரிகன்
விப்பிரமன் கண்டகுச்சன்
உக்கிர கண்ணிகள் சீகுவிக
னுத்திர னந்தகன்பார்
புக்கு நேத்திரன் இரத்தசாட்டியன்
புகழப் பிரலாபன் சீதார்கன்
தக்க அபினியாசன் தன்னுடனே சாற்றும்
சன்னி பதிமூன்றே.

1. சந்திரிகன்
2. தாந்திரீகன்
3. விப்ரமன்
4. கண்டகுச்சன்
5. கன்னிகன்
6. சீகுவீகன்
7. உருத்திரன்
8. அந்தகன்
9. புக்குநேத்திரன்
10. இரத்தச்சாட்டியன் (சீதகன்)
11. பிரலாபன்
12. சீதார்கன் (சீதாங்கன்)
13. அபின்யாசன்

இவை ஒவ்வொன்றின் தனித்தனி லக்ஷணங்களும் பின் வரும் அத்தியாயங்களில் வரப்போவதால் அவைகளை இங்கு விபரமாக கூறவில்லை.

## ஒவ்வொன்றும் நீடிக்கும் காலவரை

| | | |
|---|---|---|
| சந்திரிகன் | 7 நாள் வரை நீடிக்கும் | |
| தாந்திரீகன் | 25 | ,, |
| சித்தவிப்ரமன் | 24 | ,, |
| கண்டகுச்சன் | 13 | ,, |
| கண்ணிகன் | 3 மாதங்கள் நீடிக்கும் | |
| உருத்திரன் | 20 நாட்கள் நீடிக்கும் | |
| அந்தகன் | 10 | ,, |
| பிரலாபன் | 14 | ,, |
| சீதாங்கன் | 15 | ,, |
| அபின்யாசன் | 15 | ,, |

சித்த வைத்தியத்தில் கூறப்பட்டிருக்கும் பெயர்களும் ஆயுர்வேதத்தில் கூறப்பட்டிருக்கும் பெயர்களும் மாற்றமிருந்தாலும் இருசாரரும் எந்தெந்த தோஷம் பிரகோபித்திருக்கிறதோ அதை ஆதாரமாகக் கொண்டுதான் வைத்தியத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். இது முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயமாகும். மற்றபடி குணவிசேஷங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. பெயர்கள் மட்டுமே மாறியிருக்கின்றன.

ஆங்கில முறைப்படி கூறப்படும் டைபாயிடுசுரம் என்னும் வியாதி, பித்தவாத பிரகோபத்தினால் உண்டாகிறது. நிமோனியா என்னும் ஜ்வரம் அபின்யாஸத்தைச் சேருகிறது. மலேரியா என்னும் முறைக்காய்ச்சல் விஷம ஜ்வரத்தைச் சேருகிறது. இந்த மூன்று வியாதிகளும் ஆபத்துக் காரணங்களால் உண்டாகின்றன. அதாவது அந்தந்த வியாதிக்குள்ள, கண்ணுக்கு தெரியாத, கிருமிகளால் உண்டாகின்றன என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆதலால் அந்தந்த கிருமிகளைக் கொல்லக்கூடிய மருந்துகளைக் கையாளுகிறார்கள். அவ்வாறு வைத்தியம் செய்யும்போது

முக்யத்வம் சரீரத்திற்குக் கொடுக்கிறதா அல்லது ஆகந்துக காரணத்திற்குக் கொடுக்கிறதா என்று யோசிக்க வேண்டி வருகிறது.

மேலும், மேனாட்டு வைத்திய விஞ்ஞானிகள், இந்த நோய்க்குக் காரணம் அதனுடைய க்ருமிதான் என்பதுதான் முற்றும் ஏற்கக்கூடியதா என்றும் ஆலோசிக்க வேண்டியதாகிறது. சாதாரண நிலையிலுள்ள ஒருவனுடைய தொண்டையை ஒரு பஞ்சினால் துடைத்தெடுத்து அதில் ஒட்டிக் கிடைக்கிற பொருளை பூதக்கண்ணாடி கொண்டு பார்ப்போமானால், இந்த நிமோனியாவுக்குக் காரணமான கிருமிகள் மட்டுமல்லாமல் காக்கை என்னும் அவ்வினத்தைச் சேர்ந்த வேறு கிருமிகளும் காணக்கிடைக்கலாம். அவ்வாறிருப்பவர்களுக்கு எல்லாம், ஏன் இந்த நிமோனியாவோ அல்லது வேறுக்கிருமியினால் அதற்குள்ள ரோகமோ வருவதில்லை.

மற்றும் க்ஷயரோகத்திற்குள்ள குறிகள் உள்ள ஒரு ரோகியின் கோழையில் க்ஷயரோக கிருமிகள், எப்பொழுதும் காணக் கிடைப்பதில்லை. க்ஷயரோகத்தின் லக்ஷணங்கள், இக்கிருமி இல்லாதபோது எவ்வாறு உண்டாகியிருக்கமுடியும் இவ்வாறு அன்வய வ்யதிரேக வியாப்திகள் இரண்டுமுள்ள நிலையில் ஒரு ரோகத்திற்குக் குறிப்பிட்ட கிருமிதான் ஏக காரணமென்று எவ்வாறு சொல்லமுடியும். இக்கிருமிகள் அவ்வியாதியின் ஒரு அவஸ்தையில் மலரூபமாக ஏற்படும் ஒரு லக்ஷணமாக இருக்கலாம். அல்லது இக்கிருமிகள் ஒரு குறிப்பிட்ட ரோகத்திற்குத் தனிக் காரணமாயில்லாமல் வேறு துணைக்காரணங்களை அபேக்ஷித்து வியாதியை உண்டாக்குமியல்பு பெற்றவையாகவும். இருக்கலாம், எவ்வாறானாலும் இக்கிருமிகள்தான் குறிப்பிட்ட ரோகத்திற்குக் காரணமென்று ஐயந்திரிபறத் தெளிந்ததாகச் சொல்ல இயலாத நிலையில், அக்கிருமிகளைப் போக்கி விட்டால்,

அதாவது நாசமாக்கி விட்டால், ரோகம் குணமாகிவிடும் என்ற கொள்கையை இக்கிருமி நாசினிகளைக் கண்டுபிடித்த மேல்நாட்டு வைத்திய விஞ்ஞான மஹாமேதைகள் ஓரளவு ஒப்புக் கொண்டாலும், உடனே கண்ணை மூடிக்கொண்டு இக்கிருமி நாசினிகளைப் பிரயோகிக்கக் கூடாது. மிக மிகவும் அவசியமானால் மட்டுமே உபயோகிக்க வேண்டும் அதுவும் வைட்டமின்களோடு சேர்த்துத்தான் கொடுக்க வேண்டும் என்று தொண்டை கிழியுமட்டும் உச்சஸ்தாயில் உலகமறிய தெரிவிக்கின்றனர். மறுபடி மறுபடியும் தெரிவித்து வருகின்றனர்.

நம் நாட்டிலுள்ள விதேச வைத்தியப் பயிற்சி பெற்றவர்கள் தாங்கள் மட்டும்தான் இக்கிருமிநாசினிகளைக் கண்டு பிடித்தவர்களின் வாரிசுகள் என்றும், தங்கள் பெரியோர்கள் சொத்து தங்களுக்கு மட்டும்தான் உரியதாகுமென்றும் வாரிசுரிமை கொண்டாடினாலும், இவர்கள் தனிச்சொந்தம் கொண்டாடும் அவ்விஞ்ஞான மேதைகள், இக்கிருமி நாசினிகளை உபயோகிக்கும் முறையில் விடுத்த எச்சரிக்கை, கட்டுப்பாடு, முதலியவைகளை மனமறியப் புறக்கணித்து, எடுத்தவுடனேயே இக்கிருமி நாசினிகளைப் பிரயோகிக்கத் தவறுவதே கிடையாது. என்னே இவர்கள்குருபக்தி என்னே இவர்கள் மனஸ்ஸாக்ஷி.

இக்கிருமிகள் விஷயமாக வேறொரு உண்மையை விளக்கிட வேண்டும். நமது சரீரமே நாற்றமெடுத்த ஒரு எருக்குன்று. இதில் நமது குடலோ மார்க்கெட் டையடுத்த ஒரு சாக்கடை. இதில் பலதரப்பட்ட கிருமிகள் இருப்பது இயல்புதானே. இவ்வாறுள்ள கிருமிகளில் சிலது நமது ஆரோக்ய வாழ்க்கைக்கு அனுகூலமான முறையில் ஒப்பற்ற உதவியைச் செய்கின்றன. இதை மேல்நாட்டு வைத்திய விஞ்ஞான மகாமேதைகளே நமக்கு

எடுத்தோதுகின்றனர். அன்னை இயற்கையின் இவ்வருளைக்கண்டு நாம் வியப்புற்றுத் திகைத்து நிற்கின்றோம். எந்திரத்தானும் ஈண்டு இறை செயல் அருளதாமே. என்ற கைவல்ய நவநீதந் தெளிந்தெடுத்தோதும் தத்துவத்தின் உண்மை இக்கிருமிகள் செய்யும் அரியசெயலைக் காணும் பொழுது நமக்கு விளங்குகிறது.

நட்புறவு பெற்ற இக்குடற் கிருமிகள் நமக்குச்செய்யும் அவ்வுபகாரந்தான் என்ன. அதையும் மேற்சொன்ன மேல் நாட்டு விஞ்ஞான மேதைகளே நமக்கு எடுத்தோதுகின்றனர்.

நாம் உண்ணும் ஆகாரம் ஜீரணமாகி திரவ ரூபமாகக் குடல்கள் வழியே செல்லும்போது அதிலுள்ள சத்துப் பொருள்களில் சில கிரகிக்கப்படுகின்றன. வேறுசில ஒதுக்கப்படுகின்றன. இச்சமயத்தில் அங்குள்ள பலதரப்பட்ட கிருமிகளில் நம்முடன் நட்புறவு பெற்ற கிருமிகள், அப்பொருள்களைப் பல விதத்தில் ஏற்றுக் கையாள முனைகின்றன. இதன் விளைவாக எத்தனை எத்தனையோ ரஸாயன பரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஏற்கனவே இருந்த சிலரஸாயனப் பொருள்கள் நிலை மாறிவிடுகின்றன. சில புதிய ரஸாயனப் பொருள்களும் உண்டாகின்றன. யாரால், மேற் சொன்ன நட்புறவு பெற்ற கிருமிகளின் செயலால் அவ்வாறுண்டாகும் அல்லது உண்டாக்கப்படும் ரஸாயனப் பொருள்களில் தயமின் என்பதும் ஒன்று. இந்த தயமின் மூலப்பொருளாக நின்று வைட்டமின் $B_{12}$ என்னும் சீவசக்தி அல்லது உயிர்சத்திப் பொருளை உடலில் உண்டாக்குகிறது. இதிலிருந்து அநேக தரமான இதர ஜீவசக்திப் பொருள்கள் உண்டாகவும் வழி ஏற்படுகிறது. இதனால் நாம் நீண்டகாலம் ஆரோக்கியத்துடனும் தாதுபலம், ஸஹனசக்தி, காயபலம், அக்னிபலம், மனோபலம் இந்திரிய பலம் முதலிய யாவும் பெற்று உயிர் தரித்து உய்கின்றோம்.

ஜ்வரத்தைப் போக்கும் வியாஜ்யத்தில் பிரயோகிக்கப்படும் கிருமிநாசினிகள், ஜ்வரத்துடன் சம்பந்தப்பட்ட கிருமிகள் மட்டுமா நாசமாக்குகின்றன. இல்லை.

நாம் உயிர் தரித்து நிற்பதற்கின்றியமையாத உயிர் சக்திப் பொருளான வைட்டமின்களைநமக்குசமைத்துதவும் நட்புறவுபெற்ற கிருமிகளையும் நாசமாக்கி வருகின்றன. இதன் விளைவுதான் என்ன. ஜ்வரம் குறைவடையும். ஆனால் உயிர்சக்திப் பொருள்களின் இன்மையால் நோயாளி (வியாதி நீங்கினாலும்) உயிர் தரித்து நிற்கச் சக்தியற்ற பரிதாப நிலையை அடைகிறான். ஆகவேதான் இக்கிருமி நாசினிகளை கண்டுபிடித்தவர்களே, இவற்றை மிகமிகவும் அத்யாவச்யமேற் பட்டாலல்லாது உபயோகிக்கக் கூடாது என்று விதித்தனர். ஆனாலென்ன. வைட்டமின்களில்லாமல் போய்விடுமென்று கவலையைத் தீர்க்க இக்கிருமிநாசினிகளை. வைடமின்களோடு சேர்த்துக் கொடுத்தால் இக்குறையைச் சரிக்கட்டி விடலாமே. என்று சிலர் சமர்த்திக்கின்றனர். தேவையான வைட்டமின்களை யெல்லாம் தேவையான மட்டும் நிரந்தரமாக இயற்கையாகவே நமக்குச் சமைத்து தந்துதவும் நட்புறவு கிருமிகளை யெல்லாம் கூண்டோடு கைலாஸ மேற்றிவிட்டுப் பிறகு அதற்குப் பரிகாரமாக ஈடு செய்வதாக சில செயற்கை வைடமின்களைக் கொடுக்கும் செயல். பசுவைக்கொன்று செருப்புத்தானம் செய்யும் செயலுக்கொப்பாகுமல்லவா. ஆனால் மறுபடியும் பால் வேணுமே. இதற்குப் பசுவிற்கு எங்கே போவது. இப்படி இவர்கள் கொன்று தீர்த்த நட்புக்கிருமிகளை எவ்வாறு மறுபடியும் உயிர்ப்பித்து என்றும்போல் தமதுசெயலைப் புரியுந் திறனை யூட்டுவது. இந்நட்புக் கிருமிகளில்லா விட்டாலும் செயற்கை வைடமின்களையே எல்லாகாலத்திற்கும் சேவித்து வரலாம் என்றால் தானாகச் சம்பாதித்து வாழமுடியாத மாப்பிள்ளைக்குப்

பணந்தந்துதவும் மாமனாரின் தலைவிதி போலல்லவா நிலைமை ஏற்படும் வைட்டமின் வியாபாரம் நீடித்து நடக்கலாம், பெருகவும் பெருகலாம் ஆனால் அதற்காகவோ வைத்தியம் செய்வது வைத்தியன் வியாபாரியின் ஏஜண்டாகலாம். இவ்வித இன்னல்கள் உண்டென்று தெறிந்துஞ் செய்கின்றனரோ சிலர். இதை விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் முற்போக்கு என்று தாம் பேசிக் கொள்கின்றனர். இந்த விந்தையை என்ன வென்பது அதுமட்டுமா. நாட்டுவைத்திய முறைகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் யாரோ எழுதி வைத்தவை. இன்றைய ஸ்புட்னிக் சகாப்தத்தில் இதைப்போய்.......என்று கேலி செய்யவும் தயங்குவதில்லை. கருடா ஸௌக்கியமா என்று சிவலிங்கத்தின் மேலிருந்து எலிக்குஞ்சு கேட்டதாமே அந்தக்கதை நினைவிற்கு வருகிறதில்லையா.

இக்குழப்பங்கள் வரக் காரணமென்ன. வியாதி, அதற்குக் காரணமானது கிருமி. அந்தக் கிருமியின் வாழ்க்கை வரலாறு, அதை அழிக்கவல்ல கிருமிநாசினி என்றிப்படி வியாதியைப்பற்றியே ஒருதலை பக்ஷமான கருத்து. அதைப் பெருக்கும் முயற்சி என்றிருப்பதால்தான் இவ்வித அவக்கேடான முடிவுகள் விளைகின்றன. சரீரம் என்று ஒன்றிருக்கிறதே. அதனாலன்றோ இக்கிருமி, அதன் லீலைகள் எல்லாம் ஏற்படுவது. கிருமிகளை மட்டும் கவனித்துப் பயனுண்டா. அதற்காதாரமான சரீரத்தையும் கவனிக்க வேண்டாமா. வியாதியை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற முயலுஞ் சக்தி இச்சரீரத்திற்கு இருக்கிறதே. அச்சக்திக்குத் துணையாயிருந்து அதைத் தூண்டி ஊக்குவித்திட என்ன செய்யலாம். வியாதியுடன் போரிடும் போதும், வியாதியின் கொடுமையைச் சகிக்கும் போதும்,சரீரத்தின் பலம் குறையுமே. உடல் மெலியுமே. இதனாலெல்லாம் இன்னல் விளையாதிருக்க உடற் சக்தியை அளித்திட அல்லது அவசியமான அளவிற்குக் குறையாமல் வைத்திருக்க என்ன செய்யலாமென்ற வகையில்

(ரோகத்திற்கும் அதற்குக் காரணமாயிருக்கும் கிருமிகளுக்கும் ஆதாரமாயிருக்கும்) உடலைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் ஒருதலைப் பக்ஷமாக மட்டும் செய்யுஞ் செயலால் மேற்சொன்ன விதமான இன்னல்கள் யாவும் விளைகின்றன.

ஆகையால் இக்கிருமிகளைக் கொன்றால் மாத்திரம் போதாது. சரீரத்திற்கு அவற்றை எதிர்க்கக்கூடிய சக்தியை (பலத்தை)யும் உண்டு பண்ண வேண்டும். இதைச் சமீபத்தில் தான் ஆங்கில வைத்தியர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால்தான் டைபாயிடு போன்ற ஜ்வரத்தில் க்ளோரோமைஸெடின் போன்ற கிருமிஹர மருந்துகளை ஒரு வியாதியஸ்தனுக்கு கொடுக்கும்போது, அதைத் தொடர்ந்தாற்போலவோ அல்லது அத்துடன் சேர்ந்தோ வைட்டமின்களையும் கொடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அவ்வாறு செய்யாவிடில் அக்கிருமிகளைக் கொல்வதற்காக கொடுக்கப்படும் மருந்து, ரோகியையோ கொல்லும் அளவிற்கு வந்துவிடுமல்லவா.

மற்றொரு கவனிக்கவேண்டிய விஷயம் என்னவெனில், க்ளோரோமைஸெடின் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் ஜ்வரத்தை இறக்கி விட்டாலும், அது பிரகோபமடைந்திருந்த தோஷத்தை அழுத்தியிருக்கிறதே தவிர, அந்த தோஷததைப் பாகஞ்செய்து வெளிப்படுத்துவது இல்லை. அவ்வாறு கெட்டுப்போன வாதபித்த கப தோஷங்களை வெளிப்படுத்தாமல் தேகத்தினுள்ளேயே ஒளிந்திருக்க விட்டு விடுவதால் அந்த ஜ்வரமே மறுபடியும் தலை தூக்கலாம். அல்லது வேறு வியாதிகளுக்கும் வித்தாகலாம்.

தீபன பாசனங்களென்ற சமனங்களால் (தாத்காலிகமாக) சரிக்கட்டப்பட்ட தோஷங்கள் (தாதுக்களில் ஒளிந்திருந்து காலாதிபலங்களைப் பெற நேரிடும்போது) மறுபடியும் சீற்ற முற்று ரோகத்தை யுண்டாக்க முற்படலாம். ஆனால் (தக்காலத்தில்

தக்கமுறையில்) சோதனௌஷதங்களால் (சரீரத்திலிருந்து) களையப்பட்டால் அவை மறுபடியும் (ரோகத்தை யுண்டாக்கும் வகையில்) எழுவதில்லை. இவ்வித அனுகூலம் இந்த கிருமிநாசினியைப் பிரயோபிக்கும் முறையில் இல்லை யல்லவா.

மேலும் இந்தக்கிருமிகளும் உயிர்ப்பொருளால் தானே. எப்படியாவது தாம் உயிர்வாழ வேண்டும் என்ற ஆற்றலும் தம் இனம் பெருகவேண்டுமென்ற அவாவும் அக்கிருமிகளுக்கும் இருப்பது இயல்புதானே. ஆகவே நாம் உபயோகிக்கும் கிருமி நாசினிகளுக்கும் ஒரு பெப்பே காட்டித் தாம் தொடர்ந்து ஜீவித்திருப்பதற்குச் சாதகமான முறையில் தனது வாழ்க்கைத் தரத்தையே மாற்றிக்கொண்டு விடுகின்றன. அந்நிலையில் அதுவரையில் உபயோகித்து வந்த கிருமி நாசினிகள் பயன் தருவதில்லை. ஆகவே வேறொரு புதிய கிருமி நாசினியைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி ஆரம்பமாகும். இப்படி கண்டுபிடித்த புதிய கிருமி நாசினியையும் சில நாளில் முதல் மருந்தைப்போலவே பயனற்றதாய்த் தீரும். இந்தக் கண்ணாமூச்சிக்கு முடிவே கிடையாது. ஆகவே சமனௌஷதங்கள் நிரந்தரமான சுகத்தைத் தராது என்பது எக்கோணத்தில் பார்த்தாலும் தெளிவாகிறது.

சாதாரணமாக 21 நாள் ஸந்நிபாத ஜ்வரத்தை அனுபவித்த ஒருவன் ஜ்வரம் நீங்கி, உற்ற காலத்தில் தலைக்கு ஜலம் வார்த்துக்கொண்ட பிறகு, படிப்படியாக காலக்கிரமத்தில் தன்னுடைய அன்றாட நடவடிக்கைகளைச் சிறுகச் சிறுக கவனிக்கத் துடங்கி சில தினங்களில் பழைய நிலையை அடைகிறான். இது எதனால், வியாதியுடன் போராடி வெற்றி கொள்ளும் தனது இயற்கைச் சக்திகொண்டே இவன் வியாதியிலிருந்து மீண்டவன் என்பதனால்தான்.

உழைத்தவனுக்கு நல்லபசி எடுத்து நன்றாய் உண்டு ஜெரித்துக்கொண்டு பலம் பெறுவானல்லவா. அதேபோல் 21 நாட்கள் ஜ்வரத்துடன் போரிட்டுக் களைத்துள்ள இவனுடைய சரீர தாதுக்கள் தமது களைப்பை விரைவில் தீர்த்துக்கொள்ள ஆவலுடனிருக்கின்றன. ஆகவே இவன் ஏற்கும் ஆகாராதிகள் நன்முறையில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் ஜீசக்தி என்னும் வைட்டமின்களைத் தேவையான மட்டுமே அதற்கதிமாகவும் உண்டாக்கும் சக்தி இவன் சரீரத்தில் முழுவேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் ரோகியானவன் அளவற்ற பயன்களைத் துரிதத்தில் அடைகிறான். வழக்கமாய் இருந்ததைவிட அதிகமான தேக புஷ்டியும் பலமும் பெருகின்றான்.

கிருமிநாசினிகளின் உபயோகத்தால் ஒரு வாரத்தில் ஜ்வரம் தணிவடைந்தவன் என்று பெருமைப்படும் ஒருவனுக்கு தேகத்தில் சக்தி வருவதற்கு இவ்வித வாய்ப்புகள் ஏது. அவன் சொல்ல இயலாத பலஹீனமாவதற்குக் காரணமென்ன. மனிதனைப் படைத்த கடவுள் மனித சரீரத்தில் எக்காரணத்திலேனும் வியாதி ஏற்படுமாகில் அவ்வியாதிகளை எதிர்த்துப் போராடக் கூடிய ஸஹன சக்தியையும் அளித்திருக்கிறார். ஆண்டிபையோடிக்ஸ் என்ற மருந்துகளைச் சாப்பிடும் பொழுது அம்மருந்துகள் வியாதிக்கு காரணமான கிருமிகளைக் கொல்வதோடல்லாமல், வியாதியை எதிர்த்துப் போராடி வெற்றிபெரும் தாதுசக்திகளையும் கொன்று விடுகிறது. இதன் காரணமாகவே அவ்வாறு பலஹீனமானவனுக்கு வைட்டமின் B Complex, $B_{12}$ முதலிய ஊசிகளைப் போட்டு உடம்பைத் தேற்றும் படியாக ஆகிவிடுகிறது. இம்முயற்சியால் கிடைக்கக்கூடிய பலாபலன்களை ஏற்கனவே விளக்கியாயிற்று.

இப்புத்தகத்தில் அதே வியாதிக்கு உபயோகப்படக்கூடிய மருந்துகளைத் தெரிவித்திருப்பதை உற்றுக் கவனிக்கும்பொழுது ஒவ்வொன்றும் வெகு சாமர்த்தியமாகவும், புத்திதீக்ஷண்யத்துடனும் பொறுக்கி எடுத்து அமைக்கப்பட்டிருப்பது தெளிவாகத்

தெரியவரும். வாதபித்தகபங்கள் பிரகோபிப்பதால் சந்நிபாதம் உண்டாகிறது என்பது நமக்குத் தெரியும். அவ்வாறு பிரகோபமடைந்த தோஷத்தை தன்னிலைக்குக் கொண்டு வந்தால் மட்டும் போதாது. தீபன பாசனங்களால் தோஷ பாகத்தை உண்டாக்கிப் பிறகு சோதன சிகிச்சைகளால் அவைகளை சரீரத்திலிருந்து களைந்த பிறகுதான் வைத்தியன் தன் கடமையைச் செய்த திருப்தியுடன் நிம்மதியாக இருக்கமுடியும். அவ்வாறு செய்யாவிடில் லங்கன பாசனங்களால் தற்காலிகமாகத் தனிவடைந்த தோஷம், காலத்தின் நிலைமாற்றம் அல்லது ஆகாராதிகளால் ஏற்படும் அற்பமான அபத்தியம் என்னும் நொண்டிக் காரணங்களாலும் மறுபடியும் மறுபடியும் பிரகோபித்து, அதே ரோகத்தையோ அல்லது; வேறு ரோகத்தையோ மிகவும் கடுமையான வகையில் உண்டாக்கி முடிவில் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கவும் செய்யலாம் என்பதை ஏற்கனவே விளக்கியாயிற்று.

ஆதலால் மூன்றுதோஷங்களும் பிரகோபமடைந்துள்ள ஸந்நிபாத நிலையில் ஒவ்வொன்றின் ஏற்றத் தாழ்வுகளையும், அவை தமது ஸ்தானங்களை விட்டு எந்தெந்த ஸ்தானங்களில் வியாபித்துள்ளன என்பதையும், சமனபரமான தீபன பாசனங்களால் அவற்றின் பிரகோபத்தைத் தணியச் செய்தால் போதுமா, அல்லது சோதன முறைகளால் சோதனஞ் செய்தாக வேண்டுமா, என்பதையும், தெளிந்து சோதனஞ் செய்வதனால் தோஷங்கள் பாகமாகியுள்ளனவா, என்பதையும் கண்டறிந்த பிறகு தக்க காலத்தில் தக்கமுறையில் சோதனஞ் செய்வதும், இதனால் எல்லாம் ஜ்வரம் தீர்ந்த பிறகும் ஜ்வர முகத்தனின் தாதுக்களில் அல்பம் சொல்பம் ஒளிந்து நின்று காலாந்தரத்தில் மறுபடியும் பிரகோப நிலையை அடையும் இயல்பிருப்பின் அவற்றைச் சரிக்கட்டவும், நஷ்டமான ஜடாராக்கினியைத் திறமையுடன் சிறிது சிறிதாக விருத்திபண்ணி உண்ணும் உணவுகளைச் சரிவர எரித்துச் சத்துப்பொருள்களை சரீரத்தில் ஏற்றுக்கொள்ளும் திறமையையும், சரீரபலத்தையும், சகிப்புச் சக்தியையும், தேக புஷ்டியையும் பெருக்கிடத்தக்க சிகித்சைகளைச் செய்ய வேண்டும்.

உதாரணமாக ஸந்நியாத ஜ்வரத்தில் ரத்தப்போக்கு, அதைத்தொடர்ந்து வயிற்றுப்புசம் போன்றவைகளை எடுத்துக்கொள்வோம். இச்சந்தர்ப்பங்களில் இவ்வித உபத்திரவங்களின் (Complication) கடுமையை உன்னி அவற்றிற்கே உடனடியாக சிகித்சை செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம். முழு கவனத்தையும் இத்துறையிலேயே செலுத்தவேண்டிய நிலைமையும் ஏற்படலாம். ஆனால் அதற்காகச் செய்யும் சிகித்சை ஹேதுவிற்கோ, வியாதிக்கோ இரண்டிற்குமோ விருத்தமாய் இருத்தல் தகாது. இப்படிப் பொதுவான சிகித்சையானது 1) வியாதி விபர்யயம் 2) ஹேது விபர்யயம் 3) ஹேது வியாதிவிபர்யயம் என்று மூன்று வகைப்படும். விபரீதார்த்தகாரீ என்று நான்காவது ஒரு வகையும் உண்டு. உதாரணமாக ஒருவனுக்கு வயிற்றில் ஏதோ சில அஹிதமான கழிவுப்பொருள்கள் சேர்ந்திருக்கும் காரணத்தால் வாந்தி ஏற்படுகிறது. சிறிது சிறிதாக இதை இவன் வாந்தி எடுத்தபடியிருப்பான். வாந்தியை நிறுத்தி விடும் முயற்சியில் அக்கழிவுப் பொருள்களை வயிற்றிலேயே தங்கி நிற்குமாறு செய்வது அறிவாகுமா. வாந்தியை உண்டாக்கும் மிக மிருதுவான மருந்தைக்கொடுத்து வாந்தியைத் தாத்காலிகமாக ஓரளவு அதிகரிக்கச் செய்வான் அனுபவமிக்க வைத்தியன். நூறு தரத்தில் சிறுகச் சிறுக வாந்தி எடுப்பதற்கு பதில் ஒரே தரமாக வயிற்றில் குவிந்துள்ள கழிவுப் பொருள்களை எல்லாம் இவ்வுபாயத்தால் வெளிப்படுத்தி விடுவான். இதற்குப் பிறகும் வெளிப்படுத்திட வேண்டிய கழிவுப்பொருள்கள் வயிற்றிலில்லாமல் அறவே தீர்ந்துவிடுவதால் வாந்தி எடுப்பதும் நின்று விடும். இவ்வாறு வாந்தி அல்லது சர்த்தி என்ற ரோகத்தை வாந்தியையே உண்டுபண்ணும் இயல்புபெற்ற சர்தனம் என்னும் உபாயத்தால் போக்கிவிடும் சிகித்சாக்ரமத்தை தகர்த்தகாரீ என்று சாஸ்திரங்கள் வர்ணிக்கின்றன. இவ்வாறு வகுக்கப்பட்ட சிகித்சைக்ரமத்தில் ஒருதலை பக்ஷமான சிகிச்சை என்று குறைகூற இடமில்லையல்லவா.

இப்படிப்பட்ட சிகித்சை முறைகளில் குறிப்பிட்ட நோயாளிக்கு குறிப்பிட்ட ரோகத்தில் எது உசிதமானது என்று தோன்றுகிறதோ அதையேதான் வைத்தியன் செய்திட முனைவான். அவ்விதம் செய்யும் சிகிச்சையில் நன்னிலை கெட்டு நிற்கும். தோஷம் அதனால் தூக்ஷிக்கப்பட்ட தாதுக்கள் (மலங்களும்கூட) அல்லது

1. தூஷ்யம்

2. தேசம்:- அதாவது ரோகியின் சரீர இயல்பை நிச்சயித்திடும் தேஹதேசம், மற்றும் அவன் வாழுமிடத்தின் நிலையைச் சம்பந்தித்த பூமிதேசம் ஆகியவற்றிற்கும் அவற்றின் இயல்பு காரணமாக வாதபித்த கபங்கள் பெறக்கூடிய நிலைமாற்றங்கள்.

3. ரோகியின் சரீரபலம், மனோபலம், ஸஹனபலம், வியாதியின் பலம்

4. காலம்-பருவங்கள் வியாதியின் அவஸ்தாகாலம்

5. அனஸம் - அதாவது ஜாடராக்கினியின் ஸம, மந்த, தீக்ஷ்ண, விஷம நிலைகள்

6. பிரகிருதி அல்லது சரீரக்கூறு

7. ரோகியின் வயது

8. ஸத்வம் அதாவது மனோதைர்யம்-உயிர் தரிக்கும் சக்தியாகியவை

9. ஸாத்ம்யம் - ஆகார விஹாராதிகளில் அவன் சீலித்துப் பழக்கப்பட்டவை.

10. ஆகாரம் - வியாதி காலத்தில் ஏற்கத்தக்கவை, எத்தன்மையாய் இருத்தல் வேண்டுமென்பது போன்றவைகளை

வெகுநுட்பமாக கவனித்து ஹிதாஹிதங்களை நிச்சயித்திடல் வேண்டுமென்றும் சாஸ்திரங்கள் தெரிவித்துக்கொள்கின்றன.

ஹோமியோபதியை அனுசரிப்பவர்களும் சரீரத்திற்கு முக்கியத்துவத்தை கொடுப்பதோடல்லாமல் ரோகியின் மனோநிலை, புத்திநிலை முதலியவை எவ்வாறு விகாரமடைந்திருக்கின்றன என்று தெரிந்துகொண்ட பிறகுதான் வைத்தியத்தை நிர்ணயிக்கிறார்கள்.

அவர்களுடைய கொள்கை என்னவென்று ஆராய்வோமானால், தேகம் திடமாயிருந்துகொண்டு அதன் வேலையை சரிவரச் செய்து கொண்டிருக்கும் பக்ஷத்தில் வியாதி உண்டாகாதென்றும், அவ்வாறு அவ்வியாதி உண்டாகும் பக்ஷத்தில் அந்த வியாதியின் லக்ஷணங்களை உண்டாக்கக்கூடி. ஔஷதத்தையே மிகச் சிறிய அளவில் (தகர்த்தகாரீ என்று முன்சொன்ன தத்துவப்படி) கொடுக்கும் பொழுது தேகம் அந்த வியாதியை எதிர்த்து நிற்கக் கூடிய சக்தியைப் பெற்றுவிடுகிறது என்றும் சொல்கிறார்கள்.

பெரிய அம்மையை உண்டாக்கக்கூடிய பொருளையே மிகமிகச் சிறிய அளவில் அம்மைகுத்தும் வகையில் சரீரத்தில் செலுத்துவதால் பெரிய அம்மையை தடுத்து, ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தி சரீரத்திற்கு வருவதை காண்கிறோமல்லவா.

சரீரத்தை பூமிக்கும் அதில் பண்செய்யப்படும் நற்பயிரை ஆரோக்கியத்திற்கும் ஒப்பிடுவது பொருந்தும். ஆரோக்கியம் என்னும் நற்பயிர் நன்முறையில் விளைந்து பலன் தருவதற்கு பூமியை பலவகையில் பண்செய்கிறோம், வியாதி என்னும் களைகள், புல், பூண்டு முதலியவை இப்பூமியில் இருக்கலாம்.

அவற்றைக் களைவதற்காகவே உழுது களைகளை வேரறுத்து, நற்பயிரைக் காத்திட முயற்சி செய்கிறோம். நீர் பாய்ச்சுவதும் உரமிடுவதும் அவசியந்தான். ஆனால் தேர்ந்தெடுத்து எருவைத்தான் தக்க ஸமயத்தில் தக்க அளவில் இடவேண்டும். நீர் பாய்ச்சுவது அவசியமானாலும் அதிக நீர்பாய்ச்சிடல் கூடாது. இதையும் மீறி புல் பூண்டு முதலியவைகள் முளைத்துப் பயிரை நலிவுற செய்யலாம். அவற்றைக் களைவதோடு அவை மறுபடியும் முளையாமலிருக்குமாறு கண்காணிப்பதும் அக்களைகளால் நலிவுற்ற பயிர்கள், களைகளைக் களைந்திருக்குங்கால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்தும் தேறிடத் தக்கமுறையில் மேலே எருதூவிப் பரிபாலித்தல் அவசியம். சப்பாத்திப்பூச்சிகள் போன்றவற்றால் நற்பயிருக்கு இன்னல் ஏற்படலாம். அவற்றைப் போக்கச் சில கிருமிநாசினிகளை உபயோகிக்க நேரிட்டாலும் அதன் பிறகும் பயிர்களைத் தேற்றிட முயற்சிக்கவேண்டும். இப்படியாக, ஆரோக்யமென்ற நற்பயிரைக் காப்பாற்றிட, இன்னல் விளைவிக்கும் களைகள், சப்பாத்திப்பூச்சி முதலியவை போன்றவைகளை மட்டும் அகற்றும் வகையில்முயற்சித்தால் போதாது. நிலத்தின் வளத்தைப் பரிபாலித்தலும், அதில் புல், பூண்டு முதலியவைகள் ஏற்படாமல் இருப்பதற்கான முயற்சிகளை வருமுன்காக்கும் வகையில் செய்வதும் அவசியம்.

இதிலிருந்து நாம் ஊகிக்க வேண்டியது என்னவென்றால் பூமியின் மேலிருக்கும் செடியை மாத்திரம் கவனித்தால் போதாது. அதற்கு ஆதாரமாக இருக்கும் பூமியையும் செப்பனிட வேண்டுமென்பதே ஆகும். நன்முறையில் பண் செய்யப்பட்ட பூமியில், தக்க கண்காணிப்பில் வளரும் பயிருக்கு வியாதி அணுகுவதில்லை. முன் சொன்னதுபோல் ஆகந்துகமாக ஏதேனும் கிருமிகளால் இன்னல் ஏற்படுமானாலும் அக்கிருமிகளோடு போர் புரிந்தோ, அல்லது அவற்றையே ஆகாரமாக ஏற்றோ,

அக்கிருமிகளால் பயிருக்கு யாதொரு இன்னலும் வராமல் காக்கவும் இயற்கையாக வேறு சில முகாந்திரங்களும் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அவ்வாறே மனிதன் வியாதியை எதிர்த்து அதை ஜெயிக்கும் அளவிற்கு அவனுடைய தோஷ தாதுக்கள் பலம் பெற்றிருந்தால் அவனை எளிதில் வியாதி பீடிக்க முடியாது. வியாதிகளை தடுக்கும் திறனை தேகத்திற்கு அளிக்கும் வகையில் இயற்கை அருளிய இதர முகாந்திரங்களைக் கிருமி நாசினிகளைப் பிரயோகிப்பது போன்ற செயல்களால் இழக்காமல் காப்பாற்றிடவும் வேண்டும்.

ஒவ்வொரு வைத்திய முறையைக் கையாளுபவர்களும் அதற்குள்ள அடிப்படையான தத்துவத்தைப் பின்பற்றித்தான் வைத்தியம் செய்கிறார்கள். ஒவ்வொரு வித வைத்தியத்திலும் சிறந்த முறைகள் இருக்கத்தான் செய்கின்றன. எந்த முறையை அனுஷ்டிப்பவனாக இருப்பினும் வியாதியை சீக்கிரம் குணப்படுத்துவதே வைத்தியனின் குறிக்கோள். அல்லது கடமை என்றுணர்ந்து, எந்த வைத்திய முறையில் முழுமை நிரம்பி இருக்கிறதோ, குறைபாடுகள் இல்லையோ, அதையே ஏற்றிடல் தனது கடமை என்று தெளிதலே அறிவாகும்.

எப்பொருள் எவ்வெவர் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்ற பொன்மொழியை மறவாமல் நோயாளியின் வியாதியைப் போக்கிடக் கூடிய மருந்தையேற்று உபயோகிப்பதில் தயங்காமலிருப்பது நேர்மையாகும்.

நோயாளியின் பிணியைப் போக்கும் நற்பணியில் ஈடுபட்டிருப்பவரில் பல காரணங்களைச் சொல்லி உயர்வு தாழ்வு என்ற பேதப்புத்தியையும் இனப்பிரிவுகளையும் உண்டாக்கிடும்

பிளவு சக்திகளின் சூட்சிக்குள்ளாகாம லிருப்பது நடுநிலை இவற்றைப் பெற்றவனே வைத்தியத்தொழில் புரியவல்ல இலட்சியத் தொண்டனாவான்.

சந்நி அல்லது சந்நிபாதம் என்ற வியாதியை ஆங்கிலத்தில் டெலீரியம் **(DELIRIUM)** என்று சொல்லுகிறார்கள். இது சரியல்ல.

சந்நி என்பது மூன்று தோஷங்களின் பிரகோபத்தினாலும் உண்டாகும் ஒரு வியாதி என்பது நமக்குத் தெரியும். டெலீரியம் என்பது டைபாயிடு. நிமோனியா முதலிய வியாதிகள் பரிணாமம் அடையும் பொழுதுண்டாகும் ஒரு உபத்திரவம் மட்டுமே தவிர, அதையே வியாதி என்று கருத முடியாது. வியாதி என்பதற்கும் அதனால் ஏற்படும் உபத்திரவத்திற்கும் அதிக வித்தியாஸமுண்டு. ஒன்று காரணம் மற்றொன்று காரியம். இவை இரண்டுமொன்றுதான் என்று நாட்டுவைத்தியம் படித்தவர்கள் ஒப்புக்கொள்வதில்லை.

மேலும் சிகிச்சை என்று வரும்பொழுது நமது வைத்திய முறையில்தான் அநேகம் மருந்துகள் இருக்கின்றன. ஆங்கில முறைப்படியுள்ள சிகித்ஸை வியாதியை சமனம்தான் செய்யுமே தவிர சோதனம் செய்யாது. இப்புத்தகத்தில் கூறியிருக்கும் ஒவ்வொரு மருந்துகளையும் உற்று நோக்குங்கால், அவை தோஷத்தை சமனம் செய்வதோடல்லாமல் சோதனமும் செய்து விடுகின்றன. இதனால் வியாதி மறுபடியும் களைக்க விடாமல் பாதுகாக்கப்படுகிறது. இந்த வாய்ப்பு மற்ற முறையில் கிடையாது. இதோடல்லாமல் பலவகையான தோஷப் பிரகோபங்களுக்கும் அததற்கு தகுந்தாற்போல் மருந்துகள் இருப்பதால் நமது நாட்டு வைத்திய முறைப்படி சிகித்சித்தல் எளிதாகின்றது.

சரபேந்திர வைத்ய முறைகள்

# சந்நி ரோக சிகிச்சை

## சந்நி முதலானதற்கு கருடாஞ்சனம்

துரிசுபெருங் காயமிள கொடுநேர்வா
ளப்பருப்புச் சுக்கிவ் வைந்து
மருமையதாய் வகையினுக்கோர் வராகனெடை
வெற்றிலைச்சா றறைத்துச் சாம
வரையுருட்டி யுலர்த்திவைத் திதுகருடாஞ்
சனமாகு மாதர் பாலி
னிருவிழிக்கு மெள்ளளவு போடுசந்நி
பிசாசுவிட மெவையுந் தீரும்.

(இ-ள்.)

சுத்திசெய்த துரிசு
" நேர்வாளப் பருப்பு
பொரித்த பெருங்காயம்
மிளகு
சுக்கு

இவைகளை வகைக்கு ஒவ்வொரு வராகனிடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு, வெற்றிலைச்சாறு விட்டு ஒரு ஜாமம் அரைத்து நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் காய வைக்கவும். இதனைத் தாய்ப் பாலில் இழைத்து எள்ளளவு எடுத்து இரு கண்களிலும் கலிக்கமிட சந்நிபாதம், பிசாசு, விஷம் முதலானவைகள் தீரும்.

இதற்குப் பெயர் கெருடாஞ்சன மாகும்.

## சந்நிக்கு நஸ்ய வகைகள்

முந்திரிகைப் பழமிந்துப் பதிமதுரந்
திப்பிலியின் மொழியுஞ் சுக்கோ
டைந்' துமுலைப் பாலிலுரைத் திட்டுநசி
யஞ்செயினு மந்தச் சுக்கைத்
தந்தொருபூ சினிப்பூச்சாற் றுறைத்துநசி
யஞ்செயினு சந்நி தீரு
மிந்தவகை செய்திடெனச் சரபோசி
மன்னர்மதித் திசைச்சு தின்றே. 2

(இ-ள்.)

திராக்ஷைப்பழம்
இந்துப்பு
அதிமதுரம்
திப்பிலி
சுக்கு

இவைகளைச் சமனிடை எடுத்து தண்ணீர் விட்டரைத்து மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு, வேண்டும்போது முலைப்பால் விட்டு உரைத்து நசியம் செய்யவும்.

சுக்கை பூசனிப்பூச் சாற்றிலரைத்து நஸ்யம் செய்யினும் சந்நிகள் தீரும்.

## சந்நிக்கு மஞ்சள் திரி

மஞ்சள்மிள குடனுன்னிச் சருகுவசம்
பொடுமான்றோல் வகுக்கு மிந்த
வஞ்சுவகை யொடுசுரேக்காய் கந்தகமுஞ்
சமன்கூட்டி யறப் பொடித்துப்

பஞ்சினிற்செய் சிறிதுகிலிற் பரப்பியுருட்
டித்திரித்துப் பரிந்து தீயிட்
டெஞ்சலிலா தனைப்புகைநா சிக்கொளச்
சந்நீயென்ற தெல்லாந் தீரும். 3

(இ-ள்.)

மஞ்சள்
மிளகு
பூண்டுத்தோல்
வசம்பு
மான்தோல்

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | 1 வராகனெடை |
| சுரக்காய் கெந்தகம் | 5 வராகனெடை |

இவைகளையெல்லாம் நன்றாகச் சூரணித்து ஒரு ஜாண் நீள அகலமுள்ள வெண்மையான துணியில் பரப்பி, கெட்டியாகச் சுருட்டிக்கொள்ளவும்

தேவைப்படும்போது இத்திரியைக் கொளுத்தி இதிலிருந்து எழும்பும் புகையை மூக்கினால் உறிஞ்சினால் சந்நிகள் தீரும்.

## அமுக்கராக் கற்பம்

ஓங்கிடமுக் கிராவதனைச் சமுலமுங்கொண்
டுலர்த்தி யிடித் துறவடிக்கொண்
டாங்கொருநற் புதுக்கலசத் திட்டிரண்டு
கழஞ்சுநெய்யி லருந்தி லாக்கைக்
காங்கைதவிர்த் தழகுபெறப் பருக்குந்தே
னுடனருந்திற் காயந் தேயுந்
தாங்கிடுமெண் ணெயிற்கொதிப்பித் தருந்திமே
லினும்பூசிற் சந்நி தீரும். 4

(இ-ள்)

அமுக்கிராச் செடியைச் சமூலமாகக் கொண்டுவந்து. நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். பின்னர் இதனை இடித்து வஸ்த்திரகாயம் செய்து, ஒரு புதுக் கலசத்தில் சேமித்து வைத்து. மூவிரல் கொள்ளுமளவு எடுத்து, இரண்டு கழஞ்சு (¼ பலம்) பசுவின் நெய்யுடன் கூட்டி அருந்தவும்.

இதனால் உடல் காங்கை தீர்ந்து, உடல் பருக்கும். உடலுக்கு அழகு தரும்.

இப்பொடியை நல்லெண்ணையிலிட்டுக் காய்ச்சி வைத்துக்கொண்டு, உள்ளுக்குச்சாப்பிட்டு மேலுக்கும் பூசச் சந்திகள் தீரும்.

## அமுக்கிராச் சூரணம்

...... ....... மவ் வமுக்கிராச் சமூலத்து
ளினைநீரிற் கரைத் தருந்தித்
தானதனிற் சிறிதுடலிற் பூசிவரக்
கக்குவான் சார்ந்து ராது
தோனொடுதிப் பிலிகூட்டிக் காசளவு
தூளருந்திப் சிலேட்டுமம் போம்
பானமுற வுதபெருமை மோரிலூறக்
கலந்தருந்திற் பாண்டு தீரும். 5

(இ-ள்.)

அமுக்கிராக் கிழங்கைச் சமூலமாக எடுத்து, நிழலில் உலர்த்தி இடித்து வஸ்த்திரகாயஞ் செய்துகொண்டு. இதில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்து உள்ளுக்குச் சாப்பிடவும். இதில் சிறிதெடுத்து உடம்பிலும் தேய்த்துவரக் கக்குவான் இருமல் தீரும்.

இச் சூரணத்துடன் திப்பிலியும், தேனும் விட்டுக் குழைத்துக் காசளவு உட்கொள்ளக் கபம் நீங்கும்.

எருமை மோருடன் இச் சூரணத்தைச் சாப்பிட பாண்டு நோய்கள் தீரும்.

## இதுவுமது

கோசலத்தி லனையவமுக் கிராத்துள்கொள்
ளெலி கடிதான் குடியிராது
ூசுறுநல் லெண்ணெயோடு வெல்லமுஞ்சேர்த்
ததையருந்திற் பெரும்பா டேகுங்
கோசறுநல் லிளவெந்நீர் தனிலருந்திற்
பெருவிரியன் கடிதான் தீரும்
நேசமுற விந்தைமுறை படியியற்றிக்
கீர்த்தியுண்டாம் நிலத்து மீதே. 6

(இ-ள்.)

பசுவின் மூத்திரத்தில் அமுக்கிராச் சூரணத்தை உட்கொண்டால் எலிகடி விஷங்கள் தீரும்.

நல்லெண்ணெய், வெல்லம் இவற்றுடன் இச்சூரணத்தைச் சேர்த்து சாப்பிட்டால் பெரும்பாடு நீங்கும்.

வெது வெதுப்பான வெந்நீருடன் சாப்பிட்டால் பெருவிரியன் கடி தீரும்.

## வங்க தாளகச் சிந்தூரம்

செருப்படிதேட் கொடுக்கினிலைச் சாறுவிட்டுத்
தாளகத்தைத் திகழோர் சட்டி
நெருப்புறவைத் துச்சுருக்குக் கொடுத்திடவே
சுத்தியாம் நிகழதற் குட்

பொருத்திடுவங் கத்தைவைத்துக் குகையிட்டுக்
குக்குடமாம் புடத்து வைத்தால்
விருப்புறுசெந் தூரமாமி கைக்கொடுத்தாற்
சந்நிமுதல் வியாதி தீரும். 7

(இ-ள்.)

ஒரு சட்டியில் தாளகத்தை ஒரே கட்டியாக வைத்து, அடுப்பின் மேலேற்றி, பிறகு செருப்படிச்சாறு, தேட்கொடுக்கிலைச்சாறு இவைகளினால் சுருக்குக்கொடுக்கவும். தாளகம் சுத்தியாகும். அவ்வாறு சுத்தியான தாளகத்தை மேற்படி சாறுவிட்டு நன்றாக அரைத்து, அதன் நடுவில் சுத்தி செய்த வெள்ளீயத்தை பொதித்து, ஒரு குகையிலிட்டுச் சீலைசெய்து, குக்குட புடமிடவும். (அதாவது ஒரு சாண் நீளம் ஒரு சாண் அகலம் ஒரு சாண் உயரமுள்ள புடம்) செந்தூரமாகும். இதனை ஒரு அரிசியளவு கொடுக்க சந்நி தீரும்.

## சந்நிக்கு சித்திர மூலாதிக் கஷாயம்

கொடிவேலி சிறியகாஞ்சோ றியொடுபா
திரிவேர்கள் குமிழன் வேர்பேய்ப்
புடல்சுக்கு நொச்சியிலை சரிகூட்டிக்
கடையமிட்டுப் பொருந்தக் கொள்ளிற்
கடியதாந் திரிகசந்நி தீரும்பேய்ப்
புடல் கடுகு கமழ்நெருஞ்சி
நெடுவேர்திப் பிலிமூலந் திரிகடுகு
நொச்சியதின் நீண்ட வேரே.

நொச்சியிலை சரிகூட்டுங் கடாயந்தந்
தகசந்நி நொறுங்கிப் போகும்
அச்சுக்குச் செந்நெருஞ்சி யிருவேலிசெங்
கத்தாரி யணிங்கம் வேர்

மெச்சுபுளிச் சக்கீரை வேர்பற்பாட
கங்கொடிய வேலி யெல்லாம்
வெச்சுகடா யத்துருத்தி ராங்கமெனுஞ்
சந்நிதான் விலகிப் போகும் 9

(இ-ள்.)

| | |
|---|---|
| கொடிவேலி வேர் | சிறுகாஞ்சோறி வேர் |
| பாதிரி வேர் | குமிழ் வேர் |
| பேய்ப் புடல் | சுக்கு |
| நொச்சியிலை | |

இவைகளை வகைக்குச் சரிஎடை எடுத்து, இடித்து வைத்துக்கொண்டு, ஒரு பாத்திரத்தில் சுத்த ஜலம் ஒரு சேர் விட்டு, அதில் ஒரு பலம் சூர்ணம் போட்டு, அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றாகும் வரை வற்றவைத்து, வடிக்கட்டி உட்கொள்ள தாந்திரிக சந்நி தீரும்.

| | |
|---|---|
| பே.ய்ப்புடல் | கடுகு |
| நெருஞ்சி வேர் | திப்பிலிமூலம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | நொச்சி வேர் |
| நொச்சியிலை | |

இவைகளை இடித்து வைத்துக்கொண்டு முன்போல் கஷாயமிட்டு உட்கொள்ள அந்தக சந்நி தீரும்.

| | |
|---|---|
| சுக்கு | செப்புநெருஞ்சில் |
| வெட்டிவேர் | செங்கத்தாரி வேர் |
| சங்கம்வேர் | புளிச்சக்கீரை வேர் |
| பற்பாடகம் | கொடிவேலிவேர் |

இவைகளை இடித்து பத்திரப்படுத்தி, வேண்டும்போது, கஷாயமிட்டுக் குடித்துவர, ருத்திராங்க சந்நி தீரும்

## சீதாங்க சந்நிகளுக்கு
## திப்பிலி மூலாதி கஷாயம்

புகலுளுதிப் பிலிமூலஞ் செவ்வியமுறு
விலிநெடுவேர் புளிச்சக் கீரை
திகழுறுவே ரோடுபேரா முட்டிசிற்றா
முட்டியிங்கே தெரிந்திடானு
வகையினையுஞ் சமன்கொண்டு கடாயஞ்செய்
தருந்திவரில் வருமுப் போதிற்
தகவிலா தின்னல்விளைத் திடுகின்ற
சீதாங்க சந்நி தீரும். 10

(இ-ள்.)

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | செவ்வியம் |
| உருவிலிவேர் | புளிச்சக்கீரை வேர் |
| பேராமுட்டி | சிற்றாமுட்டி |

இவைகளைச் சமஎடை எடுத்துக் காயவைத்து உரலிலிட்டிடித்து வைத்துக்கொண்டு, வேண்டும்போது, சுமார் 1 பலம் எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 1 சேர் விட்டு, எட்டிலொன்றாக வற்றவைத்து 3 வேளைகள் அருந்தவும். சீதாங்க சந்நி தீரும்.

## சந்நிக்குப் பாதிரிக்கடாயம்

பாதிரிவேர் கண்டங்கத் திரியோடு
செங்கத்தாரிப் பட்டை சங்கின்
றிதறுவேர் முள்ளிவேர் சிறிதுபெரி
தாமல்லி சிற்றா முட்டி

கோதறுதல் வில்வயிலை நன்னாரி
யெருக்கு நொச்சி கொடியவேலி
பேதமிலா வேர்வாத மடக்கிகாட்
டாமணக்கின் பெருந்திடும் வேர்

பெருத்திடுபே ராமுட்டி யிவையெல்லா
சமன்கொண்டு பிசகி டாம
லுரைத்தபடி கடாயஞ்செய் தொருமூன்று
நாளருந்தி லுலகந் தன்னில்
வருந்துகின்ற சந்நிவகை யாவையுந்தீர்ந்
திடுமின்ப மருவி வாழ்வர்
கருத்தனறு ளாலுகலாள் சரபோசி
மன்னர்முகங் கண்டா ரென்ன.

(இ-ள்.)

| | |
|---|---|
| பாதிரிவேர் | கண்டங்கத்திரி |
| செங்கத்தாரிப்பட்டை | சங்கம்வேர் |
| முள்ளிவேர் | சிற்றாமல்லி |
| பேராமல்லி | சிற்றாமுட்டிவேர் |
| வில்வஇலை | நன்னாரிவேர் |
| எருக்கம்வேர் | நொச்சிவேர் |
| கொடிவேலிவேர் | வாதமடக்கிவேர் |
| காட்டாமணக்கின்வேர் | பேராமுட்டிவேர் |

இவைகளைச் சமனெடுத்து இடித்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, வேண்டும்போது 1 பலம் எடுத்துக் கஷாயம் வைத்து, ஒரு நாளைக்கு 3 வேளையாக உட்கொண்டுவரச் சந்நிகள் பலவும் தீரும்.

## சந்நிக்கு காக்கணம் வேர் நசியம்

வெள்ளைக் காக்கண் வேர்சாற்றில்
வெள்ளை யுள்ளி மிளகிட்டு
மெள்ள நறுக்கிப் பொட்டணமாய்
விரைந்து நசியம் பண்ணினக்காற்
கள்ள மான சீதசுரங்
கடிய சந்நியிவை தீருங்
கிள்ளை மொழியாய் தன்வந்தரி
கிரியை யுரைத்த படியிதுவே. 13

(இ-ள்.)

வெள்ளைக் காக்கணம்வேர் சாற்றுடன் வெள்ளைப்பூண்டு, இவ்விரண்டையும் நசுக்கி ஒரு வெள்ளைத் துணியில் முடிந்துகொண்டு, இரு நாசித்துவாரத்திலும் இரண்டிரண்டு சொட்டுகள் விட்டு (நசியமிட), சீதசுரங்கள், சந்நிவகைகள், யாவும் தீரும்.

## சந்நிகளுக்கு பூபதிரஸக்கிரமம்

இரதபற்பந் தாமிரபற் பத்தினோடு
நாபுவகை யிந்த மூன்றுங்
மருகிடொவ்வோர் வராகனெடை கந்
தகந்தான் பனிரெண்டு வராகன்பார்
திரிகடுகு திரிபதலைமற் றிவை
யெல்லாங்கொண் டாடுதின்னாப் பாளைக்
கருதுகடா யத்தாலு மோகலுற்ற
கொடிவேலி கடாயத் தாலும் 14

கடாய மிவையன்றி நொச்சித்தழு
தாழையிலே கண்டங் கத்திரிச்சா
றோடுபேய்த் தும்மட்டிச் சாற்றினாலு
மாங்கிருபதுநா ளூற வரைத்துப்

படுமுளுந் தினளவுண் டைசெய்திஞ்சிச்
சாற்றிலிடப் பதின் மூன்றென்னுங்
கொடுமைபுரி சந்நிவகை யாவையுந்
தீர்ந்திடு மிதைநீ குறித்துச்செய்யே. 15

(இ-ள்.)

ரஸபற்பம் தாமிரபற்பம்
சுத்தித்த நாபி

இவை வகைக்கு ஒரு வராகனெடை

சுத்தி செய்த நெல்லிக்கா கெந்தகம் 12 வராகனெடை

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | சுக்கு |
| நெல்லிவற்றல் | திப்பிலி |
| தான்றிக்காய்த்தோல் | மிளகு |

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

மேற்படி சரக்குகளைக் கல்வத்திலிட்டு, ஆடுதின்னாப்பாளை கஷாயத்தினாலும், கொடிவேலிவேர்க் கஷாயத்தினாலும், நொச்சிச்சாறு, தழுதாழையிலைச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, பேய்த்தும்மட்டிக் காய்ச்சாறு இவைகளினால் முறையே இருபது நாட்கள்வரை நன்றாக அரைத்து உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

இதனை இஞ்சிச் சாற்றில் கொடுக்கப் பதிமூன்றுவகைச் சந்நிகளும் தீரும்.

## கண்ணுக்கு இரதாதிக்குளிகை

இரதமொடு கெந்தகம்வெண் காரஞ்சுக்
கொடுசாதி யிலிங்க நல்ல
திரிபலைவண் மிளகுபச்சை நாபிகழஞ்
சொவ்வொன்று திகழ்நேர் வாள
மொருபதினைங்க ழிஞ்சிவற்றைச் சுத்திபண்ணி
முருங்கிலைச்சா றூற்றிப் பின்னர்
விரவலுற வரைத்துண்டை குன்றியள
வாய்ச்செய்து விரும்பி வையே. 16

வைத்ததிலோ ருண்டைபழ வெதுப்புக்குச்
சுக்கினோடு மன்னு கின்ற
கொத்தமல்லி யுங்கூட்டிக் காய்ச்சியநீ
ரினிலிழைத்துக் குலவு கண்ணி
லுய்த்திடவே யிடுநாலு நாணமாறு
காய்ச்சலினுக் கோது நொச்சி
மெய்த்தழைச்சாற் றிடுகுன்ம மதனுக்கா
மணக்கு நெய்யில் விரவப்போடே. 17

போடுநீ சூலைக்குக் கொடிவேலி
வேரினொடு புகலிந் துப்பு
மீடுறவே போட்டெரித்த நீலிலுரைத்
தினிமற்றை யிரும லுக்கு
நாடுறுதிப் பிலியிலிடு நீரிழிவு
தனக்கு நன்னாரி யோடு
கூடுதண்ணீர் மிட்டான்சேர்த் தெரிநீரின்
முலைப்பாலிற் கொடுஞ் சந்நிக்காம் 18

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | | 1¼ வராகனெடை |
| ,, | நெல்லிக்கா கெந்தகம் | 1¼ வராகனெடை |
| ,, | லிங்கம் | 1¼ வராகனெடை |
| ,, | நாபி | 1¼ வராகனெடை |

| | | |
|---|---|---|
| ,, | சுக்கு | 1¼ வராகனெடை |
| ,, | கடுக்காய்த்தோல் | 1¼ வராகனெடை |
| ,, | நெல்லிக்காய்த்தோல் | ,, ,, |
| ,, | தான்றிக்காய்த்தோல் | ,, ,, |
| ,, | தான்றிக்காய்தோல் | ,, ,, |
| ,, | மிளகு | ,, ,, |
| ,, | நேர்வாளப்பருப்பு | 1½ வராகனெடை |

இவைகளை எடுத்துக் கல்வத்திலிட்டு, முருங்கிலைச்சாறு விட்டு, ஊறவைத்து, நன்றாகவரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். நாள்பட்ட சுரங்களுக்குச் சுக்கு, கொத்தமல்லி இவ்விரண்டையும் கஷாயம் செய்து அதில் ஒரு மாத்திரையை இழைத்துக் கண்களில் இடவும்.

முறை சுரங்களுக்கு நொச்சிச்சாற்றில் கொடுக்கவும்.

குன்மங்களுக்கு ஆமணக்கெண்ணையில் குழைத்துக் கொடுக்கவும்.

சூலைகளுக்குக் கொடிவேலிவேர்க் கஷாயத்துடன் இந்துப்பு சேர்த்து, அதனுடன் மாத்திரையைக் கொடுக்கவும்.

இருமலுக்கு திப்பிலி கஷாயத்துடன் கொடுக்கவும்.

நீரழிவிற்கு நன்னாரிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு இவ்விரண்டையும் சேர்த்துக் கஷாயம் வைத்து அதனுடன் மாத்திரையைக் கொடுக்கவும். சந்நிக்கு முலைப்பாலிலிழைத்துக் கொடுக்கவும்.

குறிப்பு:-

இம்மாத்திரையை பேதி உண்டாக்கும் குணமுடையதால் நிதானித்து உபயோகிக்கவும்.

## சந்நிக்கு காரியச் செந்தூரம் (பதங்கம்)

இரதமொரு வராகனெடை காரீயம்
வெள்ளீயம் மிசைவ தாகி
மருவலுறு துத்திநா கங்கனலி
னுருகிடுங்கால் மன்ன துத்தந்
துருசுமிரு தாருசிங்கு சாதிலிங்க
மரிதாரந் தோன்று காந்தம்
அரப்பொடியொவ் வொன்றொவ்வ ராகனெடை
யிரதமுன் னளவை கூட்டு. 19

கூட்டிக்கற் றாழஞ்சா றிட்டுநாழி
கைநாலுங் குலவு கின்ற
கொட்டெலுமிச் சம்பழச்சா றொருநாலு
நாழிகையுங் கொள வரைத்து
மிட்டதனைத் தூதுளங்கா யளவுருட்டி
யொருசட்டி மேவ வுள்ளே
வாட்டுசெங்கற் பொடிபடியொன் றரையமுக்கி
வைத்துப்பின் மற்றதன் மேல் 20

மற்றையரைப் படியுப்புப் பொடிசெய்து
செங்கற்றூள் மறையப் போட்டே
யுற்றமுக்கி யொருவிரலாற் குழித்தந்தக்
குழியிலொவ்வோ ருண்டை வைத்து
விற்றகொடி வேலிவேர்த்தோல் பத்துவரா
கனெடைமேன் சம் பீரந்
தூற்றிடுசா றொடுகற்றா ழஞ்சாறு
தனிலெடுத்துத் தொக வெடுத்து. 21

எடுத்ததனை யொருசட்டிக் குள்ளாகப்
பூசியத்தா லிசைய மூடி
யடுத்திடவே சேலைமண்செய் தடுப்பிலேற்றி
யிருசாம மன லெரித்து

தொடுத்தாற்றி மேற்சட்டி தனில்வெந்நீர்
தெளித்ததனை சுறண்டிக் கொண்டு
மடுத்ததிரி கடுகுபத்து வராகனெடை
மருந்தைந்து வராகன் சேரே. 22

சேர்த்திஞ்சிச் சாற்றிலரைத் தவுரிச்சாற்
றிலுமரைத்துத் திகழ்கைக் கொண்டு
பார்த்திடத்தூ தளங்காயி னளவுண்டை
செய்துசந்நி பதிமூன் றோடே
கூர்த்தபவித் திரந்தோடஞ் சுரம்புண்கள்
வயிற்றுவலி குன்மங் கட்கு
நீர்த்தவிஞ்சிச் சாறுமுலைப் பாலினருந்
திடக்கொடுத்தால் நீங்கும் பாரே. 23

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சுத்தித்த | காரீயம் | 1 வராகனெடை |
| ,, | வெள்ளீயம் | ,, ,, |
| ,, | துத்தநாகம் | ,, , |

இவைகளை ஒரு சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றி அவை உருகும்போது அதனுடன்

| | | |
|---|---|---|
| துத்தம் | | 1 வராகனெடை |
| பொரித்த துருசு | | |
| மத்தித்த | மிருதாருசிங்கி | |
| ,, | சாதிலிங்கம் | |
| ,, | காந்தம் | |
| ,, | அரத்தூள் | |
| ,, | பாதரஸம் | |

இவைகள் வகைக்கு 1 வராகனெடையிட்டு, எல்லாம் ஒன்றாகிய பின்னர் சட்டியைக் கீழிறக்கி, மருந்தை ஒரு கல்வத்திலிட்டு, சோற்றுக்கற்றாழைச் சாறுவிட்டு, 4 நாழிகை அரைக்கவும். பின்னர் எலுமிச்சம்பழச்சாறு விட்டு 4 நாழிகை அரைத்து எடுத்து தூதுளங்காய் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

ஒரு வாயகலமுள்ள வாணாயில் செங்கல்தூள் 1½ படி போட்டு நன்றாக அமுக்கவும். அதன்மேல் உப்பு ½ படி போட்டு செங்கல்தூள் மறையும்படி பரவலாக இடவும். நன்றாக இடித்தபின், அந்த உப்பின்மேல் ஒரு விரலால் சிறு சிறு குழிகள் செய்து முன்சொன்ன மாத்திரைகளை ஒவ்வொன்றாக அதனுள் வைக்கவும்.

கொடிவேலித்தோல் 10 வராகனெடை எடுத்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு கைபடாமல் நன்றாகவரைத்துப் பின்னர், சோற்றுக் கற்றாழைச்சாறுவிட்டு மறுபடியும் அரைத்து, முன்சொன்ன வானாயின் வாய்க்குத்தக்க ஒரு புதுச்சட்டிக்குள் பூசி மாத்திரைச் சட்டியுடன் பொருந்திச் சீலைமண் செய்து அடுப்பின் மேலேற்றி 2 ஜாமம் மந்தாக்கினியாக் எரிக்கவும். நன்றாக ஆறியபின், சட்டியை எடுத்து கவசத்தைப் பிரித்து, மேல்ச்சட்டியில் வெந்நீர் தெளித்து, பதங்கித்த மருந்தை நன்றாகச் சுறண்டி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இம்மருந்து 5 வராகனெடை

சுக்கு, மிளகு, திப்பிலி
இவற்றின் சூரணம் 10 வராகனெடை

இவ்விரண்டையும் ஒரு கல்வத்திலிட்டு, இஞ்சிச்சாறு விட்டு அரைத்து மறுபடியும் அவுரியிலைச்சாறு விட்டு அரைத்து தூதுளங்காய்ப் பிராமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிக்

காயவைத்துக் கொள்ளவும். இதில் ஒரு மாத்திரையெடுத்து முலைப்பாலிலோ அல்லது இஞ்சிச்சாற்றிலோ கொடுக்க 13 வகை சந்நிகள், பவித்திரம், சுரம், புண்கள், வயிற்று வலி, குன்மம் முதலானவைகள் நீங்கும்.

### சாந்த சந்நிக்குறிகள்

மெய்மறந்து நித்திதரையாஞ் சுரமுமீறி
வேதனையுண் யாமுதடும் விக்கலுண்டாந்
துய்யவிரு மலுங்கரைந்து நெஞ்சுநோகுஞ்
சோதிமுகம் வெற்றுமுக மாகிச்சேம்பும்
பையவே கனத்தே தீசையும் பார்க்கும்
பலகாலு மெழுந்திருக்கும் பதறுநெஞ்சம்
அய்யமிலை மலமும்விடா திருக்குமாகி
லதுசாந்த சந்நியென வறிந்துகொள்ளே 24

(இ-ள்.)

மெய்மறந்த தூக்கம், அதிகசுரம், அதிகமான தேகவலி, விக்கல், இருமல், நெஞ்சுவலி, முகம்வெளிறிப்போதல், தலைவலி முதலான குறிகளுடன் பலதிக்குகளையும் வெறித்துப் பார்ப்பான். நெஞ்சு படபடத்து அடிக்கும். மலச் சிக்கலுண்டாகும். இவை சாந்த சந்நியின் குறிகளாகும்.

### சாந்த சந்நிக்கு கஷாயம்

முத்துக்காசு பேய்ப்புடல் பின்
முதிர்ந்த சுக்குச் சீரகம்நற்
கொத்தமல்லி கூவிளை வேர்
கொட்டைக் கரந்தைச் சீந்திலிவை

யொத்துச் சமனாய்க் காய்ச்சிவடித்
துறுதிப் பிலித்தூள் மென்பொடிபோட்
டத்தைக் கொண்டாற் சாந்தசந்நி
யகலு மன்ன வுரைத்தனரே 25

(இ-ள்.)

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | பேய்ப்புடல் |
| சுக்கு | சீரகம் |
| கொத்தமல்லி விதை | வில்வவேர் |
| கொட்டைக்கரந்தை | சீந்தில்கொடி |

இவைகளைச் சமனெடுத்துக் காயவைத்து இடித்துச் சூரணித்து வைத்துக்கொண்டு, வேண்டும்போது 1 பலம் சூரணத்தை 1 சேர் தண்ணீர் சேர்த்து, எட்டிலொன்றாகக் குறுக்கிக் கஷாயம் செய்து, திப்பிலிச் சூரணம் மூவிரல் கொண்டளவு போட்டு உட்கொண்டுவர சாந்தசந்நிகள் தீரும்.

## சந்நிக்கு விஷமுஷ்டி தைலம்

அழிஞ்சில்வேர்ப் பட்டை சிறுகுறிஞ்சாமா
விலங்கை நொச்சி யாணாவீழி
கொழுஞ்சியா தொண்டைகண்டங் கத்திரிவேம்
பெருக்கி னோடு கோதிலாம
லெழுந்ததழு தாழைமிள கறணைபுலி
துடக்கிவே ரியலா காயக்
கிழங்குபெரு மருந்துவகைக் கிரண்டுபல
வீதம்நீ கிடைக்கச் சேரே. 26

சேரெட்டிப் பழமொருமுப் பதுவேம்பி
னெய்யினோடு திகழ்நல் லெண்ணெய்
பாரமுறு மிகுப்பைநெய் யாமணக்கு
நெய்புங் கிற்பரிந்த நெய்மற்

றொருமிவைதா மும்வகைக் கிருபலமெல்
லாங்கூட்டி யுற வெரித்துச்
சாரமறி நாவிழியிற் படாதுடம்பிட்
டுக்குளிக் கிற்சந்நி தீரும். 27

(இ-ள்.)

| | |
|---|---|
| அழிஞ்சில்வேர்ப் பட்டை | சிறுகிறிஞ்சாவேர் |
| மாவிலங்கை | நொச்சி |
| ஆணாவேர் | வீழிவேர் |
| கொழுஞ்சிவேர் | ஆதண்டைவேர் |
| கண்டங்கத்திரிவேர் | வேப்பம்பட்டை |
| எருக்கம்வேர் | தழுதாழைவேர் |
| மிளகறணைவேர் | இண்டம்வேர் |
| ஆகாசகருடன்கிழங்கு | பெருமருந்துவேர் |

இவைகள் வகைக்கு 2 பலம் வீதம் எடுத்துக்கொண்டு இவைகளைச் சூரணித்து இதனுடன்

| | |
|---|---|
| 30 எட்டிப்பழச்சாறு | |
| நல்லெண்ணெய் | 2 பலம் |
| இலுப்பெண்ணெய் | ,, |
| வேப்பெண்ணெய் | ,, |
| ஆமணக்கெண்ணெய் | ,, |
| புங்கெண்ணெய் | ,, |

இவைகளை ஒன்று கலந்து எரித்துப் பதத்தில் இறக்கவும். இத்தைலத்தை நாக்கு கண்விழிகள் முதலான இடங்களில் படாமல் உடலில் தேய்த்து குளிக்க சந்நிகள் தீரும்.

## சந்நிக்கு வெங்கார மாத்திரை

வெங்காரந் திப்பிலிசன் னியதாய
னிலவேர்நல் வெள்வெங் காயம்
வெண்கோழி யெச்சமொடு வெளுத்தபிசி
னிவைசமமாய் மேவக் கொண்டு
பண்பாய டாதொடைச்சா றூற்றியரை
தூதளங் காய்ப் பருமமாகக்
கண்காண வுருட்டயுண்டை செய்துநிழ
லுலர்த்தி யதைக் கைகயிற்கொள்ளே 28

கொண்டதனி லோருண்டை வேர்க்கொம்புச்
சாற்றினிலுட் கொள்ள நல்கு
விண்டிடுகாற் கழஞ்சுகோ ரோசனைதிப்
பிலியிரண்டு மென் முலைப்பால்
அண்டுறவிட் டரைத்துநாக்கி னிற்றடவி
மூன்றுநா ளருந்த நல்கு
மண்டியெழு வெப்பந்தீர்ந் திடுஞ்சந்நி
தானேபோ மதித்துச் செய்யே 29

(இ-ள்.)

| | |
|---|---|
| பொரித்த வெங்காரம் | திப்பிலி |
| சந்நிநாயகன் வேர் | வெள்ளைவெங்காயம் |
| வெண்கோழியெச்சம் | வெளுத்தபிசின் |

இவைகளைச் சரியெடை எடுத்து, ஒரு கல்வத்திலிட்டு, ஆடாதோடையிலைச்சாறு விட்டு நன்றாகவரைத்து, தூதுளங்காய்ப் பருமனுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு மாத்திரை இஞ்சிச்சாற்றிலுட்கொள்ள வெப்பமும் சந்நியும் தீரும்.

கோரோசனை ¼ கழஞ்சு (10 குன்றி) திப்பிலி 2 (எண்ணிக்கையில்) எடுத்துக் கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டரைத்து நாக்கில் தடவவும். 3 நாட்கள் இவ்வாறு செய்ய உடல்வெப்பம், சந்நி தீரும்.

## சந்நிக்கு எண்ணெய் ஒற்றிட

சந்நிநாயன் வெளுத்தபிசின் வகைக்கொள்வோர்
கழஞ்சு சரியாய்ப் போட்டு
மன்னவெரித் திடுவேம்பின் னெய்யதனை
யிறக்கி வைத்து மார்போடுச்சி
புன்னாமற் களினிட்டு நொச்சியிலை
யினையரிந்து பொட்டணஞ்செய்1
தனானதனை யச்சட்டி தனில்வைத்தோற்
றிடிலுடம்பி லகலுஞ்சந்நி 30

(இ-ள்.)

சந்நிநாயகன் வெளுசைச்ப்பிசின் இவ்விரண்டும் வகைக்கு 1 கழஞ்சு எடுத்து நன்றாக அரைத்து வேப்பெண்ணெய் 1 சேருடன் சேர்த்து, எரித்து இறக்கி வைத்துக்கொண்டு, இத்தைலத்தை மார்பு, உச்சி, முதலான இடங்களில் தடவி வைக்கவும். பின்னர் நொச்சியிலையைச் சிறிது சிறிதாக நறுக்கி ஒரு வெள்ளைத் துணியில் பொட்டணமாகக் கட்டி முன்கூறிய எண்ணெயைச் சிறிதளவு ஒரு சட்டியிலிட்டுச் சூடாக்கி, அதில் அந்த பொட்டணத்தை நனைத்து, தாங்கும் பதத்தில் நோயாளிக்கு ஒத்தடம் கொடுக்கவும்.

## சந்நிக்கு முடக்கொத்தான் வேறு

முடக்கொத்தா னொச்சியிலை யெருக்கினுறுப்
பழுப்பினொடு மொழிந்த வாத
மடக்கியிலை தமைவேம்பி னெய்விட்டு
வருத்துக்கொண் டதை யொற்றிட்டால்
விடற்கரிய சந்நியே யானாலும்
விட்டகலும் விரித்திவ் வாறு
தடக்கடல்சூ ழுலகாளும் சரபோசி
மன்னர்சொன் னார் தயவு செய்தே. 31

(இ-ள்.)

| | |
|---|---|
| முடக்கொத்தான் இலை | நொச்சியிலை |
| எருக்கிலைப் பழுப்பு | வாதமடக்கியிலை |

இவைகளை அரிந்து ஒரு மூட்டையாகக் கட்டி, சூடான வேப்பெண்ணெயில் தோய்த்துத் தோய்த்து, ஒத்தடமிட சந்நிகள் தீரும்.

## சந்நி பதிமூன்றுக்கும்

பெருவேப்பம் பட்டையாடா தொடை
கம்பந்திராய் பிறங்கு நொச்சி
விரவுபிர மியவழுக்கை முடக்கொத்தான்
மாவிலங்கை விளம்பு கின்ற
உருவமுறு துளசி கிலுகிலுப்பைவேர்
மரமஞ்ச ளோங்கு மஞ்சள்
திரிகடுகு பாம்பின் றோல் வசம்புகடு
ரோணியொடு சிறிய தேக்கு 32

குவலயவேம் பொடுதேவ தாரம்நா
கப்பூச்சி குறித்துச் சொன்ன
விவைவகைக்கு பலமரைகொண் டரைத்துவெள்
ளாட்டுப்பா லிசைந்த வேம்பின்
நவமுறுநெய் வகையினுக்கு நானிகலந்
தெறித்திறுத்து நவிலுடம் பிற்
றுவளையிடு காதிலிடு சிறிதருந்து
சந்நியெல்லாந் துலையு மன்றே. 33

(இ-ள்.)

| | |
|---|---|
| வேப்பம் பட்டை | ஆடாதோடை |
| கம்பந்திராய் | பிறங்குநாறி |
| நொச்சி | பிரமிவழுக்கை |
| முடக்கற்றான் | மாவிலங்கு |
| துளசி | கிலுகிலுப்பைவேர் |
| மரமஞ்சள் | மஞ்சள் |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | பாம்புசட்டை |
| வசம்பு | கடுகுரோகிணி |
| சிறியதேக்கு | நிலவேம்பு |
| தேவதாரு | மண்புழு |

இவைகள் வகைக்கு ½ பலமெடுத்து நன்றாக அரைத்து

| | |
|---|---|
| வெள்ளாட்டுப்பால் | ¼ சேர் |
| வேப்பெண்ணெய் | 1¼ சேர் விட்டு |

எரித்துப் பதத்திலிறக்கித் துவளையிடவும். காதிலும் ஒரு சொட்டு விடவும். உள்ளுக்கும் சிறிது (சுமார் ½ தேக்கரண்டி) கொடுக்கவும். சந்நிகள்தீரும்.

## தோடத்திற்கு கஸ்தூரி மாத்திரை

முந்திரிகைப் பழம்பேரீச் சம்பழம்நன்
னாரிவேர் முதிர் கற்பூரங்
கத்தமுறு வெட்டிவேர் குங்குமப்பூ
கஸ்தூரி கலையின் கொம்பு
வெந்துயர்தீர்த் திடுமுருத்தி ராக்கஞ்சாத்
திரவேதி விரும்பு கோட்ட
முந்திடுசீ ரகமிருப்பைப் பூவிலா
மிச்சையுட னுயர் கிறாம்பு 34

புதியகோ ரோசனையோ டதிமதுரம்
பவளம் பொன் புகலு முத்துப்
பதிவுறுசந் தனநீரக் கிராக்கார
மிலவங்கப் பட்டை வெள்ளி
விதமுறுமிவ் வகையனைத்துஞ் சேர்த்தரைத்துச்
சிறிதருந்து விருப்பாய் நல்கிற்
கதமருவு தோடங்க ளிவையாவுந்
தீர்ந்திடு மிதுகை கண்டதாமே. 35

(இ-ள்.)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | பேரீச்சம்பழம் |
| நன்னாரிவேர் | பச்சைக்கற்பூரம் |
| வெட்டிவேர | குங்குமப்பூ |
| கஸ்தூரி | மான்கொம்பு |
| ருத்திராக்ஷம் | சாத்திரவேதி |
| உயர்ந்த கோஷ்டம் | சீரகம் |
| இலுப்பைப்பூ | இலாமிச்சம்வேர் |
| கிராம்பு | கோரைசனை |
| அதிமதுரம் | பவளம் |

| | |
|---|---|
| பொன் (தங்கரேக்கு) | முத்து |
| சந்தனத்தூள் | அக்கிரகாரம் |
| லவங்கப்பட்டை | வெள்ளித்தூள் |

இவைகளை வகைக்கு வராகனெடை எடுத்து, ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு, சுத்தஜலம் விட்டு, நன்றாக அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதனை சந்தோஷங்களுக்குக் கொடுக்க அவை தீரும்.

## தோஷங்களுக்கு ஸுவர்ணாதி குளிகை

இந்துப்புக் கோட்டமான் கொம்புருத்தி
ராக்கம்பொன் னிசைந்த வெள்ளி
சந்தமுறு முத்துத்திப் பிலியக்கி
ராக்காரந் தகுகிறாம் போ
டந்தமுறு பவளமதி மதுரமிவை
சேர்த்தரைத்தே யருந்த நல்கில்
வந்திருந்த தோடங்கள் யாவையும்போ
மின்பமுமேல் மருவு வார்கள். 36

(இ-ள்.)

| | |
|---|---|
| இந்துப்பு | மான்கொம்பு |
| உயர்ந்த கோஷ்டம் | ருத்ராஷம் |
| தங்கரேக் | வெள்ளி (ராவியது) |
| முத்து | திப்பிலி |
| அக்கிரகாரம் | கிராம்பு |
| பவளம் | அதிமதுரம் |

இவைகளைச் சரிஎடை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து, மிளகு பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, ஒரு மாத்திரை வீதம் தோஷங்களுக்கு உள்ளுக்குக் கொடுக்க அவை தீரும்.

## சந்நி முதலானதற்கு உள்ளி நஸ்யம்

திரிகடுகு வெள்ளுள்ளி வகையினுக்கோர்
பணவெடைதான் சேரக் கூட்டி
மருவகத்திப் பழுப்புச்சா றூற்றியரைத்
துறுபஞ்சில் வாய்ப்பத் தோய்த்து
விருவுறுவெற் றிலைத்தொன்னை விட்டுமூக்கி
னினசியம் விட்டாற் சந்நிப்
பிரமைசித்தப் பிரமைச்சந்நிச் சுரம் சந்நித்
தோடமிவை பெயர்ந்து போகும். 37

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பூண்டு |

இவைகளை வகைக்கு 1 பணவெடை வீதமெடுத்து ஒரு கல்வத்திலிட்டு அகத்திப் பழுப்புச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பஞ்சில் தோய்த்து, வெற்றிலையைச் சிறு தொன்னைபோல் செய்து அடியில் துவாரமிட்டு, நோயாளியின் மூக்கில் சொருகி, முன் மருந்தைப் பிழியவும். பின்னர் இன்னொரு நாசித் துவாரத்தை அடைத்துக்கொண்டு உருஞ்சச் செய்யவும். இம்மாதிரி நஸ்யமிட சந்நிகள், பிரமம் (தலை சுற்றல்) சித்தப் பிரமைகள், ஜ்வரம், சந்நிகள், தோஷம் முதலியனவை நீங்கும்.

## தோஷத்திற்கு மருந்து பாஷாணாதிபற்பம்

இரதம் வெள்ளைப் பாடாண மரிதாரஞ்
சாதிலிங்க மிவை யொவ்வொன்று
விவைத்து வராகனெடை மிதிபாக
லிலைச் சாறு விட்டரைத்து
மருவதனைக் கழுவியொரு சட்டிவைத்தோர்
சட்டியினால் மறைய மூடி
யொருமூன்று சேலைமண்செய் நாட்டொருவிற்
பூமிபுட முகந்துவையே. 38

வைத்ததனஐ யாறியபின் னெடுத்துப்பார்
சர்க்கரை போல் வாய்ந் திருக்கஞ்
சுத்தமுறு மறையெடுத்தோர் சிமிழில்வைத்துக்
கொண் டந்தத் தோடத்திற்கு
முய்த்துணர்ந்து தகும்வகையீந் திடுகுணமா
மிந்தமுறை யுலகினோர்க்குச்
சித்தர்பா லுணர்தஞ்சை சரபோசி
மன்னர்மிகத் தெளியச் சொன்னார். 39

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, வெள்ளைப்பாஷாணம்
,, தாளகம்
,, சாதிலிங்கம்

இவைகள் வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து, ஒரு கல்வத்திலிட்டு, மிதிபாகலிலைச்சாறுவிட்டு, நன்றாக அரைத்து, ஒரே வில்லையாகத்தட்டிக் காயவைத்து, ஒரு புதுச் சட்டியை நன்றாகக் கழுவி, அதில் வைத்து, அச்சட்டிக்குத் தக்க சில்லினால்

பொருந்தும்படி மூடி 3 சீலை மண் செய்யவும். நன்றாகக் காய்ந்தபின். ஆட்டெருவின் நடுவில் வைத்துப் புடம் இடவும். பினனர் நன்றாக ஆறியபின் இதனை எடுத்துப் பார்க்க சர்க்கரையைப் போன்று வெளுப்பான பற்பமாக இருக்கும். இதனை ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு. எந்ததோஷத்திற்கும் அரிசியளவு கொடுக்க அவை குணமாகும்.

## சந்நிக்கு எவச்சார மருந்து

எவச்சாரத் தொடுசத்திச் சாரமுறு
வளையினுப் பிந்துப் பேற்ற
நவச்சாரம் பொட்டிலுப்புக் காய்ச்சக்கல்லுப்
பிவைசமனாய் நயக்கக் கூட்டி
விவரமுறு கல்வத்திலிட்டிரதம்
விட்டொருநாள் மிக வரைத்து
நவில்கடுகு பெருங்காயம் மரத்தைபுங்கம்
விதைசமனாய் நண்ணக் கூட்டே. 40

கூட்டியுரைத் ததனையொரு குகையாக்கி
முன்மருந்தைக் கொண்டுள் வைத்து
மிட்டிரத முஞ்சிறிது விட்டிசைய
மூடியொரு மெல்லிய சேலை
நீட்டமு வைத்துப் பொட் டணங்கட்டிப்
பழங்காடி நிறையோர் பானை
தேட்டமுறக் கொண்டந்தப் பானைவாயி
னிற்றொங்கத் திறமாய் வையே. 41

வைத்தொரு நாள் முழுதுமெரித் தெடுத்தம்மான்
பச்சரிசி வாதம் போக்கி
மத்தங்கை யாந்தகரை கொடிவேலி
பொன்முசுட்டை வளரிஞ்சிச் சா

றொத்தகொட்டைக் கரந்தைகுட்டித் தக்காளி
யலரிடுயுட னோங்கு நொச்சி
வைத்தவெள்ளைக் காக்கணஞ்சாற் றிலொவ்வோர்
நாளரைத்து வழித்துக் கொள்ளே. 42

கொண்டதற்குச் சரிமிளகு பொடிகலந்து
மயிலொடுமீன் கூறு பன்றி
மீண்டுசெயும் வெள்ளாட்டுக் கடாயிவற்றின்
பித்தொன்றின் விளம்பொவ் வோர்நான்
கண்டிடுப் வனைபண்ணிச் சகலவித
சந்நிக்குங் கருது தேனில்
அண்டிடுநற் சரக்கரையி லிருகுன்றி
யளவுதா னளிக்கத் தீரும். 43

தீருமிதற் கையமில்லை பத்தியம் வெண்
டயரினோடு திகழு மன்னஞ்
சேர்வினிது ணல்வேண்டு முட்டமணிக்
கதிதகரிக்கிற் சிரத்தி னிற்றன்
ணீகினையூற் றிடவேண்டுஞ் சந்தனமும்
பூசிடலாம் நிகழ் கரும்பின்
சாரமுமா தளம்பழத்தின் சாரமுங்கொண்
டிடவேண்டுஞ் சலித் திடாமல். 44

(இ-ள்.)

| | |
|---|---|
| எவச்சாரம் | சத்திச்சாரம் |
| பவளையலுப்பு | இந்துப்பு |
| நவச்சாரம் | பொட்டிலுப்பு |
| | கல்லுப்பு |

இவைகளைச் சமனெடை எடுத்து. ஒரு கல்வத்திலிட்டுச் சூரணித்துக் கொள்ளவும். சுத்தித்த பாதரஸம் சேர்த்து 1 நாள் முழுவதும் அரைத்து வைத்துக்கொள்ளவும்.

பின்னர்,

கடுகு பெருங்காயம்
சிற்றரத்தை புங்கன்விதை

இவைகளைச் சமனெடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துக் குகையாக்கி அதனுள் முன்சொன்ன பாதரஸக்கலவையை வைத்து, இன்னும் சிறிது பாதரஸம் கூட விட்டுக் குகையை மூடவும். இதன்மேல் ஒரு மெல்லிய சீலையைச் சுற்றி பொட்டணமாகக் கட்டிக்கொள்ளவும். ஒரு புதிய பானையில் பழைய புளித்த காடிவிட்டு, பானை வாய்க்கு வேடு கட்டி அதன்மேல் முன்சொன்ன பொட்டணத்தை வைக்கவும். பிறகு பானையை அடுப்பின் மேலேற்றி 1 நாள் முழுவதும் எரிக்கவும்.

ஆறியபின் எடுத்து

அம்மான் பச்சரிசி இலைச்சாறு
வாதமடக்கி இலைச்சாறு
கையாந்தகரை இலைச்சாறு
கொடிவேலிக் கஷாயம்
பொன்முசுட்டையிலை
இஞ்சிச்சாறு
கொட்டைக்கரந்தைச்சாறு
அலரிச்சாறு
குட்டித்தக்காளிச்சாறு
நொச்சிச்சாறு
வெள்ளை காக்கமச்சாறு

இவைகளைத் தனித் தனியே விட்டு முன் மருந்தை ஒவ்வொரு நாள் அரைக்கவும். பிறகு இம்மருந்திற்குச் சரியளவு மிளகுப் பொடி கூட்டி,

மயில் பித்தம் மீன் பித்தம்
பன்றிப் பித்தம் வெள்ளாட்டுக்கடா பித்தம்

இவைகளில் ஒவ்வொரு நாள் பாவனை செய்யவும். இம்மருந்தை 2 குன்றியளவு தேனில் கொடுக்க எல்லாவித சந்நிகளும் தீரும். இதனை சர்க்கரையுடனும் கொடுக்கலாம்.

பத்தியம்:

தயிர் சாதம் சாப்பிடவும். உஷ்ணம் அதிகரித்தால் தலையில் தண்ணீர்விட்டு ஸ்நானம் பண்ணவும். சந்தனத்தையும் பூசிக் கொள்ளலாம். கருப்பஞ்சாறு, மாதளம் பழச்சாறு இவைகளை வேண்டிய அளவு உட்கொள்ள வேண்டும்.

### சகல சந்நிக்கும் [1]சந்நிரதகேசாங்குரம்

இரதங்கெந் தகம் நாபியரிதாரம்
பொன்னிமிளை யவச்சாரத்தோ
டுரியபெருங் காயம் பொன் முசுட்டைவேப்
பீர்க்கமூ மத்தை வித்
தரியசத் திச்சாரந் தாம்ரபற்பம்
பேய்ப்புடல்சுக் காறு மின்பந்
தருகடுக்காய் நிலப்பனையின் கிழங்குகஞ்சாப்
பொடியினோடு சங்கச் சாரம் 45

சார்தருவேப் பம்பிசினிவ் வகையெல்லாஞ்
சரிகூட்டித் தக்கவோர் நா
ளூர்தருவே லிப்பருத்திச் சாற்றெலுமிச்
சம்பழச்சாற் றொருநாள் மத்தித்

[1]சந்நிரத கஜாங்குசம் என்றிருக்கலாமென்று தோன்றுகிறது.

தோர்கடலை யளவுண்டை செய்திஞ்சிச்
சாற்றினிலோ ருண்டை யீந்தால்
றீர்வரியசந்நிகளு மூர்ச்சையும் விக்கலுந்தீரும்
தெளி வாய்ச் செய்யே. 46

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்
,, நாபி
,, தாளகம்
,, பொன்னிமிளை

| | |
|---|---|
| எவச்சாரம் | சுக்கு |
| கடுக்காய்த்தோல் | கஞ்சாவிலைத்தூள் |
| வேப்பம்பிசின் | பெருங்காயம் |
| பொன்முசுட்டைவேர் | பீர்க்கம்விதை |
| ஊமத்தைவிதை | சத்திச்சாரம் |
| பேய்ப்புடல் | தாம்பிரபற்பம் |
| நிலப்பனங்கிழங்கு | சங்குபற்பம் |

இவைகள் வகைக்கு ½ பலம் எடுத்துக்கொள்ளவும். முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் சுத்தமான கல்வத்திலிட்டுக் கேயோயாமல் அரைத்துக் கஜ்ஜலி செய்து கொள்ளவும். பின்பு, மற்ற சரக்குகளை ஒரு கல்வத்திலிட்டுப் பொடியாக்கி, ஷை கஜ்ஜலியுடன கூட்டி வேலிப்பருத்திச்சாறு விட்டு ஒரு நாள் முழுதும் அரைக்கவும். பிறகு எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒரு நாள் அரைக்கவும். இவ்வாறு அரைத்த விழுதை கடலை அளவுள்ள மாத்திரைகளாக் உருட்டி, நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும். இதனை இஞ்சிச்சாற்றுடன் கொடுக்க சந்நி, மூர்ச்சை, விக்கல் முதலியன தீரும்.

## சகல சந்நிக்கும் அர்க்கேச்வர ரஸம்

திப்பிலிநன் மிளகுசுக்கோ டிரதபற்பமு
லோகபற்பந் திகழ்வெண் காரந்
தப்பிலாத் துத்திதாம் பிரபற்ப
மிவையெல்லாஞ் சமனாகக் கூட்டிச்
செப்பெருக்கம் பாலிலொரு நாள்முழுது
மரைத்தபால் சேர்த்துத் தானே
யப்படியே நசியஞ்செய் சந்நியெல்லா
மொருநொடியி லகன்று போகும். 47

(இ-ள்.)

| | |
|---|---|
| திப்பிலி | மிளகு |
| சுக்கு | ரஸபற்பம் |
| லோகபற்பம் | பொரித்த வெங்காரம் |
| துத்திநாகபற்பம் | தாமிரபற்பம் |

இவைகளைச் சுத்தமான கல்வத்திலிட்டு எருக்கம் பால் விட்டு, ஒரு நாள் முழுவதும் அரைத்து, மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது எருக்கம் பாலிலிழைத்து நசியமிட சந்நிகள் தீரும்.

## சந்நி பதினைந்திற்கும் பஞ்சவக்த்ர ரஸம்

இரதங்கெந் தகம்நாபி வெண்கார
மிளகிவற்றை யியலு மத்தை
தருமிலைச்சா றூற்றியொரு நாளரைத்திட்
டுலர்த்தியதைத் தகத்தூள் செய்தே

யொருகுன்றி நிறையிஞ்சிச் சாற்றிலிடச்
சந்நிவகை எல்லாந் தீரும்
மருவுமிப் பஞ்சவக்கி ரரசமா
மிதற்குமிகு மகிமை யுண்டே 48

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்
,, நாபி
பொரித்த வெங்காரம்
மிளகு

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையுமரைத்துக் கஜ்ஜலி செய்து கொண்டு, பின்னர் மற்ற சரக்குகளைப் போட்டு ஊமத்தை இலைச்சாறு விட்டு நன்றாக 1 நாள் முழுவதும் அரைத்துக் காயவைத்துப் பிறகு தூள் செய்து வைத்துக் கொண்டு, வேண்டும்போது இதில் ஒரு குன்றியளவு எடுத்து இஞ்சிச்சாற்றில் கொடுக்கப் பலவித சந்நிகளும் தீரும்.

**சந்நிக்கு ரக்தசந்தனாதி உருண்டை**

முந்திரிகைப் பேரீச்சம் பழங்கோரைக்
கிழங்கினோடு முயற்று முட்டை
யந்தவலம் புரிக்காய்நற் றிப்பிலிநல்
லிருப்பையின்பூ வரைத்திடுவெண்
சந்தனக்கோ ரோசனைகோட் டங்கலையின்
கொம்புதனிச் சங்கு மேற்சி
வந்திடுகோ ழிக்குநன் னாரிவேர்
பூநாக மதுர மின்னும் 49

மதுரமுறு முத்திராக்கங் கடுகுரோ
ணியிந்த வகை களெல்லா
மெதிர்சமன்கொண் டந்தநிறை சிவந்திடுசந்
தனங்கூட்டி யிசைத்த மாதர்
கதிர்முலைப்பால் விட்டரைத்துத் தேற்றுவித்தி
னளவுண்டை கண்டொ ருண்டை
யதிகமின்றி யிடச்சந்நி வகைதீரு
மிரத்தசந்த னாதி யீதே

(இ-ள்.)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | பேரீச்சம்பழம் |
| கோரைக்கிழங்கு | முசுறுமுட்டை |
| வலம்புரிக்காய் | திப்பிலி |
| இலுப்பைப்பூ | வெண்சந்தனம் |
| கோரோசனை | கோஷ்டம் |
| மான்கொம்பு | முட்டை மஞ்சள்கரு |
| சங்குத்தூள் | நன்னாரிவேர் |
| பூநாகம் | அதிமதுரம் |
| ருத்திராக்ஷம் | கடுகுரோகிணி |

இவை வகைக்கு 1 பலம்

செஞ்சந்தனம் 18 பலம்

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துத் தேத்தான் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். வேண்டும்போது 1 மாத்திரை உள்ளுக்குக் கொடுக்க சந்நிகள் தீரும்.

## சகலவித சந்நிக்கும் ஆமணக்கு விதை அஞ்சனம்

ஆமணக்கம் பருப்பொடுசோம நாதமெனும்
பெருங்காய மிதுவுநேர்கொண்
டேமநிற வெலுமிச்சம் பழச்சாற்றி
லரைத்துவிழி யினி லிட்டாலும்
ஆமணக்கம் பருப்புமிள கிந்துப்புச்
சரிகூட்டி யாவினீ ரிற்
சாமமரைத் தெண்ணை முலைபால்களினிட்
டாலுமெல்லாச் சந்நியும் போம் 51

(இ-ள்.)

ஆமணக்கம் பருப்பு சோமநாதிகாயம்

இவ்விரண்டையும் எலுமிச்சம் பழச்சாற்றில் உரைத்துக் கண்களில் அஞ்சனமாக இடவும்.

ஆமணக்கம் பருப்பு
இந்துப்பு
மிளகு

இவைகளைப் பசுவின் மூத்திரத்தில் 1 சாமம் அரைத்து மாத்திரையாக திரட்டி வைத்துக் கொள்ளவும். இம்மாத்திரையை நல்லெண்ணெய், முலைப்பால் இவைகளில் ஏதேனுமொன்றில் இழைத்துக் கண்களில் அஞ்சனமிடச் சந்நிகள் தீரும்.

## திரிகடுகாதி அஞ்சனம்

பருத்ததிரி கடுகுமஞ்சள் பெருங்காயஞ்
சமன் முள்ளிப் பழச்சா றூற்றி
யரைத்துவிளம் பழச்சாறு தனிலுமரைத்து
துண்டைபண்ணி யதனை மென்மை

தரித்திடுகோ சலமுலைப்பா லெலுமிச்சம்
பழச்சாறுதனிற் கண் ணிட்டால்
விரித்தசந்நி யாவையும்போ மிவைசந்நி
யஞ்சனத்தின் விதி களாகும். 52

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | மஞ்சள் |
| பெருங்காயம் | |

இவைகளைச் சமனெடுத்து முள்ளிப் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பின்னர் விளாம்பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து மாத்திரையாகச் செய்துகொண்டு, அதனை பசுமூத்திரம், முலைப்பால், எலுமிச்சம்பழச்சாறு முதலியவைகளில் இழைத்து அஞ்சனமிட சந்நிகள் பலவும் தீரும்.

**சந்நிக்கு நாபி நஸ்யம்**

நாவியொடு மிளகுசமன் பொடித்துமுலைப்
பாலகத்தி நறும் பழுப்பு
மேவுறுசா றதனோடு பூசினிப்பூச்
சாற்றின்னசியம் விதித் திட்டாலுங்
கக்வுறுகாட் டெருமுட்டைச் சாம்பல்பலத்
தொடுமிளகு காற்பலத் தூள்
பாவெருக்கம் பாலதனி லரைத்துமுன்போல்
மூக்கிலிடினும் பாற்போஞ்சந்நி. 53

(இ-ள்.)

சுத்திசெய்த நாபி
,, மிளகு

இவ்விரண்டையும் சமன் எடுத்துப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது முலைப்பாலிலோ, அகத்திப்பழுப்புச் சாற்றிலோ, அல்லது பூசனிப்பூச் சாற்றிலோ, ஒரு சிட்டிகை எடுத்து கலந்து நசியமிட்டால் சந்நிகள் தீரும்.

| | |
|---|---|
| காட்டெரு முட்டைச் சாம்பல் | 1 பலம் |
| மிளகுத்தூள் | ¼ பலம் |

இவ்விரண்டையும் இடித்து வைத்துக்கொண்டு எருக்கம் பாலில் அரைத்து நசியமிடச் சந்நிகள் தீரும்.

## சந்நிகளுக்கு நாபி நஸ்யம்

வேறு

நாவியொரு பங்குமிள கிருபங்கு
பேய்ப்பீர்க்கின் நண்ணும் வித்து
மூவொருபங் கிவைமூன்றுங் கூட்டியே
நசிமதாய் மூக்கில் விட்டா
லோவரிய சந்நியொடு சுரங்களுந்தீர்ந்
திடுமின்னதுல கத்தோர்க்குப்
பூவுலகாள் சரபோசி மன்னவர்நீ
டருள்கொண்டு புகன்ற தாமே. 54

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த நாபி | 1 பங்கு |
| மிளகு | 2 பங்கு |
| பேய்ப்பீர்க்கன்வித்து | 3 பங்கு |

இவைகளைக் கல்வத்தில் இட்டுச் சுத்த ஜலம் விட்டு நன்றாக அரைத்து நீண்ட மாத்திரையாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை வேண்டும்போது தண்ணீர் விட்டு இழைத்து நாசியில் நசியமிட சந்நிகள், சுரம் முதலானவை தீரும்.

**சந்நிக்கு கண்டாவுடதம்**

முத்துவெள்ளி யொடுசெம்பொன் பவளங்கோ
ரோசனைநன் முதிர் மாசிக்காய்
புத்தரசம் விதையினோடு நாயுருவிவேர்
கலங்கொம்பு ருத்தி ராக்கஞ்
சுத்தவகத் திப்பட்டைச் சமன்கூட்டித்
திராயாடா தோடை ரண்டும்
வைத்தகடா யத்தரைத்து நாக்கிலிடத்
தோடமெல்லாம் மாறிப் போமால். 55

(இ-ள்.)

சுத்திசெய்த முத்து
,, வெள்ளித்தூள்
,, தங்கப்பொடி
,, பவளம்
,, மான்கொம்பு

| | |
|---|---|
| கோரோசனை | மாசிக்காய் |
| புரசம்வித்து | நாயுருவிவேர் |
| ருத்ராக்ஷம் | அகத்திப்பட்டை |

இவைகள் வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து திராய், ஆடாதோடை இவ்விரண்டையும் சேர்த்துக் காய்ச்சிய கஷாயத்தினால் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும். வேண்டும் பொழுது மாத்திரையை

மேற்சொன்ன கஷாயத்தில் இழைத்து நாக்கில் தடவிவரத் தோஷங்கள் தீரும்.

## சந்நிக்குச் செந்தூரம்

இரதங்கெந்த கமெஃகுப் பொடியொடுசெம்
　　பரப்பொடிநே ரிசையாய்க் கூட்டி
மருவுசெருப் படிச்சாற்றின் மூன்றுநா
　　ளரைத்ததனை வளையிற் குப்பி
விரவவிட்டு வாலுகையந் திரத்திற்பன்
　　னிருசாம மிக வெரித்துத்
தருமுளுந்தி னளவிஞ்சிச் சாற்றருநதச்
　　சந்நியெல்லாந் தப்பா தோடும். 56

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
　　,, எஃகுப்பொடி
　　,, செம்புத்தூள்
　　,, கெந்தகம்

இவைகளைச் சமனெடுத்து ஒரு சுத்தமான கல்வத்தில் முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் போட்டு நன்றாகக் கருப்பாகும்வரை அரைத்துப் பின்னர் தூள்களையிட்டுச் சிறு செருப்படிச் சாற்றினால் 3 நாட்கள் நன்றாக அரைக்கவும். மருந்து காய்ந்தவுடன், இதனை காசிக்குப்பியிலிட்டு (வாலுகாயந்திரத்தில்) மணல் எரிப்பாக 12 சாமங்கள் எரிக்கவும். குப்பியின் கழுத்தில், மருந்து பதங்கித்திருக்கும். இம்மருந்தைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, வேண்டும்பொழுது ஒரு உளுந்தளவெடுத்து இஞ்சிச் சாற்றுடன் சாப்பிட சந்நிகள் தீரும்.

## இரஸ பூபதி (ஆனந்த வயிரவம்)

சாதிலிங்கம் வெங்காரம் திரிகடுகு
நாபியிவை சமனாகக் கூட்டி
மாதளையி னிலைச்சாற்றி லரைத்துண்டை
குன்றிபோல் வகுத்துச் சந்நி
பாதசுரந் தனக்குமுலைப் பாலினில்வெஞ்
சுரந்தனக்குப் பருகுந் தேனி
லோதலுறுச் சந்நிக்கு மிளகுதனில்
விரைவாக வுகந்து நல்கே. 57

(இ-ள்.)

சுத்திசெய்த லிங்கம்
,, நாபி
பொரித்த வெங்காரம்
சுக்கு
மிளகு
திப்பிலி

இவைகளைச் சமனாகவெடுத்து மாதளையிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, சந்நிபாத சுரங்களுக்கு முலைப்பாலுடன் கொடுக்கவும். மிளகுத்தூளுடனும், தேனிலும் கொடுக்கலாம். சுரம் சந்நி முதலானவை தீரும்.

## இதுவுமது

ஏற்றிடுகுள் மத்தினுக்குஞ் சவாசகா
சத்தினுக்கு மிசைத்தி டிஞ்சிச்
சாற்றினிலிட் டருந்தநல்கு பத்தியங்கைப்
புப்புளிப்புத் தவிர்த்தி டீது

போற்றலுறு மானந்த பயிரவமாத்
திரையாகும் பூவி னோர்க்கு
நாற்றிசையும் புகழ்த்தஞ்சைச் சரபோசி
மன்னவர்தாம் நவின்ற தாகும். 58

(இ-ள்.)

இஞ்சிச்சாற்றில் முன் சொன்ன ஆனந்த பைரவ மாத்திரையைக் கொடுத்துவர குன்மம், சுவாசகாசம் இவைகளும் தீரும்.

**அக்னி குமாரன்**

இரதங்கெந் தகங்காந்த மரப்பொடிதா
மிரபற்பம் மிசை நேர்வாளம்
கருதலுறச் சமன்சுத்தி செய்துசித்தி
ரமூலம் கடாயம் வார்த்திட்
டொருசாம மரைத்தெலுமிச் சம்பழச்சாற்
றொருசாம முகந் தரைத்துத்
திரளுளுந்தி னளவுண்டை செய்துநிழ
லிடத்துலர்த்திச் சிமிழில் வையே. 59

வைத்ததனி லோருண்டை சந்நிக்கவ் ா
வனுபான வகையி னல்கி
டுய்த்தபஞ்ச மூலமெனுங் கடாயத்தில்
வாதத்துக் குதவு பின்பு
பத்தியங்கைப் புப்புளிப்புத் தவிர்த்தீனிய்
கஞ்சியினைப் பருகச் செய்தி
டித்தகையமுறைத் தஞ்சைச் சரபோசி
மன்னருகந் திசைத்த தாகும். 60

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரசம்
,, கெந்தகம்
,, காந்தம்
,, அரப்பொடி
,, நேர்வாளம்
தாமிர பற்பம்

முதலில் ரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு ஒன்றுபட அரைத்துக் கஜ்ஜலி செய்து கொண்டு, பிறகு மற்ற சரக்குகளைப்போட்டு சித்திரமூலம் கஷாயம் விட்டு ஒரு சாமம் நன்றாக அரைத்து, மறுபடியும் எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 1 சாமம் அரைக்கவும். அதனை உளுந்தளவு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

சந்நிகளுக்குத்தக்க அனுபானத்தில் இடவும். வாதரோகங்களுக்கு பஞ்சமூலக்கஷாயத்தில் கொடுக்கவும்.

பத்தியம்: கைப்பு, புளிப்பு இவைகளை நீக்கி சர்க்கரை சேர்த்த கஞ்சி குடிக்கவும்.

**சகல சந்நிகளுக்கும் நிம்பத் தைலம்**

பிரமிவே லிப்பருத்தி யிலைவேப்பம்
பட்டைநொச்சி பெரிது நன்மை
மருவுமணித் தக்காளி யழிஞ்சியிலை
யொவ்வொன்று வகைக்குழக்கு
விரவுமொரு நாழிவெண்ணெய் கலந்துகற்
கடகசிங்கி வெள்ளை யுள்ளி
திரிகடுகு திரபலைநன் வசம்புகிலு
கிலுப்பைவேரி சிறிய தேக்கு 61

சிறுமையிலா நரிவிடைவேர் தலைச்சுருளி
　　வேர்கோட்டஞ் சிறந்த மஞ்சள்
கறுவுகின்ற நாகப்பாம்பின் றசைநீண
　　மரமஞ்சள் கடுகு ரோணி
நிறையொவ்வோர் வராகன்சேர்த் துறுமுலைப்பால்
　　விட்டரைத்து நேகக்கரைத்துத்
திறமாகக் காய்ச்சிவடித் தொருகலசந்
　　தனிலினிது சேர்த்து வையே. 62

வைத்ததனிற் சிறிதெடுத்து நல்லுச்சிப்
　　பிடரியொடு வான் கழுத்துச்
சுத்தமுறு முடல்காது முதலான
　　விடங்களிற் றொடர்ந்து பூசித்
தைத்திடுவெம் புகைகாட்டு நசியஞ்செய்
　　காய்ச்சலொடு சந்நிவாதம்
பித்தச்சிலேட் டுமமாதிப் பிணியெவையு
　　மண்காது பெயர்ந்து போகும். 63

(இ-ள்.)

| | |
|---|---|
| பிரமியிலைச்சாறு | வே:லிப்பருத்தியிலைச்சாறு |
| வேப்பம்பட்டைச்சாறு | நொச்சிச்சாறு |
| மணத்தக்காளிச்சாறு | அழிஞ்சியிலைச்சாறு |

இவைகள் வகைக்கு உழக்கு (பட்டணம் படி 1/8)

சுத்தமான வேப்பெண்ணெய் 1 நாழ் (1¼ சேர்)

கல்கம்:-

| | |
|---|---|
| கற்கடகசிங்கி | வெள்ளைப்பூண்டு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| தான்றிக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| வசம்பு | கிலுகிலுப்பைவேர் |

| | |
|---|---|
| நரிமிரட்டிவேர் | சிறுதேக்கு |
| கோஷ்ட்டம் | பெருமருந்து |
| நாகப்பாம்பின்கொழுப்பு | மஞ்சள் |
| கடுகுரோகிணி | மரமஞ்சள் |

இவைகள் வகைக்கு ஒவ்வொரு வராகனெடை எடுத்து முலைப்பால் விட்டு நன்றாக அரைத்து முன்சாறுகள் கூட்டிய வேப்பெண்ணெயுடன் கலந்து குழப்பி, அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயை வேண்டும்பொழுது ஒரு சிறு கரண்டியளவு எடுத்துத் தலையுச்சி, பிடரி, கழுத்து, உடல், காது முதலான இடங்களில் விடாமல் பூசி (சாம்பிராணி) புகைக் காட்டி வரவும். இத்தைலத்தையே நாசியிலும் 2 துளிகள் விடவும். காய்ச்சல், சந்நிகள், பித்த சிலேத்தும ரோகங்கள் முதலான பிணிகளெல்லாம் விலகும்.

## அரிதார பற்பம்

அரிதாரம் வராகனெடை யிரண்டாகும்
சங்கினள வதனிற் பாதி
மருவுகும ரிச்சாறு விட்டரைத்துப்
புடம்போட்டு வைத்துக் கொண்டு
விரவலுறு சந்நிக்கும் பணவெடையிஞ்
சிச்சாற்றின் மேவ நல்கு
தரிசீத சுரத்திற்குத் தும்பையிலைச்
சாறுதனில் சார நல்கே. 64

நல்கிடுசிற் றரத்தையின்றன் சுரசந்தேன்
சமனதனின் வில் வாதத்திற்
கல்லல்புரி பாரிசவாய் வினுக்குக்கோ
டகசாலை யரிய சாற்றிற்

சல்லியஞ்செய் யதிசாரந் தோடங்கட்
குய்தாழைச் சாறுதன்னைச்
சொல்லழலின் முறித்ததனிற் பணவெடைதூள்
கலந்துதவு சுகமாம் பாரே.

(இ-ள்.)

சுத்திசெய்த பொன்னரிதாரம் 2 வராகனெடை
பொரித்த சங்கு 1 வராகனெடை

இவ்விரண்டையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுக் கற்றாழைச்சாறு விட்டு நன்றாக அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து 2 வரட்டியில் புடமிடவும். பற்பமாகும்.

சந்நிகளுக்கு 1 பணவெடை (31/3 குன்றியளவு) எடுத்து இஞ்சிச் சாற்றுடன் கொடுக்கவும்.

சீதசுரங்களுக்குத் தும்பையிலைச்சாற்றிலும், சிற்றரத்தை கஷாயத்தில் தேன்விட்டு அதனுடனும், இப்பற்பத்தைக் கொடுத்தால் வாதரோகங்களும் தீரும். கோடகசாலைச் சாற்றில் கொடுத்தால் பாரிசவாய்வுகள் தீரும்.

வெதுப்பிப்பிழிந்த தாழைச்சாற்றில் கொடுக்க அதிசாரம் நீங்கும்.

**நசியம்**

கலைமான்கொம் பொடுசுக்குச் சங்குருத்தி
ராக்கமிவை கருது நான்கு
முலைப்பாலின் னசியஞ்செய் திடினுமிள
கொடுசுக்கு முதிர் வசம்பு

குலவுகவிழ் தும்பையுள்ளி யொடுதுளசி
நற்கடுக்காய் கொடு நறுக்கி
யிலவுசிறு நீரினிற்பஞ் சினிற்றோய்த்துப்
பிழிந்திடினு மேகுஞ் சன்னி 66

(இ-ள்.)

சுத்திசெய்த மான்கொம்பு
சுக்கு
சங்கு
ருத்திராக்ஷம்

இவைகளை முலைப்பாலுடன் இழைத்து மூக்கில் நஸ்யம் செய்தால், சந்நிகள் குணமாகும்.

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| வசம்பு | கவிழ்தும்பை |
| பூண்டு | துளசி |
| கடுக்காய் | |

இவைகளை உலகமறியாப்பிள்ளையின் சிறுநீருடன் இழைத்துப் பஞ்சிலூட்டி நஸ்யம் செய்தாலும் சந்நிகள் நீங்கும்.

## நஸ்யம்

## வேறு

எவச்சாரம் வராகனெடை யொன்றுவெடி
யுப்பொன்று மிந்துப் பொன்று
நவச்சார மொருமூன்று கூகைநீ
றொன்றேதான் நவிலி தன்றிக்

குவிக்குமெறாக் கலங்கரியொன் றிவ்வெட்டு
வராகனிறை கொடுதுள் செய்து
சுவைத்திடுசுண் ணாம்புறுவெற் றிலைச்சாற்றி
னசியமிடிற் றொலையுஞ் சந்நி 67

(இ-ள்.)

| | |
|---|---|
| எவச்சாரம் | 1 வராகன் |
| வெடியுப்பு | ,, |
| இந்துப்பு | ,, |
| கூகைநீர் | ,, |
| நவச்சாரம் | 3 வராகன் |
| எருக்கங்கரி | 8 வராகன் |

இவைகளை நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து வெற்றிலைச்சாறு விட்டு நஸ்யமிட்டால் சந்நிகள் தீரும்.

## சந்நி முதலானதற்கு
## தூதுவளை கஷாயம்

தூதளைவே ரெருக்கம்வேர் முருங்கைச்சா
றணையின்வேர் சொல் வசம்பு
மேதகுசிற் றறத்தையுட னுயர்தேவ
தாரநில வேம்பிவ் வெட்டு
மோதுசமன் கொண்டிரண்டு நாழிநீர்விட்
டெரித்திட்டு ழக்காய்க் காய்ச்சி
மீதருந்திற் றனுர்வாதம் பிரமையொடு
சந்நியெல்லாம் விலகிப் போகும். 68

(இ-ள்.)

| | |
|---|---|
| தூதுவளைவேர் | எருக்கம்வேர் |
| முருங்கைவேர் | சாறணைவேர் |
| வசம்பு | சிற்றரத்தை |
| தேவதாரு | நிலவேம்பு |

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 2 நாழி (10 சேர்) விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் குருக்கிக் காய்ச்சி வடிக்கட்டி உட்கொள்ள தனுர்வாதம், பிரணம், சந்நி முதலானவை தீரும்.

## திரிதோஷத்திற்கு
## பார்ங்கியாதி கஷாயம்

சிறுதேக்கி னுடனாடா தொடைகண்டங்
கத்தரிநற் சீந்திற் றண்டு
மறுவிலாச் சுக்குநில வைம்புதூத
ளையிந்த வகையோ ரேழு
மறுமொவ்வொன் றோரிரண்டு வராகனெடை
யிடித்தெல்லா மொன்றாய்க் கூட்டித்
திறமுறவே கடாயம்வைத் தருந்தியிடிற்
றிரிதோடந் தீரு மன்றே. 69

(இ-ள்.)

| | |
|---|---|
| சிறுதேக்கு | ஆடாதோடை |
| கண்டங்கத்தரி | சீந்தில்கொடி |
| சுக்கு | நிலவேம்பு |
| தூதுளைவேர் | |

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து இடித்து, எட்டுமடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டி அருந்திவர தோஷங்கள் தீரும்.

## தோஷத்திற்கு பதரிகஷாயம்

இலந்தையிலை நன்னாரி சீந்திற்றண்
டிருவேலி யிலாமிச்சம் வேர்
நலந்தருபூ நாகம்பேய்ப் புடல்முத்தக்
காசுடனே நவிலுங் கோட்ட
முலர்ந்திடுசுக் குடனாடா தோடையிஞ்சி
சமன்முலைப்பா லுடனே காய்ச்சிக்
கலந்துநறுந் திப்பிலித்தூ ளருந்தியிடத்
திரிதோடங் கலங்கி யோடும். 70

(இ-ள்.)

| | |
|---|---|
| இலந்தையிலை | நன்னாரிவேர் |
| சீந்தில்கொடி | வெட்டிவேர் |
| விளாமிச்சம்வேர் | மண்புழு |
| பேய்ப்புடல் | கோரைக்கிழங்கு |
| கோஷ்டம் | சுக்கு |
| ஆடாதோடை | இஞ்சி |

இவைகளை வகைக்கு ½ வராகனெடை எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு முலைப்பால் 1 நாழி விட்டுக் காய்ச்சித் திப்பிலித்தூள் போட்டு உட்கொள்ளத் திரிதோஷங்கள் நீங்கும்.

## சந்நிக்குப் பொட்டணம்

எருக்கின்மொட் டுடனாடா தொடைநொச்சி
யிலைவேம்பி னிலை முருங்கை
விரித்திடும்வேர் மாவிலிங்கை யிலையமுக்கி
ராவேர்நல் வேப்பங் கொட்டை

பருத்திவிதை யகத்திவிகை கடுகழிஞ்சி
விதையரத்தை பரு வசம்பு
தெரித்திடுகொம் மட்டிக்காயின் றோல்விழுதி
யிலையாவுந் தேடிக் கொள்ளே 71

கொள்ளுனொடு பெருங்காய மிந்துப்பு
வெள்ளுள்ளி குலவு புன்னை
விள்ளிடுதண் கொட்டையாம ணக்கினிலை
யதின்கொட்டை மேலு ளுந்தோ
டெள்ளுகழற் பருப்புத்தேங் காய்த்திருகல்
பொட்டணஞ்செய் திசையே ரண்டத்
துள்ளுருநெய் யினிற்காய்ச்சி யொற்றிடச்சந்
நிகள் யாவுமோடிப் போமே. 72

(இ-ள்.)

| | |
|---|---|
| எருக்கின் மொட்டு | ஆடாதோடை |
| நொச்சியிலை | வேப்பிலை |
| முருங்கைவேர் | மாவிலிங்கையிலை |
| அமுக்கிராக்கிழங்கு | வேப்பங்கொட்டை |
| பருத்திவிதை | அகத்திவிதை |
| கடுகு | அழிஞ்சில்விதை |
| சிற்றரத்தை | வசம்பு |
| கொம்மட்டிக்காய்த்தோல் | விழுதியிலை |
| கொள்ளு | பெருங்காயம் |
| இந்துப்பு | பூண்டு |
| புன்னைக்கொட்டை | ஆமணக்கிலை |
| ஆமணக்குவிதை | உளுந்து |
| எள்ளு | கழற்சிப்பருப்பு |
| தேங்காய்த்திருவல் | |

இவைகளை எல்லாவற்றையும் எடுத்துக் கல்லுரலிலிட்டுப் பூணில்லா உலக்கையினால் இடித்து, ஒரு துணியில் முடிந்து, ஒரு

வாணாயில் ஆமணக்கெண்ணெய் விட்டுச் சுடவைத்து, அதில் தோய்த்துத்தோய்த்து ஒத்தடம் கொடுக்க சந்நி தீரும்.

## சந்நி முதலானதற்கு
## இரஸாதிக் குளிகை

சிறுதேக்குச் சந்நிநாய கன்கடுகு
ரோணியொடு செய்ய சாந்தந்
தெறுசுக்குத் திப்பிலிபூ நாகங்கத்
தூரிமஞ்சள் சேரிவ் வெட்டு
முறுதிபெற வகையொன்றுக் கோர்கழஞ்சு
கொண்டுமே லுலவும் கோழி
யுருமுட்டைக் கருவுமொரு கழஞ்சிரத
மிருகழஞ்சு மொண்றாச்சேரே 73

சேரிவற்றை யாண்பிள்ளைத் தாய்முலைப்பால்
வார்த்தரைத்துத் திரட்டிக் கெண்டாங்
கோரளவு தூதுளங்கா யெணவுண்டை
செய்திஞ்சி யுதவ சாற்றி
லாரவுத வதுவின்றேல் முலைப்பாலிற்
கொடுசந்நி யகன்று போகுஞ்
சாரமுள வெள்ளுள்ளித் தைலத்திற்
கொடுவாத சந்நி தீரும் 74

(இ-ள்.)

| | |
|---|---|
| சிறுதேக்கு | சந்நிநாயகம் |
| கடுகுரோகிணி | சந்தனத்தூள் |
| சுக்கு | திப்பிலி |
| மண்புழு | கஸ்தூரிமஞ்சள் |

இவைகள் வகைக்கு 1 கழஞ்சு

கோழிமுட்டை வெள்ளைக்கரு 1 கழஞ்சு
சுத்திசெய்த பாதரஸம் 2 கழஞ்சு

இவைகளைக் கல்வத்திலிட்டு ஆண்குழந்தையைப் பெற்றிருக்கும் தாயாரின் முலைப்பாலினால் நன்றாக அரைத்துத் தூதுளங்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் காயவைத்துப் பத்திரப்படுத்தவும்.

இதனை இஞ்சிச்சாற்றிலோ அல்லது தாய்ப்பாலிலோ கொடுத்துவரச் சந்நிகள் தீரும். பூண்டுத் தைலத்தில் கொடுக்க, வாத சந்நி தீரும்.

### சந்நி முதலானதற்கு இருமருந்துகள்

தீரமதாய்த் திப்பிலிதே னுடன்கூட்டிக்
கொடுத்திட்டாற் சிலேத்து' - ந்தின்
பெரினுறு சந்நிதீர்ந் திடுமிஞ்சிச்
சாற்றினோடு பெரிதாய்ச் சொல்லுஞ்
சீருறுகோ ரோசனைநற் கலங்கொம்போடு
ரித்திராக்கம் திகழு ரோகிணி
வாரமுளு சந்நிநா யகன் கூட்டி
யுதவுபுற வாயு போமால். 75

(இ-ள்.)

திப்பிலித்தூளைத் தேனில் குழைத்துக் கொடுத்தால் சிலேத்தும சந்நிகள் தீரும்.

கோரோசனை
மான்கொம்பு
ருத்திராக்ஷம்

கடுகுரோகிணி

சந்நிநாயகன்

இவைகளைத் தூள்செய்து இஞ்சிச்சாற்றுடன் கொடுத்தால் வாயு தீரும்.

**சுக சந்நிக்கு இருமருந்துகள்**

போமிசைத்த வேப்பீர்க்கு நொச்சிநறுங்
கொழுந்தினோடு புகலுஞ் சுக்கு
நாமமுறு வசம்பொடுதிப் பிலிகூட்டி
யிடலசதி நண்ணுஞ் சந்நி
தாமகலு முயற்றுமுட்டை கடுகுரோ
கணிநாங்கூழ் சாரக் கூட்டிக்
காமுறுநல் கிடிற்காமத் தாலுற்றச்
சுகசந்நி கலங்கி யோடும். 76

(இ-ள்.)

| | |
|---|---|
| வேப்பீர்க்கு | நொச்சிக்கொழுந்து |
| சுக்கு | வசம்பு |
| திப்பிலி | |

இவைகளை இடித்து எட்டு மடங்கு சுத்த ஜலம் விட்டுக் கஷாயம் வைத்து எட்டிலொன்றாக்கி அருந்த சுகசந்நி தீரும்.

முசுறுமுட்டை கடுகுரோகணி மண்புழு இவைகளையும் கஷாயம் வைத்துப்பருக சுகசந்நி தீரும்.

## சந்நி முதலானதற்கு இலுப்பைப்பூ மாத்திரை

இலுப்பைப்பூ பூநாகஞ் சுக்குதிப்
பிலிசந்நிக் கிசையு நாதன்
றிருத்தமுறு கடுகுரோகணி வகைக்குக்
கழஞ்சுகொண்டு சேர்த் தரைத்து
வருத்தமறு தூதளங்கா யளவுருட்டி
யோருண்டை வளரிஞ்சிச் சாற்
றுரைத்துதவிற் பயித்தியித்தா லுறுசந்நி
தீருமுண்மை யுரைத்தே னப்பா 77

(இ-ள்.)

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | மண்புழு |
| சுக்கு | திப்பிலி |
| சந்நிநாயகம் | கடுகுரோகிணி |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை எடுத்து நன்றாக அரைத்துத் தூதுளங்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி, நிழலில் காயவைத்து, இஞ்சிச்சாற்றுடன் கொடுக்க பித்த சந்நிகள் தீரும்.

இதுவுமது

### சுகசந்நிக்கு

தேனிலிடச் சிரேட்டுமத்தின் சந்நிபோ
முலைப்பாலிற் சீரகத் தோ
டானபெரு முயிற்றுமுட்டை பூனாகஞ்
சேர்த்துதவி னலட்டு சந்நி

மானமுறு பிறகண்டந் தீரும்வேப்
பீர்க்கம் வேந்த வளநீர் தன்னி
லூனமில்சீ ரகமிளகு சுக்குடனீ
சுகசந்நி யோடும் பாரே. 78

(இ-ள்.)

முன் மாத்திரையை தேனில் கொடுக்க சிலேத்தும சந்நிகள் தீரும்.

சீரகம்
முசுறுமுட்டை
சுக்கு

இவைகளைக் கூட்டி முலைப்பாலுடன் உட்கொள்ள அலட்டு சந்நிகள், பிரகண்டம் முதலானவைகள் தீரும்.

சீரகம்
மிளகு
சுக்கு

இவைகளைச் சமனெடை எடுத்து இடித்து வேப்பீர்க்கு கஷாயத்துடன் கலந்து, முன் மாத்திரை ஒன்றும் சேர்த்துக் கொடுக்கச் சுகசந்நிகள் போகும்.

## சந்நிகளுக்கு நிம்பதைலம்

பாருறுவேப் பம்பட்டை வேம்பினெய்
நொச்சிவேர் பக்ரு நத்தைச்
சூரிவேர் கிலுகிலுப்பை வேர்வாத
மடக்கிவேர் தொட ரெருக்கம்

வெருகாய வேர்குப்பை மேனிவேர்
கழற்சிவேர் விழியின் வேர்
வாரமுள முருங்கைவேரி வரிசிற்றா
மணக்கம்வேர் மதமத்தம் வேர் 79

மதனையெரித் திடுசிவனார் வேம்பொடுகை
வேளைவேர்வகை யொவ் வொன்றுக்
கிதமுறுபாக் களவுகருஞ் சீரகந்திப்
பிலியரத்தை யிந்துப் போமம்
புதுவசம்பு வெள்ளுள்ளி கடுகுரோக
ணிசுக்குப் புகல்செஞ் சாந்தம்
சிதவெளிச்சாபே பிசின்சந்நி நாதன்மர
மஞ்சளொடு சிறிய தேக்கு 80

குலவிடுகத் தூரிமஞ்சள் வாய்விளங்கம்
நற்கடுகு கூற லுற்ற
பலவும்வகைக் கொருகழஞ்செண் ணெயிற்கரைத்தீட்
டெரித்துவரும் பதத் திறுத்தே
யிலகுமொரு கழஞ்சருந்தக் கொடுத்துமே
லினும்பூசி யிசை கொளுங்கா
திலுஞ்சிறிது விட்டடைக்கிற் சந்நிபதின்
மூன்றுமேபோ மிதனைப் பாரே. 81

(இ-ள்.)

| | |
|---|---|
| வேப்பம்பட்டை | நொச்சிவேர் |
| நத்தைச்சூரிவேர் | கிலுகிலுப்பைவேர் |
| வாதமடக்கிவேர் | எருக்கம்வேர் |
| குப்பைமேனிவேர் | கழற்சிவேர் |
| வீழிவேர் | முருங்கைவேர் |
| சிற்றாமணக்குவேர் | ஊமத்தை வேர் |
| சிவனார்வேம்பு | தைவேளைவேர் |

இவைகளை வகைக்கு ஒரு பாக்களவு

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | திப்பிலி |
| சிற்றரத்தை | இந்துப்பு |
| ஓமம் | வசம்பு |
| பூண்டு | கடுகுரோகிணி |
| சுக்கு | செஞ்சந்தனம் |
| வெளிச்சைப்பிசின் | சந்நி நாயகன் |
| மரமஞ்சள் | சிறுதேக்கு |
| கஸ்தூரி மஞ்சள் | வாய்விடங்கம் |
| கடுகு | |

இவை வகைக்கு 1 வராகனெடை

இவைகளைச் சுத்தஜலம் விட்டு நன்றாக அரைத்து வேப்பெண்ணெய் 5 சேர் விட்டு அதனுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் கழஞ்சு (1 வராகனெடை) எடுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசவும். காதிலும் சிறிது விட்டுவர, 13வித சந்நிகளும் தீரும்.

## சந்நி முதலானதற்கு நாயுருவி உருண்டை

நாயுருவி சமூலமொடு கள்ளி கற்றா
ழஞ்சருகு நலனே செய்தற்
காயபிர மியவமுக்கைச் சமன்கூட்டச்
சாம்பலினி லாழித் தண்ணீ
ரெயுமொரு முக்குறுணி விட்டுமூவ
வடிவத்தே ரிக்கிலுப் பாம்
நேயமுட னதனையெடுத் துரியுப் புக்
கறுகழஞ்சு நிகழ்நேர் வாளம். 82

நேருறவே நாற்கழஞ்சு பெருங்காயம்
நாற்கழஞ்சு நில விந்துப்புப்
பாரமுறு நாற்கழஞ்சு வெங்கார
மெலுமிச்சம் பழச் சாறூற்றி

சேரவரைத் தொருசுண்டை யளவுருட்டி
வறண்டவற்குத் திக ழாட்டுப்பா
லரமுறுச யித்தியத்துக் கினிமைதரு
தேனிலுத விசை வாய்த்தானே 83

(இ-ள்.)

| | |
|---|---|
| நாயுருவிச் சமூலம் | கள்ளி |
| கற்றாளஞ்சருகு | பிரமிவழுக்கை |

இவைகள், சுட்ட சாம்பல் வகைக்கு 1 படியுடன் கடல்நீர் 3 மரக்கால் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரிக்க, உப்பாகும்

| | |
|---|---|
| மேற்படி உப்பு | ½ படி |
| சுத்திசெய்த நேர்வாளம் | 6 கழஞ்சு |
| பொரித்த பெருங்காயம் | 4 ,, |
| வறுத்த இந்துப்பு | 4 ,, |
| பொரித்த வெங்காரம் | 4 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துச் சுண்டக்காய் அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி, தேகவறட்சிக்கு ஆட்டுப்பாலிலும், சைத்தியத்திற்குத் தேனிலும் கொடுக்க குணமாகும்.

## குளிர் தோஷத்திற்கு

பச்சையர வின்கண்டங் கொம்மட்டிமா
தளைவேலிப் பருத்தித் தன்னே
டச்சிவந்த நாயுருவி தன்வேர்நா
கப்பூச்சியணி கொள் புற்றின்

மெச்சிடுமண் ணண்டுவளை மண்நண்டின்
கூடசமன் விளங் கெண்ணெய்
யிலிச்சையினிட் டெரித்தருந்தி யுச்சியுள்ளங்
காலிற்பூ சேகுந் தோடம். 84

(இ-ள்.)

| | |
|---|---|
| பச்சைப்பாம்புக்கண்டம் | கொம்மட்டி மாதளை |
| வேலிப்பருத்தி | சிவந்த நாயுருவி வேர் |
| மண்புழு | புற்றுமண் |
| நண்டுவளை மண் | நண்டுக்கூடு |

இவைகள் வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, ஆமணக்கெண்ணெய் 1¼ சேருடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும். இதில் ஒரு கரண்டியளவு எடுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிவரத் தோஷங்கள் தீரும்.

### சந்நிக்கு சாதிலிங்கக் குளிகை

சாதிலிங்க மனோசிலைகந் தகம்நாவி
நீடுமிரதம் வெண் கார
மோதுசம னெலுமிச்சம் பழச்சாற்றி
லொருசாம முற வரைத்துத்
தீதீல்குன்றி யளவுருட்டி முலைப்பாலிஞ்
சியிலுதவத் தீரும் வெப்பு
மீதுபஞ்ச கோலகடாயத் தீடச்சன்னி
வாதந்தான் விலகிப் போகும். 85

(இ-ள்.)

சுத்திசெய்த லிங்கம்

,, மனோசிலை

,, கெந்தகம்

,, நாபி

,, பாதரஸம்

,, பொரித்த வெங்காரம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை எடுத்து, முதலில் ரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துப பின்னர், மற்ற சரக்குகளைப் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு 1 சாமம் நன்றாக அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை எடுத்து முலைப்பாலில் அல்லது இஞ்சிச்சாற்றுடன் கொடுக்க வெப்புக்கள் தீரும். பஞ்சகோல கஷயத்தில் (சுக்கு, மிளகு, திப்பிலி, சவ்வியம், சித்ர மூலம்) கொடுக்க சந்நிகள் தீரும்.

## விடதோடத்திற்கு நாபிக் குளிகை

நாவிமனோ சிலையிரத மரிதார
கந்தகமிந் நவிலைந் தோடே
மேவலுறு சாதிலிங்கம் வகைக்கிரண்டு
வராகனெடை வேப்பஞ் சாற்றிற்
பாவரைத் துருட்டியுத விடத்தோடந்
தீருமெனப் பரவை சூழ்ந்த
பூவுலகம் போற்றுதஞ்சைச் சரபோசி
மன்னவர்தான் புகல லுற்றார் 86

(இ-ள்.)

சுத்திசெய்த நாபி

,, மனோசிலை

,, பாதரஸம்

,, தாளகம்

,, கெந்தகம்

,, லிங்கம்

இவைகள் வகைக்கு 2 வராகனெடை

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு, நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்துகொண்டு, பின்னர் மற்ற சரக்குகளைப் போட்டு, வேப்பிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து, குன்றியளவு உள்ள மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொண்டு 1 மாத்திரை சுத்தஜலத்துடன் கொடுக்க விஷதோஷங்கள் தீரும்.

## சந்நிக்கு பச்சிலை எண்ணெய்

நல்லவேப் பம்பருப்பு நொச்சியிளங்
கொழுந்துமத்த நறுங்கொழுந்து
வல்லகுட்டி விளாவேர் சீனிப்பெருமாள்
வேரெவையும் வகை யொன்றுக்குச்
சொல்லிடொவ்வோர் பிடிகூட்டி யெள்ளுறுநெய்
யினிற்றூவி தோன்றக் காய்ச்சி
மெல்லியழுக் கொடுகாது தலைகைகா
லிடச்சந்நி விலகு மன்றே. 87

(இ-ள்.)

வேப்பம்பருப்பு

நொச்சிக்கொழுந்து

ஊமத்தைக்கொழுந்து

குட்டிவிளாவேர்

சீனிப்பெருமாள் வேர்

இவைகளை வகைக்கு 1 பிடி எடுத்து நல்லெண்ணெய் 3 சேருடன் சேர்த்து நன்றாகச் சிவக்கும்படி காய்ச்சி மூக்கு, காது, தலை, கால் முதலானவிடங்களில் பூசவும். சந்நிகள் தீரும்.

## சந்நிகளுக்கு சிறுகுறட்டை எண்ணெய்

சிறுகுறட்டை பெருமருந்து பொன்முசுட்டை
நன்னாரி சீந்தி லோடு
கரிமுள்ளி நீர்முள்ளி குட்டிவிளா
கழல்வரிக ரந்தை வேர்கள்
நறியதூ தளைமுழுவி விட்டாளங்
கொழவரை நவில் கிலுப்பை
வறியபேய்க் கொம்மட்டியின் வேரிவற்றி
னொடுகுதிரை வாலிவேரே. 88

வேரிவற்றி னொடுவசம்பு கருஞ்சீர
கங்கடுக்காய் வெள் வெங்காயங்
காரமுறு பெருங்காயங் கடுகெவைடு
மிசைவாகக் கைக் கொண்டெள்ளின்
சாருறுநெய் யிருபங்கு வேம்பிநெய்
யொருபங்கு தன்னிற் கூட்டி
யாரெறியிற் பதத்தெரித்து நல்கியிடிற்
சந்நிவகை யனைத்துந் தீரும். 89

(இ-ள்.)

| | |
|---|---|
| சிறுகுறட்டைவேர் | பெருமருந்துவேர் |
| பொன்முசுட்டைவேர் | நன்னாரிவேர் |
| சீந்தில்கொடிவேர் | கறிமுள்ளிவேர் |
| நீர்முள்ளிவேர் | குட்டிவிளாவேர் |

| | |
|---|---|
| கழற்சிக்கொடிவேர் | கரந்தைவேர் |
| தூதுளைவேர் | தண்ணீர்விட்டான் |
| கோழியவரைவேர் | |
| கிலுகிலுப்பைவேர் | பேய்க்கொம்மட்டி வேர் |
| குதிரைவாலி (முதியார் கூந்தல்) வேர் | |
| வசம்பு | |
| கருஞ்சீரகம் | கடுக்காய்த்தோல் |
| வெள்வெங்காயம் | பெருங்காயம் |
| கடுகு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணித்து

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 2 சேர் |
| வேப்பெண்ணெய் | 1 சேர் |

இவைகளுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதில் 1 தேக்கரண்டி அளவு எடுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் தேய்க்க சந்நிகள் தீரும்.

## சந்நிக்கு திரிகடுகு அஞ்சனம்

திரிகடுகு வசம்புள்ளி கொத்தாளங்
காய்சனாய்ச சேரத் தேடி
மருவுமிளங் காடிவார்த் தரைத்துருட்டி
நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு
விரவிடுவெந் நீரில்விழி யிடிற்றலைநோய்
சந்நிவகை மிருகண் வாயு
சரிதரும்வெற் றிலைச்சாறு விடத்திற்காஞ்
சுக்குநீர் தகுபேய்க் காகும். 90

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வசம்பு |
| பூண்டு | கொத்தளங்காய் (சமுத்திரப்பச்சை) |

இவைகளை ஒரு கல்வத்திலிட்டுக் காடிவார்த்து நன்றாக அரைத்து, உருட்டி நீண்ட மாத்திரையாகச் செய்து வைத்துக் கொண்டு வெந்நீரில் இழைத்து ஒரு சிறு பயறளவு கண்களில் இட மண்டையிடிகள், சந்நிகள், நேத்திரவாயு முதலானவை தீரும்.

வெற்றிலைச் சாற்றிலிட்டால் விஷங்கள் தீரும். சுக்கு கஷாயத்திலிடப் பேய்ப்பிசாசுகள் ஓடும்.

## சந்நிக்கு அரிதாரக் குளிகை

அரிதாரங் கந்தகம்வெள் ளுள்ளிபெருங்
காயமிந்துப் பழிஞ்சிக் கொட்டை
திரிகடுகு நேர்வாள மிரதம்வேம்
பெட்டிகளிற் றிகழுங் கொட்டை
தருசமனா யெலுமிச்சம் பழமேனி
சறணைகையாந் தகரைச் சாறொவ்
வொருதினமூ றிடவைத்திட் டரைத்தந்தப்
பழச்சாற்றி லோடுஞ் சந்நி 91

(இ-ள்.)

சுத்திசெய்த அரிதாரம்
,, கெந்தகம்
,, ரஸம்
பொரித்த பெருங்காயம்
வறுத்த இந்துப்பு

| | |
|---|---|
| பூண்டு | அழிஞ்சில்வித்து |
| வேப்பங்கொட்டை | சுக்கு |
| மிளகு | திப்பிலி |

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு, முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்ற சரக்குகளைப் போட்டு எலுமிச்சம்பழச் சாறு, குப்பைமேனிச்சாறு, காட்டரணைச்சாறு, கையாந்தகரைச்சாறு, இவைகளை முறையே தினம் ஒவ்வொரு சாறு வீதம் விட்டு ஊறவைத்துப் பிறகு நன்றாக அரைக்கவும். கடைசியில் குன்றியளவுள்ள மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

வேண்டும் பொழுது 1 குளிகையை எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்கச் சந்நிகள் தீரும்.

இதனையே கண்களுக்கும் அஞ்சனமாக இடவும்.

**சந்நிக்கு கொம்புத் தைலம்**

மாட்டுக்கொம் பினைச்சீவி யொருசட்டி
காயவைத்து மருவதற் குட்
போட்டதுநற் றயிலமா கியபிறகைந்
தெண்ணெய்களும் பொருந்த விட்டுக்
காட்டுறுதிப் பிலிமூலம் வெள்ளுள்ளி
வசம்பரத்தைக் கடுதான்றிக்காய்
யீட்டசம தாகமர மஞ்சள்பெருங்
காயமுட னிசை யிந்துப்பு 92

புகல்சவுக்கா ரத்தோடுகத் தூரிமஞ்சள்
பெருங்குரும்பை புனித மென்னத்
தகுமினிய திரிகடுகு பெருங்காயஞ்
செவிய மெண்ணெய் தன்னினாழிக்

கிகலிலொவ்வோர் கழஞ்சுபசு மஞ்சட்சாற்
றரைத்திட்டாங் கெரித் துள்ளுக்கு
மிடுநான்கு காசெயையீந் துடம் புகாதி
னிலுமிடில் விலகுஞ் சந்நி. 93

(இ-ள்.)

மாட்டுக் கொம்பைச்சீவி ஒரு சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றி அது உருகியபின்

வேப்பெண்ணெய்
நல்லெண்ணெய்
இலுப்பெண்ணெய்
ஆமணக்கெண்ணெய்
புங்கெண்ணெய்

இவை வகைக்கு 1 சேர் சேர்த்துப் பின்னர்,

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | பூண்டு |
| வசம்பு | சிற்றரத்தை |
| கடுக்காய்த்தோல் | தான்றிக்காய்த்தோல் |
| ஓமம் | மரமஞ்சள் |
| [1]பெருங்காயம் | இந்துப்பு |
| சவர்க்காரம் | கஸ்தூரிமஞ்சள் |
| பெருங்குரும்பை | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| செவ்வியம் | |

[1]இரண்டு இடங்களில் பெருங்காயமென்று வந்திருப்பதை சந்தேகித்து வைத்திய அட்டவணையைப் பார்த்தபொழுது அதில் பெருங்காயம், சதகுப்பை, கருஞ்சீரகம், வெளுச்சைப்பிசின் மேற் கூறப்பட்ட சரக்குகளுடன் சேர்க்கப் பட்டிருக்கிறது. ஒரு தடவைதான் பெருங்காயம் போடப்பட்டிருக்கிறது.

இவை வகைக்கு 1¼ வராகனெடை எடுத்துப் பசுமஞ்சள் சாறு விட்டு நன்றாக அரைத்து முன் எண்ணெய்களுடன் கூட்டி எரித்துப் பக்குவமாக இறக்கவும். இத்தைலத்தில் 4 காசெடை உள்ளுக்குக் கொடுக்கவும்.

இதனையே உடம்பிலும் தேய்க்கவும், காதிலும் விடவும். சந்நிகள் நீங்கும்.

**வாத ராட்சஸன்**

சூதமுட னரிதாரங் கெந்தகநேர்
வாளமொடு தோன்று நாபி
யோதுதிரி கடுகுதிரி பலவகைக்கு
கழஞ்சாய்க்கொண் டொருசாமந்தான்
போதமுருக் கிலைச்சாற்றி லரைத்துமிள
களவுருட்டிப் பொருந்தீஞ்சிச் சாற்
றாதரவாய்க் கொடுவாத ராக்கதனா
மிதுசந்நி யனைத்துந் தீர்க்கும். 94

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த | பாதரஸம் |
| ,, | தாளகம் |
| ,, | கெந்தகம் |
| ,, | நேர்வாளம் |
| ,, | நாபி |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுக்காய்த்தோல் |
| தான்றிக்காய்த்தோல் | |
| நெல்லிவற்றல் | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கஜ்ஜலி செய்துகொண்டு

பிறகு மற்ற சரக்குகளைப் போட்டு, முன் முருக்கிலைச்சாறு விட்டு 1 சாமம் அரைத்து மிளகுப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு இஞ்சிச்சாற்றில் கொடுக்க சந்நிகள் பலவும் தீரும்.

## சந்நிக்கு துத்தாதிக்குளிகை
## (சூசிகாபரண ரஸம்)

துத்தம்பொன் னரிதாரம் நேர்வாளம்
வெங்காரஞ் சொல்லு நாபி
யத்தகைய கெந்தகநீ ரடிதமெனப்
புகலுமிவை யனைத்துங் கொண்டு
சுத்திபுரிந் ததிமதுரங் கடுநெல்லி
தான்றிசமன் றொகவே கூட்டிக்
கைத்திடவே யுறுபிடங்கு நாறியிலைச்
சாற்றரைத்துக் கையிற் கொள்ளே 95

கொண்டுளுத்தி னளவுருட்டிப் பதின்மூன்று
சந்நிக்குங் கொடுக்கத் தீரு
மண்டிடா ளறியாத சந்நிதனக்
குச்சியினில் வகிர்ந்து குன்றி
தண்டியுடள வாகவிந்த மருந்திட்டுத்
தேய்க்கவிது கணத்திற் றீரு
முண்டிடுபத் தியந்தயிருஞ் சோறதுவு
மாகுமீது ணர்ந்து செய்யே. 96

(இ-ள்.)

சுத்திசெய்த துத்தம்
,, பொன்னரிதாரம்
,, நேர்வாளம்

பொரித்த வெங்காரம்
சுத்தித்த நாபி
,, கெந்தகம்
,, பாதரஸம்

அதிமதுரம் கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல் நெல்லிவற்றல்

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை ஒரு சுத்தமான கல்வத்தில் இரஸத்தையும் கெந்தகத்தையும் விட்டு நன்றாக அரைத்து கஜ்ஜலி செய்து, பின் மற்ற சரக்குகளைப் போட்டுப் புறங்கை நாறியிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துக்கொண்டு உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை சுத்தஜலத்துடன் உள்ளுக்குக் கொடுக்க 13 சந்நிகளும் தீரும். ஸ்மரணையற்று, ஆளை அடையாளம் கண்டு கொள்ள இயலாத நோயாளியின் உச்சியைக் கீறி குன்றியளவு இந்தக் குளிகையைத் தேய்க்க ஸ்மரணை வரும்.

பத்தியம்:- தயிர் சாதம் சாப்பிடவும்

## சந்நிக்கு சந்நிபாத பைரவம்

கந்தகமொன் றிரதமொன்று நாவியொன்று
தாளகமுங் கருதித் தானே
முந்துரைத்த படியேயோ மனோசிலைவெண்
காரமிவை மும் மூன்றாகுஞ்

கந்தமுறு மிங்குலிகம் பன்னிரண்டா
மிவையெல்லாஞ் சாரக் கூட்டி
நந்தலில்சித் திரமூலக் கடாயத்தி
லரைத்தொருநாள் நயந்து பின்னால் 97

பின்னமிலா வெலுமிச்சம் பழச்சாற்றிஞ்
சிச்சாற்றிற் பேசி டோர்நா
ளுன்னுதிரி தோடமதி சாரமரோ
சிகஞ்சன்னி வாதங்குட்டம்
இன்னவற்றிற் கனுபானத் தீடுசந்நி
வாதவைப்யி ரவமிதாம் 98

(இ-ள்.)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரஸம்
,, நாபி
,, தாளகம்

இவைகள் 1 பங்கு

| | |
|---|---|
| சுத்திசெய்த மனோசிலை | 3 பங்கு |
| பொரித்த வெங்காரம் | 3 பங்கு |
| சுத்திசெய்த லிங்கம் | 12 பங்கு |

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து. பின் மற்ற சரக்குகளையிட்டு சித்திரமூலக்கஷாயம் விட்டு 1 நாள் முழுவதும் நன்றாக அரைக்கவும். மறுநாள் எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைக்கவும். அதற்குப்பின் இஞ்சிச்சாறு விட்டு 1 நாள் அரைத்து மருந்தை உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் காயவைக்கவும். இதை தக்க அனுபானங்களிலிட திரிதோஷங்கள், அதிசாரம், அரோசம், சன்னிபாதம், குஷ்டம் முதலானவைகள் தீரும். இந்த மருந்தின் பெயர் சந்நிபாத பைரவம் ஆகும்.

## சந்நிகளுக்கு ப்ணாணேச்வர் ரஸம்

இரதமுட னப்பிரகங் கந்தத்தான்
வராகனெடையவை யொவ் வொன்றாய்
மருவிடவே கொண்டுதண்ணீர் மிட்டான்றன்
கிழங்குநீர் வார்த் தரைத்துக்
கருதியிடு வாலுகையந் திரமதனிற்
புடமிட்டுக் கன வெங்காரந்
திரிகடுகு திரிபலைசித் திரமூல
மெவச்சாரஞ் சீர கந்தான். 99

சீருறுசத் திச்சாரங் குக்குலுவெட்
பாலைவிதை செப்பு கின்ற
பேருறுமை வகையுப்பு வகைக்கொவ்வோர்
வராகனெடை பிச கிடாமற்
லொருநிலப் பனைக்கிழங்கின் சாற்றரைத்து
முன்மருந்து மொக்கக் கூட்டி
யேருறவே பயறளவா யுருட்டியதை
நிழலிலுலர்த்தி யெடுத்து வையே. 100

வைத்திடித்து தான் பிராண சுரமாத்தி
ரையாகும் மன்னு மீதி
லுய்த்திடுமோ ருண்டையனு பானவிசே
டந்தன்னி லுதவு பாண்டு
சித்தமயக் கிடுகுன்மங் கிராணிசன்னி
வாதமொடு திரி தோடங்கட்
கத்தகைய பத்தியமு மறிந்துதவு
குணமாகு மதுவும் பாரே. 101

(இ-ள்.)

சுத்தித்த பாதரசம்
,, அப்ரகம்
,, கெந்தகம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை எடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக உறவாகும்படி அரைத்துப் பிறகு அப்பிரகத்தைப் போட்டுத் தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் காய்ந்தபின் இம்மருந்தை வாலுகா யந்திரத்திலிட்டு எரித்துக் கழுத்தில் படிந்திருக்கும் மருந்தை ஜாக்கிரதையுடன் எடுத்து அதனுடன்,

பொரித்த வெங்காரம்
சுக்கு
மிளகு
திப்பிலி
கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
சித்திரமூலவேர்ப்பட்டை
எவச்சாரம்
சீரகம்
சத்திச்சாரம்
குக்குலு
வெப்பாலையரிசி
இந்துப்பு
கடலுப்பு
வளையலுப்பு
அட்டுப்பு (உழமண்)
கறியுப்பு

இவைகள் வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலுள்ள மருந்துடன் சேர்த்து நிலப்பனங்கிழங்குச் சாறு விட்டு நன்றாக அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்திபத்திரப்படுத்தவும்.

இதனை தக்க அனுபானங்களில் கொடுக்க பாண்டு, குன்மம், கிராணிகள், சந்நிகள், வாதரோகங்கள், திரிதோஷங்கள், முதலியன தீரும். ரோகத்திற்குத் தக்க பத்தியம் இருக்கவும். இதன் பெயர் ப்ரேணேச்வர மாத்திரையாகும்

## சீதஜ்வரம் முதலானதற்கு
## சீதபஞ்ஜன ரஸம்

ஓதிடுகெந் தகநாவி யிரதமொவ்வோர்
வராகனெடை யுயர்ச்சி யான
சாதிக்காய் திப்பிலிதான் வராகனெடை
யரையரையே தகத்தூள் செய்து
காதலொடு வெற்றிலைச்சாற் றரைத்துண்டை
செய்துலர்த்திக் கருதச் சாற்றிற்
சீதசுரந் தனக்குதவு மற்றதற்கு
மனுபானந் தெரிந்து நல்கே. 102

(இ-ள்.)

சுத்திசெய்த கெந்தகம்
,, நாபி
,, பாதரஸம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

| | |
|---|---|
| உயர்ந்த ஜாதிக்காய் | 1½ வராகனெடை |
| திப்பிலி | 1½ வராகனெடை |

இவைகளைக் கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து வெற்றிலைச் சாற்றிலேயே உள்ளுக்குக் கொடுக்க சீதஜ்வரங்கள் தீரும். மற்ற ஜ்வரங்களுக்குத் தக்க அனுபான மறிந்து கொடுக்கவும்.

## தாளகச் சிந்தூரம்

அரிதாரங் கந்தகநீ டிகசம்வெங்
காரமுட னரிய நாகத்
துரியபற்ப மிவ்வைந்துஞ் சமன்கூட்டி
நல்லெருக்கி னோங்கு பட்டைத்
தரமுறுநற் கடாயஞ்சித் திரமூலக்
கடாயநெல்லி திகழ் கடுக்காய்
தருவுதவு தான்றியினீர் வெற்றிலைச்சா
றுள்ளிதருந் தைல மெல்லாம்
ஆகும்வகை யொவ்வொன்றி னெவ்வெழுநா
ளரைத்திட்ட தனைச் செம்பின்
வாகுபெறு குப்பியிட்டு வாலுகா
வெந்திரத்தில் வன்னி வைத்து
வேகஞ்சீ தளமான பிறகெடுத்தீட்
டனுபான விசேடத் தீந்தாற்
பாகுபாடு சன்னிபஞ்ச குன்மங்கா
சந்தோடம் பறக்கும் பாரே. 103

(இ-ள்.)

சுத்திசெய்த தாளகம்
,, கெந்தகம்
,, பாதரஸம்
பொரித்த வெங்காரம்
நாகபற்பம்

இவைகளைச் சமனெடை எடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக உறவாகும்படி அரைத்த பின்னர் மற்ற சரக்குகளைப் போட்டு எருக்கம் பட்டைக் கஷாயம்,, சித்திரமூலக்கஷாயம், திரிபலாகஷாயம், (கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி மூன்றும் சேர்ந்தது) வெற்றிலைச்சாறு, பூண்டு தைலம் இவைகளில் தனித்தனியே எவ்வேழுநாள் அரைத்து செப்புக் குப்பியிலிட்டு வாலுகாயந்திரத்தில் (மணல் மறைப்பில்) வைத்தெரிக்கவும். ஆறியபின் எடுத்து தக்க அனுபானங்களில் கொடுத்துவர சன்னிகள், 5 வகை குன்மங்கள், காசம், தோஷம் முதலானவைதீரும்.

## சந்நிவாதத்திற்கு நொச்சித்தைலம்

பருநொச்சிச் சமூலமொரு பதினைந்து
பலமிடித்துப் பதக்குநீர் விட்
டெரியிடத்து நாலிலொன்றாய்க் காய்ச்சியிறுத்
ததிற்கையாந் தகரைச் சாறு
விரவிவொரு நாழிவிட்டுத் திரிகடுகு
மஞ்சள் செவ்வியம் வகைக்குத்
திறமுறவொவ் வோர்பலங் கொண்டரைத்துச்சே
ரெண்ணெய்படி சேர்த்துக் கொள்ளே. 104

சேர்தெரித்து வடித்ததனை நசியமிடிற்
கண்ணோவு செவியி னோவு
தீர்ந்திடுநற் கருமையென விருந்தசந்நி
வாதமெல்லாந் தீருமின் பஞ்
சேர்த்திடுமிம் முறைத்தஞ்சைச் சரபோசி
மன்னுயிற்ற யவினாநல்
பார்தலத்து வளர்மாந்தர் சுகமாக
விருத்தவெண்ணிப் பகர்ந்ததாமே. 105

(இ-ள்.)

கருநொச்சி சமூலமாக 15 பலம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகும் வரை வற்றவைத்து, இறுத்து இதற்கு சரியளவு 1 படி கையாந்தகரைச் சாறுவிட்டு.

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | மஞ்சள் |
| சவ்வியம் | |

இவைகள் வகைக்கு 1 பலம் வீதமெடுத்து மேற்படி கஷாயம் விட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி நல்லெண்ணெய் 1 படியுடன் குழப்பி, சாறு சேர்ந்த கஷாயத்துடன் கலந்து காய்ச்சி மூக்கில் நஸ்யமிட கண்ணோய்கள், காது நோய்கள், சந்நி பாதம் முதலானவை தீரும்.

## தோஷம் சந்நி பாதங்களுக்கு பஞ்சமூலக் கடாயம்

வில்வவேர் பாதிரிவேர் தக்காளி
வேர் குமிழின் வேரினோடே
யெல்லுறுகாட் டாமணக்கின் வேரைந்தும்
நீர்விட்டே யெட்டிலொன்றாய்
மெல்லவெரித் தருந்திடினுந் திப்பிலிமூ
லங்கொடிய வேலிசுக்கு
நல்லுயர்திப் பிலிசெவ்வியக் கடாயமருந்
துதல்செயினும் நடுங்குஞ்சன்னி 106

(இ-ள்.)

| | |
|---|---|
| வில்வவேர் | பாதிரிவேர் |
| தக்காளிவேர் | குமிழம்வேர் |
| காட்டாமணக்குவேர் | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்தில் விட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக வற்றவைத்து குருக்கி வடிகட்டி உட்கொள்ளவும்.

| | |
|---|---|
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| செவ்வியம் | கொடிவேலிவேர் |
| சுக்கு | |

இவைகளை முன்போலக் கஷாயம் செய்து அருந்தினாலும் சந்நிகள் தீரும்.

### சகல சந்நி வாதத்திற்கும் கண்டங்கத்திரி கஷாயம்

கண்டங்கத் திரிமுள்ளி கத்திரிபா
திரிகுமிழ்வேர் கனித் தக்காளி
விண்டிடுசிற் றாமுட்டி சிறுமல்லி
பெருமல்லி விளம்புஞ் சுக்கு
கண்டிடுகாட் டாமணக்கு வில்வவே
ரிவைசமனாக் கடாயஞ் செய்து
கொண்டுவரிற் சந்நிவகை யாவையுந் தீர்ந்
திருமின்பங் கொடுககுந் தானே. 107

(இ-ள்.)

| | |
|---|---|
| கண்டங்கத்திரிவேர் | முள்ளுக்கத்திரிவேர் |
| பாதிரிவேர் | குமிழம்வேர் |
| தக்காளிவேர் | சிற்றாமுட்டிவேர் |
| சிறுமல்லிவேர் | பெருமல்லிவேர் |
| காட்டாமணக்கம்வேர் | வில்வவேர் |
| சுக்கு | |

இவைகளைச் சமனெடுத்து (வகைக்கு 1 பலம்) இடித்து வைத்துக் கொள்ளவும். வேண்டும்போது 1 பலம் தூள் எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு 1 சேர் சுத்தஜலம் விட்டு எட்டிலொன்றாக வற்றவைத்து வடிக்கட்டி உட்கொள்ள சந்நி வகைகள் தீரும்.

## சந்நிக்கு இலாமிச்சம் எண்ணெய்

இலாமிச்சம் வேரெருக்கம் பழுப்புசிற்
றாமுட்டி யிசைந்திடும் வேர்
நலமுறுசிற் றாமணக்கி னிலையாடா
தொடையொடுநன் னாரியின் வேர்
குலவுறுசீந் திற்றண்டு கொத்தமல்லி
யொவ்வொன்று குறியீ ராறு
பலமிடித்துப் பன்னிரண்டு படிநீரிற்
போட்டினிது பரிவாய்க் காய்ச்சு 108

காய்ச்சியதை நாலிலொன்றாய் வடித்தெண்ணெய்
நாழியுமேற் கலந்து மஞ்ச
ளெச்சிலாக் குளவிந்த நன்னாரி
சங்கம்வே ரிலாமிச்சம் வேர்

வீச்சிடுள்ளி யிருவேலி தேவதா
ரங்குலியம் வெள்ளைக் கோட்டம்
வாச்சகழற் பருப்பொப்பாய்க் கூட்டியெரித்
துப்பூசு வாங்குஞ் சந்தி 109

(இ-ள்.)

| | |
|---|---|
| விளாமிச்சம்வேர் | எருக்கம் பழுப்பு |
| சிற்றாமுட்டிவேர் | சிற்றாமணக்கிலை |
| ஆடாதோடை | நன்னாரிவேர் |
| சீந்திற்கொடி | கொத்துமல்லி |

இவைகள் வகைக்கு 12 பலம் வீதமெடுத்து சுத்தஜலம் 12 படி விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாய்க் காய்ச்சி வடிகட்டவும். அதனுடன் கலப்பில்லாத நல்லெண்ணெய் 1 படி விட்டு

| | |
|---|---|
| மஞ்சள் | குளவிந்தமஞ்சள் |
| நன்னாரிவேர் | சங்கம்வேர் |
| விலாமிச்சம்வேர் | பூண்டு |
| வெட்டிவேர் | தேவதாரு |
| குங்கிலியம் | வெள்ளைகோஷ்டம் |
| கழற்சிப்பருப்பு | |

இவைகள் வகைக்கு 1 பலம் வீதமெடுத்து தண்ணீர் விட்டரைத்து, விழுதாக்கி, கஷாயம் சேர்ந்த எண்ணெயுடனே கலந்து, எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனைப் பலவித சந்நிகளுக்கும் உபயோகிக்கலாம்.

## அதிமதுரக் குளிகை

அதிமதுரந் திரிகடுகு தேவதா
ரங்கடுக்கா யரத்தை தன்னோ
டிதமுதவு வசம்புகருஞ் சீரகமெல்
லாஞ்சமன் கொண் டிலங்கு கின்ற

விதமான பிரமியச்சா றூற்றியரைத்
துண்டைசெய்து விரும்பு தேனி
லதனையுறக் குழைத்திருந்திற் சந்நிவா
தங்களெல்லா மஞ்சி யெடும் 110

(இ-ள்.)

அதிமதுரம் சுக்கு
மிளகு திப்பிலி
தேவதாரு கடுக்காய்
சிற்றரத்தை வசம்பு
கருஞ்சீரகம்

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு பிரமியிலைச்சாறூற்றி நன்றாக அரைத்துச சுண்டைக்காயளவு உள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு தேனில் இழைத்து உட்கொள்ள சந்நிகள் தீரும்.

## ஆமணக்கிலை வேது

ஆஞ்சியகன் றிடுஞ்சிற்றா மணக்கிலையூ
மத்தையிலை யாடா தோடை
விஞ்சுமிலை நொச்சியிலை புங்கினிலை
களைத்துவைத்து விளம்பு தேங்காய்த்
தஞ்சமுறு திருகலுஞ்சேர்த தகைவருத்தொற்
றிடுபிரண்டை தனைத் தறிந்து
வஞ்சமிலா முன்மருந்தி னுடன்கலந்து
வேதுவுந்தான் மருவக் காட்டே. 111

(இ-ள்.)

சிற்றாமணக்கிலை ஊமத்தையிலை
ஆடாதோடையிலை நொச்சியிலை
புங்கனிலை

இவைகளைச் சிறிதாக அரிந்து, அதனுடன் தேங்காய்த் திருகல் சேர்த்து, அடுப்பின்மேல் ஒரு வாயகன்ற சட்டியை வைத்து அதிலிட்டு வதக்கவும். இதனை ஒரு துணியில் மூட்டையாகக் கட்டி ஒத்தடம் கொடுக்கவும். இதனுடன் பிரண்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டும் ஒத்தடமிடலாம்.

## சந்நி முதலானதற்கு

மனோசிலைகந் கதமிரத மரிதார
மிவையொவ்வோர் வராகன் பாரம்
இனமான சாதிலிங்க மிருநான் ௳
வராகனெடை யிந்த நாபி
கனமாய்மூ வராகனெடை யிவையெல்லாங்
கொடிவேலிக் கடாயம் விட்டோர்
தினமரைத்து நிமலியின்றன் பழச்சாறு
தனிலுமரை தினந்தா னொன்றே. 112

அரைத்திஞ்சிச் சாற்றாதல் பஞ்சமூ
லக்காடா யத் திதை
லுரைத்தினிது பணவெடையொன் றுதவியிடிற்
பிரமியநோ யுயர் காமாலை
தரித்தசிறு புழுமலட்டுப் புழுபாண்டு
ரோகமொடு தனி நடுக்கல்
அரித்திடுபா ரிசச்சூலை யரோசகமூ
லக்கிராணியாமச் சூலை 113

சூலையீனின் மிகுவாதச் சூலைகவு
சிகவாயுச் சுவாஸந் தன்னோ
டோலமிடு பயித்தியநீ டுயர்சந்நி
வாதவகை யுரைத்த தெல்லாம்
ஞாலமதிற் றங்காது பறந்துவிடும்
பின்சுகமாம் நலனு முண்டாம்
பாலருமுண் டாமீது கைகண்ட
தாமீது பரிந்து செய்யே. 114

(இ-ள்.)

சுத்திசெய்த மனோசிலை
,, கெந்தகம்
,, பாதரஸம்
,, அரிதாரம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த | சாதிலிங்கம் | 8 வராகனெடை |
| ,, | நாபி | 3 வராகனெடை |

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் ஒக்கக்கூட்டி நன்றாக அரைத்துப் பின் மற்ற மருந்துகளைச் சேர்த்துக் கொடிவேலிக் கஷாயம் விட்டு ஒருநாள் முழுவதும் நன்றாக அரைக்கவும். பின்னர் இஞ்சிச்சாற்றில் ஒரு நாளும், பஞ்சமூல கஷாயத்தில் (வில்வ வேர், வாகை வேர், பெருங்குமிழ், சிறுகுமிழ், முன்னைவேர்) ஒரு நாளும் அரைத்து 3 குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இதனை உபயோகிக்க பிரமியம், காமாலை குடலிலுள்ள கிருமிகள், மலட்டுப்புழு, பாண்டுரோகம், நடுக்கல், பக்கசூலை, அரோசகம், மூலக்கிராணி, ஆமச்சூலை, வாதச்சூலை, கவுசை சுவாஸம், பித்தரோகங்கள், சந்நிபாதம் முதலான பலவித ரோகங்களும் தீரும்.

## சந்நிபாத சுரத்திற்கு சூரணம்

சுத்தித்த பாதரஸங் கந்தகம்வத்ஸ
நாபியொடு துகளில் செம்பி
னுய்த்தவரப் பொடியிரும்பி னற்பொடியுஞ்
சமன்கூட்டி யோது தற்கு
மெய்த்திடங்கி சாபதியி னிலைச்சாற்றின்
மூன்றுநாள் மிக வரைத்து
வைத்ததொருகா சிக்குப்பி தனிலேலு
சேலைமண்ணும் வகையாய்ச் செய்யே. 115

செய்துடோளாந் தரமாயிரு பதுசாம
ம்வரைக்குந் தீ யெரித்திட்
டெய்துமஃதாறியபி னெடுத்துச்சூ
ரணமாக விசையச் செய்து
கைதனிலோ ருளுந்தள விஞ்சிச்சாற்றி
லருந்த நல்கு காணுமுன்பு
வையகத்தி லிருக்கவஞ்சி யோடிவிடுஞ்
சுரஞ்சந்நி வாதந் தானே. 116

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்
,, வத்ஸநாபி
,, செம்புத்தூள்
,, அரப்பொடி
,, இரும்புப்பொடி

இவைகளைச் சமனெடுத்து சிறு செருப்படியிலைச்சாற்றினால் 3 நாட்கள் அரைத்து, ஒரு காசிக்குப்பியில் இட்டு, 7 சீலைமண் செய்து பின்னர் டோலாயந்திரமாகக் கட்டி 20 ஜாமங்கள் எரிக்கவும், தானாகவே

ஆறியபின் எடுத்துச் சூரணமாக்கி வைத்துக்கொள்ளவும். இம்மருந்தில் ஒரு உளுந்தளவெடுத்து இஞ்சிச்சாற்றில் கொடுக்க ஜ்வரங்கள், சந்நிபாதம் முதலானவை தீரும்.

## முஸ்தாதி கடாயம்

வாதசுரத் தின்பேரி லொன்பதுநாட்
சந்நிவரும் வந்தா னாக்குக்கு
கோதுறவே குளறிப்போ மொழிநடுங்கும்
பற்கிட்டுங் குறிக்கும் வாந்தி
யாதலுளு மின்னதுநூற் றிருபதுநா
ழியிற்றிரும்பு மது திரும்பா
தேதமுற லிருந்திடிற் சற்றரிதாகு
மிதற்குமருந் திசைவாய் நல்கே. 117

நலமுறு முத்தக்காசு கண்டங்கத்
தரிகடுக்காய் நவில் தான்றிக்காய்
நிலவேம்பு வசம்புதூ தளைதேவ
தாரமொடு நிகழிந்துப்புப்
பலனுறுதிப் பிலியாடா தொடைசுக்கின்
னவையெல்லாம் பதக்கு நீர்வார்த்
திலகிடவே நாலிலொன்றா யெரித்துநாண்
மூன்றுதவி லேகுஞ் சந்நி. 118

(இ-ள்.)

வாத ஜ்வரத்தின் மேல் 9 நாட்கள் சந்நி வரும். அதன் குறிகளாவன:

நாக்குக் குளறும், பேச்சு நடுங்கும், பற்கள் கிட்டும், வாந்தியெடுக்கும், இச்சந்நிகண்டு 120 நாழி (2 நாட்கள்) பிரக்ஞை

உண்டாகவேண்டும். வரவில்லையெனில் பிழைப்பது அரிது என்று தெரிந்துகொள்ளவும்.

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | கண்டங்கத்தரிசமூலம் |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| நிலவேம்பு | வசம்பு |
| தூதுவளைவேர் | தேவதாரம் |
| இந்துப்பு | திப்பிலி |
| ஆடாதோடைவேர் | சுக்கு |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து சுத்தஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நான்கிலொன்றாய்க்க காய்ச்சி குருக்கி வற்றவைத்து இருத்து தினம் 4 வேளைகள் வீதம் 3 நாட்கள் கொடுத்துவர சந்நிகள் தீரும்.

## சந்நி முதலியவைக்கு
## விஷ்ணு பராக்ரமம்

கந்தகஞ்சத் திச்சார மெவச்சார
மிரதம்வெண் காரம் நாபி
யிந்துப்பி னுடன் சங்கச் சாரமிவை
சமன்கூட்டி யியலூமத்தை
தந்திடிலைச் சாற்றறைத்துக் குகையிட்டுக்
குக்குடமாந் தகு புடம்வைத்
தந்தமருந் தாறியபின் னெடுத்துநீ
கல்வத்தி லமைய வையே 119

வைத்துமீன் பித்துடனை வன்பன்றிப்
பித்துமூற வைத்தூள் செய்
தத்தையுளுந் தளவிஞ்சிச் சாற்றாதல்
குளிர் புனலி னாதலிட்டா

லுய்த்தசந்தி வாதசுரஞ் சீதசுரந்
தனுர்வாத மொளித்துப் போகு
மித்தைநீ தெளிவாக வுணர்ந்துபுரிந்
திடுகீர்த்தி யிசையுந் தானே. 120

(இ-ள்.)

சுத்திசெய்த கெந்தகம்
,, பாதரஸம்
,, நாபி
பொரித்த வெங்காரம்
சத்திச் சாரம்
சங்கச் சாரம்
எவச்சாரம்
இந்துப்பு

இவைகளைச் சமன் எடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் உறவாக்கி ஊமத்தையிலைச்சாறுவிட்டு நன்றாக அரைத்து வில்லை தட்டி குகையிலிட்டுச் சீலைமண் செய்து காயவைத்துக் குக்குட புடம் இடவும் (ஒரு முழ நீள அகலமுள்ளது) பின் இதனைக் கல்வத்தில் இட்டு மீன் பித்தம், பன்றிப் பித்தம், இவ்விரண்டையும் தனித்தனியே விட்டு அரைத்துக் கொள்ளவும். இம்மருந்தில் ஒரு உளுந்துப் பிரமாணம் இஞ்சிச் சாற்றிலோ சுத்த ஜலத்திலோ உட்கொள்ள, சந்நி வாத ஜ்வரம், சீதஜ்வரம், தனுர்வாதம் முதலானவை நீங்கும்.

## சந்நிவாதத்திற்கு தைலம்

மலைவேம்பி னிலையோடுவேப் பிலைகையாந்
தகரையூ மத்தைதன்
னிலையிவற்றின் சாறுவகைக் கொவ்வோர்சேர்
நல்லெண்ணே யிசையவோர்சே

ரிலகிவற்றை வேடுகட்டி யிரவிமுன்
மிருநாள்வைத் தெடுத்தெரித்து
நலனுமேற் றடவியுறப் பிடித்திடெண்பான்
வாதமுந்தா னடுங்கிப் போகும். 121

(இ-ள்.)

| | |
|---|---|
| மலைவேம்பின் இலை | வேப்பிலை |
| கையாந்தகரையிலை | ஊமத்தையிலை |

| | |
|---|---|
| இவைகளின் சாறு வகைக்கு | 1 சேர் |
| நல்லெண்ணெய் | 1 சேர் |

இவற்றை யொரு பாத்திரத்தில் இட்டு ஒரு வெண்மைத் துணியினால் வேடு கட்டி வெயிலில் 2 நாட்கள் சூரியபுடமாக வைத்துப் பின் அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் எரித்து இறக்கவும். இத் தைலத்தை உடம்பின்மேல் தேய்த்து பிடித்து வர 80 வகை வாதரோகங்களும் ,தீரும்.

## சந்நி முதலானதற்கு
## சுரத விஷமுஷ்டித் தைலம்

மாவிலிங்கை முடக்கொத்தா னூமத்தை
யெருக்கினிலை வாதம் போக்கி
பாவட்டை பொடுதலைசா ணாக்கிகையாந்
தகரையொடு பகருங்குன்றி
மேவிடுவே லிப்பருத்தி புங்கின்பால்
புளியரணை மேனிதும்பை
காவுறுசா ரணைகொன்றை கத்தரிநா
யகமெரியால் கரியநொச்சி 122

நொச்சிமணித் தக்காளி பேய்மருட்டி
யோரிலையி னுவலுங் கஞ்சம்
அச்சிறிய செருப்படியின் னையெல்லாம்
வகையொன்றுக் கரைப்ப டிச்சா
றிச்சையுறக் கொண்டுவகைக் கரைப்படியா
யைந்துவகை யெண்ணெய்யுங் கொண்
டெச்சமிலாத் திரிகடுகு திரிபலைவெள்
ளுள்ளியுட னிந்துப் பின்னும் 123

இன்னலூராச் சீரகஞ்சித் திரமூல
மிதனுடனே யிசை யரத்தை
மன்னுபெருங் காயமொடு செவ்வியங்காண்
சீரகநீள் வசம்பு ரோணி
பின்னறுஞ்சீ ரகநொச்சி வேர்வேளை
வேரினொடு பெருமருந்து
கொன்னுகோ டகசாலை மஞ்சிட்டி
தழுதாழை கொந் தளங்காய் 124

காய்தருமூ மத்தம்வேர் மாவிலங்கை
வேர்புங்கின் கனந் தரும்வே
ராய்விழுதி வேர்புங்கங் கொட்டைவரட்
சுண்டியுட னழிஞ்சிலின்வேர்
தூயவமுக் கிராநீர்மே நெருப்புமுத்தக்
காசுநத்தைச் சூரியின் வே
ரேயுமுதி யார்கிழங்கு நருவளிசிற்
றாமுட்டியிசை யுஞ்சீந்தில் 125

இசைவட்டக் குறிஞ்சிவட்டத் திருப்பிபே
ராமுட்டி யின்பஞ் செய்யும்
நசைதருசா றணையப்பைக் கிழங்குகொட்டைப்
பாசியுட னவில லூற்ற

பசுமைதரு கோழவரை வெள்ளறுகு
சிவன்வேம்பு பகர் வெள்ளாட்டின்
வசையுறுமூத் திரத்தூற வைத்திடெட்டிப்
பட்டையிந்த வகை களெல்லாம் 126

ஆகும்வகைக் கோரிரண்டு வராகனெடை
தூணிநீர தைக்காற் பங்காய்
வேகுமுறக் காய்ச்சியந்த வெந்நீர்விட்
டரைத்தந்த விழுதுங் கூட்டிப்
பாகமுறு மெட்டியின்றன் பழம்பத்தும்
பொடித்திட்டுப் பகலோன் முன்ன
ரோகையுடன் மூன்றுநாள் வைத்தெடுத்து
நாலானா ளுகந்து காய்ச்சே. 127

காய்ந்திடவே யெரியிட்டுப் பதத்தில்வடி
துட்டளவு கனிவாய் நல்கு
வாய்ந்தகண்ட மாலைசெம்புண் பொரும்பிலொடு
சூலையெரிவு மண்டை நோவு
சார்ந்திடுபா ரிசவாயுச் சூலையொளி
சூலைமந்தஞ் சந்நி தோடம்
பாய்ந்திடுசூ சிகாவாயு முகவாயு
காமாலை பாண்டு ரோகம். 128

பாண்டுவுடன் சீழ்வடித லக்கினிமாந்
தங்கொடிய பட்சி சாதந்
நீண்பரிய பிளவைபனை வாதம்பல
வேர்வினொடு தேரை நோவு
காண்டகுமா னைச்சிலந்தி பெருவாதஞ்
சோகைமண்டைக் கரப்பானோடு
தாண்டிடரை யாப்பண்டா வாதம்விட
பாகமிவை தாமு மன்றி 129

தாமதஞ்செய் காக்கைவலி கழுதைவலி
யறணைகடி தக விலாத
தோமுதவு குமாரகண்டன் முதலான
பிணியனைத்துந் தொலையு மெண்ணெ
யேமமுறுங் கடுகெடுத்து மேற்றடவு
பத்தியத்திற் கிலகுமுப்பு
வாமமுறு மரைக்கீரை கூட்டிக்கொ
ளிம்மருந்து மருந்தே யாகும். 130

(இ-ள்.)

| | |
|---|---|
| மாவிலங்கை | முடக்கற்றான் |
| ஊமத்தை | எருக்கிலை |
| வாதம்போக்கி | பாவட்டை |
| பொடுதலை | சாணாக்கியிலை |
| கையாந்தகரை | குன்றி |
| வேலிப்பருத்தி | புங்கம்பால் |
| புளியரணை | குப்பைமேனி |
| சாரணை | தும்பை |
| கத்தரிநாயகம் | கொன்றை |
| கருநொச்சி | காட்டாமணக்கு |
| பேய்மிரட்டி | மணத்தக்காளி |
| சிறுசெருப்படி | ஓரிலைத்தாமரை |

இவைகளின் சாறு வகைக்கு ½ படி

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | ½ படி |
| ஆமணக்கெண்ணெய் | ,, |
| வேப்பெண்ணெய் | ,, |
| புங்கெண்ணெய் | ,, |
| இலுப்பெண்ணெய் | ,, |

இவைகளை ஒன்று கலந்து அதனுடன்

| | |
|---|---|
| திரிபலை | திரிகடுகு |
| பூண்டு | இந்துப்பு |
| சீரகம் | சித்திரமூலம் |
| சித்தரத்தை | பெருங்காயம் |
| செவ்வியம் | பெருஞ்சீரகம் |
| வசம்பு | கடுகுரோகிணி |
| கருஞ்சீரகம் | நொச்சிவேர் |
| வேளைவேர் | பெருமருந்து |
| கோடகசாலை | மஞ்சிட்டி |
| தழுதாழை | கொத்தளங்காய் |
| ஊமத்தைவேர் | மாவிலிங்கை வேர் |
| புங்கம்வேர் | விழுதிவேர் |
| புங்கங்கொட்டை | வறட்சுண்டிவேர் |
| அழிஞ்சில்வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| நீர்மேல்நெருப்பு | கோரைக்கிழங்கு |
| நத்தைச்சூரிவேர் | முதியார்கூந்தல் |
| நறுவளிவேர் | சிற்றாமுட்டி |
| சீந்தில்கொடி | வட்டக்குறிஞ்சிவேர் |
| வட்டத்திருப்பிவேர் | பேராமுட்டி |
| சாறணைக்கிழங்கு | அப்பைக்கிழங்கு |
| கொட்டைப்பாசி | கோழியாவாரை |
| வெள்ளருகு | சிவனார்வேம்பு |

இச்சரக்குகள் வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணித்து ஒரு பாத்திரத்திலிட்டு வெள்ளாட்டு மூத்திரத்தில் ஊறவைத்து எட்டிப்பட்டை 2 வராகனெடையும் கூடப்போட்டுச் சுத்த ஜலம் 4 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக வற்றவைக்கவும். இக்கஷாயத்தைக்கொண்டு முன்சொன்ன சரக்குகளை நன்றாக அரைத்து விழுதாக்கி,

எட்டிப்பழம் 10ம் அரைத்துப்போட்டு சாறு சேர்ந்த எண்ணெயுடனே குழப்பிச் சூரியபுடமாக 3 நாட்கள் வைக்கவும். 4வது நாளன்று இதனையெடுத்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

இந்த எண்ணெயில் துட்டெடை எடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதனால் தீரும் வியாதிகளாவன:-

கண்டமாலை, செம்புண், சூலை எரிவு, மண்டை நோய், பாரிசவாயு, சூலை, ஒளிசூலை, மாந்தம், சந்நிதோஷங்கள், சூசிகவாயு, முகவாயு, காமாலை, பாண்டுரோகம், சீழ்வடிதல், அக்கினிமாந்தம், பட்சிசுரம், பிளவை, பனைவாதம், வியர்வை, தேரைநோய், யானைச்சிலந்தி, பெருவாதம், சோகை, மண்டைக்கரப்பான், அரையாப்பு, அண்டவாதம், விடபாகம், காக்கைவலி, கழுதைவலி, அரணைகடி, குமாரகண்டவலி, முதலான பற்பல வியாதிகள் குணமாகும். இந்த எண்ணெயின் கடுகை எடுத்து நோயாளியின் உடம்பில் தடவவும்.

பத்தியம்:-

உப்பு, அரைக்கீரை இவைகளைக் கூட்டிக் கொள்ளலாம்.

## சந்நிவாத ஜ்வரத்திற்கு
## ஸைந்தவாதி அஞ்சனம்

இந்துப்பு துரிசுபெருங் காயமிள
கிவையின்றி யியலுஞ் சுக்குக்
கந்தகநீண் முயிற்றுமுட்டை யிவையெல்லா
முலைப்பாலிற் கலந் தரைத்திட்

டந்தவுளுந் தளவுண்டை செய்துவிழி
தனிலிட்டா லக் கணத்திலே
வந்திருந்த வுயர்சந்நி வாதம்போந்
துயரமும்போம் வாய்ப்பச் செய்யே. 131

(இ-ள்.)

பொரித்த இந்துப்பு
... துருசு
... பெருங்காயம்
சுக்கு
மிளகு
முசுருமுட்டை

இவைகளைக் கல்வத்திலிட்டு, முலைப்பால்விட்டு நன்றாக அரைத்து, உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும். இதனை நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்திக் கொண்டு வேண்டும்பொழுது முலைப்பாலில் இழைத்து கண்களிலிட சந்நி பாதம் நீங்கும். பலவித துன்பங்களுந் தீரும்.

## சந்நிபாத ஜ்வரத்திற்கு இந்திராணி தைலம்

நெல்லிக்காய்க் கெந்தகமிந் துப்பினுட
னரிதாரம் நிலத்தின் மேலாய்ச்
சொல்வெள்ளைப் பாடாணஞ் சாதிலிங்கம்
மனோசிலைமேற் றுடங்கு நாவி
மெல்லவிவை சமன்கொண்டு பொடிசெய்து
மென்றுகிலின் மேற் பரப்பி
வல்லதனைத் திரியாக்கி யோர்கலசத்
தெண்ணெய்விட்டு வைத்துப் பின்னர் 132

பின்னமிலா வத்திரியைத் தழற்கொளுத்தி
யெண்ணெயின்மேற் பிடித்து நிற்கில்
முன்னுறுந்தா ளெரிந்துவிழு மவ்வெண்ணெய்
தனையெடுத்து முழுமெய் பூசி
நன்னயமாய்ப் பிடித்திட்டு வெந்நீர்வார்த்
திடச்சொல்லந் நாளிற் றானே
சந்நியென்ற வாதம்போஞ் சந்நியன்றிப்
பிடித்திருந்த சனியும் போமால் 133

(இ-ள்.)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, தாளகம்
,, வெள்ளைப்பாஷாணம்
,, லிங்கம்
,, நாபி
,, மனோசிலை
இந்துப்பு

இவைகளைச் சூரணம் செய்து ஒரு மெல்லிய பட்டுத் துணியில் ஓரே சீராகப் பரப்பி சுருட்டித் திரியாக்கி ஒரு பாத்திரத்தில் சுத்தமான நல்லெண்ணெய் விட்டு அதில் முன் தயார்செய்தத் திரியை ஊறவைத்துப் பின்னர் அந்தத்திரியைக் கொளுத்தி அதிலிருந்து சொட்டுப் சுடர் தைலத்தைச் சேகரித்து வைத்துக் கொள்ளவும். இந்த எண்ணெயை ரோகியின் உடல் முழுதும் நன்றாகப்பூசிப் பிடித்து விட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யச் சொல்ல சந்நிவாதம் தீரும்.

## சந்நிபாத பைரவம்

மிளகிரதஞ் சாதிலிங்கம் பச்சைநாபி
வெங்காரஞ் சுக்குவெள்ளைப் பாடாணம்பின்
பளிதமுறு கெவுரிநேர் வாளந்துத்தம்
பரவியதிப் பிலியிருவி கடுக்காய்தான்றி
யளவுமனோ சிலையுள்ளி சீராவும்பொன்
னரிதாரமஞ் சமம்நிம்பச் சாற்றரைத்திட்
டொளிவுடனே மிளகளவு கொள்ளத்தானே
யுண்டான சுரங்கள்சந்நி யோடிப்போமே. 134

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த | மனோசிலை |
| ,, | பாதரஸம் |
| ,, | தாளகம் |
| ,, | லிங்கம் |
| ,, | நாபி |
| ,, | நேர்வாளம் |
| ,, | வெள்ளைப்பாஷாணம் |
| ,, | கௌரிபாஷாணம் |
| ,, | துத்தம் |
| ,, | இருவி |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுக்காய்த்தோல் |
| தான்றிக்காய்த்தோல் | |

இவைகளைச் சமனெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதனை உட்கொள்ள சந்நி, சுரம் முதலானவை தீரும்.

## 18 சந்நிக்கும் தைலம்

குருவிச்சி யூமத்தை முடக்கொத்தா
ணரியதிராய் கொடிய வேலி
பெருமருந்து முருங்கையுத்தா மணியெருக்குக்
கொழிஞ்சி பிராய் பே் மருட்டி
பருமலங்கை சாரணைவேம் பொடுதில்லை
மூக்குரட்டை பகரழிஞ்சி
யுரியவட்டத் திருப்பிபறபா டகம்விழுதி
வேளையிவற் றுரிய வேர்கள் 135

கள்ளிபுங்கு காய்வேளை வன்னத்தி
யாதண்டை கனத்த வேர்கள்
உள்ளிடுசீந் திற்றண்டு சிறுகுறட்டை
கிழங்கினுட னுயர்ச்சி யாகக்
கொள்ளிடுசிற் றாவரையிஞ் சிலைவைர
வன்கிழங்கு குலவு மப்பைத்
தள்ளவொணாக் கிழங்கினொடு தூதளைவே
ரவரியிலை தகு பேய்த்தும்பை 16

பையுருகாட் டறணையிலை யூமத்தை
யிண்டினிலை பரும்பேய்ப் பீர்க்கின்
வெய்யவிலை கழற்கொடியி னிலைமணத்தக்
காளியிலை வியன்று ழாயின்
மெய்யிலையுத் தாமணி யினிலை யிந்த
விலைமுன்வே ரிசை கிழங்கு
செய்யுமிவை யெலாஞ்சம கைக்கொண்டவற்றை
யொன்றாகச் சேர்த்தி டிப்பாய் 137

இடித்ததன் சாறாக நாழிகொண்
டொருநாழி யெண்ணெய் கூட்டி
மடுத்திடுசேங் கொட்டையொன் றிருபதுள்ளி
கழஞ்சிரதம் வசும் பிரண்டு
கடுத்திடுங்கந் தகந்துரிசு தேனெட்டி
விதையொவ்வோர் கழஞ்சு னொடு
தொடுத்திடுநற் பூதகரப் பான்பட்டை
முக்கழஞ்சு தொடர்ந்து கூட்டே. 138

கூட்டிப்பின் கரும்புள்ளிக் கோழியிற்
குடன்மாட்டுக் கொம்பு மாட்டின்
வாட்டுகுளம் பெழிற்குதிரைக் குளம்பாட்டுக்
குளம்பொவ்வோர் வராகன் பாரம்
போட்டிடுதூ ளாகச்செய் ததந்பின்பு
குதிரையின்றன் புன் குறும்பி
நாட்டியமாட் டுக்குறும்பி யரைக்கழஞ்சு
கொண்டதனி னண்ணச் சேரே. 139

சேர்பன்றி முதலைநரி பூனாகளின்
கட்டமிவை தீயிற் சுட்டே
யோர்புளியங் கொட்டையள வுடன்கூட்டி
யொருமூஞ்சூ றுரித்துப் போட்டுக்
காரமுறு பெருங்காய மொருமூன்று
செயையுங் கலந் தெரித்து
வாசமுறு பதத்திறுத்தோர் கலசத்தில்
வேடுகட்டி வைத்துக் கொள்ளே. 140

கொண்டதனி லகைக் கழஞ்சே தழல்வெதுப்பி
யுட்கொண்டு குலவு காது
மண்டையுச்சி யுள்ளங்கா லுடம்பினும்பூ
சிடில்விக்கல் மருவு காய்ச்சல்

கண்டவிட பாகமொடு நடுக்கல் கட்டி
பேய்பில்லி கன விசிப்பு
மிண்டு செய்யுஞ் சந்நிவகை
யாவையும்போ மூன்றுநாள் மேவுமுன்னே 141

(இ-ள்.)

| | |
|---|---|
| குருவிச்சிப்பூண்டு | ஊமத்தை |
| முடக்கொத்தான் | திராய் |
| கொடிவேலி | பெருமருந்து |
| முருங்கை | உத்தாமணி |
| எருக்கு | கொழிஞ்சி |
| பிராய் | பேய்மிரட்டி |
| மாவுலிங்கை | சாரணை |
| வேம்பு | தில்லை |
| மூக்கரட்டை | அழிஞ்சில் |
| வட்டத்திருப்பி | பற்பாடகம் |
| விழுதி | வேளை |

இவைகளின் வேர் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| கள்ளி | புங்கு |
| காய்வேளை | நந்தியாவட்டை |
| ஆதண்டை | சீந்திற்கொடி |
| சிறுகுறட்டைக்கிழங்கு | சிற்றவரைக்கிழங்கு |
| அஞ்சிலைநொச்சி | வைரவன்கிழங்கு |
| அப்பைக்கோவைக்கிழங்கு | தூதுவேளை |

இவைகள் வேர் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| அவுரியிலை | பேய்த்தும்பையிலை |
| சாட்டரணையிலை | ஊமத்தையிலை |
| இண்டினிலை | பேய்ப்பீர்க்கனிலை |
| கழற்சிக்கொடிஇலை | மணத்தக்காளி இலை |
| துளசியிலை | உத்தாமணியிலை |

இவைகளின் சாறு வகைக்கு 1 படி

சுத்தமான நல்லெண்ணெய் 1படி

முன்கூறிய வேர்வகைகளை நன்றாக இடித்து மேற்கூறிய ஏதேனும் ஒருசாறுவிட்டு நன்றாக அரைத்து மற்ற சாறுகளுடன் கூட்டிய நல்லெண்ணெயுடன் கலந்து குழப்பிக் கொள்ளவும். பிறகு.

| | |
|---|---|
| சேங்கொட்டை 1 | |
| பூண்டுப்பல்லு 20 | |
| சுத்திசெய்த பாதரஸம் | 1 கழஞ்சு |
| ,, கெந்தகம் | 1 கழஞ்சு |
| ,, துரிசு | 1 கழஞ்சு |
| வசம்பு | 2 கழஞ்சு |
| எட்டிவிதை | 1 கழஞ்சு |
| பூதகரப்பான்பட்டை | 3 கழஞ்சு |
| கரும்புள்ளி கோழியிறகு | 1 வராகன் |
| மாட்டுக்கொம்பு | ,, |
| மாட்டுக்குளம்பு | ,, |
| குதிரைக்குளம்பு | ,, |
| ஆட்டுக்குளம்பு | ,, |
| குதிரையின் காதுக்குறும்பி | ஆட்டுக்குறும்பி |

இவை வகைக்கு கழஞ்சு

| | |
|---|---|
| பன்றிக்கட்டம் | முதலைக்கட்டம் |
| நரிக்கட்டம் | பூனைக்கட்டம் |

இவைகளை தீயிற்சுட்டெடுத்த கரி ஒவ்வொரு புளியங்கொட்டையளவு

இவைகளை நன்றாகப் பொடியாக்கி எண்ணெயுடன் குழப்பவும். பின்னர் கொதிக்கும் எண்ணெயில் ஒரு மூஞ்சூரை உரித்துப்போட்டு, பெருங்காயம் 3 காசினெடையும் கூட்டிப் பதத்தில் இறக்கவும். நன்றாக வடிக்கட்டி ஒரு கலசத்தில் பத்திரப்படுத்தவும்.

இந்த எண்ணெயில் ½ கழஞ்சு எடுத்து அனலில் சூடுகாட்டி உள்ளுக்குக் கொடுத்து, காது, மூக்கு, மண்டையுச்சி, உடம்பு முதலான இடங்களில் பூசவும்.

விக்கல், காய்ச்சல், விஷபாகம், நடுக்கல், கட்டி, பேய், பில்லி, இசிவு, சந்நிகள் முதலானவைகள் 3 நாட்களுள் தீரும்.

## சந்நிக்கு அஞ்சனம்

திரிகடுகு மரமஞ்சள் மஞ்சள் வெண்காக்
கணத்தின்வேர் சிறந்த கோட்டம்
பெருவசம்பு சமன்கூட்டி யாவின்மூத்
திரத்தரைத்துப் பருத் துருட்டி
யுரிமையுடன் வெள்ளாட்டு மூத்திரத்தி
லுரைத்துவிழி யுறவே யிட்டாற்
பிரிவரிய சந்நியெல்லாம் பெயர்ந்திடுந்தாந்
திரிகசந்நி பெயர்ந்தி டாது. 142

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | மரமஞ்சள் |
| மஞ்சள் | வெங்காரம் |
| வெள்ளைக்காக்கணம்வேர் | கோஷ்டம் |
| வசம்பு | |

இவைகளைச் சமனெடுத்துத் தூள் செய்து கல்வத்தில் இட்டு பசுவின் மூத்திரத்தால் நன்றாக அரைத்து நீண்ட மாத்திரையாகத் திரட்டி வைத்துக்கொண்டு, வேண்டும்பொழுது இதனை

வெள்ளாட்டு மூத்திரத்தில் இழைத்து ஒரு சிறு பயறளவு எடுத்து இருகண்களிலும் கலிக்கமிடவும். தாந்திரக சந்நியைத் தவிர்த்து மற்ற எல்லா சந்நிகளும் இதனால் தீரும்.

## சாதிலிங்கக் குளிகை

சாதிலிங்கம் வெங்காரம் நாபியொடு
கந்தகந்தான் றாம் பிரத்தின்
தீதிலாப் பற்பமொடு திரிகடுகொவ்
வோர்கழஞ்சு சேர்த்திவ் வெல்லாம்
ஓதெலுமிச் சம்பழச்சாற் றரைத்துண்டை
குன்றியென வுருட்டி யிஞ்சிக்
கோதறுசாற் றினிலுரைத்திட் டிடிற்சந்நி
பதின்மூன்றுங் குலைந்து போமால் 143

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த லிங்கம் | | 40 குன்றி நிறை |
| ,, | நாபி | ,, |
| ,, | கெந்தகம் | ,, |
| தாம்பிர பற்பம் | | ,, |
| பொரித்த வெங்காரம் | | ,, |
| சுக்கு | | ,, |
| மிளகு | | ,, |
| திப்பிலி | | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு ஒரு மாத்திரை எடுத்து இஞ்சிச் சாற்றுடனே கொடுக்க 13 வகை சந்நிகளும் தீரும்.

## சந்நி 13க்கும் குளிகை
## (சூசிகா முகரஸம்)

இரதங்கெந் தகந்துத்தம் நேர்வாளம்
வெண்கார மிலங்கு நாபி
யரி ாதர மிவையெல்லாஞ் சுத்திசெய்து
கடுநெல்லி யரை தான்றிக்காய்
பெருமதுர மிவையெல்லாஞ் சமன் கூட்டி
யொருசாமம் பிடங்கு நாறி
தருமிலைச்சாற் றரைத்துண்டை பயறளவு
செய்துநீ தகவாய் வையே. 144

வைத்திஞ்சிச் சாறுதனி லோருண்டை
பதின்மூன்று வகை சந்நிக்கும்
உய்த்திடுக வாளறியாச் சந்நிக்குச்
சந்தலையி லுதவோ ருண்டை
கத்தியினாறி சிறிதாக் கீறியிட்டுத்
தேய்த்திட்டாற் கழலுஞ் சந்நி
பத்தியம்வெண் டயிரினொடு சோறிடுக
பிரமையெல்லாம் பயப் பட்டோடும். 145

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்
,, துத்தம்
,, நாபி
,, தாளகம்
பொரித்த வெங்காரம்
கடுக்காய்த்தோல்

தாணிக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
அதிமதுரம்

இவைகளைச் சமனெடை எடுத்துக்கொள்ளவும். முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு உறவாகச் செய்து கருப்பானபிறகு மற்ற சரக்குகளைப் போட்டு பிடங்கு நாறி இலைச்சாற்றினால் 1 ஜாமம் கையோயாமல் அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதனை இஞ்சிச்சாற்றிலுட் கொள்ள 13 வித சந்நிகளும் போகும்.

பேச்சுமூச்சு இல்லாமல் சுற்றியிருப்பவர்களை அடையாளம் கண்டு கொள்ளமுடியாத நிலையில் இருக்கும் ரோகியின் உச்சந்தலையில் கீறி ஒரு மாத்திரையைத் தேய்க்கவும். சந்நிகளும், பிரமைகளும் தீரும்.

பத்தியம்:- தயிர் சாதம் உட்கொள்ளவும்.

## சுரத்திற்கு சந்நி 13க்கும் சாரணை எண்ணெய்

சாரணைவெள் ளறுகுசிவ னார்வேம்பு
வகையொடு தகுமூமத்தை
வாருறுசெவ் வூமத்தை செம்முள்ளி
சாணாக்கி மணத் தக்காளி
பேருறு சிற்றாமுட்டி யவுரிகண்டங்
கத்தரிநற் பேரா முட்டி
கூகுறுமுக் காய்வேளை நன்னாரி
வாகையொடு குப்பை மேனி 146

மேனிதரு வெற்றிலைகோ டகச்சாலை
வன்னெத்து வியன் கொழுஞ்சி
கானுறுமுட் கத்தாரி பிராயாடா
தொடையுலகங் காத்தான் மற்று
மீனமிலா தூதளையுத் தாமணியா
தொண்டையுட னிலங்கு கின்ற
ஆரனூறு பாலாடை யுடனாடுதின்
னாப்பாளை யிவையன்றிப் பின்னும். 152

பின்னமிலாச் சிற்றரத்தை முழிமஞ்சள்
குங்கிலியந் பேற ரத்தை
தன்னெலுமிச் சம்பழம்சீ ரகங்கருஞ்சீ
ரகங்கடுகு சிறந்த கோட்டம்
நன்னயக்கத் தூரிமஞ்சள் முழிமஞ்சள்
திரிகடுகு நவிலுஞ் சுக்கு
மன்னிடுதிப் பிலிமிளகின் னவையெல்லா
மரைப்பலந்தான் வகைக்குச் சேரே. 148

சேர்த்தரைத்தைந் தெண்ணெய்களும் வகைக்கரைச்சேர்
சேர்த்ததனிற் சேர்க கூட்டிக்
கூர்த்தெரியி லெரித்திரக்கிக் கழஞ்சளவு
மூன்றுநாள் கொடுத்தா லங்கே
போர்த்திருந்த சந்நிவகை பதின்மூன்றுஞ்
சுரமமுமுடன் போகும் பார்நீ
பார்த்தலத்து மனிதருய்யச் சரபோசி
மன்னரிது பகர்ந் திட்டாரே. 149

(இ-ள்.)

| | |
|---|---|
| சாறணை | வெள்ளறுகு |
| சிவனார்வேம்பு | வாகைவேர் |

| | |
|---|---|
| வெண்ஊமத்தை | செவ்வூமத்தை |
| செம்முள்ளி | சாணாக்கிப்பூண்டு |
| மணத்தக்காளி | சிற்றாமுட்டி |
| அவுரி | கண்டங்கத்திரி |
| பேராமுட்டி | முட்காய்வேளை |
| நன்னாரிவேர் | வெற்றிலை |
| குப்பைமேனி | கொழுஞ்சி |
| கோடகசாலை | பிராய் |
| வன்னெத்து | |
| முள்ளுக்கத்தரி | உலகங்காத்தான் |
| ஆடாதோடை | உத்தாமணி |
| தூதுவேளை | பாலாடை |
| ஆதண்டை | சிற்றரத்தை |
| ஆடுதின்னாப்பாளை | குங்கிலியம் |
| முழிமஞ்சள் | எலுமிச்சம்பழம் |
| பேறரத்தை | கருஞ்சீரகம் |
| சீரகம் | கோஷ்டம் |
| கடுகு | மஞ்சள் |
| கஸ்தூரிமஞ்சள் | மிளகு |
| சுக்கு | திப்பிலி |

இவைகள் வகைக்கு ½ பலம் வீதமெடுத்து, சூரணித்துக் கல்வத்தில் இட்டு தண்ணீர் விட்டு, நன்றாக அரைத்து,

| | |
|---|---|
| சுத்தமான | நல்லெண்ணெய் |
| ,, | ஆமணக்கெண்ணெய் |
| ,, | புங்கெண்ணெய் |
| ,, | இலுப்பெண்ணெய் |
| ,, | வேப்பெண்ணெய் |

இவைகள் வகைக்கு ½ சேர் வீதமெடுத்து ஒன்று கலந்து மேற்படி மருந்துடன் கலந்கு குழப்பி அடுப்பின் மேலேற்றி நன்றாக

எரித்துப் பக்குவமாக இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். இதில் 1 கழஞ்சளவு 3ட்கள் உட்கொள்ள 13 வித சந்நிகள், ஜ்வரங்கள் யாவும் தீரும்.

**சந்திரிக சந்நிக்கு**

சந்நிகமாஞ் சந்நியின்றன் குணமுடம்பு
நோஞ்சிறுகத் தடித்து வீங்கும்
முந்தரத்தை தேவதா ரஞ்சீந்தில்
வசம்பினொடு மொழியா நிற்கும்
அந்தவகை திரிபலையொவ் வோர்காசி
னெடைகூட்டி யதைக் கடாயம்
பந்தமுறச் செய்திறக்கித் திப்பிலித்தூள்
சேர்ந்தருந்திற் பறக்குந் தானே. 150

(இ-ள்.)

சந்திரிக சந்நியின் குறிகள்

உடம்பில் குத்துவலி உண்டாகும். தடிப்பும் வீக்கமும் காணும்.

இதற்கு மருந்து:-

| | |
|---|---|
| சிற்றரத்தை | தேவதாரு |
| சீந்தில்கொடி | வசம்பு |
| கடுக்காய்த்தோல் | தான்றிக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | |

இவைகளை வகைக்கு 1 காசெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்துச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு

எட்டிலொன்றாக வற்றவைத்து வடிகட்டி அதனுடன் திப்பிலிச் சூரணம் மூவிரல் கொண்டளவு சேர்த்துப் பருக சந்திரிக சந்நிகள் தீரும்.

## வேறு

### சீந்தில் கஷாயமும், புகையும்

இன்னுமொன்று சந்திகநோய்க கெழிற்சீந்தில்
சுக்கரத்தை யிந்துப் போடு
தின்னவுறு கடுக்காயா மணக்கம்வேர்
வகைக்கிருகா செடையே கொண்டு
முன்னுகடா யஞ்செய்து திப்பிலித்தூள்
போட்டருந்தி மொழியு நொச்சிப்
பன்நங்குக் குலுவேம்பி னிலைநிலவேம்
பிலைப்புகையும் பரிந்து காட்டே. 151

(இ-ள்.)

| | |
|---|---|
| சீந்தில்கொடி | சுக்கு |
| சிற்றரத்தை | இந்துப்பு |
| கடுக்காய் | ஆமணக்கம்வேர்1 |

இவைகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக குருக்கி வடிக்கட்டி ஒரு குத்தளவு திப்பிலிச் சூரணம் சேர்த்து உட்கொள்ள சந்திரிக சந்நி தீரும்.

குங்கிலியம், வேம்பினிலை, நிலவேம்பிலை இவைகளைக காயவைத்துத் தணலிலிட்டுப் புகை பிடிக்கவும்.

## தாந்திரிக சந்நி லக்ஷணங்கள்

தாந்திரி கழ்ச்சல் தாகந்
தப்பறை மிகவும் சந்நி
சேர்ந்துநா வுலர்ந்து போகுஞ்
சிறுமுள்ளுக் கிழித்தாற் போலாந்
தோய்த்திடு தினவு முண்டாஞ்
சுரமிக வதிக மாகுங்
காந்துறக் கண் பெருத்துக்
கலங்கிநீர் சொரியுந் தானே. 152

(இ-ள்.)

கழிச்சல், தாகம், தன்னையறியாமல் பிதற்றல், நாக்கு வறட்சி, முள்ளுக்கிளித்தாற்போல், நாக்கில் வெடிப்புகள், உடம்பில் அரிப்பு, அதிகமான ஜ்வரம், கண்களில் வெப்பமுண்டாகி வீங்கிக் கலங்கி நீர்வடியும். இவை தாந்திரீக சந்நியின் லக்ஷணங்களாகும்.

## கண்டக சந்நிக் குறிகள்

கண்டகம் பிரமை தாகங்
கதறிய வாந்தி விக்கல்
திரண்டிரல் மூர்ச்சை யோடு
தேகத்தி னோவு முண்டாம்
மிண்டிடு மிருகல் சோப
மெய்யன்றிப் பொய்யே பேகங்
கொண்டிடுந் தலைப் பிரட்டு
குரலும்வே றாகும் பாரே. 153

(இ-ள்.)

கண்டக சந்நியின் லக்ஷணங்களாவன:-

மயக்கம், தாகம், வாந்தி, விக்கல், மூர்ச்சை, தேகத்தில் வலி, இருமல், வீக்கம், பொய் பேசுதல் (உளறல்) தலைப் புரட்டுதல், குரல் மாற்றம் முதலான குறிகளாகும்.

## தாந்திரிக சந்நிக்கு மாதிரிவேர்க் கடாயம்

தீதறுபா திரிநொச்சி மாவிலங்கை
கொடிவேலி சிறுகாஞ் சோறி
ஓதிவற்றின் வேர்களொடு பேய்ப்புடல்சுக்
கெலாஞ்சமன்கொண் டுகந்து செய்யுங்
கோதில்கடா யத்தாலு மாவிலிங்கைப்
பட்டைபஞ்ச கோகுலங்குக்கில்
தாதுகாய்க் கடாயத்தி லோட்டடையிட்ட
ருந்தினும்போந் தாந்திரீகம் 154

(இ-ள்.)

| | |
|---|---|
| பாதிரிவேர் | நொச்சிவேர் |
| மாவிலிங்கம்வேர் | கொடிவேலிவேர் |
| சிறுகாஞ்சோறிவேர் | பேய்ப்புடல் |
| சுக்கு | |

இவைகளைச் சமனெடுத்து ஒன்றிரண்டாக இடித்து, 8 மடங்கு சுத்த ஜலம் வார்த்து, அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாக்கி அருந்த தாந்திரிக சந்நிகள் தீரும்.

| | |
|---|---|
| மாவிலங்கம்பட்டை | திப்பிலி |
| திப்பிலிமூலம் | செவ்வியம் |
| சித்திரமூலம் | சுக்கு |
| குக்கில் | உகாவேர் |

இவைகளை இடித்து முன்போல் கஷாயமிட்டு அதனுடன் சிறிது ஓட்டடையும் சேர்த்தரைத்துக் கலக்கிக் குடிக்கவும். இதனாலும் தாந்திரீக சந்நிகள் தீரும்.

### தாந்திரீக சந்நிக்கு

இரதமனோ சிலைமிளகு திப்பிலிகந்
கதமைந்து மியல் வகைக்கோர்
வராகனெடை மயிற்றுத்தம் வராகனெடை
யிரண்டாகும் மயில்மீன் மேதி
தருமூன்று பிச்சிகளா லரைத்துலர்த்தி
நெல்லெனப்பஞ் சகோலத் தாலே
வருகடாயத் தருந்திற்றாந் தரீகம்போங்
யருங்கஞ்சி வார் கொள்ளிட்டே. 155

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, மனோசிலை
,, கெந்தகம்
மிளகு
திப்பிலி

இவை வகைக்கு 1 வராகனெடை

சுத்திசெய்த மயில்துத்தம் 2 வாரகனெடை

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தலிட்டு உறவாக்கிப், பிறகு மயில்துத்தம், மீன்பித்தம் எருமைமாட்டுப்

பித்தம் இவைகளினால் தனித்தனியே ஒவ்வொரு ஜாமம் அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைக்கவும்.

பஞ்சலோக (திப்பிலி, கண்டத்திப்பிலி, செவ்வியம், சித்திரகம், சுக்கு) கஷாயத்தில் இம்மாத்திரையைக் கொடுத்துவர, தாந்திரிக சந்நிகள் நீங்கும்.

பத்தியம்;

கொள்ளுக்கஞ்சி சாப்பிடவும்.

## அந்தக சந்நிக்கு
## பிரதாப லங்கேச்வரம்

சாதிலிங்க நாவியப் பிரகபற்பஞ்
சமனெலுமிச் சம்பழச் சாற்
றேதமின்றி யரைத்துளுந்து போலுருட்டிப்
பிரதாபலங் கேசனாமிக்
கோதறுமாத் திரைபஞ்ச கோலத்தின்
கடாயத்திற் கொடுத்திட் டாலப்
போதுதா னேயகன்று போய்விடுத்
தகசந்நி போகச் சொல்லு. 156

(இ-ள்.)

சுத்திசெய்த சாதிலிங்கம்
,, நாபி
,, அப்பிரக பற்பம்

இம்மூன்றையும் கல்வத்தில் இட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து உளுந்தளவுள்ல மாத்திரைகளாகச் செய்து

வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு மாத்திரையெடுத்துப் பஞ்சலோக்க கஷாயத்தில் உட்கொண்டால் அந்தகசந்நி அப்போதே தீரும்.

## அந்தக சந்நிக்கு சந்தனாதி கஷாயம்

அதிதாப மிருமல் விக்கல் தலைநடுக்கல்
மயக்கமுட னழுகை யீது
முதிரவுறுமந் தகசந்நி யசாத்தியஞ்சந்
தனக்கட்டை மொழிந்த கோரை
யதின்கிழங்கு வெட்டிவேர்த் தண்டிலாமிச்
சைசுக்க கில் சீந்திற்றண்
டெதிருறுபற் பாடகத்தாற் கடாயமிட்டுக்
கொடுபிழைப்பா னெழுத் துண்டானால் 157

(இ-ள்)

அந்தக சந்நிக் குறிகுணங்கள்

உடம்பில் உஷ்ணம், இருமல், விக்கல், தலைநடுக்கம், மயக்கம், அழுகை, முதலிய குறிகள் காணும். பொதுவாக அந்தகசந்நியானது அசாத்தியமாகும்.

இதற்கு மருந்து:-

| | |
|---|---|
| சந்தனத்தூள் | கோரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | விளாமிச்சம்வேர் |
| சுக்கு | அகில்கட்டை |
| சீந்தில்கொடி | பற்பாடகம் |

இவைகளைச் சமனெடுத்து ஒன்றிரண்டாக இடித்து 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாகக்

குருக்கி வடிக்கட்டவும். இந்தக் கஷாயத்தை உட்கொள் நோயாளி பிழைப்பான். விதியிருந்தால்.

## அந்தக சந்நிக்கு சித்திரமூலக் கடாயம்

கொடிவேலி நெருஞ்சிநொச் செவ்வியந்திப்
பிலிமூலங் குறித்திடும் பேயப்
புடல்சுக்கு மிளகுதிப் பிலிசமமாய்க்
கடாயம்வைத்துப் பொருந்த நல்கிற்
கடுமையுறு மந்தகநீள் சந்நிவாதச்
சுரம்போங் கண்முப் போதிற்
றடையில்லை யிப்படிச்செய் யெப்படியுங்
குணமாகுஞ் சாற்றி னேனே. 158

(இ-ள்.)

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | நெரிஞ்சில் |
| நொச்சிவேர் | செவ்வியம் |
| திப்பிலிமூலம் | பேய்ப்புடல் |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | |

இவைகளைச் சமனெடுத்து ஒன்றிரண்டாக இடித்து 8 மடங்கு சுத்த தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஆக வற்றவைத்து இறக்கிப் பருகவும்.

இதனால் கடுமையான அந்தக சந்நிகளும், சந்நிபாத ஜ்வரங்களும், 3 பொழுதிற்குள் குணமாகும்.

## சித்தவிப்ரம சந்நிக்கு
## பிரசண்ட மார்த்தாண்ட ரஸம்

இரதமொன்று கந்தகநீ டிரண்டுமூன்றப்
பிரகமிவை யிஞ்சிச் சாற்
றொருமூன்று நாளரைத்துச் சட்டியில்வைத்
தனைமூடி யொரு மூன்றேநாள்
மிருதுவா யெரித்தாற்றிப் பணவெடைசுக்
குத்தூளின் விரும்பி நல்கிற்
றிரமாந சித்தவிப் பிரமசந்நி
தீருமிது தெளிந்து செய்யே. 159

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 1 | வராகனெடை |
| ,, கெந்தகம் | 2 | ,, |
| ,, அப்பிகரம் | 3 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுக் கறுப்பாகும் மட்டும் அரைத்துப் பின்னர் இஞ்சிச்சாறு விட்டு 3 நாட்கள் விடாமல் அரைக்கவும். இதனை ஒரே வில்லையாகத்தட்டி உலர்த்தி ஒரு சட்டியில் வைத்துக் கவசம் செய்து 3 நாட்கள் மிருதுவான அக்னியினால் (2 விரல் கனமுடைய ஒரே விறகு) எரிக்கவும். நன்றாக ஆறியபின் மருந்தை எடுத்துத்தூள் செய்து வைத்துக் கொண்டு, ஒரு குன்றி நிறை, 3 குன்றி சுக்குத் தூளுடன் சேர்த்து, உள்ளுக்குக் கொடுக்கவும். சித்தவிப்ரம சந்நிகள் தீரும்.

## சித்த விப்ரம் சந்நிக்கு
## திராக்ஷாதி கஷாயம்

பாடலுட னாடல்செயும் பெலனுண்டா
மோரைக்கண் பார்வை பார்க்கும்
நீடுமிவை சித்தவிப்பி ரமசந்நி
யின்குணமாம் நிகழி தற்குக்
கோடுறுமுந் திரிப்பழம்தே வதாரம்பற்
பாடகம்பொற் கொன்றை வேர்பின்
சேடுறுதண் கடுக்காய்நற் றிரிகடுகு
நிலவேம்பு தெரிந்து பின்னும். 160

பின்னமிலா துறுசரள தேவதா
ரங்களிவை பேசி ரண்டா
யுன்னுறுகா செடையிடித்தே யிரண்டுபடி
தண்ணீர்விட் டுழக்காய்க் காய்ச்சி
முன்னருந்தக் கொடுத்திட்டாற் சித்தவிப்பி
ரமச்சந்நி முற்றுந் தீரு
மின்னமுறைத் தஞ்சைவளர் சரபோசி
மன்னர்மகிழ்ந் திசைத்த தாமே. 161

(இ-ள்.)

சித்த விப்ரம சந்நிக் குறிகளாவன:-

தன்னையறியாமல் பாட்டுகள் பாடுவான். ஆடுவான். ஒற்றைக்கண் பார்வையாகும்.

இதற்கு மருந்து:

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | தேவதாரு |
| பற்பாடகம் | பொற்கொன்றைவேர் |
| கடுக்காய்த்தோல் | சுக்கு |

| | |
|---|---|
| மிளகு | திப்பிலி |
| நிலவேம்பு | சரள தேவதாரம் |

இவைகளை வகைக்கு 2 காசோடை வீதம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 2 படி சுத்தஜலம் விட்டு எரித்து ஒரு உழக்காக வற்ற வைத்து உட்கொள்ள சித்தவிப்ரம சந்நிகள் தீரும்.

## வேறு

நொச்சிகண்டங் கத்திரிவித் துள்ளிகையான்
தகரையொடு நுவன்றி டுஞ்சுக்
கிச்சைசெய்திப் பிலிமிளகு சமன்கொண்டு
கடாயஞ்செய் தெட்டி லொன்றாய்
மெச்சிடவே யிறக்கியதி லிருபலநீர்
முப்பொழுது விரும்பிக் கொள்ளில்
நச்சினைய சித்தவிப்பி ரமசந்நி
பயப்பட்டு நண்ணா தோடும். 162

(இ-ள்.)

| | |
|---|---|
| நொச்சிவேர் | கண்டங்கத்தரிவித்து |
| பூண்டு | கையாந்தகரை |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து, எட்டிலொன்றாய்க் கஷாயம் வைத்து, வேளைக்கு சேர் வீதம் 3 வேளை உட்கொள்ள சித்தவிப்ரம் சந்நிகள் தீரும்.

## சித்த விப்ரம் சந்நி லக்ஷணம்

சித்தவிப் பிரமை தானே
செருக்குட னாடும் பாடும்
பித்தத்தில் வாதம் கூடிப்
பெருகவே கோபஞ் செய்யும்

உற்றவ ரருகே வந்தா
 லுறுக்கியே வெருளப் பார்க்கும்
பற்றுப்போற் சரீரம் நோகும்
புருவத்தை நெறிக்குந் தானே. 163

(இ-ள்.)

நோயாளி சம்பந்தமில்லாமல் ஆடுவான், பாடுவான், வாதமும் பித்தமும் பிரகோபிக்கும். தனக்கு வேண்டுபவர் அருகே வந்தாலும், வெருண்டு பார்ப்பான். உடல் முழுவதும் நோகும். புருவத்தையும் நெறிப்பான்.

### சீதாங்க சந்நிக் குறிகள்

சீதள மதிக மாகுஞ்
சிறுகிய மூர்ச்சை தாகம்
போதவே வாந்தி விக்கல்
பொருமிய கழிச்ச லுப்பல்
பேதமா நடுக்கஞ் சோபம்
பெருகவே யருமை தோன்றுந்
தீதையே கூறு மித்தைச்
சீதாங்கச் சந்நி யென்னே. 164

(இ-ள்.)

உடலில் குளிர்ச்சி உண்டாகும். மூர்ச்சை, தாகம், வாந்தி, விக்கல், கழிச்சல், வயிற்றுப்பொருமல், நடுக்கம், வீக்கம் முதலான குறிகளும் உண்டானால் சீதாங்கசந்நி என்று அறிந்து கொள்ளவும்.

## கர்ணீகசந்நிக்குக் காலபைரவம்

இரதங்கெந் தகம்நாவி பெருங்காயம்
பொன்முசுட்டை யியல் வெங்காரம்
பெருமரத்தின் பட்டைசத்திச் சாரந்தாம்
பிரபற்பம் பெருவசம்பு
வருநிலவேம் புடனூமத் தம்விதைகற்
கடகசிங்கி மாட்சி கத்தோ
டுரிமையுள திப்பிலியப் பிரகசிந்தூ
ரம்போல முரைத்த வெல்லாம். 165

உரைத்தபடி வகைக்கொவ்வோர் வராகனெடை
கொண்டு நொச்சி யதவு சாற்றால்
அரைத்திட்டு நாலுநாள் வழித்துப்பின்
கடலையென வதை யுருட்டி
யெருக்கம்வேர்க் கடாயத்தி லனுபானஞ்
செய்தருந்தி லெளிமை யாகப்
பருத்தகரு ணீகசந்நி போம்புடலங்
காய்பயற்றம் பருப்புக் கூட்டே. 166

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்
,, நாபி
,, நிமிளை
தாம்பிர பற்பம்
அப்பிரகச் செந்தூரம்

| | |
|---|---|
| பொரித்த பெருங்காயம் | பொரித்த வெங்காரம் |
| பொன்முசுட்டை வேர் | பெருமரப்பட்டை |
| நிலவேம்பு | சத்திச்சாரம் |
| கற்கடகசிங்கி | வசம்பு |
| கரியபோளம் | ஊமத்தைவிதை |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டு, நொச்சிச்சாறு விட்டு 4 நாட்கள் நன்றாக அரைக்கவும். பின்னர், இதனைக் கடலைப்பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, எருக்கம் வேர்க் கஷாயத்துடன் உட்கொள்ளவும். கர்ணிக சந்நி வகைகள் தீரும்.

பத்தியம்:-

புடலங்காய் பயிற்றம் பருப்பு இவைகளைக் கூட்டவும்.

**கர்ணீக வாத சந்நி லக்ஷணம்**

காதுகே ளாதிருக்குங் காதடிவிங்
கிடு நெஞ்சைக் கட்டிக் கொள்ளும்
ஓதுடம்பெல் லாம்வீங்குஞ் சுரமெய்து
மேன்மூச்சு முள்ள தாகும்.
வாதமேலிட் டிருக்குந்தா பமுண்டா
மிதுகர்ண வாத சந்நி
யிதுதான சாத்தியமாம் வருத்தமுற்றுப்
பார்த்திட்டா லின்ப மெய்தும். 167

(இ-ள்.)

கர்ணிகவாத சந்நியில் காது கேட்காது. காதின் அடிப்புறத்தில் வீக்கமுண்டாகும். நெஞ்சைக் கட்டும். உடம்பும் வீங்கும், சுரமடிக்கும், மேல்மூச்சு வாங்கும், வாயு எதிர்நோக்கும், உடம்பில் அனத்தல் ஏற்படும். இது அசாத்தியம் என்றிருப்பதால், இது சொஸ்தப்படுத்தப்பட்டால் அதைப் போன்று இன்பம் வேறில்லை.

## கர்ணிக சந்நி வீக்கத்திற்கு மருந்துகள்

கட்டுரைத்த காதடிவீக் கத்தினுக்கூ
ரட்டைவிட்டுக் கடிக்கச் செய்து
கெட்டவுதி ரத்தை வெளிப் படுத்திவீக்கந்
தின்பாற்கிளத் திடும் பேய்த்து
மட்டிவே ரெருக்கம்வே ரிந்துப்பா
யிற்பட்டை வள ரெருக்குக்
கொட்டிடுபால் விட்டரைத்துப் பூசுவீக்
கம்போகுங் கோவி நெய்யுண் 168

கொவினெய் குடிப்பதன்றி யரத்தையுள்ளித்
திரிகடுகு கோட்டம் நெல்லி
மேவுபருப் பொடுகண்டங் கத்திரிகோ
ரைக்கிழங்கு வியன் கடுக்காய்
காவுனிதண் கழற்பருப்பு வசம்பொடுகற்
கடசிங்கிக் கடாயம் வைத்தே
யாவலுடன் குடித்திடில் கர்ணீக
சந்நிமெள்ள வகன்று போகும். 169

(இ-ள்.)

காதிற்கடியில் வீக்கம் உண்டானால் அதற்கு சிகித்ஸை கிரமம்:

அட்டையை விட்டு கெட்ட ரத்தத்தை உறிஞ்சும்படிச் செய்யவேண்டும். இவ்வாறாகக் கெட்டவுதிரத்தை வெளிப்படுத்திய பின்னர்,

| | |
|---|---|
| பேய்த்தும்மட்டிவேர் | எருக்கம்வேர் |
| இந்துப்பு | ஆயில்பட்டை |

இவைகளைக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்றாக அரைத்து வீக்கத்தின்மேல் பூசவும். வீக்கம் குணமாகும்.

பத்தியம்

பசுவின் நெய் உபயோகிக்கவும்

| | |
|---|---|
| சிற்றரத்தை | பூண்டு |
| திரிகடுகு | கோஷ்டம் |
| நெல்லிமுள்ளிப்பருப்பு | கோரைக்கிழங்கு |
| கடுக்காய்த்தோல் | கழற்பருப்பு |
| வசம்பு | கற்கடகசிங்கி |
| கண்டங்கத்திரி | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து, 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி, வடிகட்டி உட்கொள்ள கர்ணிக சந்நிகள் தீரும்.

## இரத்த சந்நியின் லக்ஷணங்கள்

இரத்தசந்நி வாதத்தின் குணங்காய்ச்ச
லுழலைமயக் கிவற்றினோடே
பெருத்தவிக்க லுடம்புகுத்தல் குடைதல்வயி
றூதல் பின்னும் பெருங்கழிச்சல்
வருத்தமுற வாயினாற் சுவாசம்விட
லிரத்தமாய் வாந்தி செய்த
லுரைத்திடெங்குப் பார்த்திடினு மண்டலமாய்த்
தோற்றலுண்டா முணர்ந்து கொள்ளே. 170

காய்ச்சல், உழலை, மயக்கம், விக்கல், உடம்புகுத்தல், குடைச்சல், வயிறூதிப்போதல், கழிச்சல், வாயினால் சுவாசம் விடுதல், இரத்தவாந்தி, பார்வையில் சுழன்று நானாபக்கங்களிலும் வெளிச்சம் தோன்றுதல் முதலிய குறிகள் காணும்.

## இரத்த சந்நிக்கு ம்ருத்யுஞ்சய ரஸம்

போற்றிடும் விரத்தசந்நி தனக்கிரதந்
தாம்பிரத்தின் புகழும் பற்பஞ்
சாற்றிடுகந் தகமூன்றுஞ் சமன்கொண்டே
யெலிச்செவியின் சாற்றரைத்திட்
டேற்றிடுகுக் குடபுடம்போ டிதுயிருட்யுஞ்
சயரதமா மிஞ்சிச் சாற்றிற்
றோற்றரிசி யெடைகொடுத்திட் டருந்துமுன்ன
மனையசந்நி தொலையும் பாரே. 171

(இ-ள்.)

தாம்பிர பற்பம்
சுத்திசெய்த ரஸம்
,, கந்தகம்

இவைகளைச் சமனெடை எடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கருமையாகும்படி நன்றாக அரைத்துக் கொண்டு பின் தாம்பிர பற்பத்தையும் சேர்த்து எலிச்செவிப் பூண்டின் சாறுவிட்டு 4 சாமங்கள் அரைத்து வில்லை தட்டிக் காயவைக்கவும். காய்ந்தபின் இதனை ஒரு அகலிலிட்டுச் சீலைமண் வலுவாகச் செய்து குக்குடபுடம் போடவும். இந்த மருந்தில் 1 அரிசி எடை எடுத்து இஞ்சிச் சாற்றுடன் உட்கொள்ள இரத்த சந்நிகள் தீரும். இதற்குப் பெயர் ம்ருத்யுஞ்சய ரஸம்.

## இரத்த சந்நிக்குத் தாமரை வளையம் கஷாயம்

உரைத்திடந்த விரத்தசந்நி தனக்குத்தா
மரைவளைய முயர் வேப்பீர்க்கு
வரித்திடுகோ ரைக்கிழங்கு வெட்டிவேர்த்
தண்டுநற்றா மரையின் றோதா
டிருப்பைப்பூ விலந்தையிலை யதிமதுரஞ்
சந்தனத்தி னெழிற் சிராய்கொண்
டெரித்திடல்செய் கடாயமிறுத் துதவந்தச்
சந்நிதொலை வெய்தும் பாரே. 172

(இ-ள்.)

| | |
|---|---|
| தாமரை வளையம் | கோரைக்கிழங்கு |
| தாமரைத்தண்டு | வேப்பீர்க்கு |
| தாமரைப்பூ | வெட்டிவேர் |
| இலந்தையிலை | சந்தனசிறாய் |
| அதிமதுரம் | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் வார்த்து, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் கஷாயம் செய்து உட்கொள்ள இரத்த சந்நி தீரும்.

## இரத்த சந்நிக்கு திரிபலாதி கஷாயம்

கூறந்த விரத்தெட்டி சந்நிக்குத்
திரிபலைநற் கொடிய வேலி
யிடுபா திரிவேர்பேய்ப் புடல்பற்பா
டகஞ்சுக்குத் திக ழெருக்கின்

வீறிடுவேர் சமபாகங் கடாயமிட்டு
நல்கறுகிந் விளங்கு சாறு
நாறிடுமா தளம்பூச்சாற் றரைத்துமாங்
கொட்டையினை நசியஞ் செய்யே. 173

(இ-ள்.)

சுடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
கொடிவேலிவேர்
பாதிரிவேர்
பேய்ப்புடல்
டற்பாடகம்
சுக்கு
எருக்கன்வேர்

இவைகளைச் சமனெடுத்து இடித்து, 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு. அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாகக் குறுக்கி வடிகட்டி அருந்தவும்.

அருகம்வேர்ச்சாறு
மாதளம்பூச்சாறு

இவைகளில் மாங்கொட்டையை இழைத்து நஸ்யமிட இரத்தசந்நிகள் தீரும்.

**பிரலாப சந்நிவாத லக்ஷணம்**

பிரலாப சந்நிக் கங்கம்
பெருத்ததோர் நடுக்க முண்டாம்
குரலற விருமல் விக்கல்
குறித்திடு சுரமு முண்டாம்
உரமலி யுடம்பு நோகு
முரத்துரத் துதறித் தானே
திறமெனப் பொய்யு மெய்யும்
பேசிடுந் தெரிந்து கொள்ளே. 174

(இ-ள்.)

தேகத்தில் நடுக்கலும், இருமல், விக்கல், சுரம், தேகத்தில் வலி, பொய்யும் மெய்யும் உரக்கப்பேசுவது முதலியவை பிரலாப சந்நியின் குணங்களாகும்.

### சீவுக சந்நிக் குறிகள் (ஜிஹ்வா சந்நி)

சீவுக சந்நி தானுஞ்
சிதறிய விருமல் தாபம்
நாவுறு குழலை யோடு
நிவின்றமுட் போலி ருக்குந்
தாவுறு செவி கேளாது
சத்துவங் கெட்டி ருக்கு
மேவுவாய் பேசி டாது
மேல்மூச்சுத் தோன்றுங் காணே. 175

(இ-ள்.)

இருமல், உடலில் எரிச்சல், நாக்கில் வேக்காளம், முட்களைப்போன்ற சிறிய முளைகள் காணும், காது கேளாது, உடல் பலஹீனமடையும், பேசமுடியாது, மேல் மூச்சு வாங்கும். இவை சீவுக சந்நிக் குறிகளாகும்.

### இதற்கு மருந்து

காணுமீ தசாத்தி யந்தான்
கடினமெ யாயி னாலும்
நீனிறக் கோட்டத் தோடு
நிகழ்த்திடு மரத்தை சீந்தில்
கோணிலா முள்ளியின் வேர்
கோரையின் கிழங்கி னோடு
தாணில வேம்பு நற்றூ
தளையாடா தொடையின் பள்ளம் 161

(இ-ள்.)

சீவுக சந்நி பொதுவாக அசாத்யமாகும்

இதற்கு மருந்து;-

| | |
|---|---|
| கோஷ்டம் | சிற்றரத்தை |
| சீந்தில்கொடி | முள்ளிவேர் |
| கோரைக்கிழங்கு | நிலவேம்பு |
| தூதுவேளைவேர் | ஆடாதோடைவேர் |

**இதுவுமது**

பன்னு கற்கடக சிங்கி
பற்பா டகம் வசம்பு
தின்னிடு சிறிய தேக்கு
திரிகடுகு டனே பின்னும்
மென்மையாஞ் சிறுகாஞ் சோறி
வேர்கண்டங் கத்திரித் தூறு
இன்னவை கடாயம் செய்தே
குடித்திடி லின்ப மெய்தும் 177

(இ-ள்.)

| | |
|---|---|
| கற்கடகசிங்கி | பற்பாடகம் |
| வசம்பு | சிறுதேக்கு |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | சிறுகாஞ்சோறிவேர் |
| கண்டங்கத்திரிதூறு | |

இவைகளை வகைக்குச் சமனெடை எடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி உட்கொள்ள சீவுக சந்நிகள் தீரும்.

## சீவுக சந்நிக்குப் பூச்சு மருந்து

இன்னுமொன் றெவத் தாரத்தோ
டிந்துப்புச் சத்திச் சாரம்
மின்னிடு வளைய லுப்பவிடு
லவணங் கல்லுப்பு
மன்னுறச் சமனாகக் கொண்டு
மாதளம் பழத்தீஞ் சாற்றிற்
றுன்னுறக் கலந்து நாக்கிற்
றேய்த்திடச் சுகமே நல்கும். 178

(இ-ள்.)

| | |
|---|---|
| எவச்சாரம் | இந்துப்பு |
| சத்திச்சாரம் | வளையலுப்பு |
| கறியுப்பு | கல்லுப்பு |

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு, மாதளம் பழச்சாறு விட்டு, நன்றாக அரைத்து நாக்கில் தேய்க்கவும். சீவுக சந்நி தீரும்.

## சிம்மகசந்நி, சிங்குவைசந்நி முதலியவைகளின் குறிகள்

சிம்மக சந்நி தானுஞ்
செவிகேளா சிறுகப் பேசுங்
கம்மிடு மிருமல் தாகங்
கருதுநா வுலர்ந்து போகும்
விம்மிநா வெடித்துக் காணு
மென்மேலு மூச் சுண்டாகும்
நன்மையாம் வேதங் கூறு
நவிலுமிக் குணங்கள் தானே. 179

(இ-ள்.)

காது கேட்காது. மிகவும் பலஹீனமாய்ப் பேசுவான். குரல் கம்மிப் போகும். நாக்கு உலர்ந்து விடும். நாவில் வெடிப்புகள் காணும் மேல்மூச்சு வாங்கும் இவை சிம்மக சந்நியின் குறிகளாகும்.

## சிம்மக சந்நிக்கு சங்கம்வேர் கஷாயம்

குணமுறு சங்கி னீள்வேர்
கொடிவேலி சிற்றா முட்டி
நணுகிய பேரா முட்டி
நாகமென் முட்டி சுக்கு
மணவுகாய் செவியத் தோடு
மருவுதிப் பிலிமூ லத்தின்
பிணியறு கடாயத்திற் றிப்பித்தூள்
போட்டருந்த நோய் போம். 180

(இ-ள்.)

| | |
|---|---|
| சங்கம்வேர் | கொடிவேலிவேர் |
| சிற்றாமுட்டி | பேராமுட்டி |
| நாகமுட்டி | சுக்கு |
| செவ்வியம் | திப்பிலிமூலம் |

இவைகளைச் சமனெடை எடுத்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, எட்டிலொன்றாய்க் கஷாயம் செய்து, திப்பிலிச் சூரணம் 1 குத்தளவு போட்டு உட்கொள்ள சிம்மக சந்நிகள் தீரும்.

## அபின்யா சந்நி பாதம்

அவுனியா சந்நி வாத
　　மதிகநித் திரை யுண்டாகும்
மவுனமாய் வாத பித்தச்
　　சிலேட்டும மருவி நிற்கும்
கவியவே வியர்வை யுண்டாங்
　　காயநோய் மிகவுண் டாகும்
புவனியில் வேதங் கூறும்
　　பொருந்துமிக் குணங்கள் தானே. 181

(இ-ள்.)

அபின்யாஸ சந்நிக் குறிகளாவன்;

அதிக நித்திரை, வாதபித்த சிலேத்துமம் முதலிய மூன்று தோஷங்களும் பிரகோபித்திருக்கும், வியர்வை அதிகரிக்கும். உடலில் குத்துவலி உண்டாகும்.

## அபின்யாஸ சந்நிக்கு சந்நிச் செந்தூரம்

கந்தக மிரத நாபி
　　கருதிடொவ் வோர் வராகன்
மிந்துபொன் நிமிளை தானு
　　மூவொரு வராகன் பாரஞ்
சிந்திடு நாக பற்பந்
　　திகழிரு வராகன் கூட்டிக்
கந்திய வெட்டிக் கொட்டை
　　கடாயத்து மூன்று நாளும். 182

மூன்றுநாள் சிறிய தான
முதிர்செருப் படிதன் சாற்றில்
என்றிட வரைத் துலர்த்தி
வாலுகா வெந் திரத்தில்
றோன்றிட வெரித் தெடுத்துப்
பணவெடை துளசிச் சாற்றி
லூன்றமுத் தினங் கொடுத்தா
லோடமச் சந்நி தானே. 183

(இ-ள்.)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த கெந்தகம் | | 1 | வராகனெடை |
| ,, | பாதரஸம் | | ,, |
| ,, | நாபி | | ,, |
| ,, | பொன்நிமிளை | 3 | ,, |
| ,, | நாகபற்பம் | 2 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு எட்டிக்கொட்டை கஷாயம் விட்டு 3 நாட்கள் அரைக்கவும். பிறகு, சிறு செருப்படிச் சாற்றில் 3 நாட்கள் அரைக்கவும். அதன் பின் காயவைத்துத் தூள் செய்து, வாலூகா எந்திரத்தில் விட்டு, கமலாக்கினியில் எரித்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். இம்மருந்தில் 3 குன்றி எடை எடுத்துத் துளசிச் சாற்றுடன் கலந்து 3 நாட்கள் கொடுக்க அபின்யாஸ சந்நிகள் குணமாகும்.

## ருக்குதாக சந்நிக்கு

கந்தக மிரதத் தோடே
கரித்திடு மிளகு மூன்றும்
முந்துறச் சமனாய்க் கொண்டு
மொழிகையாந் தகரை நொச்சி

கந்திடு மத்தம் வெள்ளைக்
காக்கண மணத் தக்காளி
சிந்திடாப் பொன்மு சுட்டைச்
சித்திர மூலம் பின்னும் 184

பின்னிடா வலரி யோடே
பேசுதக் காளிச் சாற்றின்
மன்னொன்றுக் கொரு நாளாக
வெவ்வேறு வார்த் தரைத்து
முன்னிடு மிஞ்சிச் சாற்றின்
மூன்றுநா ளரைத் துலர்த்தி
யுன்னஞ்சு வகைப் பித்தாலே
யொரு மூன்று நாளரைத்து. 185

அரைத்துப்பின் னுலர்த்தி வைத்தே
யரைப்பண வெடைதா னிஞ்சிக்
கரித்திடு சாற்றி லீந்தாற்
கருதிடு ருக்கு தாகப்
பரித்திடு சன்னி தீரும்
பத்தியங் கருப்பஞ் சாறாந்
தரித்திடு குளிர்ச்சி யான
சகலவுண் டிகளு மாகும். 186

(இ-ள்.)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரஸம்
மிளகு

இவைகளைச் சமனெடை கல்வத்திலிட்டுப் பின்னர்

கையாந்தகரைச்சாறு
நொச்சிச்சாறு
ஊமத்தஞ்சாறு

வெள்ளைக்காக்கணஞ்சாறு
மணத்தக்காளிச்சாறு
பொன்முசுட்டைச்சாறு
சித்திரமூலச்சாறு
அலரிச்சாறு
தக்காளிச்சாறு

இவைகளைத் தனித்தனியே விட்டு ஒவ்வொரு நாள் அரைத்துப் பின் இஞ்சிச்சாற்றை விட்டு 3 நாட்கள் அரைக்கவும். அதன்பின், ஆடு, மாடு, கோழி, மயில், பன்றி, முதலான ஜந்துக்களின் பித்தத்தில் மும்மூன்று நாட்கள் அரைத்து பத்திரப்படுத்தவும். இச்சூரணத்தில் 1 குன்றியளவு எடுத்து இஞ்சிச் சாற்றில் கொடுக்க ருக்குதாக சந்நிகள் தீரும். கருப்பஞ்சாறு முதலான குளிர்ச்சியான பதார்த்தங்களை உட்கொள்வது நலம்.

**சீதாங்க சந்நிக்கு**

ஆனனத் தெண்ணெ யிட்ட
தாமெனப் பள பளக்குந்
தானுறு மறிவு மாறுஞ்
சந்ததந் துயிலே செய்யும்
மானமாம் புடவை சோர்ந்த
வகை தெரியா திருக்குந்
தேனலர்க் கோதா யந்தச்
சீதாங்கச் சந்நி தானே. 187

(இ-ள்.)

முகம் எண்ணெயைத் தடவினாற்போல் பளபளப்பாகும். தன் சுய அறிவு மாறும். எப்பொழுதும் உறங்குவான். ஸ்திரீகளுக்குப்

புடவை நழுவியிருந்தாலும் தனிநிலைமை தெரியாது. இவை சீதாங்க சந்நிக்குறிகளாகும்.

சீதாங்கந் தனக்கு முன்னை
தசமூலம் பெரிய வாகை
மோதுபா திரி நெருஞ்சி
முள்ளிவேர் சிற்றா முட்டி
பேதமில் குமிழன் தன்வேர்
சிறுதேக்கு பேரா மல்லி
யீதுதான் சமூலங் கோட்ட
மிசாதிர கடுகு தானாம் 188

ஆகியவாடா தோடை யமைந்த
சா றணையின் றன்வேர்
வேகமார் கடக சிங்கி
விரி கண்டங் கத்தரித்தூ
ரேகமாஞ் சீந்தி லெல்லா
மேகமாச் சமமாய்த் தூள்செய்
போதமாயிரு படித்தூ ளிருபடி
புனலிற் போடே. 189

போட்டுழக் காகக் காய்ச்சிப்
பொருந்தவே யிரண்டு போதும்
நாட்டமாய்க் கொடுத்துப் பின்னும்
நசியஞ்செய் புகையுங் காட்டு
தீட்டிடஞ் சனமுங் கண்ணிற்
சேரவே செய் யிவ்வாறு
கூட்டினா லந்த சந்நி
குலைகுலைந் தோடு மன்றே. 190

(இ-ள்.)

| | |
|---|---|
| முன்னைவேர் | தசமூலம் |
| வாகைவேர் | பாதிரிவேர் |

| | |
|---|---|
| நெருஞ்சி | முள்ளிவேர் |
| சிற்றாமுட்டி | குமிழம்வேர் |
| சிறுதேக்கு | பேராமல்லி |
| கோஷ்டம் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| ஆடாதோடை | சாரணைவேர் |
| கற்கடகசிங்கி | கண்டங்கத்திரி |

இவைகளைச் சமனெடுத்து கல்லுரலிலிட்டு இடித்து ஒன்றிரண்டாகத் தூள் வைத்துக்கொள்ளவும். இத்தூளில் 2 படி எடுத்து 2 படி சுத்தஜலம் விட்டு 1 ஆழாக்கு, ஆகும் வரை சுண்ட வைத்து தினம் 2 பொழுது (காலை மாலை) உட்கொள்ளவும். நசியம், புகைகாட்டுதல், அஞ்சனம் முதலிய கிரியைகளையும் செய்யவும்.

## சீதாங்க சந்நிவாதத்திற்கு இரத்த சந்தனாதி உருண்டை

ஏற்றசீ தாங்க சந்நிக்
    கிரத்த சந்த னாதியுண்டை
சாற்றுவோங் கடுக ரோணி
    கவுறுமி ருப்பையின் பூ
நீற்றிடாப் பொட்டி லுப்பு
    நெல்லிக்காய் கெந்தகத் தூள்
ஆற்றிடு கோழி முட்டை
    யவுமஞ்சட் கருவுங் கொள்ளே. 191

கண்டுவெண் காரமுந் தான்
    கூட்டியே சமனா யெல்லாங்
கண்டிடு நிறைக்குச் செய்யச்
    சந்தனங் கலந்து மாதர்

தண்டரு முலைப்பால் விட்டுத்
தகவுற வரைத்துப் பின்பு
சுண்டையின் காயினே ராய்த்
துலங்கிய வுண்டை செய்யே. 192

துலங்கிடவ் வுண்டை யொன்று
சுரத்தின் மேற் சந்நிக்கப்பா
கலங்கொண் பொடுருத்தி ராக்கங்
கடித்திடு முயிற்று முட்டை
சாலுங்கோரோ சனையிவ் வெல்லாந்
துணைமுலைப் பாலின் மத்தித்
தலங்கதிற் சேர்த்து நல்கி
டருந்துமு ன்நோய் தீரும். 193

(இ-ள்.)

கடுகுரோகிணி
பொட்டிலுப்பு
முட்டைமஞ்சட்கரு
தாமரையிதழ்
சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
பொரித்த வெங்காரம்

இவைகள் வகைக்கு 1 பலம்

ரக்த சந்த சிறாய் 6 பலம்

இவைகளைப் பொடிப்பண்ணி கல்வத்திலிட்டுத் தாய்ப் பால் விட்டு நன்றாக அரைத்துச் சுண்டைக்காய் அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்துக கொள்ளவும்.

| | |
|---|---|
| மான்கொம்பு | ருத்திராக்ஷம் |
| முசுருமுட்டை | கோரோசனை |

இவைகளைச் சமனெடுத்து முலைப்பாலில் இழைத்து அதனுடன் முன்கூறிய சந்தனாதி மாத்திரையை நல்கவும். சுரத்துடன் கூடிய சந்நிகள் தீரும்.

## சீதாங்க சந்நிக்கு
## திப்பிலிமூல கஷாயம்

திப்பிலி மூலஞ் சுக்குத்
திப்பிலி சிறிய தேக்கும்
கெப்புறு மாவிலிங் கைக்
கொடிவேலி யுயர் பற்பாடந்
தப்பில்பேய்ப் புடலிவ் வெல்லாஞ்
சமனுறக் கடாயம் செய்தே
செப்பிரு பொழுது மீந்தால்
சீதாங்க சந்நி தீரும். 194

(இ-ள்.)

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | திப்பிலி |
| சுக்கு | சிறுதேக்கு |
| மாவிலிங்கைவேர் | கொடிவேலிவேர் |
| பற்பாடகம் | |

இவைகளைச் சமனெடுத்து இடித்துத் தூளாக்கி 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் கஷாயம் செய்து வடிகட்டி உட்கொள்ள சீதாங்க சந்நிகள் தீரும்.

## சந்நிக சந்நிக்கு பிரசண்ட பைரவம்

இரநீ டொரு வராகன்
றிப்பிலி யிரு வராகன்
கருதட்ட லோக பற்பம்
காணொரு வராகன் பாரம்

ஒருமூன்று மெட்டி நொச்சி
பூமத்தை மணித் தக்காளி
பிரமியங் கஞ்சாச் சாறு
பேசுசா ரணையின் சாறு. 195

சார்தரு மாயிற் பட்டைச்
சாரிவற் றொவ்வோர் நாளைக்
கோர்சாறு விட்ட ரைத்து
மயிற்பிச்சோ டோது மீன்பிச்
சேர்தரு மெருமையின் பிச்சி
வற்றினு மறைத்துக் கொண்டு
பார்தரு பாலையின் வேர்
பசந்தவெற் றிலையின் வேர் 196

வேரமுக் கிராக கிழங்கு
விரும்புசிற் றரத்தை சுக்கு
நேருங்கத் தூரி மஞ்சள்
நிகழ்ந்திடு செந் நெருஞ்சி
கூறுந்திப் பிலி வகைக்குக்
கூட்டிரு வராகன் பாரம்
ஆர்தரு நெருஞ்சியின் வேர்
சாற்றினா லரைத்துப் பின்பு 197

புளி.யிலைச் சாற்றி னாலும்
பொருந்திட வலரத்து முன்பு
வளனுறு மருந்திற் சேர்த்து
மருவொரு குப்பியில் வைத்
தளவுறு சேலைமண் செய்
ததை.யொரு சட்டி தன்னிற்
கிளற்மணற் பரப்பி யந்த
மணலிடைக் கிடைக்க வையே. 198

வைத்து மேல் மணலானமுடி
வளரிரு சாம மட்டும்
உய்த்திட மெதுவாய்த் தீயிட
டெரித்ததை யுகந் தெடுத்துக்
கத்திடு மெருமைப் பிச்சு
மீன்மயில் கனின் பிச்சாலும்
எய்த்திடா திருபத் தோர்
நாளெண்ணிநீ யரைத்துக் கொள்ளே. 199

கொண்டுள்ளிச் சாற்றி லேனும்
குலவிஞ்சிச் சாற்றிலேனும்
கண்டதை யெடுத்து மேலோர்
பணவெடை கலந்து நல்கு
மண்டுபத் தியந்தான் கொள்ளின்
கஞ்சியே மதித்துச் சொல்லு
விண்டிடும் மூன்று நாளின்
மேவுசந் திகமாஞ் சந்நி. 200

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 1 வராகனெடை |
| லோகபற்பம் | 1 வராகனெடை |
| திப்பிலி | 2 வராகனெடை |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பிறகு,

எலுமிச்சம்பழச்சாறு
நொச்சிச்சாறு
ஊமத்தையிலைச்சாறு
மணத்தக்காளிச்சாறு
பிரமிச்சாறு
கஞ்சாச்சாறு
சாரணைச்சாறு
ஆயில்பட்டைச்சாறு

இவைகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே ஒவ்வொரு நாள் அரைத்துப்பின்.

மயில்துத்தம்
மீன் பித்தம்
எருமைப் பித்தம்

இவைகளை விட்டு ஒவ்வொரு நாள் அரைக்கவும். பின்

| | |
|---|---|
| பாலைவேர் | வெற்றிலைக்கொடி வேர் |
| அமுக்கிராக்கிழங்கு | சிற்றரத்தை |
| சுக்கு | கஸ்தூரி மஞ்சள் |
| செப்புநெரிஞ்சில் | திப்பிலி |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து நெருஞ்சிச் சாறு விட்டு நன்றாக அரைக்கவும். மறுநாள் புளியிலைச் சாறு விட்டரைக்கவும். இதனை முன் மருந்துடன் கூட்டி ஒரு காசிக்குப்பிக்குள் விட்டுச் சீலைமண் செய்து வாலுகா எந்திரத்தில் மணல் மறைவில் 2 ஜாமங்கள் மந்தாக்கினியாய் எரிக்கவும். தானாக ஆறியபின் இதனை எடுத்துக் கல்வத்தில் இட்டு, மறுபடியும் முன்போல,

எருமைப்பித்தம்
மீன்பித்தம்
மயிர்பித்தம்

இவைகளில் முறையே 7 நாட்கள் அரைக்கவும். இவ்வாறு 21 நாட்கள் சென்றபின் இதனை பத்திரப்படுத்தவும். இம்மருந்தில் 3 குன்றியளவு எடுத்துப் பூண்டின் சாற்றிலோ அல்லது இஞ்சிச் சாற்றிலோ கொடுக்கவும்.

பத்தியம்:- கொள்ளுக்கஞ்சி சாப்பிடவும்.

சந்நிக சந்நிகள் நீங்கும்.

**கண்டகுச்ச சந்நிக்கு**
**ம்ருத்யு ப்ரந்யர்ந்தி ரஸம்**

இரதந் தான் மூவராக
னெடையெலிப் பாடாணந்தான்
கருதுமூ வராகன் பாரங்
கனத்திடு நாவி தானும்
இருவரா கன் பாரத்தோ
டிசையுமப் பிரகச் செந்தூ
ளொருவரா கன் பாரந்தா
னுரைத்திடு மிந்த நான்கும்.

குலவிடு மாயிற் பட்டை
குறித்தசித் திரமா மூல
மிலகிவை கடாயஞ் செய்த
நீரினி லினி தரைத்திட்
டுலரச் செய் தரைத்திவ்
வாறே யோரைந்து நாளுலர்த்திச்
சொலும் நெல்லி னெடை
யேயிஞ்சிச் சாற்றினிற் றேன்றநல்கு 201

நல்கிய தருந்தின் முந்நாள்
நவில் கண்ட குச்சனென்னச்
சொல்லிடு சக்தி தீருஞ்
சுகமுறு மிம் மருந்து
நல்லவர் புகழுந் தஞ்சைச்
சரபோசி நரேந்திரன் தான்
மல்லலம் புவனத் தோர்க்கு
மகிழ்வுற வுரைத்த தாமே. 202

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 3 | வராகனெடை |
| ,, எலிப்பாஷாணம் | 3 | ,, |
| ,, நாபி | 2 | ,, |
| அப்பிரகச் செந்தூரம் | 1 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு

ஆயில்பட்டை
சித்திரமூலவேர்ப்பட்டை

இவ்விரண்டையும் சேர்த்துக் கஷாயம் செய்த நீரினால் நன்றாக அரைத்து உலரவைக்கவும். இவ்வாறு 5 தினங்கள் அரைத்து உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

இம்மருந்தில் 1 நெல் எடை எடுத்து இஞ்சிச் சாற்றுடன் 3 நாட்கள் உட்கொள்ளவும். கண்டகுச்ச சந்நிகள் யாவும் தீரும்.

## கண்டதி சந்நிலக்ஷணம்
## குடிநீர், நஸ்யம், எண்ணெய்

உழலை மயக்கம் காய்ச்சலுட
        னொடுக்க மூர்ச்சை யுடம்புவலி
கழுத்துச் சோந்து வீழ்ந்திடுதல்
        காணுமு யிர்கண்ட திசந்நி
மொழியு மிதுதான சாத்தியமா
        முயனஅறு பார்க்கி லொருவேளை
யொழித லூறவு மாமதனுக்
        குறிய குடிநீர் கேட்டியால். 203

கேட்டி மஞ்சள் மரமஞ்சள்
கிளர்சிற் றரத்தைப் பேரரத்தை
தேட்டஞ் செய்யா டாதொடை
மெற்றிகழ் முக்கடுகு முப்பலைநேர்
கூட்டியிருகா செடை வகைக்குக்
கோதி விரண்டு படிநீரிற்
போட்டே யுழக்கா யெரித்தருந்திற்
போகு மந்தச் சந்நியே. 209

(இ-ள்.)

உழலை, மயக்கம், காய்ச்சல், மூர்ச்சை, உடம்புவலி, கழுத்து சோர்ந்து வீழ்ந்து போதல் இவை கண்டதி சந்நிக் குறிகள் இது அசாத்யமான ரோகமாகும். சிறிது சிரமப்பட்டு வைத்தியம் செய்தால் குணமானாலும் ஆகும்.

இதற்கு கஷாயம்

| | |
|---|---|
| மஞ்சள் | மரமஞ்சள் |
| சிற்றரத்தை | பேரரத்தை |
| ஆடாதோடை | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கடுக்காய்தோல் | தான்றித்தோல் |
| நெல்லிவற்றல் | |

இவைகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்து இடித்து சுத்தஜலம் 2 படி விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து வடிக்கட்டி உட்கொள்ள கண்டதி சந்நிகள் தீரும்.

**கண்டதி சந்நிக்கு வேறு**

இன்னு மொன்று வெட்பாலை
யரிசி கோட்ட மெவச்சாரந்
தின்னவுரிய திரிபலை தண்
கோரைக் கிழங்கு திரிகடுகு

சின்னஞ் சிறிய தேக்குடனே
செவ்விய மஞ்சள் மரமஞ்சள்
முன்னு கண்டங் கத்திரிநன்
முள்ளிவேர் திப் பிலிமூலம் 210

மூலமான கொடிவேலி மொழியு
மாடா தொடை யினொடு
சாலுநிலவேம் பிவை வகைக்குத்
தகவே யிருகா செடையிடித்துக்
கோலுமிரண்டு படி நீரிற்
கூட்டி யெரித்திட் டுழக்காக்கி
யேலுமாறு பருகுதல் செயின்னு
முண்டோ ருபாயந்தான். 211

பாய கருப்பு நாயுருவி
வித்தா னாலும் பரித்திடுவேர்
ஆய தேயங் குதவிடினு
மதுவு மஞ்சள் திரிகடுகும்
பேயின் சுரைவித் துடன் கூட்டிப்
பிறங்கு நஸ்யம் வெந்நீரில்
ஏயச்செய் சித்தப் பிரம
சந்நிக் கிசைத்த வெண்ணெயிடே. 212

(இ-ள்.)

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | கோஷ்டம் |
| எவச்சாரம் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| கோரைக்கிழங்கு | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| சிறுதேக்கு | செவ்வியம் |

| | |
|---|---|
| மஞ்சள் | மரமஞ்சள் |
| கண்டங்கத்திரி | முள்ளிவேர் |
| திப்பிலிமூலம் | கொடிவேலிவேர் |
| ஆடாதோடைவேர் | நிலவேம்பு |

இவைகளை வகைக்கு 2 காசெடை எடுத்துக் கல்லுரலில் இட்டு இடித்து ஒன்றிரண்டாக இடித்துச் சுத்த ஜலம் 2 படி விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்ற வைக்கவும். இதனை உட்கொண்டுவரச் சந்நிகள் தீரும்.

| | |
|---|---|
| கருப்புநாயுருவி விதை | கருநாயுருவிவேர் |
| மஞ்சள் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| பேய்ச்சுரைவித்து | |

இவைகளை வெந்நீர் விட்டு நன்றாக அரைத்துக் கொண்டு நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொள்ளவும். இதனை வெந்நீருடன் இழைத்து மூக்கில் நஸ்யமிடவும். சித்தப்ரம சந்நிகள் தீரும்.

## பிரலாப சந்நி லக்ஷணமும் குடிநீரும்

அறிவு தான்கெட் டிருத்தலடிக்
கடியங் கமுதல் மிகுதாபங்
குறிதன் சிந்தை வேறாதல்
குலவு மூக்கா நீர்விழுதல்
வெறுவா யறற்ற லிவையெல்லாம்
வெய்யப் பிரலாபச் சந்நியின்றன்
நெறியா மிதனுக் குரியகுடி
நீர்வைத் துதவிற் போய்விடுமே. 213

குடிநீர்த் தகர முயர்
சங்கங் குப்பிகோரைக் கிழங்குடனே
கடிய நொச்சி யமுக்கிராக்
கனத்த வேர்க்கொன் றையின்பட்டை
தடமார் கடுக ரோகிணிதூ
தளையின் விழுதின் னவைசமனாய்க்
கடாய மிட்டுக் குடித்திட்டாற்
கலங்குங் கொடிய பிரலாபம். 214

(இ-ள்.)

அறிவு தடுமாறும், காரணமில்லாமல் அடிக்கடி அழுவான். அதிகமான எரிச்சலுண்டாகும். சிந்தை திடீர் திடீர் என்று மாறும். மூக்கிலிருந்து நீர் ஒழுகும். ஏதாவது பிதற்றிக்கொண்டே இருப்பான். இவைகள் பிரலாப சந்நியின் குறிகளாகும்.

அதற்குக் குடிநீர்;-

| | |
|---|---|
| தகரைவிதை | சங்கங்குப்பி வேர் |
| கோரைக்கிழங்கு | நொச்சிவேர் |
| அமுக்கிராக்கிழங்கு | கொன்றைவேர்பட்டை |
| கடுகரோகிணி | தூதுளைஇலை விழுது |

இவைகளைச் சமனெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாய்க் காய்ச்சி வற்றவைத்து உட்கொள்ள பிரலாப சந்நிகள் தீரும்.

### பிரலாப சந்நிக்கு உசீராதி கஷாயம்

இன்னு மனையப் பிரலாபசி
சந்நிக் கிசைப்பேன் வெட்டிவேர்
சின்னஞ் சிறுகோ ரைக்கிழங்குச்
சீந்திலாடா தொடை யினிலை

நன்மை பற்பா டகஞ்சுக்குத்
தருசந் தனத்தின் சிராயெல்லாம்
நன்னக் கடாயம் செய்தருந்தி
நவில்முன் நசியமஞ் சனஞ்செய் 215

(இ-ள்.)

| | |
|---|---|
| வெட்டிவேர் | சிறுகோரைக்கிழங்கு |
| சீந்தில்கொடி | ஆடாதோடையிலை |
| பற்பாடகம் | சுக்கு |
| சந்தனசிறாய் | |

இவைகளை முன்போல் கஷாயம் செய்து வைத்துக் கொண்டு முன் செய்யுளில் கூறியபடி நஸ்யம் அஞ்சனம் முதலானவைகளைச் செய்திடினும் பிரலாப சந்நி தீரும்.

## பிரலாப சந்நிக்கு ஐந்தெண்ணெய்த் தைலம்

பகர்கூ வினைதிப் பிலியப்பைப்
பரிய வேலிப் பருத்தியொடு
தகுமு விலையார் முன்னையைந்துஞ்
சமூலம் வட்டத் திருப்பிவேர்
மிகுசா ரணைகத் தூரிமஞ்சள்
மேவுகம்பிப் பிசின் சீந்தில்
வகையார் கருங்குங் கிலியமுள்ளி
வசம்பு வகைக்குக் கழஞ்சிரெண்டே 216

எண்ணெ யைந்துஞ் சமன்கூட்டி
யிருக்கு நாழி யெண்ணெயினில்
நண்ண வரைத்துக் கரைத்
தெரித்து நவிலுள்ளுக்கு மீந்துபின்

வண்ண முறுமே லினும்பூசி
லலைகா தோடும் பிராலபங்
கண்ணுற் றிடுதண் கடலுலகிற்
பண்டோர்க் கெல்லாம் புதுமையாய் 217

(இ-ள்.)

| | |
|---|---|
| வில்வவேர் | திப்பிலி |
| அப்பைக் கோவைசமூலம் | வேலிப்பருத்திசமூலம் |
| மூவிலைசமூலம் | முன்னைச்சமூலம |
| வட்டத்திருப்பிவேர் | சாறணைச்சமூலம் |
| கஸ்தூரிமஞ்சள் | கம்பிப்பிசின் |
| சீந்தில்கொடி | கருங்குங்கிலியம் |
| பூண்டு | வசம்பு |

இவைகள் வகைக்கு 2 கழஞ்சு எடுத்து அம்மியில் இட்டரைத்து விழுதாக்கிப் பின்,

| | |
|---|---|
| சுத்தமான | நல்லெண்ணெய் |
| ,, | ஆமணக்கெண்ணெய் |
| ,, | வேப்பெண்ணெய் |
| ,, | புங்கெண்ணெய் |
| ,, | இலுப்பெண்ணெய் |

இந்த ஐந்து எண்ணெ வகைகளை வகைக்கு 1 நாழி (1¼ சேர்) வீதமெடுத்து, ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு தேக்கரண்டி உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச பிரலாப சந்நிகள் தீரும்.

## பிரலாப சந்நிக்கு உள்ளித் தைலம்

புதுமையாக வதற் கின்னும்
புகல்வே னவுரி வன்னெத்து
முதிரூ மத்தை தாய்க்கொன்றான்
மொழிந்த சுழற்சி கோழிமுள்ளான்

இதினோ டிண்டு நரியுடை
யிவ்வெல்லா மிலையும் வேருமாய்
அதிகமின்றி வகையினுக் கோர்
பலமாய்க் கூட்டி யரைத்துமேல் 218

மேலர்முள்ளிப் பூண்டி ருபான்
மேற்றோலுரித்த பருப்புஞ் சேர்த்
தேல வரைத்துக் கலந் தெண்ணெ
யிசையுநாழி தனிற் போட்டுச்
சாலவெரித்திட் டுள்ளுக்குந்
தகுமா றிந்து செவி நாசி
கோல வுச்சி தனிலுமிடக்
குதித்தே யோடும் பிரலாபம். 219

(இ-ள்.)

அவுரி ஊமத்தைவேர்
வன்னெத்து
வாழைக்கிழங்கு கழற்சிவேர்
சோழிமுள்ளான் இண்டம்
நரி மிரட்டி

இவைகளின் இலை, வேர் இவ்விரண்டையும் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து இதனுடன் உரித்த பூண்டுப்பல்லு 20 பலம் எடுத்து அதையும் அரைத்து நல்லெண்ணெய் 5 சேருடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி பதத்தில் எரித்து இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு சிறு கரண்டி.யளவு எடுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசவும்.

மூக்கு, காது, மண்டையுச்சி முதலான இடங்களிலும் இடவும்.

## அபின் யாஸ சந்நிக்கு மாத்திரை
## (பிரும்மாஸ்திர ரஸம்

இரத பற்பஞ் சாதிலிங்க
மிசை திப்பிலிதாம் பிரபற்பம்
உரிய மிளகின் னவையெல்லா
மொவ்வோர் வராக னெடையாகுங்
கரிய நாவி யேரேழு
வராக னெடையாங் கருதியிடு
தரு நேர்வாள மூன்றறையாய்ச்
சாற்றும் வராக னெடைசேரே. 220

சேர வெல்லாம் பஞ்சபிச்சு
களினாற் றிரமா யரைத்திடித்து
கூறும் பிரும்மாத் திரரஸமாங்
கொண்டிங் கிதனை யுச்சியினிற்
சூரியதனாற் கீறியொரு துவரை
யளவு தடவி விடிற்
பாரினிடத்தே யபினி யாஸ
சந்நி தானும் பயந்தோடும். 221

(இ-ள்.)

| | |
|---|---|
| ரஸபற்பம் | சாதிலிங்கம் |
| தாமிர பற்பம் | திப்பிலி |
| மிளகு | |

இவைகள் ஒவ்வொரு வராகனெடை

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நாபி | | 7 வராகனெடை |
| ,, | நேர்வாளப்பருப்பு | 3½ ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு, ஆடு, மீன், எருமை, கோழி, மயில் முதலான பித்தங்களினால் முறையே ஒவ்வொரு நாள்

அரைத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். அபின்யாஸ சந்நிக்கு நோயாளியின் உச்சியைச் சிறு கத்தியினால் கீறி துவரம் பருப்பளவு மருந்தை எடுத்துத் தேய்க்கவும். சந்நிகள் தீரும்.

**ஷ மருந்தின் பத்தியம்**

ஓடிவிடுமுங் கிதற்கைய
மொன்று மில்லை சகத்திரமாய்
நிடு கின்ற வபிடேகம்
நிமிலன் றனக்குச் செய்வி பின்
நாடுங் கரும்பு தின்றிடச்சொல்
நல்ல மோருஞ் சோற்றுவுங்
கூடவுண்ணச் சொல்லுடனே
குதித்திட் டோடு மச்சந்நி. 222

(இ-ள்.)

கடவுளுக்கு நன்றாக (சாஸ்த்திரப்படி) அபிஷேகாதிகள் செய்யவும், கருப்பஞ் சாறும் மோர் சாதமும் உண்ணவும், சந்நி பறந்து போகும்.

**சுக சந்நிக்கு கற்கம்**

தாழை வேரி னுடன் குப்பை
மேனிவேருந் தண் முருங்கை
சூழும் வேரு மிம்மூன்றுந்
தூய பாக்கு வெற்றிலையில்

ஆழம் வகை வைத்தருந்தச்
சொல்லருந்து முன்னங் களபமுலை
மாழை மடமான் விழியாரால்
வந்த சுகத்தின் சந்நிபோம். 223

(இ-ள்.)

தாழைவேர் குப்பைமேனிவேர்
முருங்கைவேர்

இம்மூன்றையும் வகைக்கு 1 வராகனெடை எடுத்து வெற்றிலைப் பாக்குடன் சேர்த்து உட்கொள்ளவும். ஸ்திரீகளின் சேர்க்கையால் ஏற்பட்ட சுக சந்நிகள் போகும்.

## வெடி சந்நிக்கு
## கடுக்காய் பிஞ்சுக் கடாயம்

கடுக்காய்ப் பிஞ்சைப் புடமிட்டுக்
கதித்தத் தூள்செய் திந்துப்பும்
அடுத்த மிளகு திப்பிலியும்
மைவாய் வெதுப்பிப் பொடியாக்கித்
தடித்த சதா வரிக்கிழங்கு
தண்ணீர்தனிற் போட்டருந் துவையேல்
வெடித்த சந்நி சிலேத்துமமும்
விலகிப் போகு மேழுநாளில். 224

(இ-ள்.)

கடுக்காய்ப் பிஞ்சைப் புடமிட்டு சாம்பாராக்கி இதனுடன்
பொரித்த இந்துப்பு
,, மிளகு
,, திப்பிலி

இவைகளையும் சேர்த்துத் தூள்செய்து, வாயிலிட்டுக் கொண்டு தண்ணீர்விட்டான் கிழங்குச் சாற்றை உட்கொள்ளவும். 7 நாட்களுள் வெடி சந்நிகள் தீரும்.

## வெடி சந்நிக்கு
## நன்னாரி எண்ணெய்

வெடிசந்நிக் கிசை நன்னாரி
விளம்புசெவ் வள்ளி யுள்ளி
வெடிதரு தேவி யோடே
மதுரந்திப் பிலியா வாரை
கடிமிள குடனே கொள்ளுக்
கனநிலக் குமிழீ தன்றிப்
படிவேம்பி னுடன் வெளிச்சைப்
பிசினிவை பரிவாய்த் தேடே. 225

தேடியோர் வகைக்கி ரண்டு
காசெடை சேர்நல் லெண்ணெய்
கூடிடச் சேர்த் தரைத்துக்
கொடுத்திடிற் கழஞ் சிரண்டு
வாடலுற் றோடு மந்த
வளர்வெடி சந்நிதான் பின்
னாடிது தன்னிற் கீர்த்தி
நாடோறும் வளரும் பாரே. 226

(இ-ள்.)

| | |
|---|---|
| நன்னாரிவேர் | செவ்வள்ளிக்கொடி |
| பூண்டு | சீதாசெங்கழுநீர் |
| அதிமதுரம் | திப்பிலி |
| ஆவாரை | மிளகு |
| நிலக்குமிழ் | வேப்பம்பருப்பு |
| வெளிச்சைப்பிசின் | |

இவைகள் வகைக்கு 2 வாரகனெடை எடுத்துச் சூரணித்து, நல்லெண்ணெயுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் 2 கழஞ்சு எடுத்து உட்கொள்ள வெடி சந்நிகள் தீரும்.

## புக்கு நேத்திர சந்நியின் குணமும் திரிபலாதி கஷாயமும்

புக்குநேத் திரமாஞ் சந்நி
பொருந்திடி லழுகை யுண்டாம்
உக்கிரமான காய்ச்ச லுண்
டாக்கும் நினைவு மாறும்
சக்குத்தான் குழிவு காணுந்
தகவன்றித் திமிருண்டாகும்
இக்குணம் யாவு முண்டா
மிதற்குநீ மருந்து செய்யே. 227

திரிபலை கோரை யின்றன்
கிழங்கொகு சிறுகாஞ் சோறி
மருவுபேய்ப் புடல்பேய்ப் பீர்க்கு
மரமஞ்சள் மஞ்ச ளொவ்வொன்
றிருகாசி னெடை கடாயஞ்
செய்துநல் லினியதேன் பின்
பொருவுதிப் பிலிசேர்த் தீந்தாற்
போம்புக்கு நயன சந்நி. 228

(இ-ள்.)

காரணமில்லாமல் அழுவான். கண்கள் குழிவிழுந்து போகும். அதிகக் காய்ச்சலடிக்கும். நினைவு மாறும். உடம்பில் ஒரு விதமான மதமதப்பு உண்டாகும். இவை புக்குநேத்திர சந்நிக்குறிகளாம்.

இதற்கு மருந்து;-

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| நெல்லிவற்றல் | கோரைக்கிழங்கு |
| சிறுகாஞ்சோறிவேர் | பேய்ப்புடல் |
| பேய்ப்பீர்க்கு | மரமஞ்சள் |
| மஞ்சள் | |

இவைகளை 2 காசெடை வீதம் எடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் வார்த்து அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாகும் வரை வற்ற வைத்து வடிகட்டி தேன், திப்பிலித்தூள் இவ்விரண்டையும் சேர்த்துப் பருகவும். புக்குநேத்திர சன்னிகள் தீரும்.

**புக்குநேத்திர சந்நிக்கு**
**நிலவேம்பு கடாயமும், கலிக்கமும்.**

நிகழ்புக்கு நயன சந்நி
நிலவேம் போர் பலமரைத்துத்
தகவுறுகாடி சேர்த்துத் தக்க
தேன் விட்ட ருந்திப்
பகருந்திப் பிலியு முப்பம்
பரந்திட வரைத்துக் கண்ணிற்
சகிக்கவுஞ் சனமு மிட்டாற்
றானகன் றோடிப் போமால். 229

(இ-ள்.)

நிலவேம்பு 1 பலம் எடுத்துக் காடிவிட்டு நன்றாக அரைத்துத் தேன் சேர்த்துப் பருகவும். பின் இந்துப்பு திப்பிலி இவ்விரண்டையும் தண்ணீரிழைத்துக் கண்களில் கலிக்கமிட சந்நிகள் தீரும்.

## நயனச் சந்நிக்கு நஸ்யம்

மிளகுடன் வசம்பு நல்ல
வியன் பெருங்காயமூன்றும்
வளரிருப்பை யிலைச் சாற்றில்
வள நசியஞ் செய்திட்டாற்
கிளர்புக்கு நயனச் சந்நி
கெடுமிதற் கைய மில்லை
குளிர் கடற் புவி யோருய்யக்
குடமுனி யுரைத்த தாமே 230

(இ-ள்.)

மிளகு வசம்பு
பெருங்காயம்

இவைகளைச் சமமெடுத்து இலுப்பையிலைச் சாற்றில் அரைத்து மாத்திரையாகத் திரட்டி வைத்துக்கொள்ளவும். இதனைத் தண்ணீரிலிழைத்து மூக்கில் நஸ்யமிடவும். நயன சந்நிகள் தீரும்.

## புக்குநேத்திர சந்நிக்கு நாபி மாத்திரை

திரிகடு கிரத நாவி
திகழ்நெல்லி கடுக்காய் தன்னோ
டுரிய வெங் காரம்
நேர்கொண் டுயரிஞ்சிச் சாற்றரைத்தே
யுருவளர் துவரை யென்ன
வுருட்டிநற் பஞ்ச கோலந்
தருகடாயத் தீந்தாற் போஞ்
சார்புக்கு நயனச் சந்நி. 231

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, நாபி
பொரித்த வெங்காரம்
சுக்கு மிளகு
திப்பிலி கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்

இவைகளைச் சமனெடுத்து இஞ்சிச்சாறு விட்டு நன்றாக அரைத்து, துவரையளவு உருட்டி பஞ்சகோலம் (திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு) கஷாயத்துடன் உட்கொள்ள புக்கு நேத்திர சந்நிகள் தீரும்.

**கொட்டைச் சந்நிக் குறிகள்**

கொட்டைச் சந்நிக் குணஞ்சொல்வேன்
குலவுபூதச் சுரத்தின் மேற்
பட்டைந்தா நாள் வரும்வந்தாற்
பார்க்கக்கழியு மிரத்த மதாய்
மட்டிலாத நீரிறங்கும் வாயி
நீரா யோக காளஞ்
சட்டென் றெடுக்குந் தலைப்பிரட்டுக்
கொள்ளுந் தன்னா வெழும்பாது 232

பாதமதி கொடுத்திடும் வாய்முற
கங் கொறிக்கும் பரணிதா
னோது கொட்டை நாற்பதுபோ
லுயரச் சென்று கீழிறங்கும்
மீதிக் குணங்கள் கண்டாயேல்
விரைந்து மருந்து செய்துதவு
சாதல்வாரா துயிர் பிழைப்பன்
றகுமன் னதற்கு மருந்துகேளே 233

(இ-ள்.)

பூதகரத்தின் மேல் 5வது நாளன்று இந்த சந்நி உண்டாகும். ரத்தக் கழிச்சல் அதிகமாக சிறுநீர் பெருகுதல், வாயில் நீர் ஊறல், ஓக்காளம், தலைசுற்றல், நாக்கையசைக்க முடியாமை, பாதத்தில் அசதி வாய், முகம் கோணுதல், முதலிய இக்குணங்கள் கண்டால் உடனேயே மருந்து கொடுக்க வேண்டும். நோயாளியும் பிழைத்துக்கொள்வான்.

## கொட்டை சந்நிக்கு மருந்து

மருவு வேம்பு புங்கிருப்பை
மற்ற நிலவேம்பு பிவற்றின்வேர்
முருகார் சீந்திற்றண்டாடா தொடை
யினியிலைவேம் முயிற்று முட்டை
பரவு மெல்லா மோரனவாய்
நறுக்கிப் போட்டப் பதக்குநீர்
விரவட்டு நாலி லொன்றாய்
விரும்பிக் காய்ச்சி யிறக்கிடே. 234

இறக்கிடந்தக் கடாயத்தி
லிந்துப் போம மதிவிடயம்
உறைக்குஞ் சுக்குக் கொத்தமல்லி
யுயர்சீர கத்தினுடன் வசம்பு
நிறுக்கும் நற்றிப் பிலியெல்லாம்
நேராய்ப் போட்டுக் கடாயம் செய்
திருத்து மூன்று நாளுதவி
லேகு மந்தர் சந்நியே 235

(இ-ள்.)

| | |
|---|---|
| வேம்பின் வேர் | புங்கம்வேர் |
| இலுப்பைவேர் | நிலவேம்புசமூலம் |
| சீந்தில்கொடி | ஆடாதோடையிலை |
| முசுருமுட்டை | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகும் வரை வற்றவைக்கவும். இக்காஷாயத்துடன் இந்துப்பு, ஓமம், அதிவிடம், சுக்கு, கொத்தமல்லி விதை, சீரகம், வசம்பு, திப்பிலி இவைகளின் சூரணத்தை சமனெடையிட்டு மறுபடியும் நாலிலொன்றாக வற்றவைத்து இறுத்து 3 நாட்களுக்கும் உள்ளுக்கும் கொடுக்கவும். கொட்டை சந்நிகள் தீரும்.

## முருகு சந்நி லக்ஷணமும் பிரப்பங் கிழங்கு கடாயமும்

முடுகு சந்நி தானடுத்து
கரத்தின்மீது முதிர் வுற்றே
யடைவா யேழா நாளில்
வருமது புண்ணடுக்கல் குளிர்ச்சியுறுந்
திடமே வெறிக்கப் பார்க்குமுதா
சீனமாப் பேசுங் காய்ச்சலுறும்
அடி கை நாக்கு வணங்கா
தீதன்றிக் குறிம ளுண்டின் னும். 236

இன்னு முடுகு சந்நிக்கே
யிசைந்த பிரப்பங் கிழங்குடனே
பொன்னின் முசுட்டை முயிற்று
முட்டை புகலுமடப்பங் கொட்டையுடன்

மன்னுமாடா தொடை விண்டுக்
காந்திமதிக் குநில வேர்தான்
பின்னும் வெண்ணை யறுகின்வேர்
பேயின் புடலின் னவை யெல்லாம் 237

எல்லாம் நறுக்கிச் சமனாப்
போட் டினியநாலு மரக்காநீர்
மெல்லவிட்டே யெட்டி லொன்றாய்க்
காய்ச் சியீது தானிறக்கிச்
சொல்லுந் தேவ தாரமொடு
சுக்கிந்துப்புக் கடுகுரோ கணி
வல்லக் கடுக்காய்த் தான் றிக்காய்
பருவு சாதிக் காயுடனே. 238

நேர்திப் பிலிநல் லதிவிடயம்
நிகழ்த்து மெல்லாஞ் சமனாக்கொண்டு
டாரவிடித் திட்டிரு காசினளவு
தூள் போட் டுழக்களவு
சாரக்கடா யங்குடித் திட்டாற்
றானேமூன்று நாள தனிற்
றூரவோடிப் போய்விடுமே சொன்ன
முடுகு சந்நி தான். 239

(இ-ள்.)

ஜ்வரம் அடித்த 7வது நாளன்று இச்சந்நி காணும். நடுக்கல், சிலுசிலுப்பு, வெறித்துப்பார்த்தல், உதாசீனமாகப் பேசுதல், அடிநாக்கு, கை முதலானது வணங்காமல் இருப்பது முதலிய குறிகள் காணப்படும்.

இதற்கு மருந்து:-

| | |
|---|---|
| பிரப்பன் கிழங்கு | பொன்முசுட்டை |
| முயிற்று முட்டை | வாதாங்கொட்டை |

ஆடாதோடை
விஷ்ணுகிராந்தி
நிலவேம்பின் வேர்
வெள்ளறுகு வேர்
பேய்ப்புடல்

இவைகளை நசுக்கி சுத்தஜலம் 4 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து இதனுடன்

தேவதாரம்
சுக்கு
இந்துப்பு
கடுகுரோகிணி
கடுக்காய்த்தோல்
தான்றித்தோல்
சாதிக்காய்
திப்பிலி
அதிவிடயம்

இவைகளையும் இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு, ஒரு உழக்கு கஷாயத்திற்கு 2 காசளவு தூள் போட்டுப் பருகவும். 3 நாட்களில் முடுகு சந்நிகள் தீரும்.

## முடுகு சந்நி லக்ஷணம்

பல்லாலுறுக்குஞ் சுரமெழுப்பும் பார்வை
நெறிக்குங் கண் குழியும்
மெல்லத் துயிலும் போய்விடுமே
மேவும் பலம் போமாகாரஞ்
சொல்லிது தான் முடுகுசந்நிச்
செய்கையாகு மிது தனக்கு
வல்ல குடிநீ ரொன்றுளது
மன்னு மதனைக் கேளினி நீ. 240

(இ-ள்.)

பற்களை நற நற என்று கடிப்பான், சுரமடிக்கும். பார்வை நெறியும், கண்கள் குழிவிழும் தூக்கமிராது. உடல் பலம் குறைவடையும். ஆகாரம் செல்லாது. இதற்கு மருந்தாவது.

**கண்டங்கத்திரிக் கஷாயம்**

நீடுகண்டங் கத்திரி பேய்ப்
புடலினோடு நிகழ்ந் திடுபற்
பாடமூன்றுஞ் சமூலமே பகருஞ்
சுக்குக் கடுகு ரோகிணி
நாடுங் கார்போ கரிசியோடு
நல்ல கொத்த மல்லிசமனாய்
கூடப்படிநீ ருழக் காகக்
காய்ச்சிக் கொடு நீகுணமாகும். 241

(இ-ள்.)

| | |
|---|---|
| கண்டங்கத்திரி | பேய்ப்புடல் |
| பற்பாடகம் சமூலம் | சுக்கு |
| கடுகரோகிணி | கார்போகலரிசி |
| கொத்துமல்லி விதை | |

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்தில் விட்டு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சிக் குருக்கி இறுத்துக் கொடுக்கவும். முடுகு சந்நி தீரும்.

**நேத்திர சந்நி**

தாக சுரத்தின் மேலேபத்
தாநாள் வருநேத் திரசந்நி
யாகு மறிவுங் கலக்கமுமா
யிருக்குஞ் சேலை யதுவுடுக்கா

தேகுங்கால்கை சுருள் வாங்கு
மிரண்டு கண்ணும் விழியாது
வாகார் கண்ணி னீர்வடிய்
மருண்டு பார்க்குந் தலைபிரட்டும். 242

பிரட்டொன் றில்லை யிதுகண்ட
பிறகு தொண்ணூற் றாறாகப்
பிரிக்கும் நாழி தனிலிநோய்
பிரிந்தா நன்றாம் பின்னுமதி
இருக்கு மாகில் மரணமேலே
யதுமென் னச்சொல்லி விடலாம்
விரிக்குங் குடிநீர் தன்னிலொரு
மருந்து மேவக் கொடுத்திடே. 243

கொடுப்ப தாகி லிந்துப்புக்
குலவுந் தேவ தாரஞ்சுக்
கடுத்தவுயர் சாத்திரவேதி யாகு
நான்குஞ் சமன் கொண்டு
பொடித்துக்காசி னளவு தூள்
போட்டே யுழக்குக் குடிநீரிற்
றொடுத்து மூன்று நாளுதவு
சுத்தமாகும் பார்த்தி டலாம். 244

(இ-ள்.)

தாகஜ்வரத்தில் 10வது நாள் உண்டாகும் நேத்திர சந்நியின் குணங்களாவன. அறிவுகலங்கும், சேலையை அவிழ்த்தெறிவாள், கால், கைகளில் மதமதப்பு உண்டாகும். இருகண்களும் விழிக்க இயலாது. கண்ணீர் வடியும் பயந்து பயந்து நாலாப் பக்கங்களிலும் விழிப்பாள், தலை புரட்டலுண்டாகும். இந்நோய் ஏற்பட்டு 96 நாழிகைக்குள் சிகிச்சைக்கு வசப்பட்டால், சுகம் இல்லையெனில் மரணம் நிச்சயமென்று சொல்.

மருந்து:

இந்துப்பு
சுக்கு
தேவதாரம்

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து, ஒரு காசளவு எடுத்து ஒரு உழக்கு மேற்சொன்ன கண்டங்கத்திரிக் கஷாயத்துடனே பருகவும். 3 நாட்களுக்குள் வியாதி தீரும்.

## பூத சந்நிக் குறிகள்

பூதசந்நி வாதபயித் தியத்தின்
மீது பொருந்தி வரும்
இதுவயிறு பேதி செய்யு
மிரவும் பகலும் பற்கடிக்குந்
தீதாமிரத்தம் போலே நீரிறங்குஞ்
சீறி யெழுந் திருக்கும்
பேதமின்ன தெலாங் காணிற்
பின்னீயதற்கு மருந்து கேள் 245

கேளாய் சீந்திற் றண்டுடனே
கஞ்சாங் கோரை கிளர்நொச்சி
நீளும்வேர்பொன் முசுட்டைவேர் நிலவேம்
பாடா தொடை நிலவேர்
தாளார் முத்தக் காசுடனே
தகுபேய்ப்புடல் பற் பாடகமே
நாளார் நொச்சி முயிற்று
முட்டை நல்லகண்டங் கத்திரிவேர். 24

நன்றாய் நசுக்கிப் பதக்குநீர்
நண்ண வார்த்து நாலிலொன்றாய்த்
துன்றாக் காய்ச்சித் திரிகடுகு
தூயவிந்துப் போம மொடு

கன்றாத் தேவ தாரஞ் சாதி
திரத்தின் வேதி கடுரோகணி
யொன்றாச் சமனாப் பொடித்து
முந்தா ளுழக்குநீரிற் கலந்தருந்தே. 247

(இ-ள்.)

வாதபித்த சந்நியின்மேல் வரக்கூடியது பூதசந்நியாகும். வயிறு பேதி, இரவிலும் பகலிலும் பற்களை நறநற வென்று கடித்தல், இரத்தம் போல் மூத்திரமிறங்கல், அதிகமான கோபம் முதலான குறிகள் காணும். இதற்கு மருந்தாவது:

| | |
|---|---|
| சீந்திற்கொடி | கஞ்சாங்கோரை |
| வெண்நொச்சிவேர் | பொன்முசுட்டைவேர் |
| நிலவேம்பு | ஆடாதோடைவேர் |
| கோரைக்கிழங்கு | பேய்ப்புடல் |
| பற்பாடகம் | கருநொச்சி |
| முசுரு முட்டை | கண்டங்கத்திரிவேர் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்துச் சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நன்றாக வற்றவைக்கவும். இதனுடன் சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, ஓமம், தேவதாரம், சாத்திரவேதி, கடுகரோகிணி இவைகளை இடித்த சூரணத்தையிட்டுப் பருகவும். 3 நாட்களுக்கு 1 உழக்கு கஷாயம் வீதம் பருகவும்.

## புக்கு நேந்திரக் குறிகள்

நிகழ்புக்கு நயன சந்நி
நிலவேம் போர் பலமறைத்துத்
தகவுறு காடி சேர்த்துத்
தக்க தேன் விட்டருந்தி

மிளகுடன் வசம்பு நல்ல
வியன் பெருங்காய மூன்றும்
வளரிருப் பையிலைச் சாற்றில்
வளமாகச் சேர்த் தருந்தே. 248

(இ-ள்.)

நிலவேம்பு 1 பலம் எடுத்துக் காடி சேர்த்தரைத்துத் தேன் விட்டு அருந்தவும்.

மிளகு, வசம்பு, பெருங்காயம் மூன்றையும் இலுப்பையிலைச்சாறுவிட்டு அரைத்துக்கொடுத்தாலும் புக்குநேத்திர சந்நி தீரும்.

**செவிட்டு சந்நியின் குணமும், மருந்தும்**

அவிகாய சுரத்தின் மேலே
யிணைத்திடுஞ் செவிட்டு ச்சந்நி
புவிமிசை யுடல் கனக்கும்
புகன்றிடு திமிருண் டாகுஞ்
செவியிடை யிரைச்சல் காணுஞ்
சீவிழுஞ் சத்தங் கேளா
திவையன்றித் தலை நோவுண்டா
மிருமுநீ டுடம்பு வேர்க்கும் 249

உடம்பு புண் ணாயிருக்கும்
மந்தமா முரமு நோகும்
இடம்பெரு கபால சந்நி
யென்றிதைச் சொல்லவு மாகுந்

தொடங்கிது தனக்கு வெட்டி
வேரொடு தொடர் சங்கம்வேர்
விடுங்குட்டிக் குமிழ்வேர் வண்ணக்
குறிஞ்சிவேர் வேலம் வேரே. 250

வேரிவை யன்றியாடா தொடை
நொச்சி மென் கொழுந்தோ
டோரும்பேய்ப் புடலீ தெல்லா
யொன்றாயோ ரளவாய்க் காய்ச்சி
சாரும்வாய் விளங்கந் தான்றி
சாதிக்காய் கடுக ரோகிணி
தேருறு கடுக்காய் நல்ல
திரி கடுகுட னிந்துப்பு 251

புகலுமிவ் வெல்லாந் தேடிப்
பொருந்துறச் சமனாத்தூள் செய்
திகழ்விலா விரண்டு காசி
னெடைதூளோ ருழக்கு நீரிற்
றகவுறக் கலந்து முந்நாள்
சார்ந் திடோ ராறுபோதுந்
திகழ்வுறக் குடிக்க நல்கிற்
றீருமச் செவிட்டுச் சந்நி. 252

(இ-ள்.)

அபிகாய (அபிகாத-அடிபடுவதனால் ஏற்பட்ட) ஜ்வரத்தின் மேல் ஏற்படும் செவிட்டு சந்நியின் லக்ஷணங்களாவன: உடலில் பாரம் உண்டாகும். மதமதப்பு ஏற்படும். காதில் இறைச்சலுண்டாகும். காதிலிருந்து சீழ் வெளியாகும். சத்தம் கேளாது. தலை வலி ஏற்படும். இருமலுண்டாகும். உடலில் வியர்வை அரும்பும். உடம்பு புண்ணாகும். மார்பு நோயும் ஏற்படும். இதனைக் கபால சந்நி என்றும் கூறலாம். இதற்கு மருந்து:

வெட்டிவேர்
சங்கம்வேர்
சிறுகுமிழ்வேர்
குறிஞ்சிவேர்
வெலம்வேர்
ஆடாதோடைவேர்
நொச்சிக்கொழுந்து
பேய்ப்புடல்

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடிகட்டி,

வாய்விடங்கம்
தான்றிக்காய்
சாதிக்காய்
கடுகுரோகிணி
கடுக்காய்த்தோல்
சுக்கு
திப்பிலி
இந்துப்பு
மிளகு

இவைகளை இடித்து வஸ்த்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு முன் கஷாயம் 1 ஆழாக்குக்கு 2 வராகனெடை சூரணம் போட்டுப்பருகவும். இம்மாதிரி 3 நாட்கள் 6 வேளை உட்கொள்ளவும். செவிட்டு சந்நிகள் தீரும்.

**ருத்திர சந்நிக்கு**
**குடிநீர் எண்ணெய், புகை, நஸ்யம்**

அதிதாபம்வயி றுளைச்சல் அசதி
நல் லுடம்பு நோவு
பொதிதரு மெலும் பெலாமுட்
புண்ணுறக் குடைதல் தாக
மிதமின்றி மிகப்பு கைந்தே
மிருமுத லெல்லாங் காணிர்
லுதவுமிப் புவி யினோரீ
துருத்திரச் சந்நி யென்பர். 253

(இ-ள்.)

அதிகமான எரிச்சல், வயிற்றுவலி, அசதி, உடல் முழுவதிலும் முட்கள் குத்துவதுபோல் உடம்புவலி, தாகம், புகைச்சலுடன் இருமல், இவை ருத்திர சந்நிக் குறிகளாகும்.

**சந்நிக்கு இலாமிச்சம் வேர்க் கடாயம்**

சந்நிமற் றிது பொல்லாது
சாற்றிதற் கிலாமிச்சம் வேர்
பன்னுகோ ரைக்கிழங்கு பற்
பாடகஞ் சந்தனத் தின்
றுன்னிய சிராயி னோடு
சுக்கிரு வேலி யாறும்
முன்னுற வகைக் கிரண்டு
காசெடை முயன்றுதூள் செய்யே. 254

செய்திடத் தூளை யாவின்
பால்படி திகழி ரண்டி
லெய்தவே போட்டு மெல்ல
வெரித்துழக் காகக் காய்ச்சி
மெய்யுருத் திரனைப் போற்றி
யருந்திடில் விளம்புஞ் சந்நி
பையவே மூன்று நாளிற்
பதுங்கிப்போம் பிழைத்தல் கூடும். 255

(இ-ள்.)

| | |
|---|---|
| விளாமிச்சம்வேர் | கோரைக்கிழங்கு |
| பற்பாடகம் | சந்தனத்தூள் |
| சுக்கு | வெட்டிவேர் |

இவைகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்து இடித்து வஸ்த்திரகாயம் செய்து பசுவின் பால் 2 படி விட்டு எரித்து ஒரு உழக்காக வற்றவைத்து ருத்திரனை நினைத்து அருந்தும் பக்ஷத்தில் 3 நாட்களுள் ருத்திராங்க சந்நிகள் நீங்கும்.

## உருத்திர சந்நிகளுக்கு முஸ்தாதி கஷாயம், சந்தனாதி தூமம்

பிழைத்திட விதிற்றீரா தேற்பின்
னொரு மருந்து சொல்வேன்
பழிப்பில் கோரைக் கிழங்கு
பற்பாடங் கொன்றையின் வேர்
செழித்தநன் னாரியின் வேர்
திரி கடுகுடன் கடுக்காய்
கழித் திடாத் தேவதாரங்
கடாயமிட் டருந்த நல்கு

நல்லசந் தனமேற் செய்ய
சந்தனம் நவில லுற்ற
வல்லகா ரகிலி னோடு
வள்ளகில் மன்னு கோரை
மெல்லிய கிழங்கிவ் வைந்தும்
வருப்பொடு சமனாத் தூள்செய்
தெல்லுறு தழலில் போட்டே
யெதிறு புகையுங் காட்டே. 257

காட்டிடிப் புகையுமன்றிக் கடுஞ்
சித்தப் பிரம சந்நிக்
கீட்டிய வெண்ணெய் பண்ணி
நசியஞ் செய்திலங்கு காதி

ஓட்டிமற் றுடம்புமேலு முறையச்
செய் யிந்த மட்டுங்
கூட்டுதல் மனிதர்செய் கைலதன்
மேற்றெய் வச் செய்கை. 258

(இ-ள்.)

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | பற்பாடகம் |
| கொன்றைவேர் | நன்னாறிவேர் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தூள் |
| தேவதாரு | |

இவைகளைச் சமனெடுத்து 8 மடங்கு சுத்தஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டி அருந்தவும்.

| | |
|---|---|
| சந்தனத்தூள் | செஞ்சந்தனம் |
| கார்அகில்த்தூள் | வெள்ளகில்தூள் |
| கோரைக்கிழங்கு | |

இவைகளின் தூள் சமன் எடுத்து அணலிலிட்டுப் புகைக்கவும்.

இதனன்னியில் சித்தப்பிரமைச் சந்நியில் காணும் எண்ணெயைத் தயார் செய்து நஸ்யமிட்டாலும், காது, உடம்பு முதலான இடங்களில் தேய்த்தாலும் குணமாகும்.

## விஷபாக சந்நிக்கு

நன்னாரி பெரு மருந்து
நறுஞ்சிறு பீளை வெள்வேல்
மன்னிடு மவுரி மேனி
வன்னற்றுச் சிறுகாஞ் சோறி

பன்னுசிற் றவரை யோடு
பகரஞ்சா றணை தானீடு
புன்மைதீ ருழலை யகற்
றிபுளிநற ளையின் கிழங்கு. 259

குலவிடஞ் சிலையினிலை குறிவயி
ரவ னென் றோது
பலவற்றின் வேருமொவ் வொன்றிரு
காசின் பாரங் கொண்டு
நலமுற வரைத் தாவின்பா
லிரு நாழி நாழிதானா
முலகினி லிழிந்த தாக
வுரைத்திடு கழுதை யின்பால். 260

கழுதையி னிலத்தி தன்னைப்
பிழிந்தநீ ரிருதான் கொண்டு
மொழியு மிம்மூன்று முன்பு
மொழிந்திடும் மருந்திற் கூட்டிப்
பழுதகல் நெய்யிற் பாதி
பாதியெண் ணெயி லெரித்து
விழும்நெய் யருந்தி யெண்ணெய்
மேற்பூசில் விடபாகம் போம். 261

(இ-ள்.)

| | |
|---|---|
| நன்னாரிவேர் | பெருமருந்து வேர் |
| சிறுபீளை வேர் | வெள்வேலம்வேர் |
| அவிரிவேர் | குப்பைமேனிவேர் |
| வன்னெற்று | |
| சிறுகாஞ்சோறிவேர் | சிற்றவரைக்கிழங்கு |
| சாறணைக்கிழங்கு | உழலையகற்றிவேர் |
| புளிநறளைக்கிழங்கு | (வெதுப்படக்கி) |
| அஞ்சிலை வயிரவன் கிழங்கு | |

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து பசும்பால் விட்டு நன்றாக அரைத்து

| | |
|---|---|
| பசுவின்பால் | இரண்டுபடி |
| கழுதைப்பால் | இரண்டுபடி |
| கழுதை லத்திச்சாறு | அரைபடி |

இவைகளை ஒன்று கலந்து இரு பாகங்களாக்கி ஒரு பாகத்தை பசுவின் நெய்யுடன் கலந்து எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். மறுபாகத்தைச் சுத்தமான நல்லெண்ணெயுடன் கலந்து எரித்து வைத்துக்கொள்ளவும். நெய்யை உள்ளுக்குச் சாப்பிட்டும், எண்ணெயை மேலுக்குப் பூசியும் உபயோகிக்க விஷபாகங்கள் தீரும்.

**சந்நிவிஷம், பேய், உன்மத்தம் தீர**
**கலிக்கம்**

இரதமோர் கழஞ்சு மற்றை
கந்தக மிசைக்கு மூன்றாய்
விரவிடு கழஞ்சாம் வெள்ளைச்
சாறணை வேர்நேர் வாளங்
கருதுநந் நாற கழஞ்சு
கலந்திவை சம்பீரச் சாற்
றரைபட வரைத்துக் கொம்புப்
பரணியி லடைத்துக் கொள்ளே. 262

கொண்டதை யிரவி முன்னர்
வைத்திடு குல சம்பீரத்
தண்டருஞ் சாற்றி லங்கோர்
பலறெனத் தக வுரைத்து

விண்டிரு விழியிற் சேரு
விடந்தீருஞ் சந்நி தீரும்
மிண்டிய பேயுந் தீரும்
விளம்பு மர்தமுந் தீரும். 263

ஊமை பேலே யிருக்கு
முமர்தந் தனக்கிரும்பி
னாமந்தக் கொழுவைக் காய்ச்சிச்
சுடுவான்போ லச்சங் காட்டிற்
றீமைசெய் யந்நோய் தீருந்
திகழ்பத்து மார நோய்க்கு
நேமித்த கிரியையாற்று நெய்பால்
பத்தி யத்திற் காகும். 264

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | | 1 கழஞ்சு |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் | 3 கழஞ்சு |
| ,, | நேர்வாளம் | 4 கழஞ்சு |
| ,, | சாரணைவேர் | 4 கழஞ்சு |

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு கருப்பாகும் வரை நன்றாக உறவாகும்படி அரைத்து பின்னர் மற்ற சரக்குகளைப்போட்டு, எலுமிச்சம்பழச்சார் விட்டு நன்றாக அரைத்துக் காயவைத்து, ஒரு மாட்டுக்கொம்பு பரணியிலடைத்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது ஒரு பயிறளவு எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் இழைத்துக் கண்களில் கலிக்கமிட விஷ சந்நிகள், பேய்கள், உன்மத்தம் முதலியவை தீரும்.

ஊமையைப்போல இருக்கும் உன்மத்த ரோகிக்கு இரும்பைப் பழுக்கக்காய்ச்சி சுட்டுவிடுவது போல் பயமுறுத்த வேண்டும். அப்போது அந்நோய் தீரும். அபஸ்மார நோய்க்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்யவும்.

பத்தியம்: நெய், பால் முதலியவை கூட்டவும்.

குறிப்பு; உமர்தம் என்பது உன்மத்தம் அல்லது பைத்தியம் என்பது.

அபத்துமாரம் என்பது அபஸ்மாரம் அல்லது காக்கைவலிப்பு என்னும் வியாதி

### சந்நியின் மேற்கண்ட தலைவலிக்கு

சந்நிமேற் றலைவலிக்குச் சாரந்திடு
சிற்றா முட்டி
தென்னுறு கடுகு ரோணி
செங்கழ நீர்க் கிழங்கு
தன்னிகர் கோட்டநீள் சந்தனச்
சிறாயிலா மிச்சம் வேர்
மன்னிவை யரைத்து நெய்யிற்
பூசிட மாறிப் போமால். 265

மாறிடு மிரவிற் கஞ்சவளை
யஞ்சந்தனச் சிறாய் மேற்
றேறிலா மிச்சை சீந்தில்
சிறியகாஞ் சொறி சீதேவி
கூறிடு முத்தக் காசு
குலவு கீழ்காயி னெல்லி
காறுவேப் பீர்க்குச் சுக்குக்
கடாயமிட் டருந்தல் வேண்டும். 266

(இ-ள்.)

| | |
|---|---|
| சிற்றாமுட்டி | கடுகரோணி |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |
| சந்தனத்தூள் | விளாமிச்சம்வேர் |

இவைகளைத் தூள் செய்து நெய்யில் குழைத்து மேலே பூசவும்.

தாமரை வளையம் சந்தனசிராய்
விளாமிச்சம்வேர் சீந்தில்கொடி
சிறுகாஞ்சோறிவேர் சீதாசெங்கழுநீர்கிழங்கு
கோரைக்கிழங்கு கீழாநெல்லி
வேப்பீர்க்கு

இவைகளை இடித்துக் கஷாயமிட்டு உட்கொண்டாலும் தலைவலி நீங்கும்.

## விஷத்திற்கு கந்தகாதி அஞ்சனம்

கெந்த மிரத மரிதாரங்
கிளர்ந்த நிர்விட மிந்துப்பு
வந்த கருஞ்சீ ரகங்காய
மனோசிலை நாவி நவச்சாரம்
இந்த மருந்து சமன்பத்து
மேற்கவாளம் பங்கு பத்தும்
நந்தா மணிச்சாற் றாலரைத்து
நறுந்தேங் காய்ப்பால் வார்த்தரையே. 266

அரைத்த மருந்தை யீயமதின்
றான சிமிழிற் றானடைத்து
வருத்துஞ் சந்நி பதின்மூன்று
மற்றுமுயல் நோய் காக்கைவலி
கிரைத்துத் தலையிற் குடோரியிட்டுத்
தேய்த்து விழியிற் கலிக்கமிடத்
தரைக்குள் நில்லா விடமெல்லாந்
தானே யோடுந் தப்பாதே. 267

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, நெல்லிக்காய்கந்தகம்
,, தாளகம்
,, நிர்விஷம்
,, மனோசிலை
,, நாபி
பொரித்த நவச்சாரம்
, இந்துப்பு
,, காயம்
கருஞ்சீரகம்,

இவைகள் வகைக்கு 1 பங்கு சுத்திசெய்த நேர்வாளம் 10 பங்கு இவைகளைக் கல்வத்திலிட்டு உத்தாமணிச் சாறுவிட்டு நன்றாக அரைக்கவும். பின் தேங்காய்ப்பால் விட்டு அரைக்கவும். இதனை ஈயச்சிமிழில் பத்திரப்படுத்தவும். முயல்நோய், காக்கை வலி முதலானவைகளுக்கு தலையைச் சிரைத்து குடோரியிட்டு இம்மருந்தை நன்றாகத் தேய்த்து விழியிலும் கலிக்கமிட விடங்கள் தீரும்.

**சுரசந்நி 18க்கும், தலைகுத்து, பிடரிவலி**
**சுரம், தலைவலி, சந்நிக்கும்**
**வேப்பெண்ணைத் தைலம்**

நவில்வேப் பெண்ணெ யுரிதானாம்
நல்ல வெள்ளி நெய்படிகா
லிவைதா னிரண்டுங் கலந்து
பெருங் காயமிரண்டு வராகனெடை

கவியுஞ் கருஞ்சீ ரகமொன்றே
கலாஞ் சுக்குத் தானிரண்டு
தவலின் மிளகொன் றுள்ளிகடு
சாற்றும் வசம்பு வைந்தாகும். 268

ஆகுமேழுந் தனித் தனியே
பொடிசெய் 'ததனி லிருபங்கு
வாகாயெண்ணெ யினிற் போட்டு
மற்றோர் பங்கு கடாயமிடு
வேகுமெண்ணெ யினி லின்னும்
விளம்புசனி குதித்தான் வேரும்
ஏகுஞ் சனிப்பெரு மாள்வேரோ
டிலங்கு மவுரிவேர் சிறுவேர். 269

வேரிலினிய பெருமருந்து மேவு
பேய்த்தும் மட்டி யுடன்
கூறுஞ்சிறிய வழுதலைதூ தளைமேற்
சிறிய குறட்டை நனஅ
னாரிகோழி யவரையைங் காதகண்ட
னவிலி வற்றோ
டொருத் தமதா ளியின்றன்வே
றொவ்வொன் றொருகா செடைகூட்டே. 270

கூட்டி யெரித்து மெழுகுபதங்
கொளுங்கால் வடித்துக் கொண்டெண்ணெய்
யீட்டம் வேறு கடுகுவே
றெடுத்து நீடு சுரஞ்சந்நி
மாட்டுஞ் சுரமேற் றலைநோவு
மன்னு தலைக்குங் திவற்றினுக்கு
நாட்டுமொரு காசெடை யருந்தி
நவில் சன்னி யிலுந்தேய்த் திடப்போம். 271

(இ-ள்.)

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் சின்னப்படி | அரைப்படி |
| சுத்தமான நல்லெண்ணெய் | கால்படி |

இவ்விரண்டையும் ஒன்று கலந்து

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | 2 வராகனெடை | |
| கருஞ்சீரகம் | 1¼ வராகனெடை | |
| சுக்கு | 2 | ,, |
| மிளகு | 1 | ,, |
| கடுக்காய்த்தோல் | 5 | ,, |
| பூண்டு | 5 | ,, |
| வசம்பு | 5 | ,, |

இவைகளைத் தூள் செய்து வைத்துக்கொண்டு 2 பாகமாக்கி ஒரு பங்கை அப்படியே எண்ணெயுடன் கூட்டிக்கொள்ளவும். மற்றொரு பங்குடன் 8 மடங்கு சுத்தஜலம் விட்டுக் கஷாயம் செய்து எண்ணெயுடன் கலந்து பின்னர்,

| | |
|---|---|
| சனிகுதித்தான்வேர் | [1]சனிப்பெருமாள்வேர் |
| அவுரிவேர் | சிறுவேர் |
| பெருமருந்து | பேய்த்தும்மட்டிவேர் |
| சிறுவழுதலைவேர் | தூதுவளைவேர் |
| சிறுகுரட்டைவேர் | நன்னாரிவேர் |
| கோழியவரை வேர் | ஆதண்டம்வேர் |
| உத்தாமணிவேர் | |

இவைகளையும் ஒவ்வொரு வராகனெடை வீதம் கூட்டி மேற்படி கஷாயம் விட்டரைத்து விழுதாக்கி எண்ணெயுடன் கலந்து எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும். பின் தைலம் தனியாகவும் கடுகு தனியாகவும் பிரித்தெடுத்து சுரம், சந்நி, தலைநோவு முதலானவைகளுக்கு 1 காசளவு எண்ணெய் உள்ளுக்குக் கொடுக்கவும். கடுகைத் தலையில் தேய்க்கவும்.

[1]சீனிப்பெருமாள் என்றிருக்க வேண்டும்.

## அரிகர சந்நிக்குறிகள்

தன்னையறி யாதுதா சீனம்
பேசும்பல்லுத் தான் கடிக்கும்
மன்னெவாரி யெழுந் திருக்கும்
மலமுஞ் சலமும் விடாதிருக்கும்
பின்னே நெருஞ்சுங் கட்டுமரி
சுரத்தின் பேரி லஞ்சாநாள்
துன்னுமிது முத்தின மதனிற்
றொலையா திருந்தா மரணமே. 272

(இ-ள்.)

தன் நிலைமையை அறிந்து கொள்ளாமல் எல்லோரையும் உதாசீனம் செய்வான். வாய்க்கு வந்தபடி பேசுவான். பற்களை நறநற என்று கடிப்பான். திடீரென படுக்கையிலிருந்து எழுந் திருப்பான். மலசலம் கழியாது. நெஞ்சுக்கட்டு. கோழை இவற்றுடன் சுரம்வந்த 5வது நாள் ஏற்படும்.

3 தினங்களுக்குள் இச்சந்நி இறங்கவில்லையெனில் மரணம் சம்பவிக்கும்.

## அரிசந்நிக்கு ஆடாதோடைக் கடாயம்

ஆடா தோடையி னிலைவட்டக்
கிலுப்பையன்றி முயிற்று முட்டை
நாடு பேயின் புடலினோடு
நறும்பொன் முசுட்டை மிளகறணை

நீடுஞ்சமனாக் கடாய மிட்டு
நிகழிந் துப்புத் திரிகடுகு
கூடும் பொடிபோட் டுழக்குநீர்
கொளிர்போ மரிநீள் சுரசந்நி 273

(இ-ள்.)

| | |
|---|---|
| ஆடாதோடையிலை | வட்டக்கிலுகிலுப்பை |
| முசுருமுட்டை | பேய்ப்புடல் |
| பொன்முசுட்டை | மிளகறணை |

இவைகளைச் சமனெடுத்து 8 மடங்க சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் கஷாயம் செய்து வடிக்கட்டி,

| | |
|---|---|
| இந்துப்பு | சுக்கு |
| திப்பிலி | மிளகு |

இவைகளின் சூரணம் மூவிரல் கொள்ளுமளவு விட்டு 1 உழக்குக் கஷாயம் உட்கொள்ள அரிநீள் சந்நிகள் தீரும்.

## காய்ச்சலோடு கூடிய சந்நியின் குணமும் மருந்தும்

காய்ச்ச லிலிரு மலெய்திக்
கண்ணினிற் பீளை சார்ந்து
பேச்சினிற் பிதற்றி நீடு
பெருநிலம் புறண்டுஞ் சந்நிக்
கேச்சிலா சிற்றாமுட்டி யிசைநரி
யுடையின் றன் வேர்
வீச்சுறு திராயின் றன்வேர்
மேவுதூ தளையின் றன்வேர். 274

வேர் வட்டக் கிலுப்பை
கண்டங்கத்திரி விளங்கு சங்கி
னோ்பழம் பலம் வகைக்கு
நிலவேரோர் பலங்கொண் டெல்லாம்
ஆர் பழங்காடி தன்னி
லரைத்துவேப் பெண்ணெய் தன்னிற்
சேர்வுற வேரவைத்துத்
திகழ்தலை யதனிற் பூசே. 275

தலையினில் மூன்று நாள்தான்
சார்ந்திட வப்பிக் காசின்
நிலைநிறை யுள்ளுக் கீந்து
நிகழ்காதில் வார்த தடைக்கில்
தொலையுமச் சந்நியுப்புத துவர்ப்
பினிப் புடன் கசப்புப்
பலனிகழ் புளிப்பிவ் வெல்லாம்
பத்தியந் தனக் காகாதாம். 276

(இ-ள்.)

காய்ச்சலுடன் இருமல் அதிகரித்துக் கண்களில் பீளைசாயும். வாயில் வந்தபடி உளருவான். நிலத்தைச் சுரண்டுவான்.

அப்படிப்பட்ட சந்நிக்கு:

| | |
|---|---|
| சிற்றாமுட்டிவேர் | நரிமிரட்டிவேர் |
| திராய்மூலம் | தூதுளைவேர் |
| வட்டக்கிலுகிலுப்பைவேர் | கண்டங்கத்திரிவேர் |

இவைகள் வகைக்கு 1 பலம்

சங்கம் பழம் 1 பலம்

இவைகளைப் பழைய காடி விட்டு நன்றாக அரைத்து வேப்பெண்ணெய் 5 சேர் விட்டுக் குழப்பி, அடுப்பின் மேலேற்றி காய்ச்சிப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தை 2 நாட்கள் தலைக்கு தேய்த்துக்கொண்டு ஒரு காசளவு உள்ளுக்கும் கொடுக்கவும். காதிலும் 2 சொட்டுகள் விடவும். சந்நிகள் தீரும்.

**காய்ச்சலுக்கும், சந்நிக்கும்**
**ஆனந்தபைரவன்**

பச்சைநாகஞ் சாதிலிங்கம் வெண்காரமொடு
பருமிளகு சிறு திப்பிலி
பரிவுடனே சித்திசெய்தே யெலுமிச்சம்
பழச்சாறு தன்னை வார்த்தே
யிச்சையா யெழுநாழி கைசெல்ல வேயரைத்
தெண்ணுசிறு பயறுபோலே
எடுத்துருட் டுண்டையிலி ரண்டிடு முலைப்பாலி
லெந்தச்சு ரத்தி' குமாம். 276

மெச்சவே சுக்குநீர் தன்னிற்கொள் சந்நிசுரம்
வீறிய கழிச்சல் மாந்தம்
விழிசுழிவு செறியாமை வலிகுன்மக் கிராணிசளி
மெய்நோவு தலைநோவு போம்
அச்சமற நீர்கடுப்புப் பாம்புதேள் சன்னி
யறிவற்ற பேய் பூதமும்
மந்நேர மேதீரு நயனத் திலஞ்.ன
மிடா னந்த வயிரவனிதே. 277

(இ-ள்.)

சுத்திசெய்த நாகம்
சுத்திசெய்த சாதிலிங்கம்
பொரித்த வெங்காரம்
மிளகு
திப்பிலி

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக 7 நாழிகை வரை கையோயாமல் அரைக்கவும். பின்னர் சிறுபயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

எவ்விதமான ஜ்வரங்களுக்கும் இந்த மாத்திரையில் இரண்டு எடுத்து முலைப்பாலில் இழைத்துக் கூட்டி உட்கொள்ளவும்.

இதனையே சுக்குக் கஷாயத்துடன் உட்கொண்டால் சந்நி ஜூரம், கழிச்சல், மாந்தம், கண்ணிசிவு, செரியாமை, வலிகுன்மம், கிராணி, சளி, உடல்வலி, தலைவலி, நீர்க்கடுப்பு, பாம்பு, தேள் இவைகளின் விஷம், பேய் பிசாசுகள் முதலானவை உடனே தீரும்.

கண்களில் அஞ்சனமாகவும் இடவும்.

**சந்நி, ஜ்வரம் முதலானவைகளுக்கு**
**அமுத சஞ்சீவி**

மருவுநா விப்பழச் சாற்றில்
மஞ்சளரைத் துக்கல ந்தேழுநாள்
விரவி யூறவைத் தெடுத்துக்
கழுவிவெ யிலிற்கா யவைத்
துரியவெரு க்கம்பாலி ன்முந்தா
ளூறவைத் துக்கழு வியதிற்
சரியாம்நி றைநன்மி ளகுதனைச்
சம்பீரச் சாற்றி னிலரையே. 278

அரைத்தோ ர்சாம மிருசாம்
மதனை யிரண்டுக டுகளவா
யுருட்டியுல ர்த்திவைத் துக்கொண்
டோங்குசு ரங்களெவ ற்றினுக்கும்

பருத்த சந்ந்கஞக்கு மனு
பானமறிந் தோருண்டை கொடு
தரைக்க னோய்க ளெலாம் பறக்குஞ்
சாற்றும முதசஞ் சீவியிதே. 279

(இ-ள்.)

கருநாபி ஒரே கிழங்காக எடுத்துக்கொள்ளவும். மஞ்சளை எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குழம்பாக்கி அதனுள் அந்த நாபியை ஊறவைக்கவும். இவ்வாறு 7 நாட்கள் ஊறவைத்து 8வது நாளன்று கழுவி வெய்யிலில் காயவைக்கவும், பின்னர் இக்கிழங்கை எருக்கம்பாலில் 3 நாட்கள் ஊறவைக்கவும். பிறகு அதனுடன் சரியளவு மிளகு கூட்டிக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு 2 ஜாமங்கள் அறைக்கவும்.

இதனை 2 கடுகுப் பிராமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிக் காய வைத்துக் கொண்டு, எல்லாவித ஜ்வரங்கள், சந்நி முதலானவைகளுக்கும் தக்க அனுபானத்தில் ஒரு மாத்திரை கொடுக்கவும். இதற்குப் பெயர் அமுத சஞ்சீவிக் குளிகை என்பர்.

**சந்நிக்குக் கலிக்கம்**
**திரிபுர வயிரவன் உருண்டை**

திரிகடு கெருக்கு நாவி
செங்கழு நீர்தண் கோட்டம்
மருவிஞ்ச்சி சாற் றரைத்து
மகிழ்ச்சியிற் குளிகை செய்து

கருதிடு மேனிச் சாற்றிற்
        கலிக்கம் போட்டிலங் குபூதம்
விரவு பேய் சந்நி
        யெல்லாம் விலகும்வை ரவனீதாமால். 280

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | எருக்கம்வேர்ப்பட்டை |
| சுத்திசெய்த நாபி | |
| செங்கழுநீர்க்கிழங்கு | |
| கோஷ்டம் | |

இவைகளைக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டவும். சந்நி பேய் முதலானவைகளுக்கு ஒரு குளிகை எடுத்து குப்பைமேனிச்சாற்றில் உறைத்துக் கண்களில் கலிக்கமிட அவைபோம்.

### நடை சந்நிக் குறிகள்

நடைசந்நி மெலிந்து மேனி
        நகைக்கும் புலவிகாரஞ் செய்யுங்
கடியவேர்க் கொம்பு முத்தக்
        காசொடு தேவ தாரம்
கொடியகுங் கிலிய மஞ்சள்
        கோட்டமிந் துப்பிவ் வெல்லாம்
இடுபலம் நாழி யெண்ணெய்க்
        கெரித்துநக் கிடப்பூ சப்போம். 281

(இ-ள்.)

காரணமில்லாமல் சிரித்து உடலை விகாரப்படுத்திக் கொள்வான்

இதற்கு மருந்து:

சுக்கு
தேவதாரு
கோரைக்கிழங்கு
குங்கிலியம்
கோஷ்டம்
மஞ்சள்
இந்துப்பு

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துப் பொடிசெய்து நல்லெண்ணெய் 5 சேருடன் சேர்த்தெரித்து ஒரு தேக்கரண்டி அளவு உட்கொள்ளவும். நடை சந்நிகள் தீரும்.

## பொராம சந்நிக்கு எண்ணெய்

தழுதாழை திரையாடா தொடைநொச்சி
துளசியொடு சவுரிக் கொத்துத்
துழாய்மணித் தக்காளிசிறிய வழுதினையொவ்
வோர் வகைக்குச் சாறுழக்கு
விழுமியவேப் பெண்ணெயொடு நல்லெண்ணெய்
வகைக் குழக்கு விளம்புபீலி
கொழுநாகப் பூச்சிசத குப்பையொடு
முயிற்று முட்டை கோழிமுட்டை. 282

முட்டையொடு பெருங்காயம் வெள்ளுள்ளி
யரத்தையுடன் மொழி வசம்பு
கட்டுரைத்த விவையெல்லாம் வகையொன்றுக்
கரைப்பலந் தான்கண் டரைத்தே

இட்டதனி லெரித்துவடித் தெண்ணெதனில்
முளிமஞ்ச ளிசையா நின்ற
திட்டமுறு தறுங்கம்பிப் பிசின்கரிய
குங்கிலியச் செழுந்தூள் சேரே. 283

சேர்த்துமென் பொடியாகக் கட்டிவைத்தே
யதிலொருகா செடையுட் கீந்து
கூர்த்தவுச்சி முதலியதா னங்களினு
மிடப்போகுங் குவலயத்துத்
தீர்த்திடுதற் கரியபேராம் சந்நி
தானீது சித்தர் தம்பாற்
கீர்த்திவள ருயர்தஞ்சைச் சரபநிரு
பதியுணர்ந்து தெரித்த தாமே. 284

(இ-ள்.)

| | |
|---|---|
| தழுதாழை | திராய் |
| ஆடாதோடை | நொச்சி |
| துளசி | சவுரிக்கொத்தான் |
| மணித்தக்காளி | சிறுவழுதலை |

இவைகளின் சாறுகள் வகைக்கு ஒவ்வொரு உழக்கு

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | 1 உழக்கு |
| நல்லெண்ணெய் | 1 உழக்கு |

இவைகளை ஒன்று கலந்து இவற்றுடன்

| | |
|---|---|
| மண்புழு | சதகுப்பை |
| முசுறுமுட்டை | கோழிமுட்டை |
| பெருங்காயம் | பூண்டு |
| சிற்றரத்தை | வசம்பு |

இவைகளை வகைக்கு அரை பலம் வீதமெடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துச் சேர்த்துப் பதத்தில் வடித்து இறக்கி வடிகட்டி அதில்

மஞ்சள் கம்பிப்பிசின்
கருங்குங்கிலியம்

இவைகளைத் தூள் செய்து மூட்டைகட்டிப் போடவும். இந்த எண்ணெயில் 1 காசிடை எடுத்து உள்ளுக்குக் கொடுத்து தலையுச்சியில் தேய்க்கவும். பொராம சந்நிகள் தீரும்.

## ரஸபூபதி

குளவிடுகந் தகமிரத மரிதாரஞ்
சமன்கூட்டிக் குப்பை மேனி
இலகிடுசா றதனாலே மூன்றுநா
ளரைத்தகலி லிட்டு மேலும்
புலவகலி றான்மூடி மண்செய்து
குக்குடநற் புடமிட் டப்பாற்
சொலுமதனை யெடுத்திசைத்த திரிகடுகிட்
டரைத்திடிஞ்சித் துலங்கு சாற்றால். 285

அரைத்துளுந்து போலுண்டை செய்துலர்த்தி
வைத்துக்கொண் டதையிஞ்சிச் சாற்
றுரைத்துதவு முலைப்பாலி லெனுமுதவெ
ரிவாத மோடுஞ் சந்நி
தரித்திருந்த பதின்மூன்று மனுத்தவாயு
வும்பறக்குந் தடை யொன்றில்லை
விரித்தடங்கட் களபமுலைத் திலதனுற்
றாளநகை வஞ்சிக் கொம்பே. 286

(இ-ள்.)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, ரஸம்
,, தாளகம்

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்வத்தில் இட்டு நன்றாக கருப்பு நிறமாகும் வரை ஒன்றுபட அரைத்து உறவாக்கிப் பின் குப்பைமேனிச் சாறுவிட்டு 3 நாட்கள் அரைக்கவும். பின்னர் இதனைக் காலணா அளவுள்ள வில்லைகளாகத் தட்டி உலர வைத்து ஒரு புதிய அகலில் வைத்து மேலும் அகலினால் மூடிச் சீலை மண் செய்து நன்கு உலர்ந்த பின் குக்குடபுடம் (1 சாண் நீள அகலமுள்ளது) போடவும். புடம் நன்றாக ஆறியபின் மருந்தை எடுத்து சரியளவு திரிகடுகுச் சூரணம் சேர்த்து, இஞ்சிச் சாறு விட்டு நன்றாக அரைத்து, உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து எடுத்து பத்திரப்படுத்தவும்.

வேண்டும்பொழுது இதனை இஞ்சிச்சாற்றிலோ அல்லது முலைப்பாலிலோ இழைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். எரிவாதம் முதலிய 13 வாதங்களும் தீரும்.

## சந்நி வாயுவின் குணமும் மருந்தும்

உடம்புதிமிர்ந் திருக்குமுடல் பறக்குதல்போ
லிருக்கும்வா யுலர்ந்து போகும்
நெடுந்தகைமூச் செறியுமுடல் குளிர்ச்சியுறு
நெற்றியிடி நேரே யுண்டாந்
தொடர்ந்திடிது நகற்சந்நி யின்குணமா
மிதனுக்கு சுக்கோ டுள்ளி
படுங்கடிய மிளகுவகைக் கிசைவுபெறு
பலங்காலாம் பகருங் காலே. 286

பலமுறுசீ ரகஞ்சந்நி நாயன்விடை
யங்கழலின் பருப்புக் கூட்டி
னிலகுகுறிஞ் சாகொடிய வேலிகுருந்
தொட்டிமயி லிசை மாணிக்கம்

நிலவாகை கரிப்பானிவ் வாறுவேர்
வெளுத்தபிசி னிகழ் வகைக்குச்
சொலுநாலு வராகனிட்டு நாழியெண்ணெ
யெரித்தருந்திற் றோலையும் பாரே. 287

(இ-ள்.)

உடம்பு திமிர் காணல், உடல் பறப்பதைப் போன்ற உணர்ச்சி வாய் உலர்தல், பெருமூச்சு விடல், தேகம் குளிர்ச்சியாதல், நெற்றியுச்சி இவைகளில் இடி இவைகள நகற் சந்நிக் குறிகளாகும்.

இதற்கு மருந்து:

சுக்கு மிளகு
வெள்ளைப்பூண்டு

இவைகள் வகைக்கு கால் பலம்

| | |
|---|---|
| சீரகம் | சந்நிநாயகம் |
| அதிவிடயம் | கழற்சிப்புருப்பு |
| காட்டுக்குறிஞ்சாவேர் | கொடிவேலிவேர் |
| குருந்தொட்டி வேர் | மயிர்மாணிக்கம் வேர் |
| நிலவாகைவேர் | வெளுச்சைப்பிசின் |

இவைகளை வகைக்கு 4 வராகனெடை விதமெடுத்து எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்துத் தூள்செய்து 1 படி நல்லெண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி உட்கொள்ள சந்நிகள் தீரும்.

## சந்நிகள், சிலேத்துமங்களுக்கு அக்கினி குமாரன்

அரப்பொடிசெம் புப்பொடிவெண் கலப்பொடிபித்
தளைப்பொடிநீ ரைத ராவின்
றறுபொடியூ சிக்காந்தம் நெல்லிக்காய்க்
கந்தகநற் சாதி லிங்கம்

மருவிடுவெண் காரமிர தம்பச்சை
நாவிபலம் வகைக் கொவ்வொன்றாய்
விரவிடச்சேர்த் துயகற்றா ழஞ்சாறு
விட்டரைநீ விளம்பு முந்நாளே. 288

மூன்றுநா ளொவ்வொருசா மம்வரைக்கு
மரைத் தடையாய் முற்றத்தட்டி
யென்றகொடி வேலிவேர் கற்றாழஞ்
சோற்றினுட னிசைந்த நீர்மேற்
றொன்றுநெறுப் பிவைதுவைத்திட் டதிர்பாதி
சட்டிவைத்துத் துலங்க தன்மேலே
றானறட்டி யிருந்தமருந் தினைவைத்து
மேற்பாதி மருந்தினையுஞ் சாரவையே. 289

வைத்துமற்றோர் சட்டியினால் மூடிமண்செய்
தொரு முச்சா மம்வரைக்கும்
மெய்த்தவடுப் பேற்றியெரித திறக்கியாறி
யபின்னர் விருப்பாய்க் கைக்கொள்
அத்தகைய சிந்தூர மக்கினிகு
மாரனென்றா மனு பானத்தில்
உய்த்தவரைப் பணவெடைநல் கோதுசந்நி
சேட்டுமங்க ளோடிப் போமால். 290

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த | அரப்பொடி |
| ,, | செம்புத்தூள் |
| ,, | வெண்கலத்தூள் |
| ,, | பித்தளைப்பொடி |
| , | திராப்பொடி |
| ,, | ஊசிக்காந்தம் |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் |

சுத்திசெய்த லிங்கம்
,, பாதரஸம்
,, நாபி
பொரித்த வெங்காரம்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து கஜ்ஜலி செய்துகொண்டு, பின் மற்ற சரக்குகளை இட்டு கற்றாழஞ்சாறு விட்டு 3 நாட்களுக்கு ஒவ்வொரு ஜாமம் வீதம் அரைக்கவும். பிறகு இம்மருந்தை ஒரே அடையாகத்தட்டிக் கொள்ளவும்.

கற்றாழைச்சாற்றிலும், நீர்மேல்நெருப்புச் சாற்றிலும் ஊறவைத்தெடுத்த கொடிவேலி வேர்ப்பட்டையை இடித்துத் தூளாக்கி ஒரு சட்டியில் பாதியளவு போட்டு அதன் மேல் முன் மருந்து அடையை வைத்து, மறுபாதி தூளையும் போட்டு, மற்றோர் சட்டியினால் மேல்மூடிச் சீலைமண் வலுவாகச் செய்து நன்கு உலர்ந்தபின் அடுப்பின் மேலேற்றி 3 சாமங்கள் எரிக்கவும். பின்பு சட்டி தானாக ஆறியபின் மருந்தை எடுத்துத் தூள்செய்து வைத்துக்கொண்டு வியாதிக்குத் தக்க அனுபானங்களில் 1 பணவெடை கொடுக்கவும். சந்நிகள் சிலேத்துமங்கள் தீரும்.

## சிலேத்தும சந்நி, மேல்வறளை, கோழை இருமலுக்கு லேகியம்

தூதுளைநற் றுளசிகண்டங் கத்திரிமூன்
றுஞ்தமூலந் தொடர் செம்முள்ளி
யோதுமுறுக் கொடுசங்கு மிளகரணை
காஞ்சொறியி னுடனே பின்னும்

பேதமிலாச் சிறியவழு திலையிவற்றி
னிலைகளெல்லாம் பிட்ட வித்து
மீதவற்றின் சாறுதனைப் பிழிந்துசட்
டியிலுழக்காய் மேவக் காய்ச்சி 291

சிற்றரத்தைத் திரிகடுகு தான்றிக்காய்
நெல்லிமுள்ளி சிறந்தமுள்ளி
பெற்றபழங் கண்டங்கத் திரிபழத்தது
தளம்பழம்பேய்ப் பீர்க்கின்றன்வே
ருற்றவுத்த மதாளியின்வேர் தூதளம்வேர்
கொடிவேலி யுதவிடும்வேர்
மற்றிவையொவ் வோர்வகைக்கு வராகனெடை
யிளவறையாய் வறுத்துக்கொள்ளே. 292

கொண்டுதூள் செய்துமுன்னர் கடாயத்தோ
டாழாக்குக் குலவு செந்தேன்
கண்டிடுநெய் யாழாக்குப் பாக்களவு
னரைப்பரைத்துக் கருது சேலை
யண்டிடவைத் துப்பிழிந்தொன் றாயெரியிட்
டனைத்தூ ளனைத்துந் தூவிக்
கிண்டியிலே கியமாக்கி வைக்கொருதுட்
டெடையருந் திற்கெடும் நோயெல்லாம். 293

கெடுநோய்கள் பொரிக்காரங் குன்றியெடை
போரித்துத்தூள் கிளறச் செய்து
தொடுமனையத் துட்டெடையா மிலேகியத்தில்
மத்தித்துச் சொல்லுகின்ற
வடிநாக்கில் விரலாதனாற் சிறுகிடவைத்
தருந்திவரி லணைந்த கோழை
யுடனிருமல் சேட்டுமத்தின் சந்நியொடு
வறளையிவை யோடிப் போமால். 294

(இ-ள்.)

| | |
|---|---|
| தூதுவேளைச்சமூலம் | துளசிச்சமூலம் |
| கண்டங்கத்திரிச்சமூலம் | செம்முள்ளியிலை |
| முள்முருக்கிலை | சங்குஇலை |
| மிளகறணையிலை | காஞ்சோறியிலை |
| சிறுவழுதலையிலை | |

இவைகளை இடித்து ஒரு சட்டியில் தண்ணீர் விட்டு அதன் வாயில் ஒரு வெள்ளைத் துணியினால் வேடுகட்டி அதன் மேல் வைத்து அந்தசட்டியின் வாய்க்குத் தக்கபடி வேறொரு சட்டியினால் மூடி அடுப்பின் மேலேற்றி புட்டவியலாக அவித்துப் பின் அதன் சாற்றைப் பிழிந்து கொள்ளவும். அதனைச் சட்டியிலூற்றி மறுபடியும் வற்றக்காய்ச்சிப் பின்னர்,

| | |
|---|---|
| சிற்றரத்தை | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| தான்றிக்காய்த்தோல் | நெல்லிமுள்ளி |
| முள்ளிப்பழம் | கண்டங்கத்தரிப்பழம் |
| தூதுளம்பழம் | பேய்ப்பீர்க்கம்வேர் |
| கொடிவேலிவேர் | |

இவைகள் வகைக்கு 1 வாரகனெடை வீதமெடுத்து இளம் வறுப்பாக வறுத்து வைத்துக்கொள்ளவும். இத்தூளை முன் சொல்லிய கஷாயத்துடன் கூட்டி வெல்லம் 1 வீசை போட்டு நன்றாக இறுகவைத்து லேகிய பதமானபின் தேனும் நெய்யும் விட்டுப் பிசரிக் கொள்ளவும்.

இந்த லேகியத்தில் ஒரு சுண்டைக் காயளவு எடுத்து பொரிக்காரம் பொரித்து ஒரு குன்றியளவு போட்டு வாயிலிட்டு சப்பி உட்கொள்ளவும். கோழை இருமல், கபம், சந்நி, வறளை முதலான ரோகங்கள் தீரும்.

## வேப்பெண்ணெய்

பரித்திடுவேப் பெண்ணெயரைப் படியிலூ
மத்தம்வேர் பகரு மேனி
யிருந்திடுவேர வுரிசாற ணைதிராய்
முடக்கொத்தா னெருக்கின் வேர்கள்
முரிந்திடுமா விலிங்கையின்றன் பட்டைநொச்சி
வேருள்ள முருங்கைப் பட்டை
திரந்தருநல் வசம்பினோடு கோழிமுட்டைக்
கருவனைத் துஞ் சேரத்தேடு. 295

தேடிவகைக் கொருபாக்கி னளவரைத்துப்
போட் டெரித்துத் தீர்ததிறக்கிக்
கூடுமதிற் காசளவே யாம்சந்நி
வலிப்புவந்த குழந்தை கட்கு
வாடுமுட லினிற்றடவி யுள்ளுக்குங்
கொடுக்கிலந்த வருத்தந் தீரும்
நீடுமிந்த முறைதஞ்சைச் சரபோசி
மன்னா சொன்ன நேர்மையாமே. 296

வேப்பெண்ணெயுடன் அரைப்படியுடன்

| | |
|---|---|
| **ஊமத்தைவேர்** | குப்பைமேனிவேர் |
| சாறணைவேர் | திராய்வேர் |
| முடக்கொத்தான்வேர் | எருக்கம்வேர் |
| மாவிலிங்கம்பட்டை | நொச்சிவேர் |
| பூண்டு | முருங்கைப்பட்டை |
| வசம்பு | கோழிமுட்டைக்கரு |

இவைகளை வகைக்கு 1 பாக்களவு வீதமெடுத்து அம்மியில் அரைத்து எண்ணெயுடன் கலந்து குழப்பி எரித்துப் பதத்தில்

இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு காசளவு எடுத்து உட்கொள்ளவும். உடம்பில் மேலும் தேய்க்கவும். சந்நி, வலிப்பு முதலானவைகள் தீரும்.

[1]சுவடியில் இதன் பெயர் ஆமணக்கெண்ணெய் என்று தவறாகப் போடப்பட்டிருக்கிறது.

## பித்த சந்நியின் குணமும் மருந்தும்

தாகமுறுங் காலொடுகை யழன்றிருக்கு
நாவினிடை சரசரக்கும்
வேகமுறு வெதுப்புண்டாம் நிலம்பறிக்குங்
கடைக்கண்ணால் மிகநீர்பாயும்
ஆகுமிது பித்தசந்நி யின்குணமா
யிருநாழி யாவின் பாலிற்
பாகுபடு மெழுகழற் பருப்புவெதுப்
புறுந்துகளைப் பரிவாய்ச்சேரே. 297

சேர்த்துரிய பாலாகக் காய்ச்சியருந்
திடுதீருந் திண்மமாகப்
பார்த்திடவே யறமிகுந்தாற் கோழிமுட்டை
வெண் கருவைப் பறிந்துவாங்கிக்
கூர்த்திடுகை கால்கழுத்திற் றடவிமதித்
திடத் தீருங் குவலயத்தில்
ஆர்த்தரெல்லாஞ் சுகமெய்த மலையமுனி
சொன்னமுறை ய.ருளினீதே 298

(இ-ள்.)

அடிக்கடி தாகம் அதிகரிக்கும். கை கால்களில் அழற்ச்சியுண்டாகும். நாவில் சுறசுறப்பு உண்டாகும். உடலில் சூடு அதிகமாகும். காரணமில்லாமல் பூமியைச் சுரண்டுவான்.

கடைக்கண்களில் இருந்து கண்ணீர் வடியும். இவை பித்த சந்நியின் குணங்களாம்.

இதற்கு:

பசுவின் பால் இரண்டு படியுடன் வறுத்த கழற்சிக்கொட்டைச் சூரணத்தைப் போட்டு அரை படியாகும்வரை சுண்டக்காய்ச்சி உட்கொள்ளவும். உடலில் சூடுமிகுந்தால் கோழிமுட்டை வெள்ளைக்கருவை கை, கால், கழுத்து முதலிய இடங்களில் நன்கு தேய்க்கவும். இது அகஸ்தியர் பகர்ந்த முறையாகும்.

**பயித்திய சந்நிக்கு**

பித்தசுர மேற்பதிமூன் றாநாளில்
பித்தசந்நி பெரிது தோன்றும்
மெத்தனவே யெப்பொழுது மலட்டிடுமோர்
மனிதருடன் விர்த்துப் பேசும்
அத்தகைபோற் பலவார்த்தை பிதற்றும்விழி
சிவந்திருக்கும் அதன் மேன்மூச்
சுய்த்திடுங் காய்ந்திடுங் காதுசிறிதுமந்த
மாயிருக்கு முணர்ந்து கொள்ளே. 299

உணருமிது பதின்மூன்று நாளதனிற்
றிரும்போதே லொன்று செய்வாய்
தணிதருமா டாதொடையி னிலையும்பூ
சினிக் கொடியுஞ் சமனாக்கொண்டு
கணிதமுறு குடி நீருவைத் திட்டுமுன்சொல்
மருந்தினிரு காசின் பாரம்
வணிதமுற்ப போட்டுழக்கு நீரருந்தி
வருந்திமுன் மாறும்பாரே. 300

(இ-ள்.)

பித்த ஜ்வரம் ஏற்பட்ட பின்பு 13வது நாள் பித்தசந்நி உண்டாகும். எப்பொழுதும் அலட்டிக்கொள்வான். ஒருவருடனும் பேசமாட்டான். வாய்க்கு வந்தபடி உளருவான். விழிகள் சிவந்து போகும். மேல்மூச்சு வாங்கும். ஜ்வரம் அடிக்கும். காது மந்தமாகும்.

இதற்கு சிகிச்சை;

ஆடாதொடையிலே
பூசினிப்பூ

இவ்விரண்டையும் சமனெடுத்து 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து 1ல் 8 பாகமாகச் செய்து வடிக்கட்டி முன்சொன்ன வேப்பெண்ணெய் மருந்து 2 காசெடை விட்டு ஒரு உழக்குக் குடிநீர் உட்கொள்ளவும். பயித்திய சந்நிகள் தீரும்.

## சந்நி பயித்தியத்திற்கு அஞ்சனம்

சாதிலிங்க மிளகுபொரிக் காரம்வச்ச
நாபியிவை சமனாக் கொண்டு
மீதெலுமிச் சம்பழச்சாற் றரைத்துமிள
கெனவுருட்டி விளங்கோ ருண்டை
யோதுபயித் தியந்தனக்குஞ் சந்நிக்குஞ்
சம்பீரத் துற்ற சாற்றிற்
காதலுட னுரைத்துவிழி தன்னிடத்
தீரு முகங் கழுவவேண்டும். 301

(இ-ள்.)

| | |
|---|---|
| சாதிலிங்கம் | மிளகு |
| பொரிகாரம் | வத்ஸநாபி |

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாக அரைத்து, மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதனைப் பயித்தியத்திற்கும், சந்நிகளுக்கும் எலுமிச்சம் பழச்சாற்றிலுரைத்து சிறு பயறளவு எடுத்து விழிகளில் தீட்டவும். பின்னர் முகத்தைக் கழுவிவிட வேண்டும்

**கபால சந்நிக்கு அஞ்சனம்**

திரிகடுகு வசம்புள்ளி நேர்வாள
மகிழ்வித்துச் செப்பு கின்ற
வுரியதலைப் புண்ணாக்குச் சாரணைவேர்
சம்பீரத் துருபழச் சாற்
றொருதினந்தா னூரவைத்தே யரைத்துருட்டி
விழியினிலோ ருண்டை யீந்தால்
அரியவொரு தலைநோவு கபாலசந்நி
முகரோக மலகை தீரும். 302

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வசம்பு |
| பூண்டு | சுத்தித்த நேர்வாளம் |
| மகிழம் வித்து | புண்ணாக்குக்கீரை |
| சாரணைவேர் | |

இவைகளை இடித்துத் தூள்செய்து செப்பு பாத்திரத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு நாள் ஊறவைத்துக் கல்வத்தில் இட்டு நன்றாக அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொண்டு கண்களில் அஞ்சனமிடவும்.

தலை நோய்கள் கபாலசந்நி முகரோகங்கள் பேய் பிசாசு முதலானவை நீங்கும்.

## கபால சந்நியின் குணமும் மருந்தும்

தலையதிர்ந்து வலிக்குங்கா தடைக்கும்பே
சொண்ணாது தகுமிச் செய்கை
வலிமையுறு கபாலசந்நி யின்குணமாம்
புங்கெண்ணெய் வளவேப் பெண்ணெய்
நலமுறுமா மணக்கெண்ணெய் மூன்றுமரை
யரைப்படியாம் நறு நொச்சிச்சா
றிலகாடா தொடைகீழ்க்காய் நெல்லிபொடு
தலைசங்கி னிலைச்சா றெல்லாம். 303

ஆகும்வகைக் கொருபடிசா றுடன்விட்டுக்
காய்ச்சியுள் ளருந்த நல்கி
வாகுபெரு தலையிலுந்தேய்த் திடக்குணமாம்
வாய்குளறில் வளரிந் துப்புப்
பாகமுறு திப்பிலிநீ டிருதூளுங்
கொண்டத்திப் பழுப்புச் சாற்றி
லேகமுறக் கலந்துநசி யஞ்செயின்மேற்
குணமாகுமிசை வாய்ச் செய்யே. 304

(இ-ள்.)

மண்டைக்குத்தல் உண்டாகும். காதுகள் அடைத்துப் போகும். பேசமுடியாது. இவைகள் கபாலசந்நிக் குறிகளாகும்.

இதற்கு மருந்து:

புங்கெண்ணெய்
வேப்பெண்ணெய்
ஆமணக்கெண்ணெய்

இவைகள் வகைக்கு அரை படி

| | |
|---|---|
| நொச்சிச்சாறு | கீழாநெல்லிச்சாறு |
| ஆடாதோடைச்சாறு | பொடுதலைச்சாறு |

இவைகள் வகைக்கு 1 படி வீதம் எடுத்து மூன்றும் ஒன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கவும்

இத்தைலத்தில் ஒரு காசளவு உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசி, தலையிலும் தேய்க்கவும். குணமாகும்.

வாய் குளறிப்போனால்,

இந்துப்புத்தூள், திப்பிலித்தூள் இவ்விரண்டையும் சமனெடுத்து, அத்திப் பழுப்புச் சாறுவிட்டு மூக்கில் நஸ்யமிடவும். குணமாகும்.

## கர்ப்பத்தின் மேல் வந்த சந்நிக்கு

இருப்பைநெய் புங்கினெய் வேம்பினெய்
யெள்ளினெய் யிவை யொன்றாக்கி
விருப்பமுறு திப்பிரிகம் பிப்பிசினீ
டரத்தைமரல் வேப்ப முத்துப்
பருத்தவிரு சீரகுங்குங் கிலியமொடு
மரமஞ்சள் பகருங் குப்பை
விரித்ததிரி பலைகடுகு தேவதா
ரஞ்சமனாய் விரவக் கொள்ளே. 305

கொண்டவற்றைப் பசுவின்பால் விட்டரைத்தெண்
ணெயிற்கலந்து குலவு தீயில்
மண்டவேரித் திறக்கிச்சம் பீரச்சா
றுடன்கலந்து மருவோர் காசின்
விண்டநிறை யெடுத்தருந்திற் கருப்பத்தின்
மேற்சந்நி விலகிப் போகும்
மண்டலத்தோர் பிழைக்கவெண்ணிச் சரபோசி
மன்னர் சொன்ன வாறீதம்மா 306

(இ-ள்.)

இலுப்பெண்ணெய்
புங்கெண்ணெய்
வேப்பெண்ணெய்
நல்லெண்ணெய்

இவைகளைச் சரியெடுத்து ஒன்று கலந்து.

திப்பிலி
சிற்றரத்தை
வேப்பம்பருப்பு
கருஞ்சீரகம்
மரமஞ்சள்
கடுக்காய்த்தோல்
தான்றித்தோல்
தேவதாரம்
கம்பிப்பிசின்
மருள்கிழங்கு
சீரகம்
குங்கிலியம்
சதகுப்பை
நெல்லிவற்றல்
கடுகு

இவைகளைச் சமனெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றஆக அரைத்து எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். ஒரு காசளவு எலுமிச்சம் பழச் சாற்றுடன் உட்கொள்ளக் கர்ப்பத்தின் மேல் வந்த சந்நிகள் தீரும்.

**வாதம், சந்நி, சைத்தியம் முதலியவைக்கு**

சீந்திலுத்தா மணியிரண்டுஞ் சமூலமொவ்
வொருதூக்குச் சேர்த்தி டித்து
வாய்ந்திடொரு தூணிநீர்விட்டு நன்றாய்ப்
பிசாந்துபிழி மருவு சாற்றில்
ஆய்ந்திடுசம் பீரபல மைம்பதின்சா
றிருதேங்கா யளிக்குந் தீம்பால்
தேய்ந்திடிடை மாதர்முலைப் பால்காற்சே
ரிவையனைத்துஞ் சேர்த்துக் காய்ச்சே. 307

சேர்ந்தெரித்து நாலிலொன்றாய் வருங்காலை
நானாழி நிகழ் நல்லெண்ணெய்
கூர்ந்திடவிட் டதனிற் கத்தூரிமஞ்ச
ளரைப்பலமுங் கோட்டா சாலை
வாய்த்தபதின் பலமுங்கத் தூரிமஞ்சள்
மரமஞ்சள் வளர் தேற்றாவிந்
பேர்த்தபழங் கொடிவேலி கரியசீ
ரகங்கம்பிப் பிசினிவ் வெல்லாம். 308

எல்லையுறொவ் வொருபலங்குத் துக்காற்சம்
மட்டிமுத லீரைந் தாகுங்
கல்லிடுகற் கோவையின்றன் கிழங்குவெட்
டுவாய்மருந்து கனமொவ் வொன்றாச்
சொல்லவுறு பலமாகுமனைத்தினையுந்
தூள்செய்து தூவிக் காய்ச்சி
மெல்லவே தெளிந்திடுபக் குவத்திறக்கிமேற்
றடவியொரு கரண்டி மீதருந்து. 309

அருந்திவறிற் சிலநாளிற் சன்னிசைத்தியம்
வலிப்போட ணைந்த வாதம்
பொருந்திதடுபா ரிசவாய்வற் புதவாயு
பயித்தியத்திற் பொலிந்த வாயு

வருந்திடச்செய் இவையனைத் துந்தீருமிது
சரபோசி மன்னர் மன்னன்
றிருந்திடுபா ருலகதனில் வாழ்மனிதர்
சுகமெய்தத் தெரிந்த தாமே. 310

(இ-ள்.)

| | |
|---|---|
| சீந்தில்கொடி | உத்தாமணி |

இவ்விரண்டும் வகைக்கு ஒன்னேகால் வீசை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு நன்றாக இடித்துச் சாறு பிழிந்து வைத்துக்கொள்ளவும். இதனுடன் 50 எலுமிச்சம் பழங்களைப் பிழிந்த சாறும் விட்டு, 2 தேங்காய்களை உடைத்துத் திருவி அதன் பாலையும் பிழிந்து, முலைப்பால் கால் சேரும் சேர்த்துக் கொள்ளவும். பிறகு அதை அடுப்பின் மேல் ஏற்றி எரித்து கால் பாகமாக சுண்டிவரும் பொழுது

சுத்தமான நல்லெண்ணெய் 5 சேர் விட்டு

| | |
|---|---|
| கஸ்தூரி மஞ்சள் | அரை பலம் |
| கோடகசாலை | 10 பலம் |
| மஞ்சள் | 1 பலம் |
| தேற்றாங்கொட்டை | 1 பலம் |
| மரமஞ்சள் | 1 பலம் |
| கொடிவேலிவேர் | 1 பலம் |
| பெருஞ்சீரகம் | 1 பலம் |
| கம்பிப்பிசின் | 1 பலம் |

இவைகளை மேற்சொன்னபடி எடுத்து, இடித்து வஸ்திரகாயம் செய்து எண்ணெயில் போட்டு பிறகு

| | |
|---|---|
| குத்துக்காரன் சம்மட்டி | 10 பலம் |
| கோவைக்கிழங்கு | 6 பலம் |
| வெட்டுக்காயப்பச்சிலை | 6 பலம் |

இவைகளை எடுத்து இடித்து எண்ணெயுடன் சேர்த்துக் குழப்பிக் காய்ச்சி பக்குவத்தில் இறக்கவும். இத்தைலத்தில் ஒரு சிறு கரண்டியளவு எடுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் தடவவும். கொஞ்ச நாட்களில் சந்நிகள், சைத்தியம், வலிப்புடன் கூடிய வாதம், பார்சவாயு, அற்புதவாயு, பைத்தியத்துடன் சேர்ந்த வாயு முதலிய எல்லா வியாதிகளும் தீரும்.

## வாதசந்நி, பிரவீச்சு, உட்குத்து முதலானவைகளுக்கு பச்சைப்பாம்பு எண்ணெய்

திரிபச்சைப் பாம்புரித்த தோல்மூன்று
முளி மஞ்சள் திப்பிலித்தூ
ளரியகம்பிப் பிசினுள்ள கஸ்தூரி
மஞ்சளிவை யனைத்தும் வேம்பின்
பெருநெருப்பிற் போட்டெரித்து நீடுச்சி
யுடம்பிட்டுப் பிடிக்கில் வாதந்
தருசந்நிப் பிரவீச்சுட குத்தனைத்துந்
தீருமிது சாதமா மால். 311

(இ-ள்.)

பச்சைப்பாம்பு சட்டை 3
மஞ்சள்
திப்பிலி
கம்பிப்பிசின்
பூண்டு
கஸ்தூரி மஞ்சள்

இவைகளை வகைக்கு அரை பலம் வீதமெடுத்து யாவற்றையும் இடித்து 5 சேர் வேப்பெண்ணெயுடன் கலந்து எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதைத் தலையுச்சி, உடம்பு முதலான இடங்களில் நன்கு பூசிப் பிடித்து விடவும். இதனால், வாதசந்நி, பிரவீச்சு உட்குத்து முதலானவைகள் தீரும்.

**சந்நி பிரவீச்சுக்கு**

பகரெருக்கம் பானாரு வெள்ளாட்டுப்
பானாழி பதத்திற் காய்ச்சித்
தகவடித்துக் காதுதனி லிட்டடைத்து
மெய்ப்பூசிற் றவிரு மாங்கே
திகழ்சப்நிப் பிரவீச்சு மற்றதுமேற்
படிக்கொள்ளைச் சிறக்கத் தூள்செய்
கதமகிழ்வு டலெங்கும் பூசியுறப்
பிடித்திடற் போ மனையவீச்சே. 312

(இ-ள்.)

| | |
|---|---|
| எருக்கம்பால் | நாழி |
| வெள்ளாட்டுப்பால் | நாழி |

இவ்விரண்டையும் கலந்து நன்றாகக் காய்ச்சி காதுகளில் 2 துளிகள் வீதம் விட்டடைத்துப் பின் உடம்பிலும் தேய்க்கவும்.

சந்நி, பிரவீச்சுகள் தீரும். கொள்ளுப்பொடியிட்டுப் பூசிக் குளிக்கவும்.

**வாத சந்நிக்கு**

கத்தரிநா யகமெருகை முன்னைமயி
லடிக்குருந்து கனத்த வில்வம்
உத்தமமாம் பெருங்குருந்து நொச்சிமுக்கால்
வேளையெருக் குடனிம்பூரல்

அத்தகைசங் கங்குப்பி வேரொவ்வொன்ளு
றிரண்டுகழஞ் சாகு முள்ளி
கொத்தமல்லி வசம்புகருஞ் சீரகநீள்
வெளுத்தபிசின் கூறிவ் வைந்தும். 313

கூறுபடு மும்மூன்று கழஞ்செல்லா
மரைத்தெண்ணெய் குலவேப் பெண்ணெய்
தேறிருப்பை நெய்மூன்று மொருநாழி
கூட்டியதிற் சேர்த் தெரித்து
வீறொருகா செடையுள்ளுக் கீந்துச்சி
நாசிசெவிமென் கைகால் மெய்
யூறிடங் களினுந்தடவில் வாதசந்நி
போங்கடிகை யொன்றி னுள்ளே 314

(இ-ள்.)

| | |
|---|---|
| கத்தரிநாயகம் | முன்னை |
| மயிலடிக்குருந்து | வில்வம் |
| பெருங்குருந்து | நொச்சி |
| முக்காவேளை | எருக்கு |
| இம்பூரல் | சங்கங்குப்பிவேர் |

இவைகள் இரண்டரை வராகனெடையும்

| | |
|---|---|
| முள்ளி | கொத்தமல்லி விதை |
| வசம்பு | கருஞ்சீரகம் |
| வெளுத்தபிசின் | |

இவைகள் வகைக்கு மூன்றேமுக்கால் வராகனெடையும் எடுத்து அம்மியில் நன்றாக அரைத்து

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | ஒண்ணேகால் சேர் |
| வேப்பெண்ணெய் | ஒண்ணேகால் சேர் |
| இலுப்பெண்ணெய் | ஒண்ணேகால் சேர் |

இவைகளுடன் கூட்டி அடுப்பின் மேலேற்றி நன்றாக எரித்து பதத்தில் வடிக்கவும். இந்த எண்ணெயில் 1 காசெடை எடுத்து உள்ளுக்குக் கொடுத்து, மண்டையுச்சி, நாசித்துவாரங்கள், செவித்துவாரங்கள், கை கால்கள், உடம்பு முதலான இடங்களில் நன்றாகத் தடவிவர வாதசந்நி 1 ஜாமத்திற்குள் குணமாகும்.

## வாதத்திற்கும் சந்நிக்கும்
## இந்திராணி தைலம்

பாவட்டை நொச்சிபேய்ப் புடல்மேனி செம்முள்ளி
பருத்தி பேய்ச்சுரை முருக்கு
பைந்துளசி சங்குகை யாந்தகரை வன்னெற்றுப்
பரித்திடு மணித் தக்காளி.
மேவுமா டாதொடை கஞ்சங்கோரை கோழவரை
வெள்ளருகு தேட் கொடுக்கி
வெற்றிலை திராய்கொ றை சாரணைவே லிப்பருத்தி
விண்டுக் கிராந்தி விழுதி
தாவின்முதி யார்கூந்த றன்னோடு நன்முடக்
கொத்தான் சக்கிர வளப்புல்
சார்ந்திடு வகைக்குரிச் சாறுகொண் டெள்ளினெய்
தப்பாம லிருநாழி யுங்
காவினுறு வேம்பிருப் பைப்புங்கா மணக்குநெய்
காண் வகைக் குரிகளுங்கீழ்
காய்நெல்லி யொடுநத்தைச் சூரிநீர் நாழியுங்
கலந்தினி தொருங்கு கூட்டே. 315

கூட்டிமஞ் சட்டிமது ரஞ்சந்த னம்பெருங்
குரும்பை வெட் பாலையரிசி
குக்கில்மர மஞ்சள்சத குப்பைகார் போகரிசி
குங்கிலியந் தேவ தாரங்
கோட்டங்கி ராம்பரத்தை பெருங்காயம் விழலரிசி
குறித்தவா லுழுவை யரிசி
குலவுசிறு தேக்கோட திவிடையந் திரிகடுகு
கோதறு கடுக ரோணி
காட்டுறு சடாமாஞ்சி வேப்பம்வித் துத்தககரங்
கம்பிப் பிசின் செவ்வியமே
கருதுள்ளி சங்கம்வேர் நன்னாறி சாறணை
கண்டங்கத் திரிநறும் வேர்
நீட்டமுறு சிறுவழு திலைவே ரொடுசெய்ய
நெருஞ்சிகோ ழவரை கீழ்க்காய்
நெல்லிவேர் சத்திச்சா ரணையமுக் கிராவின்வேர்
நிகழ் நத்தைச் சூரியின் வேர் 316

வேரின்வகை யின்னவை யுடன்மணித் தக்காளி
விளம்பிடு முயிற்று முட்டை
மேவலுறு தாயினைக் கொன்றான் புறாமுட்டை
மென்கோழி யெச்ச முரகத்
தாருறுங் கண்டநீள் பச்சர ரவின்கண்ட
மனைத்துமொவ் வோர் கழஞ்சே
யகப்படக் கொண்டுமுன் சாற்றரைத் துக்கரைத்
தரைத்திடன் நெய் களுடனே
சாரக்கொ ழுந்தழலி னெரித்தே வடித்திடி
தின்பெய ரிந்தி ராணித்ஞு
தைலமிதை மேற்பூசித தலையினுமி டச்சந்நி
தன்னோடு வாத மெவையு
மோருமொரு முத்தினந் தனிற்றீரு மிந்தமுறை
யுலகங்கள் போற்று தஞ்சை
யுவர்வளம் பதிமேவு சரபோசி மன்னவ
ருகந்துரை செய்த முறையே. 317

(இ-ள்.)

| | |
|---|---|
| பாவட்டை | நொச்சி |
| பேய்ப்புடல் | குப்பைமேனி |
| செம்முள்ளி | பருத்தி |
| பேய்ச்சுரை | முருக்கு |
| துளசி | சங்கங்குப்பி |
| கையான்தகரை | வன்நெற்று |
| மணித்தக்காளி | ஆடாதோடை |
| கஞ்சாங்கோரை | கோழியவரை |
| வெள்ளறுகு | தேள்கொடுக்கு |
| வெற்றிலை | திராய் |
| கொன்றை | சாரணை |
| வேலிப்பருத்தி | விஷ்ணுகிராந்தி |
| விழுதி | முதியார்கூந்தல் |
| முடக்கொத்தான் | சக்கிரவளப்புல் |

இவைகளின் சாறுகள் வகைக்கு அரைபடி (இரண்டரை சேர்)

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 10 சேர் |
| வேப்பெண்ணெய் | இரண்டரை. சேர் |
| இலுப்பெண்ணெய் | ,, |
| ஆமணக்கெண்ணெய் | ,, |
| கீழைநெல்லிச்சாறு | 5 சேர் |
| நத்தைச்சூரி சாறு | 5 சேர் |

இவைகளை ஒன்று கலந்து பிறகு

| | |
|---|---|
| மஞ்சிட்டி | அதிமதுரம் |
| சந்தனத்தூள் | பெருங்குரும்பை |
| வெப்பாலையரிசி | குக்கில் |
| மரமஞ்சள் | சதகுப்பை |
| கார்போகலரிசி | குங்கிலியம் |
| தேவதாரம் | கோஷ்டம் |
| கிராம்பு | சிற்றரத்தை |

| | |
|---|---|
| பெருங்காயம் | விழலரிசி |
| வாலுளுவையரிசி | சிறுதேக்கு |
| அதிவிடயம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கடுகுரோகிணி | சடாமாஞ்சில் |
| வேப்பங்கொட்டை | கிரந்திதகரம் |
| கம்பிப்பிசின் | செவ்வியம் |
| பூண்டு | சங்கம்வேர் |
| நன்னாரிவேர் | சாரணைவேர் |
| கண்டங்கத்திரிவேர் | சிறுவழுதலைவேர் |
| நெருஞ்சிவேர் | கோழியாவரை |
| கீழாநெல்லிவேர் | சத்திச்சாரணை |
| அமுக்கிராக்கிழங்கு | நத்தைச்சூரிவேர் |
| மணித்தக்காளி | முசுறுமுட்டை |
| வாழைக்கிழங்கு | புறாமுட்டை |
| கோழிஎச்சம் | பாம்புகண்டம் |
| பச்சைப்பாம்புக்கண்டம் | |

இவைகள் வகைக்கு ஒன்னேகால் வராகனெடை எடுத்து கல்லுரலில் போட்டு இடித்துப் பிறகு ஏதேனும் ஒரு சாறு விட்டு நன்றாக அம்மியில் அரைத்து எண்ணெய்களுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் எரித்து இறக்கவும். இதற்குப் பெயர் இந்திராணி தைலம். இத்தைலத்தை உடம்பிலும் தலையிலும் பூச சந்நியுடன் வாதங்களும் 3 தினங்களுள் தீரும்.

## கண்டகுச்ச சந்நிக்கு
## குடிநீர்

கண்ட குச்சன் சந்நிக்குக்
கருதுங்குடிநீர் சொல்லக் கேளுங்
கண்டங் காலி வில்வமுடன்
கடிய முன்னை பெருங்குமிழும்

மீண்டு மிலந்தை பற்பாடம்
வீருஞ் சுக்குப் புடலுடனே
கொண்டு சரியாய்ப் படிநீரிற்
குறுகக் காய்ச்சிக் கொள்வீரே. 318

(இ-ள்.)

| | |
|---|---|
| கண்டங்கத்திரிவேர் | வில்வவேர் |
| முன்னை | பெருங்குமிழ் |
| இலந்தை | பற்பாடகம் |
| சுக்கு | பேய்ப்புடல் |

இவைகளை சரி எடை எடுத்து இடித்து ஒரு பாத்திரத்தில் இட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு மேலேற்றி எட்டிலொன்றாக்கி வடிகட்டி உட்கொள்ள கண்டகுச்ச சந்நிகள் தீரும்.

## இரத்தச்சீவி சந்நியின் குணம்

இரத்தச்சீவி சந்நி தனக்
கிரத்த மெடுக்கு மிருமலுறும்
பெருத்த வுதடு விரிந்துலர்ந்து
பெருக்கப் பிதற்றுஞ் சுரமுண்டாம்
உரத்த நாக்குக் கறுத்துடைந்தே
யோடித்திரியுந் தலைசுழலும்
விருத்தமாகப் பொய் சொல்லு
மேனி நடுக்கி முடக்கிடுமே. 319

(இ-ள்.)

வாயிலிருந்து இரத்தம் வெளிப்படும். இருமல் உண்டாகும். உதடுகள் விரிந்து உலர்ந்துகாணும். பிதற்றுவான் ஜ்வரம் உண்டாகும். நாக்கு கருநிறமடையும், வெடிப்புகளும் ஏற்படும். தலை சுற்றல் ஏற்படும். வாய்க்கு வந்தபடி புளுகுவான். உடம்பு நடுங்கும்.

**இரத்தசீவிக சந்நிக்கு**
**சந்நிபாத பைரவம்**

பருதியெனவே சந்நிவாத வயிரவரசம்
பச்சை நாகங் கந்தகம்
பகரீரத மப்பிரகம் வெள்ளீய பற்பமும்
பருத்தவெங் காரமதுவும்
உருகவே சரியதாய் கொண்டாலின் வெண்பாலி
லொருதின மூறவைத்தே
வுற்ற டோலாவெந் திரத்திலொரு நாளெரித்துட
நாகமிக வாறிவே
கருதுங் கிடாவுடன் மீன்மயில் பிச்சிலுங்
கனக்க வொவ்வோர் தினந்தான்
கரகரப் பின்றியே யரைத்துளுந் தெனவுண்டை
கதித்திடத் தானு குட்டி
மருவவே யிரண்டுருண்டை திப்பிலிக் கடாயத்தில்
வள மாகவே கொடுத்தால்
மாறிவிடுமே யிரத்தச் சீவிசந் நியது
வளர்கும்ப முனிவன் முறையே. 320

(இ-ள்.)

சுத்திசெய்த நாகம்
, கந்தகம்
,, பாதரஸம்
,, அப்பிரகம்

வெள்ளீய பற்பம்
பொரித்த வெங்காரம்

இவைகளை ஒரு கல்வத்திலிட்டு ஆலம்பால் விட்டு ஒரு நாள் ஊறவைக்கவும். பின் டோலாயந்திரத்தில ஒரு தினம் எரிக்கவும். பிறகு,

மாட்டுப் பித்தம்
மீன் பித்தம்
மயில் பித்தம்

இவைகளில் ஒவ்வொரு நாள் முறையே அரைத்து உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

இதில் 2 மாத்திரைகள் எடுத்து திப்பிலிக் கஷாயத்துடன் உட்கொள்ள இரத்த சீவக சந்நிகள் தீரும்.

## குடிநீர்

இரத்தச்சீவிச் சந்நி தனக்
கேற்ற கடாயஞ் சொல்கிறேன்
பெருத்த சுக்குப் பாதிரிநீள்
பேயின்புடல் வெங்கொடி வேலி
யுரத்த வெருக்குப் பற்பாட
முயர்ந்த நெல்லிக் கடுதான்றி
பரித்த படிநீர் வார்த்து ழக்காய்
பண்பாய்க் காய்ச்சிக் கொடுத்திடே. 321

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | பாதிரி வேர் |
| பேய்ப்புடல் | வெள்ளைக் கொடிவேலிவேர் |

எருக்கு பற்பாடகம்
நெல்லிவற்றல் கடுக்காய்த்தோல்
தான்றித்தோல்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து 1ல் 8 பாகமாக்கி உட்கொள்ளவும். சீவுக சந்நிகள் தீரும்.

## தாந்திரிக சந்நிக் குறிகள்

தாக்குஞ் சந்நி தாந்திரிகந்
தானே பிதற்றும் நித்திரையில்
நாக்குக் கறுத்து முட்போலாம்
நயனந் தன்னில் நீர்வடியுஞ்
சீக்கப் பார்க்குந் தெரியாமற்
றேகம் நடுக்கும் பிரமைமாறும்
போக்குச் சொல்லும் பொய்சொல்லும்
பொருந்து மருந்து செய்திடே. 322

(இ-ள்.)

தூங்கும்போது தானாகவே பிதற்றுவான். நாக்குக் கருநிறமடைந்து முட்களைப் போலக் குத்தும். கண்களிலிருந்து கண்ணீர் வடியும், உடல் நடுங்கும், மயக்கமுண்டாகும், காரணமில்லாமல் பொய்பேசுவான். இக்குறிகள் தாந்திரிக சந்நியில் காணும்.

## புக்கு நேந்திர சந்நிக்கு
## விதரண பைரவ ரஸம்

பருத்திடும் விதரண பைரவ ரசத்திற்குப்
பாரதம் வங்கபற்பம்
பண்ணியிடு தாமிரப் பற்பமொடு கெந்தகம்
படியொத்த நிறையாகவே
யெருக்குதவு பாலிலே யரைத்தினிது டோளா
வெந்திரத் தொரு சாம
மட்டெரித்ததனை யாற்றியேவாங்கிப் பின்னாகவே
யினிச்சேந்துப் பிச்சிலேதான்
திருத்தமா யரைத்துண்டை குன்றிபோ லாக்கியே
திருகடுகுப் பொடியானதிற்
சேர்ந்தவனு பானவி சேடத்தி லீந்திடத்
தீர்ந்திடும் பக்குநயனம்
வருத்தமற வேசிறு பயற்றிடுங் கஞ்சியை
வார்த்திடப் பத்தியமு மாம்
மகதேவா தாமறிய நன்மருந் தாகவே
மாமறைகள் சொன்ன திதுவே. 323

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த | பாதரஸம் |
| ,, | கெந்தகம் |
| வங்க பஸ்பம் | |
| தாமிரகற்பம் | |

இவைகளைச் சரியெடை எடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கம் பால்விட்டு நன்றாக அரைத்து, ஒரு துணியில் முடிச்சாகக் கட்டி

அதிலிட்டு டோலாயந்திரமாக எரித்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அதிலிட்டு, ஆறியபின் நரிப்பித்துக் கொண்டுவந்து அதனுடன் அரைத்துக் குன்றிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி காயவைக்கவும். இதில் ஒரு மாத்திரை திரிகடுகு சூரணத்திலோ அல்லது தக்க அனுபானங்களுடனோ உட்கொண்டால் புக்கு நேத்திர சந்நிகள் தீரும். இதை சாப்பிடும் பொழுது பயற்றங்கஞ்சி உட்கொள்ளவும்.

## புக்கு நேத்திர சந்நிக்கு குடிநீர்

புக்குநேத் திரசந்நிக்குப் பரிந்திடு
கடாயங் கூறிற்
சுக்கொடு நொச்சி யுள்ளி
சொல்லிடு கண்டங் காரித்
தக்கவே ருயர் பற்பாடஞ்
சாற்றிடு மின்ன வெல்லாம்
ஒக்கவோர் படி தண்ணீரி
லுறக்காய்ச்சி யருந்த நல்கே. 324

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | நொச்சியிலை |
| பூண்டு | கண்டங்கத்திரிவேர் |
| பற்பாடகம் | |

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்து இடித்து சுத்த ஜலம் 5 சேர் விட்டு எட்டிலொன்றாக வற்றவைத்து இறுத்து உட்கொள்ளவும். புக்கு நேத்திர சந்நிகள் தீரும்.

## அபின்யாஸ சந்நியின் குணம்

அபினியாசச் சந்நி தானதிம
நித்திரை மெய் நோகுங்
குபிதமான தாப முடன்
கூடும்வாத முதல் மூன்றுந்
தபனமாகு முக மினுக்கித்
தானே யிலங்கும் பொய்சொல்லும்
விபுதமாக வேர் வுண்டா
மீளமருந்து செய்திடு வீர். 325

(இ-ள்.)

அதிக நித்திரை உண்டாகும். உடம்பின் குத்துவலி காணும். உடம்பில் எரிச்சல் எடுக்கும். வாதம் முதலான தோஷங்கள் பிரகோபிக்கும். முகத்தில் மினுமினுப்பு உண்டாகும். காரணமில்லாமல் பொய் சொல்லுவான். வியர்வையும் அரும்பும்.

## அபின்யாஸ சந்நிக்கு பைரவரஸம்

கரவிலாப் பயிரவ ரசமென் றிடல்பெருங்
காயமு மிரத முடனே
காசலவ ணத்துட னிந்துவீ டாலவணங்
கடலிற் பிறந்த வுப்பு
விரவாந வுயர்சத்திச் சாரமோ டெவச்சாரம்
வீறுச்சி காரமுந் தான்
விளங்கிடும் கந்தகஞ் சங்கவற் சாலவண
மிஞ்சாம லொத்த நிறையாய்
தரமாந கோடிவேலி வேரினொடு பூசினித்
தண்டு மாலின் கிழங்கு

தான்றியின் காய்நாவி கடுக்காய் விதையொடுச்
சாற்றிடு மின்ன வெல்லாஞ்
சராயாகவே கொண்டெ ருக்கம்வேர்ச் சாற்றிலே
தானரைத் திரண்டு நாள்மேற்
றணக் குகையிலிட்டதைச் சேலைமண் செய்தபின்
றகுங் கிரியை செப்புவேனால். 326

சேலைமண் செய்திடு பின்னர்
செப்பும் வாலுகா யந்திரத்தி
லேலும் வண்ண மிருசாம
மெரித்தே சேவற் பிச்சூட்டிக்
கோலக் குன்றி யளவின் நீர்
கொள்ள வபின்யா சம்போம்
வேலாம் விழியாய் அனுபான
விசேடத் திடப்போம் வீழ்சுரமே. 327

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, கந்தகம்
, ரஸசிந்தூரம்
பெருங்காயம்
இந்துப்பு
காசலவணம்
பிடாலவணம்
கடலுப்பு
சத்திச்சாரம்
எவச்சாரம்
வளையலுப்பு

இவைகள் சமனெடை எடுத்து பின்

கொடிவேலி வேர்
மருள்வேர்
கடுக்காய்த்தோல்
பூசினிக்கொடி
தான்றிக்காய்த்தோல்

இவைகளும் சரியெடை எடுத்து

முதலில் ரஸத்தையும், கந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து பின் உப்புகளைப் போட்டு அரைக்கவும். அதன்பிறகு கடைச் சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து சேர்த்து எருக்கம்வேர் சாறுவிட்டு 2 நாட்கள் நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

இந்த விழுதை ஒரு குகையிலிட்டுச் சீலைமண் 7 தடவை செய்து வாலுகாயந்திரத்தில் (மணல் மறைவில் புடமிடுவது) எரிக்கவும். இவ்வாறு 2 ஜாமங்கள் எரிக்கவும். பின் இந்த மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டுச் சேவல் பிச்சை விட்டு நன்றாக அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதை உள்ளுக்குக்கொடுக்க அபினாயஸ சந்நிகள் தீரும். மற்றதுகளுக்கு தக்க அனுபானங்களிலிட பற்பல ஜ்வரங்கள் தீரும்.

### அபின்யாஸ சந்நிக்கு குடிநீர்

வன்புறு மபினி யாச
　　மாறிடப் பஞ்ச கோலம்
மன்பெறு கண்டங் காலி
　　வழுதிலை சங்கி ரண்டு
தென்புறு சிற்றா முட்டி
　　திரிபலை வசம்பி னோடே
தண்புன லிரண்டு நாழி
　　தனைவிட்டுக் காய்ச்சிக் கொள்ளே. 328

(இ-ள்.)

திப்பிலி
திப்பிலிமூலம்
சவ்வியம்
சித்திரமூலம்

சுக்கு
கண்டங்கத்திரிவேர்
சிறுகத்திரிவேர்
சங்கம்வேர்
சிற்றாமுட்டி
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
வசம்பு

இவை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து 8 மடங்கு ஜலம் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி கஷாயம் செய்து வடிக்கட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். சந்நிகள் தீரும்.

**சிங்குவாக சந்நியின் குணம்**

சிங்கு வாகச் சந்நிக்குச்
செவிடுண்டாகி நாத்த டிக்கும்
எங்கும் நாவின் முள்ளாகி
யிருமு நாடி கடுகியெழும்
அங்கந் தன்னை யறியாதா
மான வசனஞ் சொல்லாது
பொங்குந் தாப முண்டாகும்
பொறுக்க மருந்து செய்வீரே. 329

(இ-ள்.)

இச்சந்நி.யில் காது கேளாது. நாக்குத் தடித்துப்போகும். நாவில் முட்களுண்டாகும். இருமல் ஏற்படும். நாடி துடிக்கும். தொட்டால் உடலில் சுரணை இருக்காது. ஆகாரம் உட்செல்லாது. உடம்பில் வெப்பமுண்டாகும்.

## சிங்குவாக சந்நிக்கு வைரவ ரஸம்

சுத்த மிகுவை ரவரசந்தான்
சொல்லு மிரத மரிதார
மொத்த படிகற் றாழஞ்சாற்
றூறவரைத்து டொந்தி ரமாய்
வைத்தோர் சாமமெரி யிட்டு
வாங்கி யிரண்டு கடலைபோற்
சித்தமாந் திப்பிலி யிடச்சிங்கு
வாகந் தீர்ந் திடுமே. 330

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, அரிதாரம்

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு கற்றாழஞ்சாறு விட்டு நன்றாக அரைத்து ஜாரணயந்திரத்தில் 1 ஜாமம் எரித்துப் பின் இரு கடலையளவு மருந்தைத் திப்பிலி சூரணத்துடன் உட்கொள்ள சிங்கு வாகம் தீரும்.

## இதற்கு சிற்றாமுட்டி குடிநீர்

சிங்கு வாக சந்நிக்குச்
சிற்றாமுட்டி பெருமுட்டி
சங்கி னுடனே மிளகறணை
தழைத்த பஞ்ச கோலமே
தங்குஞ்சிறு காஞ்சொறி தன்னைச்
சரியாய்த் தண்ணீரதனை விட்டுப்
பொங்கக் காய்ச்சித் திப்பிலிமென்
பொடியாய்த் தூவிக் கொள்வீரே. 331

(இ-ள்.)

| | |
|---|---|
| சிற்றாமுட்டி | பேறாமுட்டி |
| சங்கம்வேர் | மிளகறணை |
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| செவ்வியம் | சித்திரமூலம் |
| சுக்கு | சிறுகாஞ்சோறிவேர் |

இவைகளைச் சரியெடை எடுத்து ஒரு பாத்திரத்தில இட்டு 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும்வரை வற்றவைத்து, வடிகட்டித் திப்பிச் சூரணம் சேர்த்து உட்கொள்ளவும்.

சிங்குவாகச் சந்நிகள் தீரும்.

**சீதாங்க சந்நியின் குணமும், மருந்தும்.**

சீதசந்நி மெய்குளிர்ந்து திகைக்கு
மூர்ச்சை யுள தாகும்
போதவிக்கல் வயிறிழிவு பொரிந்து
நடுக்கம் வாந்தியொடு
காதுமிருமல் சந்நிவலி கடிதாமிந்தக்
குணங் கண்டால்
நீதமாக மருந்து செய்
நினைவீ ரீசன ருளாலே. 332

(இ-ள்.)

தேகம் சில்லிட்டுப் போகும். பெருமூச்சு உண்டாகும். மூர்ச்சையடிக்கடி ஏற்படும். விக்கல், வயிறிழிவு, நடுக்கம், வாந்தி, இருமல், மூட்டுக்களில் வலி முதலான இக்குறிகள் கண்டால் சீதாங்க சந்நியாகும்.

## ஆனந்த வயிரவ ரஸம்

அறிவான வானந்த வயிரவ ரசனுமசொல்வே
னரிதார முலோக பற்ப
மானவெண் காரமொடு காரீயம் வெள்ளீய
மாமதின் பற்ப முடனே
குறியான விரத நற்சாதி லிங்கஞ் செம்பு
கூர்ந்திடு பற்ப முந்தான்
கூடவே சரிகொண்டு திரிபலைச் சாற்றிலே
கூசா மலே யரைத்திட்

டுறவாக முன்சாற்றில் டோளாயந்திரமாக
வொருநா ளரைத் தாறினா
லுரகத்தின் பிச்சிலே யரைத்துண்டை குன்றிபோ
லுருட்டியே கொண்டு நீதான்
செறிவாக வனுபாந விசேடத்திலேயிடு
திகழ்தயிர் பத்தியஞ் செய்
சீதாங்க சந்நிதான் றீருமப் போதுதான்
சிவனார் மொழிந்த திதுவே. 333

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த | பாதரஸம் |
| ,, | தாளக்ம் |
| ,, | சாதிலிங்கம் |
| பொரித்த | வெங்காரம் |
| லோகபற்பம் | |
| காரீய பற்பம் | |
| வெள்ளீய பற்பம் | |
| செம்பு பற்பம் | |

இவைகளைச் சரியெடை எடுத்து திரிபலாக் கஷாயம் விட்டு நன்றாக அரைத்து, ஒரு துணியில் முடிந்து திரிபலாக் கஷாயத்தில் டோலாயந்திரமாகக் கட்டி ஒரு நாள் எரித்து, ஆறிய பின்னா் பாம்புப்பிச்சு விட்டு நன்றாக அரைத்து குன்றிமணி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். தக்க அனுபானத்தில் இடவும். தயிர் மோர் சேர்த்துக்கொள்ளவும். சீதாங்க சந்நிகள் தீரும்.

**சீதாங்க சந்நிகள் தீர குடிநீர்**

சீறுஞ் சந்நிச் சீதாங்கந்
தீரும் படிக்குக் கடாயங்கேள்
கூறும் பஞ்ச கோலமுடன்
கூறு மிளகு பற்பாடகம்
பேறுங் கடுகு ரோகிணியும்
பேயின் புடலுஞ் சரிகொண்டு
வீறும் படிநீர் விட்டுழக்காய்
விருபிக் காய்ச்சிக் கொண்டிடே. 334

(இ-ள்.)

| | |
|---|---|
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| சவ்வியம் | சித்திரமூலம் |
| சுக்கு | மிளகு |
| பற்பாடகம் | கடுகரோகிணி |
| பேய்ப்புடல் | |

இவைகளைச் சரியெடை எடுத்து (1 பலம்) 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றாகக் கஷாயம் செய்து வடிக்கட்டி உட்கொள்ளவும்.

## சித்தவிப்பிரம சந்நியின் குணம்

சித்தவிப் பிரமச் சந்நிச்
செய்திடுங் குணங் கள்வாத
பித்தமாங் கோபமெத் தப்பிரமை
யாம் மிகப் பிதற்றும்
பத்தியாய்ப் பாடு மாடும்
பார்வையுந் திரும்பிப் பார்க்கும்
மெத்தவே குழையும் மேனி
விளம்புவன் மருந்து தானே. 335

(இ-ள்.)

காரணமில்லாமல் கோபிப்பான். மிகவும் மயங்குவான். பிதற்றுவான். ஆடுவான், பாடுவான், திரும்பித் திரும்பி பார்ப்பான். உடல் குழையும்.

## மதன விப்பிரம் ரஸம்

ஏற்றமுட னேமதன விப்பிரம ரசஞ்சொலி
னிரத முடனே கந்தகம்
மிந்துவுட னேசெம்பு பற்பம் மனோசிலை
யிடைகள்சரி யாகவே தான்
சாற்றிடு முள்ளிப்பழச் சாற்றினி லரைத்ததைச்
சதுரவச் சிரமு ழத்திற்
றன்வாலு காயந்தி ரந்தனிற் பூபுடஞ்
சாமமும் மூன் றெரித்தே.

யாற்றியே யெடுத்திடு பசுவினது பிச்சிலே
யரைத்துண்டை கடலை போலே
யாக்கியே யோருண்டை யிளநீரி லேயல்ல
தானதிரி கடுகா னதிற்
போற்றியே கொண்டிடிற் சித்தவிப் பிரமையாம்
பொல்லாத சந்நி தீரும்
புவனமதில் யாவர்க்கு மாகவே யீசனார்
பொய்யாது ரைத்த திதுவே. 336

(இ-ள்.)

| | |
|---|---|
| சுத்திசெய்த | பாதரஸம் |
| ,, | கந்தகம் |
| ,, | மனோசிலை |
| செம்புபற்பம் | |
| இந்துப்பு | |

இவைகளை சரியெடை எடுத்துக் கல்வத்திலிட்டு முள்ளிப் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து வஜ்ஜிர மூசையில் இட்டு வாலாகாயந்திரத்தில் மணல் மறைவில் வைத்து 3 ஜாமங்கள் எரிக்கவும். பின்னர் இதனை எடுத்துக் கல்வத்திலிட்டு பசுவின் பித்தத்தை விட்டு நன்றாக அரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதனை இளநீருடன் ஒரு உருண்டை உட்கொள்ளக் கொடுக்கவும். திரிகடுகு சூரணத்திலும் கொடுக்கலாம். சித்த விப்ரம சந்நிகள் தீரும்.

## சித்த விப்ரம் சந்நிக்கு கஷாயம்

சித்தவிப் பிரம சந்நி
தீர்ந்திடக் கஷாயஞ் சொல்வேன்
னொத்திடு நொச்சி முள்ளி
விரைதிரி கடுகோ டுள்ளி
கைத்திடு பசுங் கைய்ந்த
கரையிலை சரியாய்க் கொண்டே
யத்தையோர் படிநீர் தன்னிற்
போட்டெரித் தருந்திற் றீரும். 337

(இ-ள்.)

| | |
|---|---|
| நொச்சி | முள்ளிவிரை |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பூண்டு |
| கையாந்தகரை | |

இவைகளைச் சரியெடை எடுத்துச் சுத்த ஜலம் 1 படி (5 சேர்) விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாகக் குருக்கி வடிகட்டி அருந்தவும். சித்த விப்ரம் சந்நிகள் தீரும்.

## சந்திரிக சந்நியின் குறிகள்

சந்திகச் சந்நி செய்யுந்
தற்குணஞ் சரீரம் வீங்கும்
நொந்திடு முடம்பு தானு
நோக்கமு மிருண்டு காணும்
வந்திடு மிளைப்போ டீளைவலிந்
திடுந் தாகந் தோன்றும்
இந்து நேர் முகத்தினாளே.
யினியிதன் மருந்து கேளே. 338

(இ-ள்.)

சரீரம் வீங்கும், உடம்பு வலியுண்டாகும். கண்கள் இருண்டு போகும். இளைப்பு, ஈளை, வறட்சி முதலானவை உண்டாகும். இவைகளுக்கு மருந்தாவது:-

**சந்திக சந்நிக்கு கஷாயம்**

சந்திகச் சந்நிக்காகச் சாற்றிடுங்
குடிநீர் கேளாய்
முந்துகுக் குலுவு மாட்டாங்
கொடிமுதிர் பஞ்சகோலம்
கந்தமார் கடுகுரோகிணி கனமிள
கறணை தன்னோ
டந்தவொட் டடையுங் கூட்டி
யப்பினிற் காய்ச்சிக்கொள்ளே. 339

(இ-ள்.)

| | |
|---|---|
| குக்கில் | ஆட்டாங்கொடி |
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| சவ்வியம் | சித்திரமூலம் |
| சுக்கு | கடுகரோணி |
| மிளகறணை | ஒட்டடை |

இவைகளைச் சரியெடை (1 பலம்) எடுத்து இடித்து 5 சேர் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து உட்கொள்ளவும். சந்நிக சந்நி தீரும்.

## பிரலாப சந்நிக் குறிகள்

பெருபிர லாபச்சந்நி பிதற்றிடுஞ்
சரீரம் நோகும்
திறமதாய் விக்கல் காணுஞ்
சேடநடுக் கருமலுண்டாம்
உறவான தாகமுண்டா முறங்கிடா
தெழுந் திருக்கும்
நறவுசேர் மொழியாய் காயம்
நலம்பெற மருந்துசெய்யே. 340

(இ-ள்.)

சம்பந்தம் இல்லாமல் பிதற்றுவான். உடல் நோகும். விக்கல் உண்டாகும். நடுக்கம், இருமல், தாகம் முதலானவை உண்டாகும். தூக்கம் வராது.

## பிரலாப சந்நிக்கு காருண்ட பைரவ ரஸம்

பாமாண காருண்ய பைரவ ரசஞ்சுத்தி
பண்ணிய விரதமுடனே
பாரத மப்பிரகஞ் சரியாக வேகொண்டு
பருத்தகை யாஞ்சாற்றிலே
யுரமாக வேயரை வச்சிர முழமிட்டு
றுவாலுகா யந்திரத்
தொருசாம மெரியிட்டுச் சீதள மானபின்
னுடனாக வாங்கியேதான்

திரமான காட்டினிற் பன்றியோடு மயில்களின்
சேர்ந்திடு பிச்சி னாலே
சிதறாம லரைத்துண்டை யுளுந்தினள வாகவே
சீராகக் கொண்டு ருட்டி
பாவாக வனுபான விசேடத்தி லேயிட
வீறுபிர லாப சந்நி
மெய்யாக வேதீரு மாயுர்வே தத்தினில்
வேதர் விதித்த திதுவே. 341

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, அப்ரகம்

இவ்விரண்டையும் சமவெடுத்துக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து வஜ்ஜிர மூசைக்குள் அடைத்து வாலுகாயந்திரத்தில் ஒரு சாமம் எரிக்கவும். குளிர்ந்த பின் மருந்தை கல்வத்திலிட்டு, காட்டுப் பன்றிப் பிச்சு, மயில்பிச்சு, இவைகளை விட்டு நன்றாக அரைத்து உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்லவும். இம்மாத்திரையை தக்க அனுபானத்தில் உட்கொள்ளப் பிரலாப சந்நிகள் தீரும்.

**பிரலாப சந்நிக்கு குடிநீர்**

சாற்றுஞ் சந்நி பிரலாபந்
தணியக் கடாயஞ் சொல்லக்கேள்
போற்று மழிஞ்சில் மாவலிங்கை
புடோலஞ் சுக்கு சீந்திலுடன்
ஏற்ற திப்பிலி மூலமுட
னெழிற் கொடிவேலி மரமஞ்சள்
தோற்றும்படி நீர்விட் டுழக்காய்ச்
சுவறக் காய்ச்சிக் கொள்ளே. 342

(இ-ள்.)

| | |
|---|---|
| அழிஞ்சில்வேர் | மாவிலிங்கப்பட்டை |
| பேய்ப்புடல் | சுக்கு |
| சீந்தில்கொடி | திப்பிலிமூலம் |
| கொடிவேலிவேர் | மரமஞ்சள் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் 5 சேர் விட்டு எட்டிலொன்றாகும் வரை எரித்து வடிக்கட்டி உட்கொள்ளவும். பிரலாப சந்நிகள் தீரும்.

## அந்தகச் சந்நியின் குணம்

சொல்லுஞ் சந்நி யாதகந்தான்
சுரமும் விக்கல் வாந்திகளும்
அல்லற் றாகந் தலையசைப்
போடதிக மோகப் பிரமையுடன்
சொல்லும் பொய்யை மெத்தவே
சோர்வு மிகவ யுண்டாகும்
அல்லைப் பழித்த குழலாளே
யதற்கு மருந்து பகர்வேனே. 343

(இ-ள்.)

ஜ்வரம், விக்கல், வாந்தி, தாகம், தலையசைவு, மயக்கம், பொய் பேசுதல், உடல் சோர்வு முதலான குறிகள் உண்டானால் அது அந்தக சந்நியின் குறிகளாகும்.

## விஜய பைரவ ரஸம்

பண்பான விஜயபை ரவரசஞ் சொல்வேன்
பாரதம் வங்கபற்பம்
பச்சைநாக மப்பி ரகபற்ப முஞ்சரி
கொண்டுபகர் திரிகடுகுச் சாற்றிலே
நண்பாக வோர்நா ரைத்துமண் சேலைசெய்
நல்வாலு காயந்திரம்
நாட்டியே யிருசாம மெரித்தாற்றி யேபின்னர்
நற்சேவற் பிச்சிலேதான்.

கண்காண பாவனைகள் செய்தே கடலைபோறி
கனத்த விள நீரிலிடவே
கடுகவே யந்தகச் சந்நியுந் தீருமே
காலனையும் வெல்ல லாகும்
திண்பா ரிடத்திலுறு மானிடரெல்லாம் பிழைக்கத்
திருவுளக் கருணை கூர்ந்து
தென்றஞ்சை நகர்மேவு சரபோசி மன்னவர்
தெரிந்திட்ட முறையி தாமால். 344

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரஸம்
,, நாகம்
வங்க பற்பம்
அப்பிரக பற்பம்

இவைகளைத் திரிகடுகு (சுக்கு, திப்பிலி, மிளகு) கஷாயம் விட்டு ஒருநாள் முழுவதும் நன்றாக அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து சீலைமண் செய்து, வாலுகா யந்திரத்தில் வைத்து 2 ஜாமங்கள் எரித்து, ஆறியபின் இதனைக் கல்வத்தில் வைத்து

சேவல் பித்தத்தை விட்டு நன்றாக அரைத்து கடலை அளவுள்ள உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். இதனை இளநீருடன் உட்கொள்ளக் கொடுக்கவும். அந்தகச் சந்நிகள் தீரும். இதன் பெயர் விஜய பைரவ ரஸமாகும்.

## பித்த சந்நிக் குறிகள்

பெருக்கும் பித்த சந்நிக்குப்
பிதற்றும் நகைக்கும் முகஞ்சுளிக்கும்
புருவ நெறிக்கும் மோகிக்கும்
போகம ழியப்பல பேசும்
மருவங் கருகி வயிறிழியும்
மண்ணீ ரடையப் புண்ணாக்குங்
கருதுங் குணத்தை நீகாணிற்
கடியபித்தச் சந்நி யென்னே. 345

(இ-ள்.)

வாயில் வந்தபடி பிதற்றுவான். காரணமில்லாமல் சிரிப்பான். முகத்தைச் சுளித்துக் கொள்வான். புருவத்தை நெறிப்பான். மயக்கமடைவான். இஷ்டப்படி பிதற்றுவான். வயிறு கழிச்சல் உண்டாகும். இவை பித்த சந்நியின் குணங்களாகும்.

## வாத சந்நியின் குணம்

கையை விரித்துக் கொட்டவதும்
கண்ணை விழியா தொழிவதும்
மெய்தான் முழுவதும் வலிப்பதும்
வேண்டும் படியே பிதற்றுவதும்

பைப் பைய நகைப்பதுவும்
பாரா தெனவே பார்ப்பதுவும்
மெய்யைப் பழித்த குழன்மடவாய்
வாதசந்நி யெனச் சொல்லே. 346

(இ-ள்.)

கையை விரித்துத் தாளம் போடுவான்
கண்ணை விழிக்கமுடியாமல் கஷ்டப்படுவான்
பொய் பேசுவான். கண்டபடி பிதற்றுவான்
சிரிப்பான், பார்வை கெடும்.
இவைகள் வாதசந்நியின் குணங்களாகும்.

## சேத்தும சந்நிக் குறிகள்

மூக்கு நீர் வெள்ளோக்காள
முடுகிய சுவாசங் காய்ச்சல்
தேக்குநீ ரினிப் பில்லாமை
தித்திப்பி னுடன் குளிர்ச்சி
பார்க்குங் கண்பசலை பெய்தல்
பாரமான் துயிலுண் டாதல்
தீர்க்கமா யுறிற் றீராது
சேட்டுமச் சந்நி யீதே. 347

(இ-ள்.)

மூக்கிலிருந்து நீர் விடுதல், வெள்ளோக்காளம், சுவாசம், காய்ச்சல், நீரில் இனிப்பில்லாமை, வாயில் திதிப்புச்சுவை, குளிர்ச்சி, கண்களில் பசுமை நிறம், உடலில் பார உணர்ச்சி, அதிகமான நித்திரை இவைகள் ஏற்படும். இது தீராது.

## சேத்தும வாத சந்நிக்குறிகள்

பெருகிய சேட்டு மத்திற்
பிணங்கியே வாதம் வந்தாற்
கருதிய சந்நி வாதசுர
மென்று காண லாகும்
மருவிய பிடரி மார்புங்
குத்திடு கைகா னோகிற்
திருகிய குழனல் லாளே
சேட்டும வாத சந்நி. 348

(இ-ள்.)

சிலேஷ்மத்துடன் வாதம் மேலிட்டு ஏற்பட்ட சந்நியில் ஜ்வரம் உண்டாகும். பிடரி மார்பு முதலான இடங்களில் குத்து வலியுண்டாகும். கைகால்களில் கடுப்பும் உண்டாகும். இவைகள் சேத்தும வாத சந்நிக் குறிகளாகும்.

## சங்கம தோடச் சந்நிக் குறிகள்

தருணமாஞ் சுரத்திலே தான்
சங்கமஞ் செய்தா னாகிற்
பெருகவே பொய்யைச் சொல்லும்
பிரமையா யெழத் திருக்கும்
எரிவுறு மார்பி னுள்ளே
யிருகைகால் குளிர்ச்சி யெய்துஞ்
சரீரமும் நடுக்கு நோகுஞ்
சங்கம சந்நி தானே 439

(இ-ள்.)

ஜ்வரம் ஆரம்பித்திருக்கையில் ஸ்திரீ சங்கமம் செய்தால் சந்நிவர்க காரணமாகும். இதில் காரணமில்லாமல் பொய் பேசுவான். மயங்குவான். மார்பில் எரிச்சலுண்டாகும். கை கால்கள் குளிரும் சரீரம் நடுங்கும். வலியுண்டாகும்.

## அபத்திய சந்நிக் குறிகள்

அரியவையைச் சேர்ந்த தாலும்
அபத்தியத் தாலுஞ் சந்நி
வருகுணம் பிரமை தாகம்
மார்புநோய் மூர்ச்சை யுண்டாம்
பெருகத்தந் திரங்கள் பேசும்
பேசுவ தெல்லாம் பொய்யே,
அரி யெனும் விரியினாளே
யபத்தியச் சந்நி தானே 350

(இ-ள்.)

ஸ்திரீ பேகம் அதிகரித்தல், மயக்கம், தாகம், மார்புவலி, மூர்ச்சை, தந்திரமாய்ப் பேசுதல், பொய் பேசுதல் முதலான குறிகள் அபத்தியச் சந்நிக் குறிகளாகும்.

## வாத சந்நியின் குணம்

அத்திமெய் யழலே செய்யு
மாங்கார மாகப் பேசும்
மெத்தவே வெதுப் புத்தானு
மேன்மேலுந் தோற்றஞ் செய்யும்

பித்தமாய் வாயுங் கைத்துப்
பிதற்று கைபெருக வுண்டாம்
மத்திய மூக்கு நாக்கு
முகங்கன்று வாத சந்நி. 351

(இ-ள்.)

உடலில் சூடு அதிகமாகும். கோபம் மேலிட்டுப் பேசுவான். வாயில் கைப்புச் சுவை தோன்றும். தன்னிலமை தவறிப் பேசுவான். மூக்கு, நாக்கு, முகம் முதலானவை கறுத்துப்போகும். இவை வாத சந்நியின் குணங்களாகும்.

**தோடச் சந்நியின் குணம்**

சரீரத்தை நோகப் பண்ணி
சந்திடை கடுப்ப தாகி
நெரியவே இருமு நாளும்
நெருங்கியே மலமுந் தீயும்
அருகியே வாத மீறி
யடிவயி றதனி னோவாம்
பிரிவினால் மலமு நிற்கும்
பெருந்தோஷச் சந்நி யென்னே. 352

(இ-ள்.)

சரீரத்தில் வலியுண்டாகும. மூட்டுகளில் கடுப்புவலி ஏற்படும். இருமல் அதிகரிக்கும். மலச்சிக்கல் உண்டாகும். வாதம் தேகத்தில் அதிகரித்து அடிவயிற்றில் வலியுண்டாகும். இவை தோஷச் சந்நியின் குறிகளாகும்.

## அசாத்திய சந்நிக் குறிகள்

கைகால் செவி யுச்சி
கண்டமூக் குக் குளிர்ந்து
மெய் தான் சுழன்று
விழி சிவந்து பையயவே
வாயு மோனோக்கி வயிறு
தனிற் சூலை வரில்
ஆயு நிலை யில் லென் றறி. 353

(இ-ள்.)

கைகால்கள், காது, உச்சி, கழுத்து, மூக்கு முதலான அங்கங்கள் சில்லிட்டுப் போகும். தலை சுற்றல் உண்டாகி விழி சிவக்கும். வாயுமேல் நோக்கி வயிற்று வலியை உண்டாக்கினால் நோயாளி பிழைப்பது அரிது என்றறியவும்.

## கன்திரிக சந்நி முதலானவைகளின் லக்ஷணம்

கன்றிகங் காதைச் சூழக்
கதித்திடுங் கண்ட குச்சம்
ஒன்றிய தொண்டை வீங்கு
முருத்திரந் தண்ணிரென்னுங்
குன்றிபோ லிரத்தச் சீவிக்
குறுதியே யெடுக்கும் வாயால்
ஒன்றுதாந் திரிகம் வாயா
லோயாமற் பிதற்று மென்னே. 354

புக்குநேத் திரங்கண் ணீராய்ப்
புகைந்திடு மபினி யாசந்
திக்கென விழுந் தெழும்புஞ்
சிங்குவங் கறுக்கு நாக்கைத்
தக்கதோர் குளிரி னோடே
சயித்தியமாஞ் சீதாங் கஞ்
சிக்கெனக் கலங்கி மெத்தச்
சித்தவிப் பிரமந்தி கைக்கும். 355

சந்தி மசதி போடும்
பிரலாபந் தபன மாக்கும்
அந்தகன் விக்க லுண்டாமை
யிரண்டு டனே மூன்றாய்
வந்தகச் சந்நி தன்னை
வகைபெற வரிந்து மாதே
செந்தமிழ்ப் புலவோர் முன்னாட்
செய்த னரிந் நூலென்னே. 356

(இ-ள்.)

1. கன்றிகச் சந்நியில் காதைச்சுற்றிலும் வீக்கமுண்டாகும்.
2. கண்ட குச்சத்தில் தொண்டை வீங்கும்.
3. ருத்திர சந்நியில் தண்ணீர் தாகம் உண்டாகும்.
4. இரத்த சீவகசந்நியில் இரத்தமாக வாந்தியுண்டாகும்.
5. தாந்திரிகத்தில் பிதற்றல் அதிகமாயிருக்கும்
6. புக்குநேத்திர சந்நியிலோ கண்ணீர் பெருகிப் பார்வை புகைக்கும்
7. அபின்யாஸ சந்நியில் திக்கென்று விழுந்து விழுந்து எழுவான்
8. சிங்குவை சந்நியில் நாக்குக் கறுநிறமடையும்
9. சீதாங்க சந்நியில் உடலில் குளிர்ச்சியேற்பட்டு நடுக்கலுண்டாகும்

10. சித்தவிப்ரமத்தில் நோயாளி இறப்பான்
11. சந்நிகத்தில் தேகத்தில் அசதி அதிகரிக்கும்.
12. பிரலாபத்தில் உடலில் அனலேற்படும்
13. அந்தகத்தில் விக்கல் அதிகமாய் இருக்கும்.

என்றிவ்வாறு இந்த 13 சந்நி வகைகளிலும் முதன்மையான குறிகளைக் கூறியுள்ளனர் பெரியோர்.

## கன்றிக சந்நியில் அசாத்தியக் குறிகள்

கன்றிக சந்நி தானுங்
காதுகொப் பிளமாக வீங்கும்
நன்றி போற் பொய்யே
சொல்லு நாவிரிவிக் கலுண்டாங்
கன்றிய நடுக்க மாகுங்
கடியவிக் குணங்கள் கண்டால்
வேன்றி கொள் மருந்து
செய்வாய் விருப்பொடு நோய்திரும்பும்.

(இ-ள்.)

கன்றிக சந்நியில் காதின் புறத்தில் கொப்புளம் போன்று வீக்கம் உண்டாகும். உண்மை போலப் பொய் பேசுவான். நாக்கில் வெடிப்புகளுண்டாகும். விக்கல் அதிகரிக்கும். உடல் நடுங்கும். இவை அஸாத்யக் குறிகள் என்றறியவும்.

## குத்துப் புரவீச்சிற்கு

இரதங் கெந்தகம் வெள்ளுள்ளி
யிலாமிச் சுடனே சேங்கொட்டை
சாதமுறவே யாவின் வெண்ணெய் தன்னோடொக்
கவரைத் தெடுத்தே

யுரமார் குத்துப் பிரவீச்சுக்
குடனே குத்தி யுரம்பண்ணிக்
கரவா தினிது கலைசுருட்டிக்
கனலிற் கொளுத்தித் தைலமிடே. 358

(இ-ள்.)

| | |
|---|---|
| பாதரஸம் | கெந்தகம் |
| பூண்டு | இலாமிச்சம்வேர் |
| சேங்கொட்டை | |

இவைகளைக் கல்லுரலில் இட்டு நன்றாக அரைத்துப் பசுவின் வெண்ணை கூட்டி நன்றாக மத்தித்து ஒரு துணியில் தடவிச் சுருட்டிக் கொளுத்தவும். இதிலிருந்து சுடர்தைலம் இறங்கும். இதனை குத்துப்புர வீச்சிற்கு மேலே தடவவும்.

## முலைக்குத்துக்கு

முசுறு முட்டை பூனாகம்
முந்திரிக கனி பேரீச்சு
பசித்த சோம்பு மிளகுள்ளி
பழகுஞ் சந்து பூசனிப்பூ
முசித்தோர் பூசுமுருந்த வித்து
முந்து கலையின் கொம்பதுவும்
நசுக்கிக் கொடுக்க முலைப்பாலி
னன்றாய்த் தீரு முலைக்குத்தே. 359

(இ-ள்.)

| | |
|---|---|
| முசுறுமுட்டை | பூநாகம் |
| திராட்சை | பேரீச்சம்பழம் |

| | |
|---|---|
| சோம்பு | மிளகு |
| பூண்டு | பூசணிப்பூ |
| முருந்துவித்து | மான்கொம்பு |

இவைகளை இடித்து முலைப்பாலுடன் கூட்டிக் கொடுத்து வர முலைக்குத்துகள் தீரும்.

### 13 சந்நிக்கும் குடிநீர்

கூறுஞ் சந்நி பதிமூன்றுங்
குணமா முன்னை நிலவேம்பு
வீறு மோமம் புடலுடனே
வெய்ய வசம்பு பற்பாடந்
தேறுஞ் சுக்குச் சரிகொண்டு
சேர்த்து நறுக்கிப் படிநீரில்
ஊறக் காய்ச்சிக் குடித்தக்கா
லொழியுஞ் சந்நி யொருநாளில். 360

(இ-ள்.)

| | |
|---|---|
| முன்னைவேர் | நிலவேம்பு |
| ஓமம் | பேய்ப்புடல் |
| வசம்பு | பற்பாடகம் |
| சுக்கு | |

இவைகளைச் சரியெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் வார்த்து அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் குருக்கி வடிக்கட்டி உட்கொள்ள 13 வித சந்நிகளும் தீரும்.

## புறவீச்சிற்கு மருந்து

உள்ளிப் பருப்பி லரைப்படிதா
ஹுறவே யரைத்துச் சேலையினில்
மெள்ளச் சுருட்டி வேம்பினெய்
விட்டே யெரியும் பெருஞ் சுடற்
றெள்ளப் பிடித்துப் பிழிதையஞ்
சிரசு பிடரி தனிற்றடவி
யுள்ளுக் கீந்தாற் றுடியிடையா
யுடனே தீரும் புறவீச்சு 361

(இ-ள்.)

உரித்த பூண்டு அரை படி எடுத்து நன்றாக அரைத்துக் கல்க்கமாக்கி ஒரு வெள்ளைத்துணியில் ஒரே சீராகத்தடவிச் சுருட்டி வேப்பெண்ணையில்த் தோய்த்து எரியும் சுடரில் கொளுத்தவும். அதிலிருந்து எண்ணெய் வெளியாகும் இந்த தைலத்தைச் சேகரித்து வைத்துக் கொண்டு தலை, பிடரி, முதலான இடங்களில் தடவி உள்ளுக்கும் அரை வராகனெடை கொடுக்கப் புறவீச்சுகள் தீரும்.

சர்வஜித்ஞூ மார்கழிமீ 14வ வெள்ளேடு புஸ்த்தகத்திற்கு ஏடு 330 ஷ தேதியில் சிவக்கொழுந்து பண்டாரம் வசம் ஏடு 100 நீக்கி இருப்பு ஏடு 230.

சுபம்

# சுத்திக் கிரமம்

---

## இருவி

இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சிறுநீரில் மூன்று நாள் ஊறப்போட்டு எடுத்து உலர்த்துக

## நாவி

இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கோரிநீரில் மூன்று நாள் ஊறப்போட்டுக் கோரைநீரை வடித்து ரவியில் உலர்த்துக

## வெள்ளைப்பாஷாணம்

உழமண்ணைக் கரைத்துச் சீலையில் நனைத்து ஒரு பலம் பாஷாணத்தின்மேல் தேங்காய்ப் பிரமாணத்திற்குக் கனமாகச் சுற்றி ஒரு பெரிய பானையில் பாகம் ஜலம் விட்டு டோலாயந்திரமாக 3 ஜாமம் எரிக்கவும்.

## கௌரி

சிறுநீரில் 3 நாள் ஊறப்போட்டு எரித்துச் சுத்த ஜலத்தில் அலம்பி உலர்த்துக

## எலிப்பாஷாணம்

இதனைத் தேனில் போட்டுக் காய்ச்சி எடுத்துக் கொள்க.

## லிங்கம்

முலைப்பாலில் 30 நாழிகை ஊறப்போட்டுப் பாலை நீக்கி, மறுபடியும் புதியதாகப் பாலைவிட்டு, முன்போல் ஊறவைக்கவும். இவ்வாறு 3 முறை செய்யவும்.

## பாதரஸம்

ஓட்டரை, வெல்லம், திரிகடுகு, மஞ்சள், கடுகு, செங்கல், உப்பு இவைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கொஞ்சம் போட்டு அரைத்துக் கழுவிப் பின்னர் ஊமத்தைச்சாறு, தயிர், சுண்ணநீர் இவைகில் தனித்தனி 1 ஜாமம் அரைத்து அலம்பி எடுத்துக் கொள்ளவும்.

## ரஸசிந்தூரம்

முலைப்பாலில் 30 நாழிகை ஊறப்போட்டெடுக்கவும்.

## கந்தகம், நெல்லி கந்தகம்

சந்தனக் கஷாயம், கோவையிலைச்சாறு, சோற்றுக் கற்றாழைச் சாறு, புளியாரைச்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் 1 ஜாமம் கிழி கட்டி எரிக்கவும். அல்லது நெய்விட்டு தீப்பற்றாமல் உருக்கிப் பசும்பாலில் 7 முறை சாய்க்கவும்.

## தாளகம்

சிறுசிறு துண்டுகளாகச் செய்து கல் சுண்ணாம்பின் மத்தியில் வைத்து, பனங்கள் விட்டுத் தாளித்து, குழம்பாக இருக்கும் பதத்தில் கலக்கி 1 ஜாமம் எரித்து எடுக்கவும். இவ்வாறு 3 முறை செய்யவும்.

## மனோசிலை

காடியில் கிளிகட்டி எரித்தெடுக்கவும். வெள்ளாட்டு மூத்திரத்தில் டோலாயந்திரமாக எரித்து எடுக்கவும்.

## முதார் சிங்கி

வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு நாழிகை கொதிக்க வைத்து எடுத்துக்கொள்ளவும்.

## வங்கம்

இலுப்பை எண்ணெயிலாகிலும் தேங்காய் எண்ணெயிலாகிலும் நவச்சாரத்துள் தூவி அதில் 7 திரம் உருக்கிச் சாய்க்கவும்.

## அல்லது

மோர், காடி, கோமியம், பழரசம் இதுகளில் உருக்கிச் சாய்க்கலாம். நகத்தையும் இவ்வைவறே சுத்திசெய்யலாம்.

## கருவங்கம்

வெள்ளாட்டு மூத்திரத்தில் பிரண்டைவேர் அரைத்துப்போட்டு நல்லெண்ணெய் விட்டு கலக்கிக் கொண்டு அதில் 10 தடவை உருக்கி சாய்க்கவும்.

## நாகம்

ஆட்டு நெய்யை உருக்கி, சிறுநீர், பழரசம் கூட்டி, சாரம் கல்சுன்னமிட்டு இவைகளைத் தனித் தனியாக வேனும் ஒன்றாகக் கலந்தேனும் வைத்துக்கொண்டு, நாகத்தைத் தகடடித்துச் சிவக்கக் காய்ச்சி 3 தடவை தோய்த்தெடுக்கவும்.

## துரிசு அல்லது துத்தம்

1. பொடி செய்து கிழிகட்டி ஒரு பானையில் சுண்ண நீர் விட்டு டோலாயந்திரமாக எரித்தெடுக்கலாம்.

2. வெளுக்க வருத்துக்கொள்ளலாம்.

3 தயிரிலரைத்து அடைதட்டி ஓட்டில் வைத்துக் காய்ச்சி எடுக்கலாம்.

## நிமிளை

தேனில் மத்தித்து இரட்டை மடிப்புச் சீலையில் முடிந்து கொள்ளுச்சாறு, கோநீர் காடி இம்மூன்றிலும் தனித்தனி ஒவ்வொருநாள் கிழிகட்டி எரிக்கவும்.

## அப்பிரகம்

காடியால் அரைத்து தெளிவையிறுத்து பிறகு கழுநீரில் கழுவி 10க்கு 1 பங்கு கொடிவேலி வேல் சேர்த்தரைத்து, ஒரு குடுவையிலிட்டு கலக்கி வைத்துக்கொண்டு அதில் நாகத்தைப் பத்துதிரம் உருக்கிச் சாய்க்க சுத்தியாகும்.

## தங்கம்

மெல்லிய தகடாக தட்டிச் செம்மண் தடவிக் காய்ச்சி எடுத்துக்கொள்க.

## வெள்ளி

இதற்குச் சமன் கருவங்கம் சேர்த்து வங்கம் போக ஊதி எடுக்கவும்.

## தாமிரம்

தகடாக தட்டி பழுக்கக் காய்ச்சி மோர், காடி, புளியிலைச்சாறு, குப்பைமேனிச்சாறு இவைகளில் முறையே தனித்தனி 7 தரம் தோய்த்தெடுக்கவும். அல்லது முருங்கையிலையை கற்சுண்ணத்துடன் சேர்த்து ஜலம் விட்டுக்கரைத்து அதில் 7, 14, 21 முறை தோய்க்க ஊறல் நீங்கும்.

## வெண்கலம்

காய்ச்சிப் புளியிலைச்சாற்றில் 3 தரமும் கொள்ளுச்சாற்றில் 7 தரமும் தோய்க்கவும்.

## பித்தளை

குப்பைமேனிச்சாறு, புளியிலைச்சாறு, வெள்ளாட்டுப்பால, கொள்ளுச்சாறு, இவைகளைத் தனித்தனியாகவோ ஒன்று கலந்தோ வைத்துக்கொண்டு பித்தளையைத் தகடடித்துச் சிவக்கக் காய்ச்சி 3 தடவை தோய்த்து எடுக்கவும்.

## காந்தம்

பழரசத்திலும், காடியிலும், மோரிலும், கொதிக்க வைத்தெடுத்து பிறகு சாணி நீரில் 7 தரம் காய்ச்சி துவைக்கவும். பிறகு திரிபலை கஷாயத்திலும் அநேகம் தடவை துவைக்கவும்.

எஃகு-இரும்பு முதலியவைகளையும் மேற்சொன்னபடியே சுத்தி செய்யலாம்.

## திரா

வங்கத்திற்கு சொன்ன மாதிரி சுத்தி செய்யவும்.

## மான்கொம்பு

சிறு துண்டுகளாக நறுக்கி மோரில் 3 நாள் ஊற வைக்கவும்.

## முத்து

சங்கம் பழச் சாற்றிலாவது புளியம்பழச் சாற்றிலாவது 3 நாள் ஊறவைத்து எடுக்கவும்.

## பவழம்

எலுமிச்சம் பழரசத்தில் 1 நாள் ஊறப்போட்டு எடுக்கவும்.

## நேர்வாளம்

துணியில் முடிந்து எருமை சாணியில் வேக வைத்து எடுத்தலம்பி, ஒவ்வொன்றையும் பிளந்து, தோலை நீக்கி நஞ்சென்னும் முளையையும் நீக்கி, அரிசி வெந்ததும் அம்முடிச்சை எடுத்தலம்பி, மறுபடியும் முன்போல் முடிந்து கட்டி பாலில் எரித்துக் கழுவி நிழலில் உலர்த்தி ஒரு சட்டியில் கொஞ்சம் சிற்றாமணக்கு எண்ணெயைத் தடவி அதில் போட்டு வறுத்து எடுக்கவும்.

## சேங்கொட்டை

முதலில் ஜலத்தில் ஊறவைத்து மறுநாள் மூக்கை வெட்டவும். பிறகு சாணியில் போட்டு கொதிப்பித்து எடுக்கவும்.

# மூலிகை அகராதி

அகத்தி - அச்சம், முனி, கரீரம்

அகில் - அகரு, அகிற்கட்டை, பூழில், காசுதுண்டம்

அக்கிரகாரம் - அக்கரகாரம், அக்கராகாரம்

அதிமதுரம் - அட்டி, அதிங்கம், மதுரம், யஷ்டிமது

அதிவிடயம் - அத்திரணம், பங்குரை, மாதிரி அதிவிடயம்

அப்பைக்கிழங்கு - அப்பைக் கோவைக்கிழங்கு

அமுக்கிரா - அமுக்கினாங்கிழங்கு, இருளிச்செவி அச்வகந்தா

அம்மான் பச்சரிசி - சித்திரபாலாடை, க்ஷீரிணீ

அரிவாள் மூக்குப் பச்சிலை - வெட்டுக் காய்பச்சிலை,
அரிவாமணைப்பூண்டு

அலரி - அரளி, கரவீரம், கணவீரம், கத்தூரிப்பட்டை

அவுரி - அவிரி, நீலி, உலகங்காத்தான்

அழிஞ்சில் - அங்கோலம், அங்கோலவைரவன்
செம்மரம்

ஆகாசகருடன் - கருடன் கிழங்கு, கொல்லன்கோவை,
பேய்ச்சீந்தில்

ஆடாதோடை - ஆடாதொடை, வாஸா

ஆணா - ஆவாரை, ஆண்ப்பிறந்தோன்

ஆடுதின்னாப்பாளை - பங்கம்பாளை, புழுக்கொல்லி
ஆடுதீண்டாப்பாளை

ஆதண்டம் - ஆதண்டை, காத்தொட்டி, காகதுரத்தி

ஆமணக்கு - ஏரண்டம், சித்திரம், தலரூபம்

ஆயில் - பூதிகம்

ஆவாரை - ஆணா, க்ஷேபுட்பி, மேகாரி

இண்டம் - இண்டு, புலிதுடக்கி, ஈயக்கொழுந்து

இம்பூறல் - சிறுவேர், சாயவேர், ராஜானம்

இரட்டைப்பேய் மருட்டி - வெதுப்படக்கி, பெருந்தும்பை

இலந்தை - பதரி, குல்வலி, கோல்

இலாமிச்சம் - விலாமிச்சு வேர், வாசம், ஹ்ரீபேரம்

இலுப்பை - இருப்பை, மதூகம்

உகா - உவா ஓமை

உத்தாமணி - வேலிப்பருத்தி

உலகங்காத்தான் - மணித்தக்காளி, அவுரி

ஊமத்தை - மத்தன், உன்மத்தன்

எட்டி - காஞ்சீரம், விஷமுஷ்டி

எருக்கு - அருக்கன், சனி உதித்தான், சனிகுதித்தான்

ஓரிலைத்தாம்ரை - அவ்யதம், ஒருசிறுபூண்டு

கஞ்சா - பங்கா கோரக்கர்மூலி, ஆநந்தமூலி, மதமத்தகம்

கடுகுரோகிணி - கடுரோகிணி, ஆகுடம், கடுகுரோகிணி

கடுக்காய் - அபயா, அமிரிதம், அமலை, அமுதம்

கண்டங்கத்திரி - கண்டகாரி, கண்டு

கத்தரிநாயகம் - வழுதலை, வழுதுணை

கம்பந்திராய் - தரா திரா, துரா

கம்பிப்பிசின் - ஒருவகைப் பிசின்

கரந்தை - கொட்டைக் கரந்தை, சிவகரந்தை

கரிசாலை - கரிசலாங்கண்ணி, கையான் தகரை

கரியபோளம் - மூசாம்பரம், ரக்தபோளம்

கறிமுள்ளி - பப்ரமுள்ளி

கற்கடசிங்கி - கற்காடகசிங்கி

கற்றாழை - குமரி, கன்னி, சோற்றுக் கற்றாழை

கவிழ்தும்பை - கவுதும்பை, அகும்பை

கழற்சி - கெச்சக்காய், கழற்கொடி, குபேராக்ஷி

கள்ளி - ஸ்னுகி

காக்கணம் - காக்கரட்டை

காட்டாமணக்கு - ஆதளை

காட்டுக்குறிஞ்சா - பெருங்குறிஞ்சான்

காய்வேளை - முக்காவேளை, கொள்ளக்காய் வேளை

கார் அகில் - கருப்பு அகிற்கட்டை

கார்போகல் - கார்போக லரிசி, பாகுசி

கிரந்திதகரம் - ஒரு சிறு பூண்டு

கிலுகிலுப்பை - வட்டக் கிலுகிலுப்பை, நரிமிரட்டி, பேய்மருட்டி

கீழாநெல்லி - கீழாவாய் நெல்லி, பூமியாமலகி

குக்கில் - குக்குலு, குங்கிலியம்

குதிரைவாலி - முதியார் கூந்தல், அம்மையார் கூந்தல்

குத்துக்காரன் சம்மட்டி - குத்துக்காற் சம்மட்டி

குப்பைமேனி - மேனி, பூனை வணங்கி

குமிழ் - நிலக்குமிழ், குமிழ மரம்

குட்டித் தக்காளி - சிறு தக்காளி

குட்டி விளா - சிறுவிளா

குன்றி - குந்து மணி, குஞ்ஜா

குறுந்தொட்டி - சித்தா முட்டி, பலா மூலம்

குருவிச்சுப் பூண்டு - குருவிச்சி, ஒரு குத்துச் செடி

கூகைநீர் - காட்டெருமைப் பால்

கொட்டைப் பாசி - ஒருவகை நீர்ப்பாசி

கொத்தளங்காய் - சமுத்திரப்பச்சை, சமுத்திரஜோதி

கொம்மட்டிக்காய் - தும்மட்டிக்காய், கும்மட்டிக்காய்
வலம்புரிக்காய்

கொம்மட்டிமாதளை - ஒருவித மாதுளை

கொடிவேலி - அக்கினி, சித்திரமூலம், சித்திரகம்

கொட்டைக் கரந்தை - கரந்தை

கோடகசாலை - கோடாசுழி, கோடாசூரி

கோரைக்கிழங்கு - முத்தக்காசு, முஸ்த்தா

கோழவரை - கோழியவரை, கோழிமுள்ளான்

கோஷ்டம் - கோட்டம், குரா, ஓலி

கையான் - கையாந்தகரை, கரிசாலங்கண்ணி, பிருங்கராஜம்

சக்கிரவளப்புல் - ஒருவித பூண்டு

சங்கம் - சங்கன், முட்சங்கன், நற்சங்கன், சங்கஞ்செடி

சங்கங்குப்பி - இசங்கு, பீச்சங்கன், குண்டலி

சங்கு - சங்கு புஷ்பி, காக்கறட்டை

சதகுப்பை - சதபுஷ்பா, கோழிக்கீரை விதை

சத்திச்சாரணை - சாட்டரணை, புனர்னவா, வெள்ளைச்சாரணை

சந்நிநாயகன் - சந்நிநாயகம்

சடாமாஞ்சில் - ஜடாமாஞ்சி, சடிலை, பைசாசி

சமுத்திரப்பச்சை - கொத்தளங்காய்

சனிகுதித்தான் - எருக்கு, சனி உதித்தான்

சனிப்பெருமாள் - சீனிபெருமாள், சீனைப்பெருமாள், வன்னிமரம்

சவுரிக்கொத்தன் - சிறுகுறட்டை

சாத்திவேதி - சதாவரி, தண்ணீர்விட்டான்

சாணாக்கி - ஒரு கீரை

சாறணை - சத்திச்சாரணை, சாட்டரணை, வெள்ளைச்சாரணை

சித்திரமூலம் - கொடிவேலி

சிறியதேக்கு - கண்டுபரங்கி பாரங்கி, கண்டுமூலம்

சிறுகாஞ்சோறி - காஞ்சோறியில் சிறியது

சிறுகுறட்டை - சவுரிக் கொடி, பீனிசக்குறட்டை

சிறுகுறிஞ்சா - சிறுகுறிஞ்சான் மேஷச்ருங்கி

சிறுசெருப்படி - செருப்படை செருப்படி ஹம்சபாதி

சிற்றரத்தை - ராச்னா,அரத்தை

சிற்றாமுட்டி - குருந்தொட்டி, பலாமூலம், சித்தாமுட்டி

சிறுபீளை - சிறுபூளை, சிறுகண் பீளை, பாஷாணபேதி

சிறுமல்லி - சிற்றாமல்லி, தசமூலத்தில் ஒன்று

சிறுவழுதலை - சிறிய கத்திரி, முள்ளுக்கத்திரி

சிவனார்வேம்பு - சிவன்வேம்பு, சிவன் வேர், காந்தாரீ

சீதாசெங்கழுநீர் - சீதேவி, செங்கழுநீர்கிழங்கு, குவலயம்

சீனிப்பெருமாள் - சீனைப்பெருமாள், வன்னிமரம்

சீந்தில் - அம்ருதா, ஸோமலதா, அமிர்தவல்லி

செங்கத்தாரி - சிவப்புக்கத்தாரி

செம்முள்ளி - சிவப்புமுள்ளிக்கீரை

செவ்வெள்ளி - தாமரலதா, செவ்வள்ளிக்கொடி

செவ்வியம் - சவ்வியம், மிளகின்வேர்

சேங்கொட்டை - அருஷ்கரம்

தகரை - ஊசித்தகரை, சக்கிரமர்தம்

தக்காளி - தங்காரி

தண்ணீர்விட்டான் - தண்ணீர்மிட்டான், சதர்வரி

தழுதாழை - வாதமடக்கி, வாதம் போக்கி

தாமரை - பற்பம், ஆயமலர்

தாயைக்கொன்றான் - வாழை, கதலி

தான்றி - தாணிக்காய், விபீதகி, அங்காத்தான், அகாந்தம்

தாழை - கேதகி, முடக்கன்

திப்பிலிமூலம் - மோடிக்கட்டை, தேசாவரம், கண்டந்திப்பிலி

திராய் - திரா, துரா, தரா கம்பந்திராய்

திரிகடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சேர்ந்தது

திரிபலை - கடுக்கா, தாணிக்கா, நெல்லிக்காய் மூன்றும் சேர்ந்தது

துளசி - நல்ல துளசி, ஸீரஸம்

தும்பை - தும்பகர்

தூதுளை - தூதுவேளை, அலர்க்கம்

தேற்றான் - கதகம், இல்லம், தேத்தாங்கொட்டை

தேவதாரு - தேவதாரிக்கொட்டை, தேவதாரம்

தேள்கொடுக்கு - தேட்கொடுக்கு, விருச்சிகாளி

தைவேளை - விவிதம், பாளையம்

நத்தைச்சூரி - குழிமிட்டான், வன்னெத்து

நந்தியாவட்டை - நந்தியாவட்டம், நந்திபத்திரி

நன்னாரி - சாரிபா, பாதளமூலி, கிருஷ்ணவல்லி

நரிமிரட்டி - கிலுகிலுப்பை, வட்டக்கிலுகிலுப்பை

நறுவிளி - நளுவிலி, அகுலி, சீதம், ச்லோஷ்மாதகம்

நாகமுட்டி - ஒருகொடி

நாயுருவி - அபாமார்கம் சிறுகடலாடி கொட்டாவிவிட்டிறுக்கி

நிலக்குமிழ் - குமிழமரம்

நிலப்பனை - முசலி, வாராகி கந்தம், தாலமுலி குறத்தி

நிலவேம்பு - கிராதம், கோகணம், சிரட்குச்சி

நீர்முள்ளி - நிகதம் காகண்டம், கோகிலாக்ஷம், முண்டகம்

நீர்மேல் நெருப்பு - அக்கினிகர்பா

நெருஞ்சில் - கோகண்டம், கோக்ஷுரம், காமரசி தும்பு

நெல்லி - ஆமலகி, தாத்ரி கோரங்கம்

நேர்வாளம் - வாளம், தந்தி, சோபி நாகணம்

நொச்சி - நிர்குண்டி சிந்துவாரம், நித்தில்

பருத்தி - காற்பாசம், பன்னல், பரி, உத்திரி

பற்பாடகம் - பற்பாடகப் புல்லு

பாதிரி - பாடலம், கன்னி, பாடலா

பாலாடை - சித்திரப்பாலாடை, அம்மான் பச்சரிசி

பாலை - சீவனி ஜீவந்தி

பாவட்டை - பற்பணம்

பிரப்பங்கிழங்கு - வேத்திரத்தாள், சாதிக்கிழங்கு

பிரமி - நீர்பிரமி, பிரமிவழுக்கை

பிராய் - குட்டி பலா

பிறங்குநாறி - புறங்கைநாறி, பிடங்குநாறி, கிருஷ்ணபாலை

புங்கு - புங்கமரம், கரஞ்சம்ன

புன்னை - புன்னாகம், நாகம்

புரசு - பலாசு, முருக்கு, கிருமிநாசம்

புளிச்சக்கீரை - புளிசிறுகீரை, காச்சக்கீரை

புளிநறளை - நறளை, சுகம்பல்

புளியறணை - ஓவிதபூண்டு

பூதகரப்பன் - பீனாரி, பெருமரம்

பெருங்குரும்பை - சக்கிரவளப்புல், விலுபன்னி

பெருமருந்து - ஈச்வரமூலி, தலைச்சுரளி, தராசுக்கொடி

பேய்க்கொம்மட்டி - ஆறுறுத்தும்மட்டி, கலிங்கம், தும்மட்டி

பேய்த்தும்பை - பெருந்தும்பை, வெதுப்படக்கி,
இரட்டைப்பேய்மருட்டி

பேய்த்தும்மட்டி - ஆற்றுத்தும்மட்டி, பேய்க்கொம்மட்டி

பேய்ப்புடல் - படோலம், காட்டுப்பேய்புடல்

பேய்மிரட்டி - கிலுகிலுப்பை, வட்டக்கிலுகிலுப்பை

பேராமல்லி - ஒருமல்லி

பேரீச்சு - கர்சூரம், பேரீந்து

பொன்முசுட்டை - வட்டத்திருப்பி, மலைதாங்கி

பொற்கொன்றை - கொன்னை வகையைச் சேர்ந்தது

மகிழம் - வகுளம், இலஞ்சி

மஞ்சிட்டி - மஞ்சிஷ்டா, மஞ்சூகம்

மணித்தக்காளி - உலகமாதா, உலகங்காத்தான் காகமாசி

மயிர்மாணிக்கம் - கரயஷ்டிகா

மருள் - மூர்வா, மருள் கிழங்கு

மலைவேம்பு - மஹாநிம்பம்

மாசிக்காய் - மாசிகா, மாசி

மாவிலங்கு - குமாரகம், வரணி

மிளகறணை - காஞ்சனா, சுரண்டை

முக்கரவேளை - காய்வேளை, முட்காய்வேளை

முசுருமுட்டை - எரும்பு முட்டை

முதியார் கூந்தல் - குதிரை வாலி, அம்மையார் கூந்தல்

முன்னை- அரணி, வைஜயந்தி

முடக்கொத்தான் - முடக்கற்றான், முடக்குன்றான்

முருங்கை - சிக்ரு, கிழவி

முருக்கு - பலாசு

முருந்துவித்து - பலாசபீஜம், புரசவிரை

முள்முருக்கு - கலியாணமுருக்கு

முள்ளஇ - முள்ளிக்கீரை

மூக்கரட்டை - புனர்னவா, புட்பகம்

ருத்திராக்ஷம் - ருத்திராக்கம், பூதநாசினி

வசம்பு - வசா, உக்ரகந்தா, வேணி

வன்னெத்து - வன்நெற்று, நத்தைச்சூரி

வட்டக்குறிஞ்சி - வட்டுக்கறிமுள்ளி

வட்டத்திருப்பி - பொன்முசுட்டை, மலைதாங்கி

வறட்சுண்டி - ஒரு செடி

வலம்புரிக்காய் - திருகுபலை

வாகை - சிரீஷம், சினிபம்

வாதமடக்கி - வாதம்போக்கி, தழுதாழை

வாயவிடங்கம் - விடங்கம், வாய்விளங்கம், கேரளம்

வாலுளுவை - மால்கிங்கிணி

வாழை - தாயைக்கொன்றான், கதலி ஓசை

வில்வம் - கூவிளம், பில்வம், மாலூகம்

விழலரிசி - விழலரிசி, விழாலரி

விழுதி - வீழி

விஷ்ணுகிராந்தி - விட்ணுகிரந்தி, அபராசி

விலாமிச்சம் - இலாமிச்சம், ஹ்ரீபேரம்

வீழி - விழுதி

வெதுப்படக்கி - பேய்மிரட்டி, இரட்டைபேய்மருட்டி

வெப்பாலை - வெட்பாலை

வெட்டுக்காயப்பச்சிலை - அரிவாள்மூக்குப்பச்சிலை

அரிவாமணைப்பூண்டு

வெள்ளருகு - ஒரு பூண்டு

வெள்ளைக்காக்கணம் - வெண்காக்கரட்டை, வெண்சங்குபுஷ்பி

வேலிப்பருத்தி - உத்தாமணி

வைரவன் கிழங்கு - கார்த்திகைக்கிழங்கு, அக்கினிச்சலம்